வெளியீடு 16-2-1993 Issued 16-2-1993

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 27, 1992-தொகுதி 26 எண். 2
Monday, the 27th April 1992 - Volume 26 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] Price Rs.3-00

## உள்ளடக்கம்.

27—4—1992

பக்கங்கள்


1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 271—306

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 306—331

2. உரிமைப் பிரச்சினை—

பேரவைத் தலைவர் ஏற்கெனவே தீர்ப்பளித்த பிரச்சினை பற்றி 'இல்லஸ்ட்ரேட்டட்' வீக்லி ஆப் இந்தியா'' ஏப்ரல் 24–மே 1 இதழில் அதன் ஆசிரியர் அனில்தர்க்கர் வெளியிட்டுள்ள செய்திகள் குறித்தும் அந்த இதழின் முன்னாள் கட்டுரையாளர் கே. பி. சுனில் பேரவைமுன் ஆஜராகும்படி செய்ய வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்ட பிடிவாரண்டுமீது உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள தடையாணை குறித்தும்—பேரவைத் தலைவரின் தீர்ப்பு. 332—367

3. கவன ஈர்ப்பு—

(அ) வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில் 'டைபாய்டு' காய்ச்சல் பரவியுள்ளது குறித்து. .. .. 368—370

(ஆ) பண்ருட்டி வட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் கண்டரக் கோட்டை முதல் மேலகுமாரமங்கலம் வரையிலான தென்பெண்ணையாற்றின் வலதுகரை உடைபட்டிருப்பது குறித்து. .. .. .. 370—373

4. அறிக்கை அளித்தல்—

மதிப்பீட்டுக் குழு .. .. .. 373—

5. கண்டனம்—

'முரசொலி' மற்றும் 'கோவை மாலைமுரசு' ஆசிரியர்களுக்குக் கண்டனம்—பேரவைத் தலைவரின் தீர்ப்பு. .. .. .. 374—381

பக்கங்கள்

**6. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) வரிவழக்குத் தனித் தீர்ப்பு மன்றம் சட்ட முன்வடிவு, 1992 .. .. .. 381—382

(ஆ) உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. 382—383

(இ) இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. .. 383—384

(ஈ) மோட்டார் வாகனங்கள் (தனிவகை முறைகள்) சட்டமுன்வடிவு, 1992 .. .. 384

(உ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 .. .. .. 385

(ஊ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. .. 385—386

(எ) ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. 386—387

(ஏ) நகர மற்றும் ஊரமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 .. .. .. 387

(ஐ) நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. .. 387—388

7. அறிவிப்புகள்

(அ) இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவு, 1992.(ஆ.செ.) .. 383

(ஆ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.) .. .. 388

**8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. 388— 392
* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
திரு. சி. ஞானசேகரன். 389, 390
391, 392

164943



8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி
(ஆ) இந்துசமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992. 392—398
மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் 394—396
திரு. கே. செல்வராஜ். .. .. .. 392—393

(இ) பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1992. 398

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி 398, 488— 498

*திரு. ஆர். சிங்காரம் 398—408

திரு. ஜி. பழனிசாமி 408— 414
458—459

டாக்டர் தே. குமாரதாஸ் 402, 415, 418, 422, 428

திரு. எஸ். திருநாவுக்கரசு 432—450
திரு. வே. தம்புசாமி 450—457
திரு. செ. கு. தமிழரசன் 461— 467
திரு. கா. ப. பட்டாபிராமன் 466— 471
திரு. ச. இராமச்சந்திரன் 471— 480
*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன். 402, 403, 418, 430, 431
481—488

(ஈ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1992 502—504
*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். 502—504

(உ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1992 504—506
*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 504—506

(ஊ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1992. 506—508
மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் 506, 508
திரு. சி. ஞானசேகரன். 507

(எ) நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) திருத்த சட்டமுன்வடிவு, 1992. 508—512
மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் 508, 509, 510—511

திரு. மா. சுந்தரதாஸ் 508

| | பக்கங்கள் |
|---|---|
| (ஏ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992. | 512—515 |
| மாண்புமிகு திரு. சு. முத்துசாமி | 512, 513—514, 515 |
| திரு. மா. சுந்தரதாஸ் | 513 |
| (ஐ) மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1992. | 515—519 |
| மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் | 516—517 518 |
| திரு. எச். எம். ராஜூ | 516—517 |
| 8. சட்டமுன் வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி | |
| (ஒ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992 | 520—521 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 520—521 |
| (ஓ) வன (திருத்த) சட்டமுன்வடிவு, 1992. | 521—528 |
| மாண்புமிகு திரு.கே.ஏ.செங்கோட்டையன் | 521,522—526 |
| திரு. கே. செல்வராஜ். | 522—523 |
| (ஔ) நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரிச் சட்டமுன்வடிவு, 1992. | 528—547 |
| மாண்புமிகு திரு.அழகு திருநாவுக்கரசு | 529,531—534,535 |
| திரு. சி. ஞானசேகரன். | 529—530 |
| (அஅ) கூட்டுறவுச்சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) சட்டமுன்வடிவு, 1992. | 535—547 |
| மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் | 535,539—547 |
| திரு. மா. சுந்தரதாஸ். | 536—538 |
| (ஆஆ) கூட்டுறவுச் சங்கங்கள் தனிஅலுவலர்கள் நியமனம்) திருத்த சட்டமுன்வடிவு, 1992. | 547—549 |
| மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன். | 547—548 |
| (இஇ) கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவு 1992. | 549—552 |
| மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் | 550,551—552 |
| திரு. கே. செல்வராஜ். | 550 |
| 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. | 553 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 15, ஆங்கிரச—திருவள்ளுவர் ஆண்டு 2023**

**1992 ஏப்ரல் 27—திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

" தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு. "

செயல்களை ஆராய்தல், வழி முறைகளை ஆராய்ந்து செய்தல், துணிவாக அறிவுரைகளையும், கருத்துக்களையும் சொல்லுதல் ஆகியவற்றில் வல்லவனே அமைச்சனாவான்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 627, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு நிதியமைச்சர்.

627—

தமிழகத்திலிருந்து இந்திய அரசுக்கு கிடைக்கும் வருவாய்.

*4373 திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்திலிருந்து இந்திய அரசுக்கு ஓர் ஆண்டுக்கு எத்தனை கோடி ரூபாய் வரியாக கிடைக்கின்றது ?

(ஆ) அது எந்தெந்த துறையின் மூலம் வசூலிக்கப்படுகிறது ?

(இ) சேமிப்பின் மூலம் எவ்வளவு கிடைக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டிலிருந்து இந்திய அரசுக்கு 1989–90 மற்றும் 1990–91 ஆம் ஆண்டுகளில் வரியாகக் கிடைத்த வருமானம் வருமாறு :—

| 1989-90 | 1990-91 |
|---|---|
| (ரூபாய் கோடியில்) | |
| 4,727.35 | 5,349.36 |

[1992 ஏப்ரல் 27

(ஆ) வருவாய் வசூலிக்கப்படும் துறைகளின் பெயர்கள்—மத்திய நேர்வரிகள் வாரியம், வருவாய்த்துறை, நிதி அமைச்சகம், மைய அரசு, புது டில்லி.

| வரி இனங்கள். | | 1989—90 | 1990—91 |
|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | |
| 1. சுங்கத் தீர்வை வரி | .. | 2,631.99 | 3,047.54 |
| 2. மத்திய ஆயத்தீர்வை மற்றும் கூடுதல் ஆயத்தீர்வை வரி | .. | 1(645.01 | 1,798.26 |
| 3. விற்பனை வரிக்கு பதிலாக கூடுதல் தீர்வை வரி | .. | 70.11 | 80,14 |
| 4. வருமான வரி | .. | 380.24 | 423.42 |

(இ) சேமிப்பின் மூலம் வருவாய் :—

| | | | |
|---|---|---|---|
| சேமிப்புன் (நிகர வசூல்) | .. | 258.29 | 365.97 |

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அரசுக்குத் தமிழகத்திலிருந்து பல்வேறு வரிகளாக 1989–90 ஆம் ஆண்டுக்கு ரூ. 4727·35 கோடியும், 1990–91 ஆம் ஆண்டுக்கு ரூ. 5,349.36 கோடியும் கிடைத்திருக்கிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதிலே தமிழ்நாட்டுக்கு என்று எவ்வளவு பங்காக கிடைக்கின்றது என்பதையும், இதை எந்த அடிப்படையில் மத்திய அரசாங்கம் நமக்குப் பிரித்துத் தருகிறது என்பதையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டுக் கணக்குப்படி கிட்டத்தட்ட ஐயாயிரத்து சில்லரை கோடி ரூபாய் இந்த மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்கு வரிகளாகச் செல்லுமேயானால், அதில் ரூபாய் 1,288 கோடியே 16 இலட்சம் ரூபாய் நமக்குப் பல்வேறு வகைகளிலே மானியமாகத் தரப்படுகின்றது. மத்திய அரசு வசூலிக்கின்ற வரிகள் என்பதிலே மாநிலங்கள் எல்லாம் பங்கு பெறுவதற்கு 'இன்கம் டேக்ஸ்' போன்றவற்றில் ஒருவிதமான சதவிகித அளவு குறிக்கப்பட்டு இருக்கிறது. எக்ஸைஸ் வரிக்கு ஒருவிதமான சதவிகிதம் இருக்கிறது. அந்த சதவிகிதங்களின் அடிப்படையில் அந்த அந்த மாநிலங்களிலிருந்து வருகின்ற வருவாயில் அந்த சதவிகிதத்தை மாநிலங்களுக்குக் கொடுத்துவிட்டு, மீதத் தொகையை மத்திய அரசு தம்முடைய செலவுக்கு வைத்துக் கொள்கிறது.



1992 ஏப்ரல் 27]

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது எல்லா மாநிலங்களுக்கும் சீராகப் பிரித்துத் தரப்படுகிறதா? தொகுப்பு நிதியிலிருந்து ஒரு சில மாநிலங்களுக்கு மட்டும் அதிகமாக ஒவ்வொரு ஆண்டும் தரப்படுகிறது. அது எல்லா மாநிலங்களுக்கும் சீராக ஒரே அளவு என்று தரப்படுகிறதா? வருமானத்தைத் தருகின்ற மாநிலங்களில் தமிழ்நாடு எந்த இடத்திலே இருக்கிறது? ஆக 5,000 கோடிக்கு மேலாகப் பெற்றுத் தருகிற தமிழகத்திற்கு மத்திய நிதியிலிருந்து ஆயிரம் கோடி அளவுக்குத்தான் கிடைக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், ஆகவே இதை மீண்டும் அதிகப்படுத்திப் பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா இந்த வரிகளை இன்னும் கூடுதலாக தமிழகத்திற்கு என்று ஒதுக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா? தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்த மாநிலத்திலிருந்து தான் அதிகமாக வருமானம் மத்திய அரசுக்குக் கிடைக்கிறது, இவ்வாறு தமிழகத்திலிருந்து மத்திய அரசு பெறுவதைப் பொறுத்தவரையில் அது எந்த இடத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா? நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உருவாக்கிக் காட்டுவேன் என்று சபதம் ஏற்றிருக்கிற இந்த நேரத்தில் அதிகமாக நிதியைத் தமிழகத்திற்கு மத்திய அரசு ஒதுக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

முற்பகல் 9–35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வரி இனங்கள் என்கிற முறையில் சுங்கத் தீர்வை வரி, மத்திய ஆயத் தீர்வை மற்றும் கூடுதல் ஆயத் தீர்வை வரி, விற்பனை வரிக்கு பதிலாக கூடுதல் தீர்வை வரி, சேமிப்பு மூலம் வருகிற வருவாய், இவைகள் மத்திய அரசுக்கு எல்லா மாநிலங்களிலிருந்தும் போகின்றன, அவ்வாறு போவதிலிருந்து எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு திருப்பிக் கொடுப்பது என்பதைப் பொறுத்த வரையில் மத்திய அரசு தன்னுடைய விருப்பப்படி தராது, அதற்கு ஒரு பார்முலா அதாவது ஒரு வாய்ப்பாடு வைத்திருக்கிறார்கள். சேமிப்பு நிதி என்று வருகிறபோது 75 சதவீதத்தை மாநில அரசுக்குத் தந்து விட்டு 25 சதவீதத்தை மத்திய அரசு வைத்துக் கொண்டு கண் காணிக்கிறது, அந்த மாதிரி காட்கில் ஃபார்முலா என்பதன் கீழ் 80, 85 சதவீதம் என்ற கணக்கு இருக்கிறது, இது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும், எல்லா மாநிலங்களும் எவ்வளவு

அனுப்புகிறதோ. மத்திய அரசுக்கு அந்தந்த மாநிலங்களிலிருந்து எவ்வளவு திரட்டித் தரப்படுகிறதோ அதை அந்த வாய்ப்பாட்டினுடைய அடிப்படையில் அவர்கள் பிரித்துக் கொடுப்பார்கள், கூடுதலாக நிதி வேண்டும் என்பதற்கெல்லாம் டிஸ்க்ரஷனரி ஃபண்ட் என்று மத்திய அரசு தனியாக வைத்துக் கொண்டிருக்கிறது. அந்த நிதியிலிருந்து வெள்ளம் ஏற்படுகிறபோது, வறட்சி ஏற்படுகிறபோது, நிதிகள் கொடுக்கப்படுகின்றன, அதுபோல் எதிர்பாராத சூழ்நிலைகள் ஏற்படுகிற போது அந்தச் செலவுகளை இதன் மூலம் தாங்குகிறார்கள். இப்போது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இலங்கையிலிருந்து அகதிகளாக பலபேர் வந்திருக்கிறார்கள், அதன் மூலம் ஏற்படுகிற பெரும் சுமையைத் தாங்குவது இப்போது விடுதலைப் புலிகள் காரணமாக ஏற்படுகிற பலவேறு பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் ஏற்படுகிற கூடுதல் செலவுகளைத் தாங்குவது என்ற வகையில் இவற்றை எல்லாம் தனித் தனியாக மத்திய அரசு கவனிக்குமே தவிர வரிகளைப் பொறுத்த வரையிலே ஒரே வாய்ப்பாடுதான். அது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு, எஸ், எஸ், ராமசுப்பு,

திரு, எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுமையுமாக பல கோடிக்கணக்கான ரூபாய் கறுப்புப் பணம் வைத்திருக்கக் கூடிய பலர் அதை வெறுமையாக 'ஐடில்' ஆக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணத்தை, கவர்ன்மென்ட் எக்ஸ்செக்கருக்குக் கொண்டு வந்து நம்முடைய நாட்டினுடைய பல்வேறு திட்டங்களுக்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு நம்முடைய அரசு ஏதாவது புதிய திட்டங்கள் வைத்திருக்கிறதா? அந்தக் கறுப்புப் பணத்தை கவர்ன்மென்ட் எக்ஸ்செக்கருக்குக் கொண்டு வருவதற்கான வழிவகைகள் ஏதாவது செய்யப்பட்டுள்ளனவா என்பதை நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கறுப்புப் பணமாக இருந்தாலும். வெள்ளைப் பணமாக இருந்தாலும் அவற்றை முழுமையாகக் கண்காணிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் மத்திய அரசைச் சார்ந்ததுதான். ஆகவே கறுப்புப் பணமாக இருப்பதை வெளிக் கொணர வேண்டும் என்ற கவலை மாண்புமிகு உறுப்பினருக்கு மட்டுமல்ல; இந்த அரசுக்கும் இருக்கிறது, மத்திய அரசுக்கும் இருக்கிறது. திரு, மன்மோகன்சிங் அவர்களுக்கும் இருக்கிறது, ஆனால் எப்படிக் கொண்டு வருவது என்பதிலேதான் வழிவகைகளைக் காண முடியாமல் அவரவர்கள் ஆங்காங்கே திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே குறிப்பிட்ட



பங்கைக் கொண்டு வந்து கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள் அரசினிடத்திலே சேர்த்து விடுவார்களானால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டும் வரி போடுகிற ஒரு முறை வந்தது. அப்போது சிலபேர் கொடுத்தார்கள், ஆனால் எதிர்பார்த்த அளவுக்குக் கூட வரவில்லை. கறுப்புப் பணத்தைப் பெறுவது என்கிற வகையில் மத்திய அரசுதான் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது, ஆனால் அந்தக் கறுப்புப் பணத்தின் அளவு அதிகமாக அந்தக் கறுப்புப் பண உலகத்தில் உலவிக் கொண்டிருப்பதன் காரணமாக, நம்முடைய நாட்டிலே பல்வேறு பிரச்சினைகள் ஏற்படவும், விலைவாசி உயர்வு ஏற்படவும், பணவீக்கம் ஏற்படவும், மற்ற மற்ற தன்மைகள் ஏற்படவும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன, என்று பொருளாதார வல்லுநர்கள் எல்லாம் சொல்கிறார்கள். எனவே இதுபற்றி ஆராய்ந்து அதை எப்படியாவது குறைக்க வேண்டும்; கறுப்புப் பணத்தை வெளிக் கொணர வேண்டும் என்ற முயற்சியில் தான் இன்றைக்கு மத்திய அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ம. சின்னசாமி,

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மகாத்மா காந்தியினுடைய உயிர் மூச்சான கொள்கையான மதுவிலக்கை நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அமல்படுத்துவதன் மூலம் தமிழகத்தில் மலிவு விலை மதுவை ஒழித்ததில் தமிழகத்திற்கு 300 கோடி நட்டம் ஏற்பட்டிருக்கிறது, இந்த நட்டத்தை ஈடு கட்டுவதற்கு இங்கே இருந்து வரியாக போகின்ற பணத்திலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்குவதற்கு தனியாக ஏதாவது வகையில் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 9–40

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நான் முதலிலேயே குறிப்பிட்டேன். வரிகள் என்று போகின்றபோது, ஒரு சதவிகிதத்தின் அடிப்படையிலேதான் அந்தந்த மாநிலத்திற்கு திருப்பித் தருவார்களே தவிர, அந்த வரியிலிருந்து கூடுதலாக எந்த உதவியும் செய்ய மாட்டார்கள். நாம் கேட்பது மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையாகவும், அரசமைப்புச் சட்டத்திலே சேர்க்கப்பட்ட கொள்கையாக இருக்கின்ற மதுவிலக்கை நாம் கொண்டு வருவதன் காரணமாக நமக்கு இழப்பு ஏற்படுகிறது. அந்த இழப்பைச் சரி கட்ட வேண்டும் என்றும், அவர்களுக்கு என்று இருக்கின்ற தமது விருப்பப்படி கொடுக்கலாம்

அந்தந்த மாநிலங்களுக்கு என்று இருக்கின்ற நிதியிலிருந்து இதற்கு ஒதுக்க வேண்டும். மது விலக்கு மிகச் சிறிய, கொள்கையாக இருப்பதன் காரணமாக அதற்கு ஊக்கம் தருகிற வகையில், மத்திய அரசு தரவேண்டும் என்றுதான் நாம் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டு இருக்கிறோம். மத்திய அரசு அதை பெற்றுத்தருவதற்கு இல்லை என்று முன்பு முடிவு செய்தது. மீண்டும் அதை நாம் வற்புறுத்திக் கொண்டுதான் வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைய அரசு இப்போது 'கோல்ட் பாண்ட்' அதாவது எவ்வளவு 'கோல்ட்' வைத்திருந்தாலும் அதை அரசாங்கத்திலே செலுத்தினால், இந்த 'கோல்ட்' எங்கிருந்து வந்தது என்று கேட்க மாட்டோம் என்று சொல்லி, அதற்கு தகுந்த வட்டியும் கொடுப்போம். அதற்கு குறிப்பிட்ட காலம் கழிந்தால், 'கோல்ட்'-ஐ திருப்பிக் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அதாவது 'கோல்ட்-சீஸ்' பண்ணுவதற்காக. அதைப் போல கருப்புப் பணம் கொண்டு வருவதற்கு ஒரு பாண்ட் சிஸ்டம் உருவாக்கி அந்தக் கருப்புப் பணம் எப்படி வந்தது என்று கேட்க மாட்டோம் நாம் வட்டி தருகிறோம் என்கிற திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மத்திய நிதி அமைச்சர் மன்மோகன்சிங் அவர்களிடத்திலே கேட்க வேண்டிய கேள்வி. நான் முதலிலேயே சொன்னேன். அந்தப் பணத்தை முறைப்படுத்துவது, அதை எப்படி எப்படி வசூலிக்க வேண்டும் என்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற யோசனையை செய்ய வேண்டுமானாலும் மத்திய அரசுதான் அதற்கான முறையைக் கையாண்டு அதற்கான சட்டத்தைப்போட்டு அதை நடைமுறைப் படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

வினா எண் 628, திரு. எம். பெரியவீரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 629, திரு. எம். ஆண்டி அம்பலம். இருக்கையில் இல்லை.

வினா எண் 630, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.





630—

வணிகவரி வழக்குகளை விசாரிக்க நடுவர் மன்றம்

*8762 திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வணிகவரி சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க சிறப்ப மேல் முறையீட்டு நடுவர் மன்றம் (Special Appellate Tribunal) அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வணிகவரிகள் சட்டங்களின் கீழ் தொடுக்கப்பட்டுள்ள பல கோடி ரூபாய் வரி தொடர்பான வழக்குகள், பல சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. அவ்வழக்குகளை விரைவாக முடிவு செய்து அதன்மூலம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரி பாக்கித் தொகையை வசூலிக்கும் பொருட்டு உயர் நீதிமன்ற அதிகாரங்களைக் கொண்ட தனியான வரிவழக்கு தனி தீர்ப்பு மன்றம் ஒன்றை அமைக்க இந்த அரசு எண்ணியுள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் '' என்று ஏசுபிரான் சொன்னதற்கு இணங்க 20 ஆம் நூற்றாண்டினுடைய கண்கண்ட தெய்வமாக விளங்கக் கூடிய எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், கேட்டவுடன் செய்துகொடுக்கக்கூடிய காரியமாக இந்தத் தீர்ப்பு ஆயத்தை அமைக்கப்படுகிறதாக அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, நீண்ட காலமாக உயர் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கும் விற்பனை வரி வழக்குகளை விரைந்து பைசல் செய்ய இப்படி தனி தீர்ப்பாயத்தை அமைக்கவேண்டுமென்ற வணிகர்களின் கோரிக்கையை ஏற்று அதற்குரிய அறிவிப்பை வெளியிட்டதுமட்டுமல்லாமல், தனி தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்து, நல்ல கட்டிட வசதியும் செய்து தந்து பணியாளர்களை நியமித்து கூடிய விரைவில் தனி தீர்ப்பாயம் செயல்படத் தொடங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவு இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

[1992 ஏப்ரல் 27

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவு ஒன்று இன்று அறிமுகப் படுத்த இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த மைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தனித் தீர்ப்பாயம் தனது பணிகளைத் தொடங்கும்போது, அந்த உயர் நீதிமன்றத்திலிருந்து சற்றொப்ப எவ்வளவு வழக்குகள் இந்த தனித் தீர்ப்பாயத்திற்கு மாற்றப்படும் என்பது பற்றிய விவரம் ஏதேனும் இருக்குமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவு இங்கே அறிமுகப்படுத்தி அதை நிறைவேற்றிய பிறகு, அதுமத்திய அரசுக்கு சென்று, அதற்கு அனுமதி பெற்று வரவேண்டும். வந்த வுடன் இன்றைக்கு உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகள் எல்லாம் இந்தத் தீர்ப்பாயத்திற்கு மாற்றப்படும். ஏறத்தாழ பல கோடி ரூபாய்க்கு வழக்குகள் அங்கே உயர் நீதிமன்றத்திலே நிலுவையில் உள்ளன.

முற்பகல் 9—45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வணிகவரி சம்பந்தப்பட்ட பல்வேறு வழக்குகள் வெளி மாநிலங்களில் உள்ளன. பல கோடி ரூபாய் நம் தமிழக அரசுக்கு வர வேண்டியிருக்கிறது. அப்படிப் பட்ட வழக்குகளை உடனுக்குடன் தீர்வு செய்வதற்கு தமிழக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது எடுக்கப் பட்டிருக்கிற நடவடிக்கை உடனேயே இங்கே தீர்ப்பாயம் கொண்டு வருவது என்று எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 631 திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



1992 ஏப்ரல் 27]

631—

## தாய்சேய் நலவிடுதி தொடங்க நடவடிக்கை.

*2530 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக் காடு ஊராட்சி, படப்பனார்வயலில் ஒரு தாய்சேய் நலவிடுதி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

படப்பனார்வயலில் இருந்து 3 கி.மீ. தொலைவில் பின்னவாசல் துணை சுகாதார நிலையமும், 5 கி.மீ. தொலைவில் சாணாக்கரை துணை சுகாதார நிலையமும் செயல்பட்டு வரு கின்றன. எனவே, அங்கு தாய் சேய் நல விடுதி புதிதாகத் தொடங்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, படப்பனார் கிராமம் என்பது பக்கத்திலே பட்டாவூரணி, ஸ்வர்ணக்காடு, பளப்பறங்காடு, பனஞ்சேரி, கிருஷ்ணாபுரம் போன்ற மையங்களைக் கொண்ட கிராமம் ஆகும். இதிலே இருந்து பக்கத்திலே சாணாக்கரை என்பது 7 கிலோ மீட்டர் ஆகும். பின்னவாசல் என்பது 5 கிலோ மீட்டர் ஆகும். ஆகவே இதற்கு எல்லாம் செல்வதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் என்கிற காரணத்தால்தான் இதை நான் கேட்டிருக்கிறேன். தயவு செய்து இதை மீண்டும் பரிசீலிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற கொள்கையை அரசு வகுத்து வைத்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, அதற்கு உட்பட்டு இருக்கிற காரணத்தினால் தான் இதிலே அமைப்பதற்கு வாய்ப்பு இல்லையென்று சொன்னேன். அதிலும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பாக கேட்டிருக்கிற அந்த ஊர் சின்ன ஊராக இருக்கிற காரணத்தினால் அங்கே அமைக்க முடியாது என்று குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினருக்கு அடுத்த ஆண்டு அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 632, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

632—

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிட வசதி.

* 3799 திரு. ஜெ. பாலகங்காதரன் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாயில்பட்டி, மாரனேரி, நாரணாபுரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிட வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தாயில்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு நிலம் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாரனேரி, மற்றும் நாரணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகிலேயே தமிழகத்தில்தான் இன்னும் கூடியவரையில் எந்த நோயும் இல்லை என்ற ஒரு சிறப்பு பெயர் எடுக்கும் நிலை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மருத்துவ முகாம்களின்கீழ் எற்பட்டுள்ளது. அந்த ஒரு சிறப்பு நிலை இருக்கும் நிலையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே சிவகாசியை ஒட்டியுள்ள மாரனேரி மற்றும் நாரணாபுரம் கிராமங்களிலே 5 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட மக்கள் தொகை வசிக்கின்ற காரணத்தாலும், எல்லோருமே அந்த ஸ்டாண்டர்ட் ஆஃப் லிவிங் நிலைக்கு குறைந்த நிலையில் உள்ளதாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே உடனடியாக ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டித் தர முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதிலே 3 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே ஒன்றுக்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு 17—9—1991 அன்று பொதுப் பணித் துறையிடத்திலே நிலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டிற்கும் இப்போது துவங்குவதற்கான வாய்ப்பு இல்லை. மாரனேரியிலே 10 ஆயிரம் ரூபாய் பொது நிதியாக அங்குள்ள பொது மக்கள் வசூல் பண்ணி அரசாங்கத்திலே கட்டியிருக்கிறார்கள். மற்றொரு இடமான நாரணாபுரத்திலே அவர்கள் கட்டவில்லை. அதற்குண்டான இடமும் கிடைக்காமல் இருக்கிறது. எனவே, அவை எல்லாம் கிடைக்கிறபோது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாரணாபுரம் கிராமத்திலே வாழ்கிற மக்கள் அடிப்படை வசதி கூட இல்லாமல் மிக தரம் தாழ்ந்து வாழ்கிறார்கள். எனவே அவர்கள் அந்த 10 ஆயிரம் ரூபாயை கட்ட முடியவில்லை. இருந்தாலும் அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக் கொண்டு வருகிறது. அங்கே மனிதர்கள் எல்லாம் சிகிச்சைக்குச் செல்ல வேண்டுமென்றால் மிருகங்களைப்போலதான் கண்ட இடங்களில் நிற்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த சூழ்நிலையை மாற்றி உடனடியாக நாரணாபுரத்திற்கும் சேர்த்து ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கு ஏற்பதான் நாம் நடவடிக்கை எடுக்க முடியும். ஆரம்பத்திலேயிருந்தே, அநேகமாக இந்த 9, 10 மாத காலத்திலேயே புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம் பல்வேறு திட்டங்களை இதற்காக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையிலேயிருந்து எத்தனை ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட முடியுமோ அதைத்தான் நாம் கட்ட முடியும். அவர்களுடைய பகுதியிலே, குறிப்பாக அவர்களுடைய தொகுதியிலேயே அவருக்காக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஒதுக்கப்பட்டு கட்டப்பட்டிருக்கிறது. எனவே, நிதிநிலை சரியாக அமைகிறபோது அதை எல்லாம் சீர் செய்வதற்கான நடவடிக்கையை இந்தத் துறை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 633, திரு. கே. பி. மணிவாசகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

[1992 ஏப்ரல் 27

633—

ஆரம்ப சுகாதார மையத்திற்கு கட்டிட வசதி.

* 4775 திரு. கே. பி. மணிவாசகம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், பாப்பான்குளத்தில் அரசு ஆரம்ப சுகாதார மையத்திற்கு கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) உடுமலை வட்டம், பாப்பான்குளம் அரசு ஆரம்ப சுகாதார மையத்திற்கு கட்டிடம் கட்ட அரசு ஆணை வெளியிட்டு அதற்குரிய நிலம் 8—10—1991 அன்று பொதுப்பணித் துறையிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9-50

திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடுமலைத் தொகுதி, பாப்பான்குளத்தில் பிரைமரி ஹெல்த் சென்டர் துவங்குவதற்கான வேலை 3 ஆண்டுகளாக நடைபெறவில்லை. இதற்குப் பின்பு பல்வேறு பிரைமரி ஹெல்த் சென்டர்களுடைய வேலைகள் துவங்கப்பட்டுள்ளன. நிலம் ஆர்ஜிதம் செய்தும், காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே புரட்சித் தலைவி அவர்களுடைய புனித அரசு இந்த ஆண்டிலாவது விரைவாக அதைக்கட்டித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னேன். 8—10—1991 அன்று பொதுப் பணித் துறையிலே நிலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனவே விரைவாக அவர்கள் நடவடிக்கையை மேற்கொள்வார்கள். நிச்சயமாக அந்த வேலை விரைவாக முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 634, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



1992 ஏப்ரல் 27]

634—

கருங்கல் பகுதியை மையமாக வைத்து போக்குவரத்து மையம் அமைத்தல்.

* 3527 டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பகுதியை மையமாக வைத்து போக்குவரத்து மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) கேள்விக்கு இடமில்லை,

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பகுதியை மையமாக வைத்து ஒரு போக்குவரத்து மையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்த அரசுக்கு விடுத்திருந்தேன். காரணம் என்ன என்று சொன்னால், நாகர்கோவிலிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் அளவில் மன்டே மார்க்கெட், குளச்சல் இந்த இரண்டுக்கும் இடைப்பட்டுள்ள பகுதி என்று பார்க்கும்போது 7 கிலோ மீட்டர் தொலைவுதான். ஒரு பஸ் டிப்போதான் இருக்கிறது. பெருவாரியான பேருந்துகள் கருங்கல் பகுதியை மையமாகக் கொண்டு சென்றால்தான், ஒரு டிராபிக் சென்டரிலிருந்து 3.5 கிலோ மீட்டர் சர்க்கிளில் டவுன் பஸ்கள் இயங்குகின்ற வாய்ப்பு வரும். எனவே அந்தப் பகுதியில் ஒரு போக்குவரத்து மையம் ஏற்படுத்தி செயல்படுமென்று சொன்னால் அந்தப் பகுதி மக்களுக்கு அது பயன்படும். இல்லை என்று சொன்னால் எல்லோரும் மப்சில் பஸ்களில்தான் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அரசு அதைக் கருத்திற்கொண்டு கருங்கல் பகுதியில் போக்குவரத்து மையம் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கருங்கல்லிலிருந்து கிழக்குப் புறமாக சுமார் 9.5 கிலோ மீட்டர்

தொலைவில் அமைந்துள்ள திங்கள் சந்தையில் ஒரு பெரிய பணிமனை அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல குழித்துறையில் ஒரு பணிமனை அமைக்கப்பட்டிருக்கிறது. குளச்சலில் ஒரு பணிமனை அமைக்கப்பட்டிருக்கிறது. கருங்கல்லிலும் ஒரு பணிமனை இருக்கிறது. மேலும் கூடுதலாக ஒரு பணிமனை தேவை என்று உறுப்பினர் கேட்டிருக்கிற காரணத்தால் அதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருங்கல் பகுதியில் பணிமனை இல்லை, பேருந்து நிலையம்தான் இருக்கிறது, அங்கே தினசரி 100, 125 பேருந்துகள் வந்து செல்லுகின்ற வாய்ப்பு இருப்பதால், அந்தப் பகுதியில் ஒரு பணிமனை அமைத்துத் தந்தால் அது சிறப்பாக இருக்கும், அங்கே இப்போது பணிமனை இல்லை, எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைக் கருத்திற்கொண்டு, அந்தப் பகுதியில் பணிமனை அமைக்க முன்வருவார்களா? அப்படி முன்வருவதாக இருந்தால் அதற்கான இடத்தை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, அதைத் தொடங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு 35 கிலோ மீட்டர் தொலைவில் பணிமனை இல்லை என்று சொல்ல முடியாத அளவுக்கு நாம் நிலைமைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம், அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதற்கு. அந்தப் பகுதியில் 14 கிலோ மீட்டர் சுற்றுப்புறத்தில் பணிமனை இருப்பதால். நான் அந்தப் பகுதியில் பணிமனை அமைக்கும் சாத்தியக் கூறு இல்லை என்று குறிப்பிட்டேன், நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு எங்கெங்கே பணிமனை வேண்டுமென்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பணிமனைகள் இல்லை என்று சொல்ல முடியாத அளவுக்கு ஒரு நிலையை உருவாக்குவதற்கு நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 1992-க்குப் பிறகு, எந்தப் பணிமனையிலிருந்து நாம் பேருந்துகளை இயக்கினாலும், 35 கிலோ மீட்டருக்கு மேலே எல்லா இடத்திலும் பணிமனை இருக்கும் என்ற நிலைமையை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்து. இதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 635. திருமதி கே.எம். கலைச்செல்வி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்,

635—

ராஜாதோப்பு அணை கட்டும் திட்டம்,

* 4009 திருமதி கே, எம், கலைச்செல்வி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காட்பாடி. தொகுதியில் ராஜாதோப்பு அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இராசாதோப்பு கானார் திட்டம் அரசு ஆணை 28-5-1990-ல் ரூ. 251 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளித்து வேலைகள் 1990-91 ஆம் ஆண்டிலேயே துவக்கப் பெற்று, நடைபெற்று வருகின்றன,

(ஆ) இத்திட்டம் 1993-ஆம்ஆண்டில் நிறைவுறுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

முற்பகல் 9-55

திருமதி கே. எம், கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராஜாத்தோப்பு நீர்த் தேக்கம் என்பது செஞ்சி ஊராட்சிக்கருகில் அமைந்துள்ள முக்கியமான திட்டமாகும். இத்திட்டம் 27.5 மில்லியன் கன அடி தண்ணீர் கொள்ளளவு கொண்டதாகும், இத்திட்டத்தின் மூலம் 500.05 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும் வாய்ப்புள்ள நிலை ஏற்படும். பாசன வசதி பெறாமல் விடப்பட்ட மீதமுள்ள 42 ஏக்கர் நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 251 லட்சமாகும், இதன் மூலமாக ஆண்டொன்றுக்கு 274 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்திற்காக 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். அதற்காக காட்பாடி தொகுதி வாழ் மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி

யைத் தெரிவித்துக் கொள்கிறேன், அமைச்சர் அவர்கள் இப்போது அங்கே பணிகள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டார்கள். தற்போது அங்கு பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் ஆட்சிக் காலத்திலே காட்பாடி தொகுதிவாழ் விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மையைக் கருதி, பலசட்டமன்ற உறுப்பினர்களாலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் தொடர்ந்து வலியுறுத்திவரும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்து, அந்த திட்டத்தின் நிறைவு விழாவையும் மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் நடத்தித் தரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, அதை விரைவில் முடிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே அணைத்திட்டம் நடைபெறவில்லை என்ற தவறான ஒரு தகவலைச் சொல்லியிருக்கின்றார். ஒரு அணை கட்டுகின்றபோது அதற்கு பூர்வாங்க வேலைகள் என்று சொல்லப்படுகின்ற அடிப்படைப் பணிகளை இந்த அரசு முதலில்எடுத்துக்கொள்கிறது. அதற்குப் பின்னாலேதான், அணை கட்டுகின்ற பணிகளை நாம் துவங்குகிறோம். இத்திட்டத்தைப் பொறுத்தவரை, இன்னும் 17½ ஏக்கர் நிலத்தை வனத் துறையிடமிருந்து நாம் கையகப் படுத்த வேண்டியுள்ளது. ஆனால் அதற்கு முன்னதாக கட்டிடங்கள், அதாவது பணியாளர்கள் குடியிருப்புகளையும் அலுவலகங்களையும் கட்டும் பணிகள் நடக்கின்றன. ஒரு அணை கட்டுகின்ற நேரத்தில் முதலில் அதைத்தான் துவங்குகிறோம். அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வனத் துறை நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் இந்த அணையின் வேலைகள் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 636, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

636—

பாலம் கட்டுதல்.

*4065 திரு. தி. சாத்தையா:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காமராஜர் மாவட்டம், இராஜபாளையம் தொகுதியில் புத்தூர் அருகே இணைப்பு சாலையில் பாலம் கட்ட திட்டம் ஆய்வு செய்யப்பட்டுள்ளதை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பாலம் கட்டும் வேலைகள் எப்போது தொடங்கும்?





மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பணிக்காக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, 1991–92 ஆம் ஆண்டில் அந்தப் பகுதியினுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற ரூ. 32.00 இலட்சம் ஒதுக்கி அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு நம்முடைய அரசு மூலம் 29–10–1991 அன்று ஒப்புதலும் அளிக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பால வேலை துவங்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இந்த புத்தூர் கிராம மக்களும் அதோடு சேர்ந்த 3-4 கிராம மக்களும் கடந்த 40 வருடங்களாக இந்தப் பாலம் இல்லாததால், மழைக்காலங்களில் அந்த இடம் மிகவும் ஆழமாக இருப்பதால் தண்ணீர் ஓடும்போதெல்லாம் ஒரு தீவைப்போல ஒரு வாரம் இரண்டு வாரம் என்று நீண்டகாலத்திற்கு அந்தப் பகுதி மக்கள் எல்லாம் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக அந்தப் பாலம் கட்டாததால், கடந்த சட்டப்பேரவைத் தேர்தலை அந்த மக்கள் புறக்கணித்துவிட்டார்கள். அப்படியிருந்தும், நாங்கள் வெற்றிபெற்று நன்றி சொல்லப்போகும்போது 1,000 பேர் இரவு ஒரு மணிக்கு எங்கள் காருக்கு முன்னால் படுத்துக்கொண்டு எங்கள் மேல் ஏற்றிச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தி. சாத்தையா : ஆகையால் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இணங்க, நமது புரட்சித் தலைவியின் ஆட்சியில், அவர்கள் தேர்தலைப் புறக்கணித்தாலும், அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான அந்தக் கட்டப்படாத பாலத்தைக் கட்ட வேலைகள் ஆரம்பிக்க இருப்பதற்காக அந்தக் கிராம மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் புரட்சித்தலைவி அவர்களுக்கு அன்பார்ந்த நன்றியைக் காணிக்கையாக அவர்களின் பாதங்களில் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 637, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

637—

## கண்மாய்கள் சீரமைத்தல்.

*5176 திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் டி. எம். கோட்டை, எஸ். தரைக்குடி ஆகிய பொதுப்பணித்துறை கண்மாய்களுக்கு கஞ்சம்பட்டி ஓடை வழியாக வரும் தண்ணீரைத் தேக்கி வைக்கும் வகையில் கண்மாய்கள் சீரமைக்க இயலுமா?

(ஆ) கஞ்சம்பட்டி ஓடையில் பெருநாழி கிராமத்திற்கும் கீழ் சிறிய தடுப்புச்சுவர் கட்டி புதிதாக பல கண்மாய்களுக்கு பாசன வசதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) எஸ். தரைக்குடி கண்மாய் சீரமைக்கும் பணி குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. டி. எம். கோட்டை கண்மாய் சீரமைக்கும் பணி குறித்து ஏதும் இல்லை.

(ஆ) இல்லை.

முற்பகல் 10 00

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரைக்குடி கண்மாய் சீரமைக்கும் பணி பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற செய்திக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த சீரமைப்புப் பணி எப்போதும் போல் கரையைச் செம்மைப்படுத்தும் பணியா? ஏனென்றால் இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்கள் ஒரு புதிய கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். குடிநீர் ஆதாரத்தையும், நிலத்தடி ஆதாரத்தையும் பெருக்குகிற வகையில் மழைத் தண்ணீரை தேக்குவதற்கு, கடலுக்குச் செல்லவிடாமல் எல்லா நீரையும் தேக்க வழிவகை செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே சுமார் 100, 150 கி.மீ. பரப்பளவில் கரிசல் மண் பூமியாக இருப்பதால் மழைநீர் உறிஞ்சப்படாமல் கஞ்சம்பட்டி ஓடை வழியாக தரைக்குடி கண்மாய் வந்து வேம்பாறு, வைப்பாறு ஆற்றின் வழியாக கடலில் நீர் கலந்துகொண்டிருக்கிறது. அதனை



தடுத்து தேக்கும் வகையில் தரைக்குடி கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், தரைக்குடி கண்மாய் என்பது 614 ஏக்கர் பாசனம் கொண்ட கண்மாய் ஆகும். இந்தக் கண்மாய் பொதுப் பணித் துறையினுடைய பராமரிப்பில் இருக்கிறது. கஞ்சம்பட்டி ஓடையில் இருந்து இதற்கு வரத்துக் கால்வாய் வெட்டுவதற்காக ஏறத்தாழ 22,000 அடி ஏற்கெனவே இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய எல்லையில் வெட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 14,000 அடி, சிதம்பரனார் மாவட்டத்தின் எல்லையிலிருந்து வெட்ட வேண்டும். அங்கு இடப் பிரச்சினையில் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிற காரணத்தால் அந்தப் பணி தாமதப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கண்மாயைப் பொறுத்த வரையில் தண்ணீர் தேக்கி வைக்கும் அளவிற்கு அதன் கரை பலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே தற்போது எவ்வளவு தண்ணீர் வந்தாலும் வரத்துத் தண்ணீரை தேக்கி வைக்கும் அளவிற்கு கண்மாயினுடைய கரை சீரமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் அந்தக் கண்மாயை சீரமைப்பதற்காக பொதுப் பணித் துறையின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வழக்கு மன்றத்திலே நிலுவையில் உள்ள வழக்கை தீர்வு செய்து உடனடியாக சிதம்பரனார் மாவட்டத்தில் எஞ்சி நிற்கின்ற பகுதியில் கால்வாய் வெட்டுவதற்கான பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கஞ்சம்பட்டி ஓடையில் பெருநாழி என்ற கிராமத்தின் வழியாக டி. எம். கோட்டை மற்றும் எஸ். தரைக்குடி கண்மாய்க்கு இரண்டு வழியாக பிரிந்து வருகிறது. அதில் ஒரு வழியில் சிறியசெக்டாம்—தடுப்புச் சுவர் எழுப்பி டி. கரிசல்குளம் கண்மாய் அருகில் அந்த தண்ணீரை திசைத் திருப்பினால் சுமார் 10 கண்மாய்களுக்கு புதிய பாசனம் கிடைக்கும். இதனை அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். பத்தாண்டுக் காலமாக வேலைக்கு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் காரைக்குடியில் உள்ள இன்வெஸ்டிகேஷன் துறையின் மூலமாக இதற்கு ஆய்வு செய்வதாக அந்தப் பகுதியில் வந்து சொல்லி செல்கிறார்கள். அதன் நிலைமை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கஞ்சம்பட்டி ஓடையிலிருந்து பெருநாழி கிராமத்திற்கும் இடையில் தடுப்புச் சுவா கட்டி,

செக்டாம் கட்டி கீழேயுள்ள பத்து கண்மாய்களுக்கு பாசன வசதி செய்கின்ற திட்டம் இன்றைக்கு அரசினுடைய பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியினுடைய விவசாயிகளுடைய நலனைக் கருதி இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பணியினுடைய விவரத்தைத் தெரிந்து, எந்த அளவிற்கு இருக்கின்ற நிதியாதாரத்தை வைத்து அதைச் செயல்படுத்த முடியும் என்பதை ஆய்வு செய்து அந்தப் பணியினுடைய பலனை, விகிதாச்சாரத்தையும் கணக்கிலே எடுத்து அந்தப் பணிக்கு சாத்தியக்கூறுகள் இருக்குமானால், அதனால் அரசுக்கு நலம் பயக்குமானால் அந்தப் பணியை எடுத்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 638, திரு. ச. புரட்சிமணி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

638—

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை.

*1267 திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மங்களூர் தொகுதியின் குடிநீர் பிரச்சனையை தீர்க்க நிரந்தரத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மங்களூர் தொகுதியில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறையையும், அப்பகுதியில் குடிநீர் ஆதாரம் போதிய அளவுடனும் தரமானதாகவும் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டு, கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தொலை தூரங்களில் இருந்து குடிநீர் கொண்டு வந்து வழங்க பல திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மங்களூர் தொகுதியில் நல்லூர் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா? இந்தத் திட்டம் எந்தப் பகுதியில் ஏற்படுத்தப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேப்பூர் மற்றும் 17 குடியிருப்புகள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் நல்லூர்





ஒன்றியத்தில் அமைக்கப்பட இருக்கிறது. சுமார் 18 கிராமங்கள் அடங்கிய அந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த கிராமங்கள் எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாத்தாநத்தம் சாந்தநத்தம், சாந்தநத்தம் புதுகாலனி, மேலூர், ஏ. அகரம், மருதத்தூர், மருதத்தூர் காலனி, பூலாம்பாடி காலனி, கலியமேடு, நிறமணி, நிறையூர், வேப்பூர், அண்ணாநகர், நட்டுவர் காலனி, ஐயநார் பாளையம், நெல்லிக்குப்பம் பாளையம், காட்டுமன்னார் போன்ற கிராமங்கள் இந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தில் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 639, திரு. சோ. இராசாராமன், இருக்கையில் இல்லை. [குறுக்கீடு] அவருக்கு பதிலாக திரு சிங்கை கோவிந்தராசு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

639—

மின் விநியோகப் பொறுப்பினை மீண்டும் மின்சாரத் துறையிடமே ஒப்படைத்தல்.

*2621 திரு. சோ. இராசாராமன்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நகராட்சிகளின் பொறுப்பில் உள்ள மின் விநியோகப் பொறுப்பினை மீண்டும் மின்சாரத் துறையிடமே ஒப்படைத்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாகநராட்சி, நகராட்சிகளின் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய மின் விநியோகத்தினால் நிர்வாகத்தில் ஏற்படுகின்ற சீர்கேடுகளை சரிப்படுத்தவும், மாநகராட்சி அல்லது நகராட்சியிடமோ ஒப்படைக்கவும் அல்லது மின்சாரத் துறையை அந்தத் துறையே எடுத்துக் கொண்டு செயலாற்றவும், இந்தத் துறையை அரசு மாநகராட்சியிடமோ அல்லது நகராட்சியிடமோ ஒப்படைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் உருவாக்கப்பட்டபோது அரசு வழங்கி இருந்த அனைத்து உரிமங்களும் திரும்பப்பெற்று மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அப்போது மதுரை, கோவை, பொள்ளாச்சி, கரூர் மற்றும் தஞ்சை நகராட்சிகள் மட்டும் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து ஆணை பெற்று மின் விநியோகத்தை தாங்களே தொடர்ந்து செய்து வருகின்றன. இந்த 2 மாநகராட்சிகளும், 3 நகராட்சிகளும் உரிமைதாரர் என்ற தலைப்பின் கீழ் மின்வாரியத்திடம் மின்சாரத்தைப் பெற்று, தங்கள் எல்லைக்குள் உள்ள மின்சார உபயோகிப்பாளர்களுக்கு கட்டண விகிதங்களை நிர்ணயித்து விநியோகம் செய்து வருகின்றன. அந்த கட்டண விகிதங்கள் மின் வாரியம் நேரடியாக விநியோகிக்கும் நகரங்களில் வசூலிக்கும் கட்டணங்களைவிட சிறிது அதிகமாக உள்ளது. வீட்டு உபயோகத்திற்கு யூனிட் ஒன்றுக்கு சுமார் 15 முதல் 25 பைசா வரையிலும், வணிகம் மற்றும் தொழில் உபயோகத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 25 முதல் 50 பைசா வரையிலும் அதிகமாக இருக்கிறது. இந்த நிலைமையை உணர்ந்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசி, இதுபற்றி விரைவான ஒரு முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகளில் மின்சார இலாகா அவர்கள் பொறுப்பில் இருந்தாலும், அரசிடமிருந்து ஒரு விலைக்கு வாங்கி, அவர்கள் ஒரு விலைக்கு விற்கின்ற





பொழுது பொதுமக்களுக்குத் தான் அந்த இடையூறுகள் ஏற்படுகின்றன. அதை இந்த ஆண்டாவது மறு பரிசீலனை செய்து அந்த சட்ட விதிகளின்படி அந்த மின்சார பிரிவை தமிழக அரசினுடைய மின்சார பிரிவோடு இணைக்க உள்ளாட்சித்துறை நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி இதுபற்றி விரைவில் முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. கே, சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருள் மூடிக் கிடந்த ஊராட்சி ஒன்றிய பகுதிகளை நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் பொறுப்பேற்ற பின்புதான் இன்றைக்கு கிராமங்கள்தோறும் வீதி விளக்குகள் புதிதாக அமைக்கின்ற நிலைமை தமிழகத்தில் உருவாகி இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவிப்பதோடு, இந்த மின் விளக்குகள், வீதி விளக்குகள் கெட்டுவிட்டால், பழுதடைந்துவிட்டால் அதை மாற்றி அமைக்கின்ற பொறுப்பு மின்வாரியத்திடம் இருக்கின்றது. எனவே இதிலே சில கோளாறுகள் ஏற்படுகின்றன. இதை ஊராட்சி ஒன்றிய அலுவலரிடம் சொல்லி, அவர்கள் மின்சாரவாரியத்தை அணுகி அதற்குப் பின்பு ஒரு ரூபாய் பெற்றுக்கொண்டு, அந்த மின் விளக்குகளை மாற்றும் நிலைமை இருக்கிறது. எனவே, இப்போது குடிநீர்வடிகால் வாரிய குழாய் பழுதடைந்துவிட்டால் அதை சரிசெய்ய ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு அலுவலர் இருக்கின்றார். அதே அடிப்படையிலே ஊராட்சி ஒன்றியங்களில் ஐ டி ஐ படித்து இருக்கின்ற எலக்ட்ரீஷியன்களை வைத்து அவர்களே அந்த விலக்குகளை மாற்றி அமைக்கின்ற நிலைமை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் திட்டம் வைத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்வாரியத்திடமிருந்து கரூர், பொள்ளாச்சி, தஞ்சாவூர், கோவை, மதுரை ஆகிய 5 நகராட்சிகள் தான் மின்சாரத்தை அவர்களே உபயோகப்பாளர்களுக்கு தருகிறார்கள். அதனால் மின்வாரிய கட்டணங்களைவிட, அங்கே கட்டணம் இரு மடங்காக இருக்கிறது. அதனால் உபயோகிப்பாளர்கள் பல தடவை அரசுக்கு பல்வேறு கோரிக்கைகள் விடுத்து இருக்கிறார்கள். ஆகவே, இதை கும்பகோணம் நகராட்சியில் இருப்பதைப் போல ஒரு கோவாபரேடிவ் சிஸ்டம் மூலமாக இந்த மின் விநியோகத்தை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 2 மாநகராட்சிகள் மற்றும் 3 நகராட்சிப் பகுதிகளில் மின்சார விநியோகம் செய்யும் பொறுப்பை மின்வாரியத்திடம் ஒப்படைப்பதற்கு நகராட்சி நிர்வாகம் தயாராக இருக்கிறது. ஆனால். மின் வாரியம் கொடுக்கவேண்டிய நஷ்டஈடு சுமார் 40 கோடி முதல் 50 கோடி ரூபாய் வரலாம் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. இந்த 50 கோடியை யார் பொறுப்பேற்றுக்கொள்வது என்ற பிரச்சினை தான். இரண்டு துறைகளின் சார்பாக அதிகாரிகள் ஆலோசனை செய்து வருகிறார்கள், அது பற்றி விரைவில் முடிவெடுத்து 2 மாநகராட்சிகள் மற்றும் 3 நகராட்சிகளில் இருக்கிற மின்சார விநியோகத்தை மின்சார வாரியத்திடம் ஒப்படைப்பதற்கு விரைவாக முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 640, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

640 —

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*5305 திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர், துவாக்குடி, கூத்தைப்பார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?





மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவெறும்பூர், துவாக்குடி கூத்தைப்பார் ஆகிய பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ, 525.60 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்பக் குழு வாரியத்தின் ஒப்புதலுடன் நிர்வாக ஒப்புதலுக்காக, வாரியத்தால் அரசுக்கு அனுப்பப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பேரூராட்சிகளின் தீர்மானங்கள் மற்றும் நிதிச் சான்றுகளுடன் அரசுக்கு மீண்டும் திட்ட செயற் குறிப்பினை அனுப்பி வைக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. திருவெறும்பூர். துவாக்குடி. கூத்தைப்பார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நன்றி, காவிரி கரையில் வசித்தும் காவிரி தண்ணீரைக் குடிநீராகப் பெற முடியாமல் தவிக்கிற அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கிடப்பிலே போடப்பட்டு இந்தத் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நடப்பு நிதியாண்டில் நிதியொதுக்கி திட்ட பணிகள் தொடங்குவதற்கு அரசு ஆவண செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு பிறகு பணிகள் மேற்கொள்ளப்படும் இந்த ஆண்டிலே பணிகள் தொடங்குவதற்கான ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 641 திரு. பே. தர்மலிங்கம். இருக்கையில் இல்லை,

வினா எண் 642, டாக்டர் பீட்ரிக்ஸ் டி'சோசா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

642—

## *Allottment of Government Rental Accomodation to Widows on priority basis,*

*4366 Dr. BEATRIX D' SOUZA :

Will the Hon. the Minister for Housing and Urban Development be pleased to state—

Whether Government will consider allocation of Government rental accommodation to single mothers, divorcees and widows on priority basis?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

ஆம்.

DR. BEATRIX D'SOUZA : Hon'ble Deputy Speaker Sir, with the commitment shown by the Hon'ble Chief Minister to the cause of Women, femanism has now become the Philosophy of Tamil Nadu. The hand that draws the cradle is now rocking the system and in the system which is male oriented and male-dominated the victim is the single women, whether she is a deserted wife, or a single widow or mother or a divorcee. These single women—because they do not have the so-called male protector, the male figurehead, it is very difficult for them to get rental accommodation. Will the Government consider a specific Women Housing Programme-they have such a programme in Australia to enable the women to get affordable secure and appropriate accommodation?

HON'BLE THIRU T. M. SELVA GANAPATHY : Hon'ble Deputy Speaker Sir, the Government has decided to reserve 1 per cent of rental Flats under the Tamil Nadu Government Servants' Rental Housing Scheme to single mothers, widows and divorcees with immediate effect. I would say that this is for the first time in the history of the Housing Board such type of reservation has been introduced, (மேசையைத் தட்டும் ஒலி) for the benefit of the deprived section of the society. This will certinly go to show how best the interest of the single Mother, Divorcees and windows have been safe guarded under the esteemed leadership of our beloved Chief Minister Dr. Puratchithalaivi. (மேசையைத் தட்டும் ஒலி) 5 per cent of the Government discretion quota has been reserved for the Single Women, Divorcees and Widows under Hire-purchase and outright Purchase Schemes. Under these schemes Single Women, Divorcees and Widows can be benefited.

Dr. BEATRIX D'SOUZA : Hon'ble Deputy Speaker Sir, on behalf of all Single Women I thank the Government.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 643, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

643—

தமிழக பால்வள நிறுவனம்

*803 திரு. டி. எம். ரங்கராஜன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக பால்வள நிறுவனம் தற்போது நஷ்டத்தில் இயங்கி வருகிறதா?





(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(இ) சென்ற ஆண்டு பால்வள நிறுவனத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். 1991–92 நிதியாண்டில் நஷ்டத்தில் இயங்கி வந்தது. 1992–93 ஆம் ஆண்டில் சீராகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) கொள்முதல் விலைக்கும் விற்பனை விலைக்கும் இடைப்பட்ட முரண்பாடே முக்கிய காரணம்.

(இ) சென்ற ஆண்டு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை பெற்ற பின்னரே சரிவர கூற இயலும். மாதத்திற்கு ரூ. 103 லட்சமும், ஆண்டிற்கு ரூ. 1,250 லட்சமும் கொள்முதல் மற்றும் விற்பனை விலை முரண்பாடு காரணமாக பற்றாக்குறை ஏற்படுகிறது.

முற்பகல் 10–15

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறையிலே வெண்மைப்புரட்சி செய்தவர் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள். அதற்குப் பின்னால் இடைப்பட்ட காலத்தில் வந்த தி.மு.க. அரசிலேதான், அதிகார துஷ்பிரயோகத்தின் காரணமாக, இந்தத் துறைக்கு நஷ்டம் ஏற்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நஷ்டம் சீர் செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே, இந்த நஷ்டத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யப்பட்டு, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 644, திரு. செ. பெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

644—

## குமஸ்தம்பட்டியில் உறைவிடப் பள்ளி.

*3990 திரு. செ. பெருமாள்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம் ஏற்காடு தொகுதியில் இடையப்பட்டி ஊராட்சி குமஸ்தம்பட்டியில் உறைவிடப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையப்பட்டி ஊராட்சி, குமஸ்தம்பட்டியில் அதிகமாக பழங்குடியினர் வாழ்கிறார்கள். பழங்குடியினர்களுடைய குழந்தைகள் பயன் பெறும் வகையிலே, அடுத்த ஆண்டிலாவது மீண்டும் பரிசீலனை செய்து, உறைவிடப் பள்ளி அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமஸ்தம்பட்டி கிராமத்தில் 4 பழங்குடியின மாணவ, மாணவியர் மட்டுமே சேரக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். ஆகையினால், பள்ளி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையப்பட்டி ஊராட்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக வாழ்கிறார்கள். எனவே, மீண்டும் அரசு பரிசீலனை செய்து, ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் பயன்பெறும் வகையில், உண்டு உறைவிடப் பள்ளியைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையப்பட்டி ஒன்றியம், குமஸ்தம்பட்டியில் பள்ளியில் சேரக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவு என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தகவல் தந்திருக்கிற காரணத்தால், இதை மேலும் பரிசீலிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 645, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

645—

## பனைமரம் தொடர்பான தொழிற்சாலை அமைத்தல்

*4187 டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழில் துறையில் பின்தங்கிய சங்ககிரி தொகுதிக்குட்பட்ட எலச்சிபாளையம், மல்லசமுத்திரம் ஆகிய ஒன்றியங்களில் பனைமர தொழிலாளர்கள் அதிகம் இருப்பதால் அது தொடர்பான தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரம் மற்றும் எலச்சிபாளையம் ஆகிய இரண்டு ஒன்றியங்களிலும், 10 பஞ்சாயத்திற்கு மேற்பட்ட 11 கிராமங்கள், பனைமரத் தொழிலாளர்கள் நிறைந்த கிராமங்களாக இருக்கின்றன. சுமார் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பனைமரத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வு மலர அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் மற்றும் எலச்சி

பாளையம் ஒன்றியங்களில் 5,103 உறுப்பினர்களைக் கொண்ட, 28 ஆரம்ப வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே, அங்கே உள்ள பனைத் தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய தொழிலை ஊக்கப்படுத்துவதற்கு, ஒவ்வொரு தனி நபருக்கும் 2,500 ரூபாய் விதம் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரங்களுக்கு தனிசிறப்பு சேர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தனி நபர்களுக்கு என்று நிதி உதவி ஒதுக்கிக் கொடுத்தாலும், பொதுவாக அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தால், ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, தமிழகத்திலே பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற நமது ஒப்பற்ற முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பனை வாரியம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளார்கள். எனவே அதற்குரிய, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு பனை வாரியம் அமைக்கின்ற பணி முடிகிறபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 646, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

646—

சென்னையிலிருந்து மெக்காவிற்குச் செல்ல கப்பல் போக்குவரத்து.

*5726 திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழக முஸ்லீம் மக்களுக்கு சென்னையிலிருந்து நேரடியாக புனித மெக்காவுக்குச் சென்றுவர கப்பல் போக்குவரத்து ஒன்றினைத் துவங்கிட அரசு முன்வருமா ?





(ஆ) ஆம் எனில், எப்போது புனித மெக்காவுக்கு கப்பல் விடப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னையிலிருந்து மெக்காவுக்கு புனித ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் பயணிகள் கப்பல் மூலம் சென்றுவர முயற்சி செய்து, அம்முயற்சி பல்வேறு நடைமுறை சிக்கல்களால் பின்னர் கைவிடப்பட்டது.

முற்பகல் 10–20

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது போல் அந்தத் திட்டத்தை கைவிடாமல் அதிலே முயற்சி செய்ய கேட்டுக் கொண்டு, சிறுபான்மை மக்களுக்கு பல சலுகைகளைச் செய்துவரும் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கப்பல் விட மத்திய சர்க்காருக்கும் தெரிவித்து, அதற்கான முயற்சி செய்துகொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு, விமானத்தில் செல்வது என்பது வசதி படைத்தவர்களால் தான் செல்லமுடிகின்றது. வசதி இல்லாதவர்கள் செல்ல முடியவில்லை. அதனால், கப்பல் போக்குவரத்தை மறுபடியும் முயற்சி செய்து கொடுப்பார்களானால், அந்தக் கட்டணமும் குறையும். எல்லா மக்களும் போய்வர வசதியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு அதை மறுபரிசிலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ்ஜிற்குச் செல்லும் பயணிகள் கப்பல் மூலம் புறப்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால், அதற்கு முன்பாக பம்பாயிலிருந்து அந்தக் கப்பல்கள் அழைக்கப்பட்டு, பழுது பார்க்கின்ற பணிகள் எல்லாம் மிக மிகுதியாக இருக்கின்ற காரணத்தால், அத்தகைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, இதுபோன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்ற சாத்தியக் கூறுகள் இல்லை என தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொல்வதை விட அதை மறுபரிசிலனை செய்து ஏற்படுத்திக் கொடுக்குமாறு நான் வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித ஹஜ் யாத்திரையை ஒரு ஆண்டிலே மேற்கொள்கின்ற பயணிகளின் எண்ணிக்கையைக்

164943

கணக்கில் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர். ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு பகுதியில் நிறைய பேர் ஹஜ் பயணம் செல்ல விரும்புகிறார்கள். எனவே, புனித ஹஜ் பயணம் செய்ய விரும்பும் அனைத்து முஸ்லீம் மக்களும் மெக்கா சென்றுவர விமானம் மூலமாவது ஏற்பாடு செய்துதர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள மனு அனுப்புகின்ற பயணிகள், நமது தமிழகத்திலிருந்து அனுப்புகின்ற மத்திய ஹஜ் கமிட்டியினுடைய பரிந்துரைகளின் மூலமும் மாநில ஹஜ் கமிட்டியும் இணைந்து, தமிழகத்திலேயிருந்து இந்த ஆண்டு ஆயிரம் நபர்கள் செல்கிறார்கள். எனவே, மனு அனுப்புகின்ற அனைத்து நபர்களுமே தமிழகத்திலேயிருந்து சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி சந்திரசேகர் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் பயணத்தைப் பற்றி இங்கே குறிப்பிடுகின்றபோது விமானக் கட்டணம் அதிகம் என்று சொன்னார்கள் சமய சார்பற்ற புரட்சித் தலைவியினுடைய அரசு இந்தக் கட்டணத்தை சலுகை அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களின்படி அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்வதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹஜ் வழிபாட்டிற்கு ஆண்டிற்கு ஒரு முறை தான் நாம் செல்கிறோம். எனவே, கப்பலை வாடகைக்கு எடுத்து, அந்தப் பயணிகளுக்கு அரசு இதைப் பயன்படுத்துமா என்று அறிய விரும்புவதோடு, இந்தக் கப்பலில் "ஒன்றே





குலம் ஒருவனே தேவன்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போன்று நமது தமிழகத்திலே இருக்கின்ற தமிழர்களையும் அந்த புனித ஹஜ்ஜிற்கு அழைத்துச் செல்வதற்கு துறை அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் பயணிகள் புனித யாத்திரையை மேற்கொள்வதற்காக மத்திய ஹஜ் கமிட்டியும் மாநிலத்திலுள்ள ஹஜ் குழுவும் இணைந்து ஹஜ்ஜிற்கு செல்லுகின்ற பயணிகளை கப்பல் மூலம் செல்கின்ற பயணிகள் கப்பலில் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சிக்கலான கேள்வி ஒன்றையும் தொடுத்துள்ளார்கள். எனவே, அதை ஹஜ் குழுவோடு கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோ. காளன்.

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் புனித யாத்திரைக்காக விசேஷ கப்பல்கள் விட வேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் பலபேர் கேட்டிருக்கிறார்கள். சமீபத்திலே அந்தமான் நிக்கோபார் என்ற கப்பல் ஹஜ் பயணத்திற்காக எடுத்துச் செல்வதற்காக மைய அரசால் ஏற்பாடு செய்யப்பட்டு விடப்பட்டிருக்கிறது. அதற்காக அந்தமான் நிக்கோபார் செல்லக்கூடிய விமானப் பயணிகளுக்கு, அந்த கப்பலை புனித யாத்திரைக்கு அனுப்பி விட்டதால், சாதாரணமாக கப்பலிலே போகக் கூடிய சார்ஜ் என்னவோ அதை மட்டும் வாங்கிக் கொண்டு விசேஷ விமானங்களை அந்தமான் பயணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே போல தமிழகத்திலேயிருந்து செல்லக்கூடிய ஹஜ் பயணிகளுக்கு கப்பல் கிடைக்காவிட்டாலும்கப்பலிலே செல்லக் கூடிய கட்டணத்தை மட்டும் வாங்கிக் கொண்டு விசேஷ விமானங்கள் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவை பொறுத்த மட்டில், மத்திய ஹஜ் குழுவும் மாநில ஹஜ் கமிட்டியும் இணைந்து இதுபோன்ற பயணிகள் செல்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய ஹஜ் கமிட்டியிலே இருந்து அதற்குரிய நிதியைப் பெற்றுத் தருவார்களேயானால் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசும் ஹஜ் பயணிகளுக்கு அந்த வசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு புரட்சித்தலைவியின் மூலமாக ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

628—

சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டிடம்.

வினா எண் *8841 திரு. எம். பெரியவீரன்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியகுளம் தாலுகாவில் இயங்கி வரும் சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசுஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

விடை—

பெரியகுளம் தாலுகாவில் இயங்கிவரும் பெரியகுளம் சார்நிலைக் கருவூலம்தற்சமயம் அங்குள்ள வட்டாட்சியர் அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. அதற்கென புதிய கட்டிடம் கட்டுவதற்கான கருத்துரு அரசின் நிதிநிலைக் கேற்ப பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

629—

தஞ்சாவூர் மாவட்டத்தில் மூடப்பட்ட கரும்புப் பண்ணை நிறுவனம்.

வினா எண் *5450 திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மூடப்பட்ட கரும்புப் பண்ணை நிறுவனத்தின் நிலங்களைப் பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) அந்த நிலங்களை விற்ற வகையில் விலை நிர்ணயம் செய்வது பற்றி மறு ஆய்வு மதிப்பீடு செய்யஅரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

விடை—

(அ) மற்றும் (ஆ):

விவர அறிக்கை அவை முன் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

தமிழ்நாடு கரும்புப் பண்ணை கழகத்திடமிருந்து எடுக்கப்பட்ட உபரி நிலங்கள் 1965—ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (உபரி நில விநியோக) விதிகளின்படி ஒப்படை



செய்யப்பட்டதே தவிர, விற்பனை செய்யப்படவில்லை ஒப்படை செய்ததில், முறைகேடுகள் நடந்ததாக தெரியவில்லை. அரசுக்கு வரும் பல்வகை புகார் மனுக்கள் தொடர்பாக, அவ்வப்போது விசாரணை செய்து மனுதாரர்களுக்குப் பதில் தெரிவிக்கப்படுகின்றது.

1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நில விநியோக) விதிகளின் விதி 6 (1) (ஏ)-யின்படி நிலத்தின் நிலமதிப்பு, சட்டத்தின் III ஆம் இணைப்புப் பட்டியலின் 1-ஆம் பகுதியின் 3-ஆம் பத்தியின்படி தீர்மானிக்கப்பட்டவாறு, அந்த நிலங்களின் ஆண்டு மதிப்பில் 12 மடங்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவ்விதியின்படி, 0.75 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு நில மதிப்பு ரூ. 2,700 என்றும், 1.50 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு ரூ. 855 என்றும் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால், இந்நேர்வில், ஒப்படைக்காக ஒப்படைதாரர்கள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையையும், ஒப்படை நிலங்களைச் சீர்திருத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு, நில மதிப்புத் தொகையைக் குறைத்து, நன்செய் ஏக்கர் 0.75—க்கு ரூ. 2,000 என்றும், புன்செய் 1.50 ஏக்கருக்கு ரூ. 700 என்றும் உபரி நில விநியோக விதிகளின் அடிப்படையில வசூல் செய்ய உத்தரவிடப்பட்டது. எனவே விலை நிர்ணயம் செய்வது பற்றி மறு ஆய்வு மதிப்பீடு செய்ய வேண்டிய தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

641—

உணவு விநியோகத்தில் பாமோலின் எண்ணெய் கிடைக்க நடவடிக்கை.

வினா எண் *1316 திரு.பே. தர்மலிங்கம்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த இரண்டாண்டு காலமாக உணவு விநியோகத்தில் பாமோலின் எண்ணெய் சரியாக கொடுக்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விஸ்வநாதன்.

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாநிலங்களுக்கு பாமோலின் எண்ணெய் ஒதுக்கீடு செய்வதை மைய அரசு வெகுவாகக் குறைத்து விட்ட நிலையில், அயல் நாடுகளிலிருந்து ரூபாயாக விலையைச் செலுத்தி

பாமோலின் எண்ணெய் இறக்குமதி செய்ய மைய அரசு இம் மாநிலத்திற்கு அனுமதி அளித்தது. அதன் அடிப்படையில் 18,000 மெட்ரிக் டன்கள் பாமோலின் இறக்குமதி செய்யப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

## (பதினான்காவது பட்டியல்).

1—

### நரிக்குறவர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 1591—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரத்திலுள்ள நரிக்குறவர்களுக்கு காலனி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

2—

### மிகவும் பின்தங்கிய மக்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 2556—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன்காடு ஊராட்சி, பளஞ்சேரியில் வாழும் மிகவும் பின்தங்கிய சமூக ஏழை மக்களுக்கு காலனி வீடு கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

3—

### தொடக்கப்பள்ளியில் ஆசிரியர் நியமனம்.

வினா எண். 2767—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாக்குடியில் உள்ள தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்கவும், கட்டிடங்கள் கட்டித் தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியத்திலுள்ள கோட்டாக்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு ஒரு இடைநிலை ஆசிரியர் (ஜூனியர்) பணியிடம் வழங்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. இப் பள்ளிக்கு கட்டிடங்கள் கட்டித்தர செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

4—

### அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண் 3181—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம் அரசு உயர்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியர் தமிழ் ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் ஆகிய பணியிடங்களை பூர்த்தி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

5—

### புதிதாக ஆரம்பப் பள்ளி துவக்குதல்.

வினா எண் 5483—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேரன்மகாதேவி தொகுதி, வெங்காடம்பட்டி ஊராட்சி அழகம்மாள்புரத்தில் புதிதாக ஆரம்பப் பள்ளி துவக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மேற்குறிப்பிட்ட அழகம்மாள்புரத்தில் தொடக்கப்பள்ளி துவக்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில்இல்லை. 1992-93 ஆம் ஆண்டில் பள்ளி தொடங்குவதற்கான கருத்துரு தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப்படின், விதிகளின்படி உரிய நடவடிக்கை இயக்குநரால் மேற்கொள்ளப்படும்.

6—

## ஆசிரியர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 6758—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், மணக்காடு ஊராட்சி பாங்கராங் கொல்லையில் ஒரு ஆசிரியர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

7—

## தமிழ்நாட்டில் கிராம சுகாதார செவிலியர்களின் எண்ணிக்கை.

வினா எண் 1662—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் ANM படித்துவிட்டு கிராம சுகாதார செவிலியராக (Village Health Nurse) ஆக பணிபுரிபவர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கிராம சுகாதார செவிலியராக (Village Health Nurse) ஆக பதவி உயர்வு கொடுத்து பணியிடம் அளிக்கப்படாமல் இருப்பவர்கள் எண்ணிக்கை என்ன?

விடை—

(அ) இரண்டாண்டுகள் கொண்ட (Auxiliary Nurse Midwife) பயிற்சி தற்பொழுது 18 திங்கள் கொண்ட பல நோக்கு சுகாதார பயிற்சியாக மாற்றப்பட்டுள்ளதுடன், இப்பயிற்சியில் தகுதி அடைந்தவர்கள் துணை சுகாதார நிலையங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கிராம சுகாதாரச் செவிலியராக (Village Health Nurse) பணி நியமனம் செய்யப்படுகின்றார்கள். தற்பொழுது 8,601 கிராம சுகாதாரச் செவிலியர்கள் தமிழகத்தில் பணிபுரிகின்றார்கள்.

(ஆ) பல நோக்கு சுகாதார பயிற்சியில் தகுதி வாய்ந்த பெண்கள் நேரடியாக கிராம சுகாதார செவிலியராக (Village Health Nurse) பணி நியமனம் செய்யப்படுகின்றார்கள். தவிர இவர்கள் 18 மாதங்கள் பல நோக்கு சுகாதார மேற்





பார்வையாளர் (பெண்கள்) பயிற்சியில் தகுதி அடைந்தவுடன், பகுதி சுகாதார செவிலியராக (Sector Health Nurse) பதவி உயர்வு பெற தகுதி உடையவர்களாகின்றார்கள். தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் பேரையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு கிராம சுகாதாரச் செவிலியர் பணியிடம் நிரப்பப்படாமல் உள்ளது.

8—

## சாலை அமைத்தல்.

வினா எண் 815—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொள்ளாச்சியிலிருந்து வால்பாறைக்கு சக்தி எஸ்டேட் வழியாக போடப்பட்ட போக்குவரத்துச் சாலை போடும் பணி வனத்துறையால் தடைபட்டுக் கொண்டிருப்பதால் தடையை நீக்கி பணியை துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மேற்கண்ட பணியைச் செய்து முடிக்க வனத்துறையால் தடையேதும் இல்லை.

9—

## நிழற்குடை அமைத்தல்.

வினா எண் 3009—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னரெட்டவயல் மெயின் சாலையில் நிழற்குடை ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலை பற்றாக்குறை காரணமாக இந்த நிதி ஆண்டில் நிழற்குடை அமைக்கும் திட்டம் இல்லை.

[1992 ஏப்ரல் 27

10—

<u>படிக்கட்டில் பயணம் செய்தவர்கள் மீது நடவடிக்கை.</u>

வினா எண் 6017—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(a) Whether the Madras City Police undertook an intensive drive foot-board travel in buses during September, 1991;
(b) the cetalis thereof;
(c) the number of men, women who are apprehended than, and;
(d) the number of men and women students,

விடை—

(a) மற்றும் (b) சென்னை நகர போக்குவரத்து காவல் பிரிவானது, 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பேருந்தில் படிக்கட்டில் பயணம் செய்பவர்களுக்கு எதிராக தீவிரமாக நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மிக நெரிசல் நேரங்களில் படிக்கட்டில் பயணம் செய்யும் பயணிகளை பேருந்துகளை நிறுத்தி இறக்கி விடப்பட்டனர். பிற சமயங்களில் அத்தகைய பயணிகள் தண்டிக்கப்பட்டார்கள்.

| | |
|---|---|
| (c) படிக்கட்டில் பயணம் செய்த குற்றத்திற்காக வழக்கு பதிவு செய்யப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை .. .. .. | 816 |
| பெண்களின் எண்ணிக்கை .. .. | 7 |
| ( ) படிக்கட்டில் பயணம் செய்த குற்றத்திற்காக வழக்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை .. .. | 288 |
| மாணவிகளின் எண்ணிக்கை .. .. | 4 |
| மொத்தம் .. .. | 1,115 |

11—

<u>பணிமனை திறக்க நடவடிக்கை.</u>

வினா எண் 8274—திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இளையான்குடி தொகுதி, ஆர். எஸ். மங்களத்தை மையமாகக் கொண்டு பணிமனை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

இளையான்குடி தொகுதி, ஆர். எஸ். மங்களம் இன்னும் நகரமாக (டவுன்) அறிவிக்கப்படவில்லை நகரமாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட இடங்களில் தான் தற்சமயம் பணிமனை



1992 ஏப்ரல் 27]

அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் ஆர். எஸ். மங்களத்தை மையமாக வைத்து தற்பொழுது எந்தப் பேருந்தும் இயக்கப்படவில்லை. எனவே, மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் சார்பில் தற்சமயம் பணிமனை கட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

12—

<u>கண்மாய்கள் ஆழப்படுத்துதல்.</u>

வினா எண் 1629—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீருக்காக மழை நீரைத் தேக்கி வைக்க கண்மாய்கள், ஊரணிகள் ஆழப்படுத்தப்படுமா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீருக்காக பயன்படுத்தும் ஊரணிகள் ஏதும் பொதுப்பணித்துறை பராமரிப்பில் இல்லை. பொதுப்பணித் துறையைச் சார்ந்த கண்மாய்களை குடிநீருக்காக மழை நீரைத் தேக்கி வைப்பதற்காக ஆழப்படுத்தும் திட்டங்கள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

13—

<u>குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க நடவடிக்கை.</u>

வினா எண் 2408—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி, கீழக்கோட்டை கிராமத்திற்கு மின் அழுத்தம் குறைவாக இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): கீழக்கோட்டை கிராமத்திற்கு அக்கிராமத்திலேயே நிறுவப்பட்டுள்ள 50 கி.வோ. ஆ/22 கி.வோ. மின் பகிர்மாற்றி மூலம் மின்சக்தி வழங்கப்பட்டு வருகிறது தற்சமயம் இம் மின்மாற்றியில் 36 கி.வாட் மின்பளு (லைட்ஸ்

மற்றும் 20 குதிரைத்திறன் (பவர்லோடு) மின்பளு இணைக்கப்பட்டு மின் பகிர்மாற்றி திறனுக்குள் இயங்கி வருகிறது. இம் மின் பகிர்மாற்றியின் தாழ்வழுத்தப் பாதையின் கடைசியில் குறைந்த மின் அழுத்தம் நிலவுவதைப் போக்க தற்போதுள்ள 1.6 கி.மீ. நீளமுள்ள ஒரு முறை (Single phase) மின் பாதையை மும்முனைப் ( Three phase ) பாதையாக மாற்றி அமைப்பதற்கான வேலைகளை மின் வாரியம் மேற்கொண்டுள்ளது. இப் பணிகள் முடிவடைந்ததும் கீழக்கோட்டை கிராமத்தில் மின் அழுத்தம் இயல்பான நிலையை அடையும்.

14—

## காட்டாற்றில் இருந்துவரும் வாத்தலையை புல்டோசர் வைத்து மராமத்து செய்தல்

வினா எண் 2867 —— திரு. ஆர். சிங்காரம்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ராஜாமடம் ஊராட்சியை சேர்ந்த கீழத்தோட்டத்திற்கு அருகில் ஓடுகின்ற மகாராஜ சமுத்திரம் காட்டாற்றில் இருந்து வரும் வாத்தலையை புல்டோசர் வைத்து மராமத்துச் செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

15—

## ஏரியை ஆழப்படுத்துதல்

வினா எண் 2873 திரு. ஆர். சிங்காரம்:
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காட்டில் உள்ள சிப்பி முறிச்சான் ஏரியை ஆழப்படுத்தி அகலப்படுத்தி தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.



16—

## குழாய் அமைத்து சிப்பி முறிச்சான் ஏரிக்கு தண்ணீர் விடுதல்

வினா எண் 2874 திரு ஆர். சிங்காரம் :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு தட்சனோடை ஏரி, ஐயன் ஏரிகளின் அடியில் குழாய் அமைத்து சிப்பி முறிச்சான் ஏரிக்கு தண்ணீர் விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை —

இல்லை.

17 —

## ஒற்றைவிளக்கு அமைத்தல்

வினா எண் 2972—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சி ஆலடிக்காடு ஆதிதிராவிடர்களின் குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆலடிக்காடு ஆதிதிராவிடர்களின் குடிசைகளுக்கு இலவச மின் இணைப்பு கோரி இதுவரை விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.

18—

வினா எண் 2982 திரு. ஆர், சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விடை —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் கூத்தர்டி வயல் ஆதிதிராவிடர்களுடைய காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் கூத்தாடி வயல் ஆதி திராவிடர் காலனியில் 2 தெரு விளக்குகள், 1 வீட்டு மின் இணைப்பு மற்றும் ஒரு மேல்நிலை நீர்த்தொட்டிக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு, ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆதிதிராவிடர் காலனியிலிருந்து ஒற்றை விளக்குகள் வேண்டி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.

19—

**பம்பிங் ஸ்கீமில் உள்ள மோட்டாரை பழுது பார்த்தல்**

வினா எண். 3074—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்ன ஆவுடையார் கோவிலில் இயங்கும் பம்பிங் ஸ்கீமில் உள்ள பழுது பட்ட மோட்டாரை பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இந்த மோட்டாரை பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

20—

**தெரு விளக்கு அமைத்தல்**

வினா எண் 3106—திரு. ஆர். சிங்காரம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கணேசபுரத்தில் மயானசாலைக்கு தெருவிளக்கு போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கணேசபுரத்தில் 12 (பன்னிரெண்டு) தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. கணேசபுரம் மயானசாலைக்கு தெரு விளக்குகள் பொருத்தக்கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு இதுவரை வரவில்லை.



21—

**மின் இணைப்பு வழங்கல்**

வினா எண். 3154 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் துறையூர் ஆதிதிராவிடர் தெருவில் உள்ள ஐயனார் கோவிலுக்கு மின் இணைப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

துறையூர் ஆதிதிராவிடர் தெருவில் உள்ள ஐயனார் கோவிலுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

22—

**தெருவிளக்கு அமைத்தல்.**

வினா எண் 3157—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழுமங்கடா கடற்கரை சாலையில் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழுமங்கடா கிராமத்திற்கு 8 தெருவிளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. கழுமங்கடா கிராமத்தில் கடற்கரை சாலைக்கு கூடுதல் தெருவிளக்குகள் பொருத்தக்கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் தற்போது நிலுவையில் இல்லை.

23—

**ஒற்றை விளக்கு அமைத்தல்.**

வினா எண் 3168—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூர் ஆதிதிராவிடர் தெரு வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

துறையூர் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் தெரு வீடுகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்புக் கோரி இதுவரை விண்ணப்பம் ஏதும் மின்வாரிய அலுவலகத்திற்கு வரவில்லை.

24—

## தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 5579 திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியம், நெருஞ்சிப்பேட்டையில் அண்ணார் என்ற புதுரோட்டிற்கு தெரு விளக்கு வசதிகள் செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

பெரியார் மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியம், நெருஞ்சிப்பேட்டையில் அண்ணார் என்ற புதுரோடு இல்லை. புதுரோடு எனப்படும் இப்பகுதி பிரிவுப்பாதை எனக் குறிப்பிடப்பட்டு ஒரு தெருவிளக்கு அமைக்க 9—6—1989-ல் விண்ணப்பம் பெறப்பட்டது. இந்த ஒரு தெருவிளக்கிற்கு அரசின் தெரு விளக்குக்கான சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1992-93 ஆம் ஆண்டில் மின்வசதி செய்து தரப்படும். புதுரோடுப் பகுதியில் ஏற்கனவே 3 விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

25—

## ஆதிவாசிகள் மற்றும் மலைப்பகுதி மக்களுக்கு மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண் 5660 திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட ஒந்தனையில் வசிக்கும் ஆதிவாசிகள், மற்றும் மலைப்பகுதி மக்களின் கிணறுகளுக்கு மூன்று வழி மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மின் இணைப்பு வழங்கப்படும் ?





விடை—

(அ) மற்றும் (ஆ) : பொதுவாக அனைத்து விவசாய பம்புசெட்டுகளுக்கும் மும்முனை இணைப்புதான் வழங்கப்படுகிறது. ஒந்தனையில் தற்போது ஒரு வழி மின்பாதை உள்ளது. இங்கு விவசாய மின் இணைப்பு கோரி 18–12–1987 அன்று ஒரே ஒரு மனு பெறப்பட்டுள்ளது. விவசாய பம்புசெட்டுகள் மின் இணைப்பு பதிவு வரிசை அடிப்படையில் தரப்படுவதால் இங்கு தற்சமயம் 31–12–1984 வரை பெறப்பட்ட மனுக்களே மின் இணைப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. எனவே, இந்த விவசாய பம்புசெட்டு மின் இணைப்பு மனுவிற்கு அவரது மனுவின் வரிசைப்படி முதுநிலைத் தகுதி பெறும்போது மும்முனை மின் இணைப்பு சில ஆண்டுகளில் வழங்கப்படும்.

26—

## தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 5673—திரு. வே. பெரியசாமி ; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட சுண்டப்பூரில் எப்போது தெருவிளக்கு அமைக்கப்படும் ?

விடை—

பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட சுண்டப்பூரில் ஏற்கனவே 7 (ஏழு) தெருவிளக்குகள் பொருத்தப்பட்டு எரியும் நிலையில் உள்ளன. மேலும் கூடுதலாக கோரப்பட்டுள்ள இரண்டு தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு அரசின் தெருவிளக்குகளுக்கான சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டு தரப்படும்.

27—

## சாலை அமைத்தல்.

வினா எண் 607—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் ஆதிதிராவிடர் தெருவிற்குச் செல்லும் சாலையை தார்ச்சாலையாக மாற்றி செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 ஏப்ரல் 27

விடை—

இல்லை.

28—

## சோடியம் ஆவி விளக்குகள்

வினா எண் 1674—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சியில் தேசிய நெடுஞ்சாலை 49–ல் சோடியம் ஆவி விளக்குகள் நிறுவ ஒப்பந்தப்புள்ளி (Tender) கேட்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) பரமக்குடி நகராட்சியில் தேசிய நெடுஞ்சாலை 49–ல் சோடியம் ஆவி விளக்குகள் நிறுவ ஒப்பந்தப்புள்ளி ஏதும் கேட்கப்படவில்லை. ஆனால் மதுரை மண்டபம் தேசிய நெடுஞ்சாலை 49–ல் ஐந்துமுனை சந்திப்பிலிருந்து காமராஜர் நகர்வரை உள்ள குழல் விளக்குகளை மாற்றி மெர்குரி விளக்குகள் போட திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

29—

## சாலை அமைத்தல்

வினா எண் 2207—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி தெற்கிலிருந்து வாட்டாத்திக்கோட்டை சாலை வரை இரண்டு ஆதி திராவிடர்களின் ஊருக்கும் இணைப்புச் சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இடையாத்தி தெற்கிலிருந்து வாட்டாத்திக்கோட்டை சாலை வரை இரு ஆதிதிராவிடர்களின் ஊருக்கும் இணைப்



1992 ஏப்ரல் 27]

பாதை அகலம் குறைந்த ஒரு கி.மீட்டர் நீளமுடைய வண்டிப் பாதை உள்ளது. இதனை சாலையாக மாற்றி அகலப்படுத்தி, சிகப்புக் கப்பி போட ரூ. 0.5 லட்சம் செலவாகும். இவ்வேலையை எடுத்துச் செய்ய தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

30—

## மயான கொட்டகை அமைத்தல்

வினா எண் 2215—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) வெள்ளாளத் தெரு மயானத்திற்கு தகரக் கொட்டகை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

31—

## சாலை அமைத்தல்

வினா எண் 2227—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஆற்றுக்கரையிலிருந்து வேளார் தெருவிற்கு சாலை அமைத்து சிறுபாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி ஆற்றுக்கரையிலிருந்து வேளார் தெருவிற்குச் செல்லும் சாலை இனம் பிரிக்கப்படாத 0.6 கி.மீ. நீளமுடைய மண்சாலையாகும். இச்சாலையின் குறுக்கே இடையாத்தி பெரிய ஏரி குறுக்கிடுவதால், அதில் ஒரு பெரிய பாலம் அமைக்க வேண்டும். பாலம் அமைக்க ரூ. 2 இலட்சம் செலவாகும். சாலை மேம்பாடு செய்ய ரூ. 0.3 லட்சம் செலவாகும். தற்பொழுது இச்சாலையை மேம்பாடு செய்ய செயற்குறிப்பு ஏதுமில்லை.

14 2 53-119—7

[1992 ஏப்ரல் 27

32—

## சாலை சீர்படுத்துதல்

வினா எண் 2285—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பூவளூரைச் சேர்ந்த நெய்வவிடுதிக்கு வரும் சாலையை சீர்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தின் பூவளூரைச் சேர்ந்த நெய்வவிடுதிக்கு வரும் சாலை 1 கி.மீ. நீளமுடைய ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலை மண் சாலையாக உள்ளது. இதனை கப்பிச் சாலையாக மாற்ற ரூ. 0.6 லட்சம் செலவாகும். தற்சமயம் மேற்படி சாலையை மேம்பாடு செய்ய செயற்குறிப்பு ஏதுமில்லை.

33—

## ஆழ்குழாய் கிணறுகள்

வினா எண் 2394—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பரமக்குடி நகராட்சி எல்லைக்குள் உள்ள ஆழ்குழாய் கிணறுகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் இருந்து எங்கு எங்கு குடிநீர் எடுத்துச் செல்லப்படுகிறது ?

விடை—

(அ) பரமக்குடி நகராட்சி எல்லைக்குள் 52 ஆழ்துளை கிணறுகள் உள்ளன.

(ஆ) வைகை ஆற்றில் நிலத்தடி நீரின் மட்டம் தேவைக்கேற்ப இல்லாததால் குறையை சமாளிக்க நகராட்சி எல்லைக்கு அப்பால் மேற்கு பகுதியில் அமைந்துள்ள தெளிச்சாத்தநல்லூர் என்ற கிராமத்தின் மையப் பகுதியில் செல்லும் மதுரை—மண்



1992 ஏப்ரல் 27]

டபம் நெடுஞ்சாலை எண். 49—க்கு தெற்கிலும் வடக்கிலும் இரு ஆழ்குழாய் கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்டு, தினசரி நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் தண்ணீர் காட்டுப் பரமக்குடி தலைமை நீரேற்று நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேலும் பரமக்குடி நகராட்சியில் உள்ள வார்டு எண்கள் 21, 1, 19—ல் 3 திறந்த வெளிக் கிணறுகள் உள்ளன.

34—

## ஆதிதிராவிடர்களுக்கு மயான கொட்டகை

வினா எண் 2763— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணவயல் ஊராட்சியைச் சேர்ந்த சுந்தரராஜபுரம் ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணவயல் ஊராட்சியைச் சேர்ந்த சுந்தரராஜபுரம் ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்குக் கொட்டகை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை. மயானக் கொட்டகை அமைக்க ரூ. 13,500 செலவாகும். தற்போது ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் எதிர்வரும் ஆண்டுகளில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்ட நிதி ஒதுக்கீடு தொகையிலிருந்து மேற்படி பணியானது மேற்கொள்ளப்படும்.

35—

## ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 2985— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகரம் ஆர். கே. நகர் சாலை ஓரத்தில் குடியிருப்பவர்களுக்கு ஒரு ஆழ்குழாய் கிணறு போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகரம் ஆர். கே. நகர் சாலை ஓரத்தில் குடியிருப்பவர்களுககு ஒரு ஆழ்குழாய் கிணறு போட்டுக் கொடுக்க பேரூராட்சியில் நிதி வசதி இல்லை என்பதால் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை.

36—

## ஆதிதிராவிடர்களுக்கு காலனி

வினா எண் 3060 — திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் வீரியங்கோட்டை ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

37—

## தொலைக்காட்சிப்பெட்டி அமைத்தல்

வினா எண் 3063— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பெரிய நாயகிபுரம் ஆதிதிராவிடர்களுக்கு வானொலிப் பெட்டியும், தொலைக்காட்சிப் பெட்டியும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புடைய ஊராட்சியே வாங்கிக் கொள்ளலாம். 1991–92ம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப



பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இவற்றின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். எனவே, இக்குடியிருப்பிற்கென்று வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் தனியே இல்லை.

38—

## ஆதிதிராவிடர்களுக்கு காலனி

வினா எண் 3078— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் புதுப்பட்டினம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயல் ஆதிதிராவிடர்களுக்கு காலனிகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

39—

## குடிநீர் வழங்கும் திட்டம்

வினா எண் 3619— திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட மகாதேவன்குளம் பிள்ளையார் கோவில் தெருவிற்கு நல்லி மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

[1992 ஏப்ரல் 27

0—

## அமுதம் அங்காடிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 2986— திரு. ஆர். செங்காரம் : மாண்புமிகு ணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா க்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ணேசபுரம் அமுதம் அங்காடிக்கு நிலையான கட்டிடம் கட்டித் ர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

டை—

தஞ்சை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணி க் கழகம் நெல் கொள்முதலில் ஈடுபட்டுள்ளதால் அமுதம் யாயவிலைக் கடைகள் எவையும் நடத்தவில்லை. இப்பகுதி ல் கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் லம்தான் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்படு ன்றன. சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கணேசபுரம் கிராமத் ல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அமுதம் அங் டிகள் எவையும் நடைபெறவில்லை என்பதால், நிரந்தர ட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

—

## ணியாளர் காப்புறுதி மற்றும் ஒய்வு கால நிதியுதவித் திட்டம்

வினா எண் 5986—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு த தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் நக்கு விடையளிப்பாரா:—

(அ) ஒழுங்குபடுத்தப்படாத துறை பணியாளர் காப் புறுதி மற்றும் ஓய்வுகால நிதியுதவித் திட்டம் 1984—ன் படி ந்தத் தொகை செலுத்தியோர் மேற்படி திட்டத்தை –8—89ல் நிறுத்தம் செய்ய ஆணை பிறப்பித்தவரை ) எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்கள் செலுத்திய தொகை எவ்வளவு ?

(இ) நிறுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் சந்தா செலுத்தி ார்களுக்கு அவர்கள் செலுத்திய சந்தாத் தொகை திரும்ப ங்கப்பட்டு விட்டதா ?

(ஈ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?



1992 ஏப்ரல் 27]

விடை—

(அ) திட்டத்தில் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 16,66,009.

(ஆ) ரூபாய் 17,93,45,417.00

(இ) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுப்பினர்களுக்குச் சேரவேண்டிய தொகையைத் திருப்பிக் கொடுத்து வருகின்றனர்.

(ஈ) 31–12–1991 முடிய மொத்தம் 10,75,435 உறுப் பினர்களுக்கு ரூபாய் 11,07,25,112.65 திருப்பியளிக்கப்பட் டுள்ளது.

42—

## தொழிலாளர்களுக்குத் தங்கும் விடுதிகள் அமைத்தல்

வினா எண் 8257.— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர்களுக்காக எங்கெங்கு தனி தங்கும் விடுதிகள் தொழிலாளர் நல வாரியத்தினால் கட்டப்பட்டுள்ளன ?

(ஆ) மேலும் எங்கேனும் புதிதாக இத்தகு தங்கு விடுதி கள் கட்ட தொழிலாளர் நல வாரியம் முன்வருமா ?

விடை—

(அ) தற்பொழுது, குற்றாலத்தில் திரு.வி.க. இல்லம் வால்பாறையில் சிங்காரவேலன் இல்லம், மாமல்லபுரத்தில் ஜவஹர்லால் நேரு ஓய்வு இல்லம் ஆகிய மூன்று இல்லங்கள் தொழிலாளர்கள் தங்குவதற்காக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மேலும், ஊட்டி, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரத்தில் இதுபோன்ற தனி தங்கும் விடுதிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஊட்டியில் ஓய்வு இல்லம் அமைக்க இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மற்ற இரு இடங்களில் நிலம் கையகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

43—

## சாலை அமைத்தல்

வினா எண் 548—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அந்திபூர் தொகுதியில் 1990-91-ல் சர்க்கரை ஆலை மூலம் கிடைத்த செஸ் தொகையில் எந்தெந்த சாலைகள் எவ்வளவு தூரம் போடப்பட்டுள்ளது?

(ஆ) 1991-92-ல் எந்தெந்த சாலைகளைப் போட அரசு உத்திரவு வழங்கியுள்ளது ?

விடை—

(அ) அந்திபூர் தொகுதியில் 1990-91-ல் சர்க்கரை ஆலை மூலம் கிடைத்த செஸ் தொகையான ரூ. 39.08 இலட்சத்தில் போடப்பட்ட சாலை பின்வருமாறு:—

1. அந்திபூர் - பாலக்குட்டை சாலை கி.மீ. 0/0—7/0.

2. தவிட்டுப்பாளையம் - ஆப்பக்கூடல் சாலை—கி.மீ. 0/0 — 11/8.

3. எண்ணமங்கலம் - செலம்பூர் அம்மன்கோவில் சாலை கி.மீ. 0/0 — 4/2.

4. குருவாரெட்டியூர் சனிச்சந்தை வரை கி.மீ. 0/0—5/9.

5. வெள்ளித் திருப்பூர் ஆலம்பாளையம் சாலை முதல் வெள்ளித் திருப்பூர் கிட்டாம்பட்டி சாலை கி.மீ. 0/0—8/2.

(ஆ) சக்தி சர்க்கரை ஆலைப் பகுதியில் 1991-92—ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட பணிகளுக்கு அரசு ஆணை எண். 669 (வேளாண்மை) நாள் 4–12–91-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1. அந்திபூர் - பாலக்குட்டை சாலை கி.மீ. 7/0—10/0 வரை சாலை அமைந்து மேம்பாடு செய்தல்.

2. கருப்பக்கவுண்டன் புதூர் சாலை 0/0—4/0 சாலை அமைத்து மற்றும் மேம்பாடு செய்தல்.



4—

## வேளாண்மைப் பொறியியல் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி மாவட்டந்தோறும் நடத்துதல்

வினா எண் 6520—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு கு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு டையளிப்பாரா :

(அ) 1987—ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் சென்னையில் த்தப்பட்ட வேளாண்மைப் பொறியியல் கருத்தரங்கு ற்றும் கண்காட்சியை மாவட்டந்தோறும் நடத்த அரசு ன்வருமா ?

(ஆ) அந்தந்த மாவட்ட விவசாயிகள் அவற்றில் பங் டுத்துச் செய்ய அரசு கவனத்தில் கொள்ளுமா ?

விடை—

(அ) அனைத்து மாவட்டங்களிலும் பெருவிழா காலங்களில் மதுரை சித்திரை பொருட்காட்சி, திருவண்ணாமலை கார்த்திகை தீபம், குடந்தை மகாமகம், சேலம் மாரியம்மன் விழா ஆகிய சமயங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரைப்படி கண்கருத்துக் காட்சி நடத்தப்பட்டு விவசாயிகள் பயன்பெற்றனர். இந்த ஆண்டு திருச்சி வானொலி நிலைய வேளாண்மைப் பகுதியில், வெள்ளிவிழாவின்போது நடந்த கண்காட்சியிலும், வேளாண்மைத் துறை பங்கேற்றது. அனைத்து மாவட்டங்களிலும் வருடத்திற்கு ஒருமுறை நீர் மேலாண்மை, மண்வளப் பாதுகாப்பு நாள் ஆகியவை சம்பந்தப்பட்ட கருத்துக் காட்சிகள் நடத்தப்பட்டு விவசாயிகளுக்கு வேளாண்மையில் நவீன யுக்திகளையும், வேளாண்மைத் துறை செயலாற்றும் அனைத்துப் பணிகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) அந்தந்த மாவட்டங்களில் நடத்தும் கருத்துக் காட்சி மற்றும் கண்காட்சியில் பங்கேற்க அனைத்து விவசாயிகளுக்கும் வானொலி மூலம் தகவல் தரப்பட்டு அவர்கள் பங்கேற்று வருகின்றனர். தவிர, தொலைக்காட்சி மூலமும், வேளாண்மைத் துறை ஆற்றிடும் பணிகள் பற்றி நிகழ்ச்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து கருத்துக்காட்சி/கருத்தரங்குகள் தேவைக்கேற்ப விவசாயிகள் பங்கேற்புடன் நடத்த வேளாண்மைத் துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்,

45—

## பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள்

வினா எண் 2401—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள பிச்சைக்காரர் விடுதிகள் எத்தனை ?

(ஆ) அவை எவ்வாறு செயல்படுகிறது ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட பதினோரு பிச்சைக்காரர் விடுதிகள் அரசினால் நடத்தப்படுகின்றன :—

1. பரனூர், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.
3. பர்கூர், தர்மபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
6. மனையேறிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.
7. யா.புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
8. மல்லவாடி, திருவண்ணாமலை-சம்புவராயா மாவட்டம்.
9. செல்லியம்பட்டி, தர்மபுரி மாவட்டம்.
10. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.
11. அரசு காப்பில்லம், மேல்பாக்கம், சென்னை—77.

(ஆ) மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநரின் கீழ் இயங்கி வந்த அரசு மறுவாழ்வு இல்லங்கள், 1984-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ஆம் நாள் முதல் சிறைத்துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு இயங்கி வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியவர்களும் (ஆண், பெண் உட்பட) 25 சிறுவர்களும் தங்குவதற்குத் தேவையான இடவசதியுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் மேற்கண்ட 10 அரசு மறுவாழ்வு இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். பிச்சை எடுத்ததற்காக சிறைத் தண்டனை வழங்கப்பட்ட தொழுநோய். இரவலர்கள், உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள்,



2. இவ்வில்லங்களில் இருப்போருக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி வழங்கப்படுகிறது. இவர்களுக்குத் துணிநெய்தல், பாய் பின்னுதல், செருப்பு செய்தல் மற்றும் பழுது பார்த்தல், தையல், விவசாயம், கைராட்டையில் நூல் நூற்றல், காகித உறை செய்தல் போன்ற தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. மேலும் விளையாட்டு, பொழுதுபோக்கு வசதிகள், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, தினசரி செய்தித்தாள்கள், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. தினசரி ஒவவொருவருக்கும் உணவிற்காக ரூ. 5.50 செலவிடப்படுகிறது.

3. பாய், தட்டு, கரண்டி, எண்ணெய், சோப்பு, பற்பொடி, நுண்துளையுள்ள இரப்பர் காலணிகள், பல் துலக்கும் பிரஷ் (விரல்கள் செம்மையாக இல்லாதவர்களுக்கு மட்டும்) ஆகிய பொருட்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படுகின்றன. பார்வைக் குறைவால் அவதியுறுபவர்களுக்கு பரிசோதனைக்குப் பின், இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் மற்றும் கறுப்புக் கண்ணாடிகளும் அளிக்கப்படுகின்றன. இல்லவாசிகளின் குழந்தைகள் படிப்பதற்கு புத்தகங்கள், சீருடை போன்றவற்றிற்கு பண உதவியும் செய்யப்படுகிறது.

46—

## சத்துணவு கூடத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 2876—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கார்காவயல் சத்துணவு கூடத்திற்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் புதிய கட்டிடம் கட்டித்தர சேர்க்கப்பட்டுள்ளது. .

47—

## ஆதிதிராவிட கூட்டுறவு விசைத்தறிக் கூடங்கள்.

வினா எண் 2265—டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) ஆதிதிராவிட கூட்டுறவு விசைத்தறிக் கூடங்கள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன ?

(ஆ) அவை எங்கு நிறுவப்பட்டுள்ளன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ; ஆதிதிராவிட கூட்டுறவு விசைத்தறிக் கூடங்கள் தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் நிறுவ ஆணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

நயினார் கோவில், இராமநாதபுரம் மாவட்டம்.

3. மூவலூர், இராமநாதபுரம் மாவட்டம்.

48—

ஆதிதிராவிட மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி.

வினா எண் 7428—திரு. எம். ஆண்டி அம்பலம்; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) கடந்த 3 ஆண்டுகளில் ஆதி திராவிட மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகள் எழுத சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில் பயன் பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இத்தகு சிறப்பு பயிற்சி பெற்று தேர்வு எழுதியோரில் தேர்வு பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தினைச் சார்ந்த மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற அகில இந்திய பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத பயிற்சியளித்து வரும் முன்தேர்வு மையத்தில் 1987-88 முதல் 1989-90 வரையிலான மூன்று ஆண்டுகளில் மொத்தம் 170 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

(ஆ) மேற்படி 170 மாணவர்களில் முன் தேர்வில் (Prelimirary Exams.) 30 பேர் தேர்வு அடைந்தனர். இவர்களில் இறுதித் தேர்வில் (Main Exams.) 19 பேர் தேர்ச்சியடைந்து அவர்களில் பணியில் அமர்த்தப்படுவதற்காக 9 பேர் இறுதியாக தகுதி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். (1990-91 ஆம் ஆண்டுக்கான தேர்வுகள் இன்னும் முடிவடையவில்லை எனவே இவ்வாண்டு குறித்த விவரம் இதில் சேர்க்கப்படவில்லை).



49—

மீனவர்களுக்கு புதிய கடன் வழங்கு திட்டம்.

வினா எண் 3024—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழுமங்குடா மீனவர்களுக்கு புதிதாகக் கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், கழுமங்குடா மீனவர்களுக்கு புதிய கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. எனினும், தற்போது, மீனவர் கூட்டுறவு சங்கங்கள் தன்னிறைவு அடையும் வகையில் அரசு பங்குத் தொகைக் கடன் மட்டுமே, சங்கத்தின் கடன் பெறும் சக்தியை அதிகரிக்க வழங்கப்படுகிறது. மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது.

50—

வினா எண் 3027—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் மீனவர்களுக்கு புதிய கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1992 ஏப்ரல் 27

## 2. உரிமைப் பிரச்சினை.

பேரவைத் தலைவர் ஏற்கெனவே தீர்ப்பளித்த பிரச்சினை பற்றி ''இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியா'' ஏப்ரல் 24—மே 1 இதழில் அதன் ஆசிரியர் அனில்தர்க்கர் வெளியிட்டுள்ள செய்திகள் குறித்தும் அந்த இதழின் முன்னாள் கட்டுரையாளர் கே. பி. சுனில் பேரவைமுன் ஆஜராகும்படி செய்ய வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்ட பிடிவாரண்டு மீது உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ள தடையாணை குறித்தும்—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

*திரு. கா. ப. பட்டாபிராமன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேரவையின் மாட்சிமையையும், இறையாண்மையையும் காப்பாற்றுகின்ற அளவுக்கு, இந்தப் பேரவையிலே நீங்கள் எடுக்கிற காரியங்கள் அனைத்திற்கும் இந்த பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் உறுதுணையாக இருக்கிறார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்னாலே ''தி இல்லஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா'' என்றபத்திரிகையின் ஆசிரியர் அனில் தர்க்கர் என்பவர் இந்த மாமன்றத்திலே அவர் எழுதிய ஒரு கருத்திற்காக அவருக்கு எச்சரிக்கை செய்து அவர் மன்னிக்கப்பட்டார் என்பதையும் இந்த மாமன்றம் நன்றாக அறியும். இந்த மாமன்றத்தைப் பொறுத்தமட்டில் பத்திரிகையாளர்களுக்கு கொடுக்கப்படுகிற உரிமைகள் காக்கப்பட வேண்டிய உரிமைகளை எந்த அளவுக்கு இந்த மாமன்றம் காப்பாற்றி வருகிறது என்பதை நாடு அறியும்.

தி இல்லஸ்ட்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா என்ற பத்திரிகையின் ஆசிரியர் அனில் தர்க்கர் அவர்கள்—இப்போது கடைசியாக வந்த அந்த பத்திரிகையில் ஏப்ரல் 25-லிருந்து மே 1 வரையிற்கான அந்த இதழில், இந்த அவையிலே நடந்த சில நிகழ்ச்சிகளைப் பற்றி மீண்டும் அந்த பத்திரிகையிலே எழுதி, இந்த அவையிலே அன்று நடந்த நிகழ்ச்சிகள் தவறான நிகழ்ச்சிகள் என்று இந்த அவையிலே பேசப்பட்டு அந்த நிகழ்ச்சிகள் மாற்றப்பட வேண்டும், அந்த நிகழ்ச்சிகளை மாற்றி வேறு ஒரு இணைப்பை அவை குறிப்பேடுகளிலே சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையிலே சேர்த்த பிறகும் கூட எந்த நிகழ்ச்சிகள் இந்த அவையினுடைய மாண்பை குலைத்ததோ எந்த நிகழ்ச்சிகள் நீக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதோ அந்த நிகழ்ச்சிகளை மீண்டும் அந்த பத்திரிகையினுடைய ஆசிரியர் அனில்தர்க்கர்





அவர்கள் நான் குறிப்பிட்ட அந்த இதழில் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். அதாவது இல்லஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா ஏப்ரல் 25 முதல் மே 1, 1992 வரை என்ற இதழில் 19-வது பக்கத்தில் 4-வது காலத்தில் மேலே மார்ச் 25, 1989 என்று தலைப்பிட்டு An AIADMK member is reported to have attacked Karunanidhi and torn up the budget papers. The PWD Minister Duraimurugan, is so said to have pulled Opposition leader J. Jayalalitha's shawl'' என்ற அந்த நிகழ்ச்சி தவறான நிகழ்ச்சி என்று இந்த அவையிலே முடிவு எடுக்கப்பட்டு, அந்த நிகழ்ச்சிக்கு மாறாக, நிகழ்ந்த உண்மையான நிகழ்ச்சிகள் இந்த அவையினுடைய ஏடுகளிலே அச்சடிக்கப்பட்டு அந்த ஏடுகளும் கொடுக்கப்பட்ட பிறகும் கூட அதே நிகழ்ச்சிகளை இந்தப் பத்திரிகையிலே அவர் மீண்டும் எழுதுகிறார் என்று சொன்னால் அந்தப் பத்திரிகையினுடைய நிலைமையை இந்த அவை நன்றாக உணர வேண்டும்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவைக்கே இருக்கின்ற பெருந்தன்மையை மனதிலே வைத்து, இந்த அவையினுடைய மாட்சிமையை மனதிலே வைத்து, இந்த அவையினுடைய இறையாண்மையை மனதிலே வைத்து, அவர்களை மன்னித்து விட்ட பிறகும் கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை இவர்கள் எழுதி வருகிறார்கள் என்று சொன்னால், இவர்களே ஏதோ பத்திரிகைத் துறைக்கும், இந்த அரசுக்கும் அல்லது இந்த மன்றத்திற்கும் ஏதோ ஒரு பெரிய இடைவெளி இருப்பதாக ஒரு தோற்றத்தை உருவாக்குவதற்காகவே இப்படி எழுதி வருகிறார்கள் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அப்படியே இந்த பத்திரிகையினுடைய எழுத்தாளர் (Columnist) அவர்கள் உச்சநீதிமன்றத்திலே சென்று ஒரு தடை உத்தரவையும் வாங்கி இருக்கிறார்கள். இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடு). உச்சநீதிமன்றத்திலே அவர்கள் ஒரு தடை உத்திரவை வாங்கி இருக்கிறார்கள். இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கும் இந்த நாட்டிற்கும் நன்றாகத் தெரியும். எந்த ஒரு காரியம் எந்த ஒரு நடவடிக்கையும் இந்த மாமன்றத்திலே அது உங்களால் எடுக்கப்பட்டு அல்லது உறுப்பினர்களால் பேசப்பட்டு அந்த அடிப்படையிலே ஒரு நடவடிக்கையிலே நீங்கள் முடிவு எடுக்கிறீர்கள் என்று சொன்னால் உச்சநீதிமன்றமானாலும் சரி அல்லது எந்த நீதிமன்றமானாலும் சரி இந்த மன்றத்திற்கு இருக்கின்ற இறையாண்மையை the sovereignty of this August House, the supremacy of this August House cannot be questioned in any forum which may be any Court of Law. என்கின்ற அடிப்படையிலே தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே

அதாவது ஆர்ட்டிகிள் 212-லே "Courts not to inquire into the proceeding of the Legislature—(1) The validity of any Proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure. அந்த அடிப்படையிலே இந்த மன்றத்திலே எடுக்கப் படுகின்ற நடவடிக்கைகள் ஆனாலும் சரி, எடுக்கப்படுகின்ற முடிவானலும்சரி, இந்த மன்றத்தை தவிர நாட்டிலே வேறு எந்த ஒரு மன்றத்திற்கும் இதைக் கேள்வி கேட்பதற்கு அருகதை இல்லை என்பதை இந்த மன்றத்திலே நான் சொல்ல விரும்பு கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி). உங்களால் அனுப்பப்பட்ட வாரண்ட்டை காவல்துறையினுடைய ஆணையாளர் அவர்கள் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் அதற்குத்தான் இந்திய அரசியல் சட்டத்திலேயே அதாவது 212 (2)-வது பிரிவின் கீழ் "(2) No officer or member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business or for maintaining Order in the Legislature shall be subject to the jurisdiction of any Court in respect of the exercise by him of those powers.' என்றும் உங்களுக்கு மிக உயர்ந்த ஒரு நிலையைக் கொடுத்திருக்கிறார்கள் இந்தச் சட்டத்திலே என்பதையும் எடுத்துக் காட்டி இப்படிப் பட்ட பத்திரிகைகள் மீது இந்த அவை என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருதுகின்றதோ, அந்த நடவடிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இப்படிப்பட்ட நீங்கள் கொடுத்த அந்த பெருந்தன்மையான அந்த நிலையை மாற்றிக் கொண்டு இந்தப் பத்திரிகை ஆசிரியர் இப்படி எழுதுவார்களேயானால், மீண்டும் எழுதுவார்களேயானால் அதை உடனடியாக நல்ல நடவடிக்கைகள் எடுத்து தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இலஸ்ட்ரேடட் வீக்லி பத்திரிகை ஆசிரியரை இங்கிருந்து அவருக்கு மன்னிப்பு வழங்கி அனுப்பிய பிறகு, ஒரு வேளை அதற்கு முன்பே இந்தப் பத்திரிகை அச்சாகி இருந்தால் அது பற்றிய விளக்கத்தை தாங்கள் .............

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு முதல்வர் அவர்கள்.



*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிப்பு வழங்கியதைக் குறிப் பிட்டே இந்தக் கட்டுரையை அவர் எழுதி அரசாங்கத்தைக் கிண்டல் செய்திருக்கிறார். இந்தப் பேரவைத் தலைவரையும் கேலி செய்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் எழுதியிருப்பதே நாம் இங்கே மன்னித்து அனுப்பியதைக் குறிப்பிட்டே கிண்டல் செய்திருக்கிறார். அதைத் தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

திரு. கா. ப. பட்டாபிராமன் ; பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல ஏதோ தெரியாத்தனமாக இந்த ஆசிரியர் இதை எழுதவில்லை. வேண்டுமென்றே உள் நோக்கத்தோடு இதை எழுதியிருக்கிறார் என்பதற்கு கடைசியாக இருக்கின்ற இந்த வரியை படிக்க விரும்பு கிறேன். "Since I am under the pain of a severe warning I refrain from making any comments" எனவே, அவருக்கு இங்கே மன்னிப்புக் கொடுக்கப்பட்டது தெரியும். தெரிந் திருந்தும் கூட இதை எழுதுகிறார் என்பதை இந்த அவை யினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது மட்டுமல்ல, "I did't go to receive my reprimand on what I thought were perfectly sensible grounds." என்றும் எழுதுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரசு கொறடா அவர்கள் இங்கே கொண்டு வந்துள்ள உரிமைப் பிரச்சினையை நானும் வலியுறுத்தி தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன், எந்த அளவுக்குஇல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா விலே எழுதப்பட்டிருக்கின்ற அந்தக் கருத்து உரிமை மீறலாக அமைந்திருக்கிறது என்பதற்கான காரணங்களை மாண்புமிகு கொறடா அவர்கள் மிகச் சுருக்கமாக இங்கு எடுத்து தெரிவித் திருக்கின்றார்கள். ஆகவே, இந்த அவையையும், இந்த அவை யினுடைய கண்ணியத்தையும், இந்த அவையினுடைய மதிப்பை யும், தங்களுடைய மதிப்பையும், கண்ணியத்தையும் குறைக்க வேண்டும் என்ற அளவுக்கு யார் வெளியே எப்படி எழுதினாலும் அது உரிமைப் பிரச்சினையாகவே ஆகும். அதற்குரிய நட வடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது இன்றியமையாதவை யாக இருக்கிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையைப் பற்றி நாம் நீடு ஆராய்ந்து இருக்கின்றோம். சாதாரணமாக ஜனநாயக அமைப்பில் சட்டமன்றத்திற்குள்ள மிக உயர்ந்த ஆளுகையையும், நீதிமன்றத்திற்குள்ள தனித் தன்மையையும் நாம் நன்கே

அறிந்து இருக்கின்றோம். இரண்டும் தனித் தன்மைகள் கொண்டவை. இரண்டும் ஒன்றையொன்று மதிக்கத் தக்கவை; ஒன்றையொன்று தழுவி நிற்கத் தக்கவை; ஒன்றை மற்றொன்று கட்டுப்படுத்த முடியாதவை; சட்டமன்றம் நீதிமன்றத்தின் போக்கில் தலையிட முடியாது: தலையிடக் கூடாது; அதே போல் நீதிமன்றமும் சட்டமன்றத்தின் போக்கில் தலையிடல் ஆகாது; கூடாது. இதைத்தான் மிகத் தெளிவுபட பலரும் எடுத்து தெரிவித்துத் இருக்கிறார்கள்.

முற்பகல் 10-35

இந்திய நாடாளுமன்றத்தினுடைய நடவடிக்கைகளைப் பொறுத்த வரையிலும், May's Parliamentary practice மாதிரி, 'கவுல் அண்டு ஷக்தர்' எழுதியிருக்கின்ற 'Practice and procedure of parliament' என்கின்ற நூல் இப்போது நமக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கத் தக்க அளவுக்கு அமைந்து இருக்கின்ற தன்மையை நாம் பார்க்கிறோம். அதிலே நீதிமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் இருக்கின்ற தொடர்பு, உரிமைகள், முறைகள் ஆகியவற்றைப் பற்றி மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே சொல்லுகின்றபோது,

The Courts of law in India have recognised that a House of Parliament or State Legislature is the sole authority to judge as to whether or not there has been a breach of privilage in a particular case. It has also been held that the power of the House to commit for contempt is identical with that of the House of Common and that a Court of Law would be incompetent to crustinise the exercise of that power என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, உரிமைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் முழுஅதிகாரம் பெற்றது நாடாளுமன்றமும், சட்டமன்றங்களுமே தவிர நீதிமன்றம் எந்த வகையிலும் குறுக்கிட முடியாது என்பதை மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இங்கே அவர்கள் கூறியது மட்டும் அல்லாமல் நாடாளுமன்றத்தினுடைய அவைத் தலைவரும் மாநில சட்டமன்றப் பேரவைகளின் அவைத் தலைவர்களும் கூடிய மாநாட்டிலும் அது மிக சிறப்பாக வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. எக்காரணம் கொண்டும் நாடாளுமன்ற, சட்ட மன்றத்தினுடைய தீர்ப்புகளில், நடவடிக்கைகளில் எந்த ஒரு நீதிமன்றமும் தலையிடுவதற்கு இல்லை என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.





1965 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 11–12 ஆம் நாட்களில் பம்பாயில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தலைவர்கள், நாடாளுமன்ற மக்களவைத் தலைவர், மாநிலங்களவைத் தலைவர் ஆகியோர் கூடிய மாநாட்டில் அவர்கள் ஒரேமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.—

"The Conference unanimously adopted a Resolution expressing its view that suitable amendments to Articles 105 and 194 should be made in order to make the intention of the Constitution makers clear beyond doubt so that the powers privileges and immunities of the Legislatures their Members and Committees could not in any case construed as being subject or subordinate to any other Articles of the constitution.

என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு ஏகமனதாக எல்லோரும் சேர்ந்து முடிவு எடுத்து இருக்கிறார்கள்.

முற்பகல் 10-40

அடிப்படை உரிமைகள் தங்களுக்கு இருக்கின்றன என்று சிலபேர் வழக்கு மன்றங்களுக்குச் சென்று அதனுடைய அடிப்படையில் வழக்கு தொடுக்கலாம் என்று கருதினாலும் இந்த அரசியல் அமைப்புச் சட்டத்திலே கூறப்பட்டு இருக்கின்ற விதிகளுக்குப் புறம்பாக வெளியே இருக்கின்ற சட்டம் அதிலே இருக்கின்றவைகளுக்கு வேண்டுமானாலும் கோர்ட்டுக்கு சென்று 19-வது விதியின்படி எனக்கு அடிப்படை உரிமை என்று கேட்க வேண்டிய தன்மை இருக்கிறதே தவிர அந்த மாநிலப் பேரவைத் தலைவர்கள், நாடாளுமன்றத் தலைவர்கள் அடங்கிய மாநாட்டில் கூறப்பட்டு இருக்கின்றபடி; ஆர்ட்டிக்கிள் 19 எவ்வளவு ஃபண்டமென்டல் ரைட்டுக்கு முக்கியமானதோ அவ்வளவு முக்கியம் 105 அண்டு 194. ஏனென்றால் எல்லாமே இந்த கான்ஸ்டியூஷனிலே இருக்கிற காரணத்தினால் வெளியே ஒரு சட்டம் இருந்தால்தான் இந்த பண்டமென்டல் ரைட் கட்டுப்படுத்துமே தவிர 105 என்பது பாராளுமன்றத்தை பொறுத்த பிரிவிலெஜ்ஜஸ். 194 என்பது சட்டமன்றத்தைப் பொறுத்த பிரிவிலெஜ்ஜஸ். இந்த இரண்டைப் பொறுத்தும் பண்டமென்டல் ரைட்டுக்கு என்ன மதிப்பு உண்டோ அவ்வளவு மதிப்பு உண்டு என்று சொல்லி அந்த மகாநாட்டிலே என்ன முடிவு பண்ணியிருக்கிறார்கள் என்றால், சிறிது சந்தேகம் ஏதாவது இருக்குமேயானால் அந்தச் சந்தேகத்தைப் போக்குகிற அளவுக்கு உடனடியாக இந்த அரசமைப்புச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்ற தீர்மானத்தை முடிவு செய்தார்கள். அதை முடிவு செய்ததற்குக் காரணம் என்னவென்று கேட்டால் அப்போது கேரளாவில் இருந்த ஒருவரும் மற்ற மாநிலத்திலேயிருந்த ஒருவரும் கோர்ட்டுக்கு போய்விட்டார்கள். அதையொட்டித் தான் மறுபடியும் கூட வேண்டிய அவசியம் வந்தது. அந்த வகையில், In the mean time the Allahabad Court இந்தத் தீர்மானத்தைப் போட்டதற்குப் பிறகு அலகாபாத்

உயர்நீதிமன்றம் என்ன தீர்ப்பு அளித்தது என்று சொன்னால், In the meantime the Allahabad High Court upheld the power of the Legislative Assembly to commit for its contempt. ஆக. கோர்ட் இதில் தலையிட முடியாது. ஆகவே, சட்ட மன்றம் இதற்கு முழு உரிமை படைத்தது என்று அலகாபாத் கோர்ட்டும் தீர்ப்பு அளித்துவிட்டது. அதற்குப் பிறகு, மாநில பேரவைத் தலைவர்களும், பாராளுமன்றத் தலைவர்களும் கூடி மறுபடியும் இதை நிறைவேற்ற வேண்டிய ஒரு கட்டம் எப்பொழுது வந்தது என்று கேட்டால், ஆந்திரப் பிரதேசத்திலே, லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலைச் சேர்ந்த ஒருவரும் மற்றும் கேரள லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளியைச் சேர்ந்த ஒருவரும் உச்சநீதிமன்றத்திற்குப் போயிருந்தபொழுது அவசர அவசரமாக மறுபடியும் பேரவைத் தலைவர்கள், நாடாளுமன்றத் தலைவரெல்லாம் கூடி, மறுபடியும் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

that under Articles 105 and 194 of the Constitution, the Legislatures of India had, and were intended by the founders of the Constitution to have, exclusive jurisdiction todecide on matters relating to the privileges of the House, their Members and Committees without any interference from Courts of law or any other authority, If necessar an amendment might be made in the Constitution so as to place thyir position beyond the shadow of doubt...

என்று எல்லா பேரவைத் தலைவர்களும் மற்றவர்களும் கூடி எந்த ஒரு நீதிமன்றமும், சட்டமன்ற, நாடாளுமன்றத்தினுடைய உரிமைகளில் தலையிட முடியாது. அப்படி ஏதாவது சிறிது சந்தேகம் இருக்குமேயானால், அந்தச் சந்தேகத்தை நீக்குகிற அளவுக்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்றும், மிகத் தெளிவாகவே அதிலே எடுத்துச்சொல்லி இருக்கின்றார்கள். அதற்குள்ளாக எந்த பிரச்சினையையொட்டி வந்ததோ, அதற்குள்ளாக என்ன ஆயிற்று என்று கேட்டால், கேரளா லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி கலைக்கப்பட்டு விட்டது. அதுமட்டுமல்ல, ஆந்திரப் பிரதேச லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலும் கலைக்கப்பட்டு விட்டது. ஆக இரண்டும் கலைக்கப்பட்டு விட்டதால் இந்தப் பிரச்சினை நின்று விட்டது. அமெண்ட்மெண்ட் தேவையில்லை என்ற முடிவுக்கு இந்திய அரசாங்கம் வந்தது. ஆகவே, இப்பொழுது இருக்கின்ற பிரச்சினைகளினுடைய தன்மைகளைக் காணுகின்ற பொழுது, அரசமைப்புச் சட்டங்களிலே ஆகட்டும், மற்றவைகளிலே ஆகட்டும் நீதி மன்றங்கள் எவ்வளவு உரிமை படைத்தவைகளோ, மதிப்பு உடையனவோ, அவ்வளவு மதிப்பு உடையன, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்றங்கள் என்பதும், இரண்டுக்கும் சம உரிமைகள் உண்டு என்பதும், ஒன்றையொன்று கட்டுப்படுத்த முடியாது என்பதும்தான் இதுவரையிலும் வகுத்து வந்திருக்கிற, கொடுக்கப்பட்டிருக்கின்ற தன்மைகள். இந்த அடிப்படையிலேதான், இங்கே இருக்கின்ற பிரச்சினைகளும் அதையொட்டி எழுப்பிய தன்மைகளைப் பொறுத்தும்





சில பல உண்மைகளைக் கொண்டுவர நான் விரும்புகிறேன். ஏனென்றால், இதைப்பற்றி பல்வேறு கருத்துகள், பல்வேறு வகைகளிலே செய்தித்தாள்களிலேயும் மற்ற இடங்களிலேயும் பரிமாறப்பட்டு வருகின்றன. அதைமட்டும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இல்லஸ்டிரேடட் வீக்கிலியின் 1991, செப்டம்பர் 21–27 ஏட்டில் திரு. கே. பி. சுனில் எழுதி, வெளியிடப்பட்ட கட்டுரையில் வந்துள்ள கருத்துக்களில் சில இப்பேரவையின் உரிமையையும், உறுப்பினர்களின் உரிமையையும் பாதிக்கின்ற அளவுக்கு களங்கப்படுத்துவனவாகும் என்பதே இங்கே எடுத்துக்கொண்ட பிரச்சினை. அவை உரிமைக் குழு, விதிமுறைகளின்படி ஆராய்ந்து, 'Findings and recommendation of the Commitee' அதாவது, குழுவின் கண்டுபிடிப்புகளும் பரிந்துரைகளும் என்று அளித்த அறிக்கையை இந்த அவை ஏற்றுக்கொண்டது. அவைத் தலைவரின் மூலம் பரிந்துரைக்கப்பட்டவாறு உரிய தண்டனை குற்றவாளிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செயல் அவையின் உரிமையையும் உறுப்பினர்களின் உரிமையையும் பாதுகாப்பதற்காகவும், அவற்றை நிலைநாட்டவும் எடுக்கப்பட்ட முயற்சியாகுமேயொழிய சில செய்தியாளர்கள் கூறுவது போன்று, செய்தித்தாள்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் செயல் ஆகாது. இந்த அவை உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது; இந்த அவை களங்கப்படுத்தப்பட்டு இருக்கிறதே தவிர, இப்பொழுது பறிக்கப்பட்டது இந்த அவையினுடைய உரிமை, மற்றவைகளே தவிர, எந்தவொரு செய்தித்தாளினுடைய உரிமையையும் நாம் பறிக்கவில்லை. அதைத்தான் நாம் கவனிக்க வேண்டும்.

முற்பகல் 10–45.

அதுமட்டுமல்லாமல், செய்தித்தாள்களைக் கட்டுப்படுத்தவோ, செய்திகளை வெளியிடுவதைத் தடுக்கவோ, செய்தித்தாள்கள் வெளி வருவதைத் தடை செய்யவோ இந்த அரசோ, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களோ, எந்த ஒரு ஆணையையும் பிறப்பிக்கவே இல்லை. எந்தவொரு ஏடும் தடுக்கப்படவில்லை. எந்தவொரு ஏடும் கட்டுப்படுத்தப்படவில்லை. எந்தவொரு ஏடும் இதுவரையில் அனுபவித்துக்கொண்டிருக்கிற எந்தவொரு சுதந்திரமும் பறிக்கப்படவில்லை. பேசப்படுவதெல்லாம், இந்த அவையைப் பொறுத்த பிரச்சினை, அவை உறுப்பினர்களைப் பொறுத்த பிரச்சினை. அவையினுடைய உரிமை காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். அந்தக் குற்றம் இழைத்தவர்கள் யாரோ அவர்கள் மீது தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இவை, Illustrated Weekly of India முரசொலி, கோவை மாலை முரசு ஆகிய மூன்று ஏடுகளில் வெளியிடப்பட்ட செய்திகளைப் பொறுத்து மட்டும்

எடுக்கப்பட்ட உரிமைப்பிரச்சினைகள் ஆகுமே தவிர, பத்திரிகை உலகைப் பொறுத்தவரை எந்தவொரு நடவடிக்கையும் இங்கே எடுக்கப்படவில்லை.

இந்த மூன்று ஏடுகளைப் பொறுத்துத்தானே தவிர, நாட்டிலே உலவுகிற ஆயிரக்கணக்கான ஏடுகளைப் பொறுத்து நாம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அது மட்டுமல்லாமல், ஏடுகளில் செய்திகளைப் பொறுத்த மட்டும் எடுக்கப்பட்ட பிரச்சினைகளே ஆகும். ஒரு முக்கியமான நாளேடு ''ஹிந்து'' குறிப்பிட்டிருப்பதைப் போன்று ' An unheal hy intolerarce ஆகாது, அது போன்றே, அதே ''ஹிந்து'' குறிப்பிட்டிருப்பதைப்போன்று, An unhealthy intolerance—There is an an attempt to set up pressure on the Press on the whole through the State action.
இதிலே எந்தப் பிரச்சினையும், எந்தச் செய்தித்தாளையும் நாம் கட்டுப்படுத்துகின்ற நிலையே இல்லை. உரிமைப்பிரச்சினை, தவறு இழைத்தவர்கள் மூன்று பேர், மீதே தவிர, எந்த ஒரு ஏட்டின்மீது எந்தவொரு நடவடிக்கையும் இந்த ஸ்டேட் எடுக்கவே இல்லை.

அதுமட்டுமல்லாமல், ''இன்டியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகை சொல்வது போன்று, ' Confrontation between the presss and the State Legislature இந்தச் சட்டமன்றப் பேரவைக்கும், பத்திரிகை உலகத்திற்கும் சண்டை என்கிறார்கள். தனிப்பட்ட மூன்று பத்திரிகைகளில் எழுதிய ஆசிரியர்கள், நிருபர்களைப் பொறுத்த பிரச்சினையே தவிர, வேறு எந்தப் பத்திரிகைகளுக்கும் இந்தப் பேரவைக்கும் எந்தச் சண்டையும் ஏற்படவில்லை.

வடநாட்டிலேயிருந்து வெளிவருகின்ற ஆங்கில நாளேடான ' Times of India ' குறிப்பிட்டதைப் போன்று Press freedom at T. N. Politicians mercy என்பதும் ஆகாது.

இந்த மூன்று கூற்றுகளும் உண்மைக்கும், நியாயத்திற்கும் பொருந்தி வராது. இந்த மூன்று பேர் மீது நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இந்தப் பேரவைக்கும், செய்தித்தாள்களுக்கும் பெரிய சண்டை சச்சரவு ஏற்பட்டு விட்டது என்று எழுதுவதும், முழுக்க முழுக்கப் பொருந்தி வராது.

அதுமட்டுமல்லாமல், இந்தப் பேரவையின் சிறப்பு உரிமைகள் விதிகளுக்குப் புறம்பாக மூன்று செய்தித்தாள்களிலும் களங்கப்படுத்தப்பட்டு இருக்கின்றனவே ஒழிய அனைத்துச் செய்தித்தாள்களின் சுதந்திர உரிமைகள் எந்தவகையிலும் பிடுங்கப்படவும் இல்லை; எந்தப் பத்திரிகையின் சுதந்திர உரிமையும் பறிக்கப்படவும் இல்லை



மாண்புமிகு அவைத் தலைவரவர்களால் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டவைகளைச் செய்தித்தாள்கள் வெளியிடுவது என்பதும், அவையில் நடைபெறாத நிகழ்ச்சியையும், நடைபெறவில்லை என்று மாண்புமிகு அவைத் தலைவரவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட நிகழ்ச்சிகளையும் செய்தித்தாள்கள் வெளியிடுவது என்பதும் செய்தித்தாள்களின் சுதந்திரம் ஆகுமா ?

முற்பகல் 10-50

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மிக விரைவாகக் கெட்ட பெயர் எடுத்துக் கொண்டிருக்கிறது 'Tamil Nadu Assembly fast gairing notoriety என்று எழுதுவதும், 'The latest biow to the Legislative dignity of the State came in the form of the election from the House of a newly eleeted DMK member
அதாவது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட தி.மு.க. உறுப்பினரை அவையிலிருந்து வெளியேற்றுவது என்பது இந்த மாநிலப் பேரவையின் மதிப்புக்கு இறுதியாகக் கொடுக்கப்பட்டு உள்ள பேரடி என்று எழுதுவதும், அதேமாதிரி, Illam Vaznudhi's dhoti was snatched unceremoniously by members of a rival party இளம்வழுதியின் வேட்டி அனாச்சார முறையில் பகைக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் களால் அவிழ்த்து இழுக்கப்பட்டது என்று எழுதுவதும், Illam Vazhudi started to protest all over again the Speaker ordered the Marshall to have him evicted, இளம்வழுதி மறுத்துப் பேசத் தொடங்கியவுடனே அவைத் தலைவர் அவரை வெளியேற்றுமாறு பாதுகாவலருக்கு ஆணையிட்டார் என்று எழுதுவதும், அதே போன்று, Illam Vazhuthi objectiors were genuire அதாவது, இளம்வழுதியின் மறுப்புரைகள் அனைத்தும் கலப்படமற்ற உண்மையானவை, என்று எழுதுவதும், ' Legislature violerce is fast beccmirg routire here 'சட்டமன்ற வன்முறைகள் மிக வேகமாக நடைமுறைச் செயல்களாக இங்கே வந்து கொண்டிருக்கின்றன' என்று எழுதுவதும் எப்படி பத்திரிகைச் சுதந்திரம் ஆகும் ? இவைகள் எல்லாம் எழுதுவதுதான் பத்திரிகைச் சுதந்திரமா ? அப்படி எழுதுவது தவறு என்று சொல்வது சுதந்திரத்தை எப்படி கட்டுப்படுத்துவதாகும் ? Clearly, the assembly has degenerated from being an intellectual forum into a combat arena 'இந்த சட்டமன்றப் பேரவையானது அறிவுடையோர் அரங்கம் என்ற நிலையிலிருந்து தரம் தாழ்ந்து, சண்டையிடுவோர் களமாக மாறியிருப்பது தெளிவாகிறது'. என்று எழுதுவதும், a dangerous trend. . arisirging out of the intolerance of the ruling party to criticism or opposition. 'விமர்சனம் அல்லது எதிர்ப்பு என்பதை ஆளுங்கட்சியால் பொறுத்துக் கொள்ள

முடியாது என்ற தன்மையிலிருந்து அபாயகரமானப் போக்கு உருவாகிக் கொண்டு வருகிறது' என்று எழுதுவதும் 'Nothing, unfortunately, is unparliamentary today 'துரதிருஷ்டவசமாக இந்த நாட்களில் பாராளுமன்றத் தன்மைக்குப் புறம்பானது என்று எதுவுமே இல்லை' என்று எழுதுவதும், திரு. கே. பி. சுனில், தன்னுடைய கடிதத்தில் எழுதியிருப்பதைப்போல' 'என்னுடைய பணி, இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியில் நிருபர் என்ற முறையில் தமிழ்நாடு மாநிலத்திலிருந்து முக்கியமான நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள் பற்றி கதைகளை உருவாக்குவதுதான்—As a correspondent of the Illustated Weckly India my duty is to generate stories இப்படி to generate news அல்ல ; கதைக் கட்டுவதுதான் என் வேலை என்று அவரே சொல்கிறார். அவருடைய கட்டுரையிலே எழுதியிருக்கிறார் ; it is my duty to generate stories. இதை நாவல் ஆசிரியர் செய்வார் ; கதைக்காரன் செய்வான் ; கட்டுக் கதைக்காரன் செய்வான் ; அவர்களெல்லாம் 'ஜெனரேட்' பண்ணுவார்கள் கதைகளை. ஒரு நிருபருடைய வேலை to gather news—ஏ தவிர, அல்லது 'to say the views—ஏ தவிர, 'stories'-ஐ எப்படி 'gather' ' செய்ய முடியும்? அவரே சொல்லியிருக்கிறார்.

''My duty is to generate stories from Tamil Nadu on the events and on the happenings on the interest tn the State. என்ற தன்மையில் உண்மையான நிகழ்ச்சிகளை, நடவடிக்கைகளை கதைகளாக உருவாக்கி எழுதுவதுதான் செய்தித்தாள்களின் சுதந்திரம் ஆகுமா? இந்தப் பேரவையின் ஓர் அங்கமாக விளங்குகிற அவை உரிமைக் குழுவின் அழைப்புக் கடிதத்தை மதிக்காமல் இருப்பதும், பதில் எழுதாமல் இருப்பதும், குழுவின் ஆணை அழைப்பை ஏற்று குழுவுக்கு சாட்சியம் சொல்ல மறுப்பதும், வெளியிட்டது, வெளியிட்டதுதான் ; அதற்காக வருத்தமோ, மன்னிப்போ தெரிவிக்க மாட்டோம் என்பதும், அவைச் செயலாளரிடம் அனுமதி பெற்று, இந்த அவையில் உரிய பெயரோடு, அமர்ந்திருக்கிற அந்தச் செய்தித்தாளின் நிருபரின் பெயரைச் சொல்ல மாட்டேன் என்பதும், அவையில் கீழைப் பகுதியிலே இருக்கிற ஒரு உறுப்பினர் ஏனைய உறுப்பினர்களையெல்லாம் தாண்டி, அமைச்சர்களையும் தாண்டி, மேசையையும் தாண்டி, எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் தாண்டி, எதிர்க்கட்சித் தலைவரையும் தாண்டி, அங்கே இருக்கிற உறுப்பினர்களையும் தாண்டி, கடைசி வரிசையில் இருந்து கொண்டிருக்கிற உறுப்பினர் இடத்திலேபோய், அவரை அடித்தார் என்று ஒரு பத்திரிகை எழுதுகிறது. அவை உரிமைக் குழுவில் நாங்கள் எல்லாம் கேட்கிறோம் ; எப்படிப் போயிருக்க முடியும்? இவ்வளவு பேரையும் தாண்டிப்போய் எப்படிப் அடித்திருக்க முடியும் ; முடியாது என்று சொல்கிறோம். ஆனால் நிருபர் சொல்கிறார் : 'நான் பார்த்தேன் ; அடித்தார்' என்கிறார். அதனுடைய ஆசிரியர் சொல்கிறார் : திரும்பத் திரும்பக் கேட்கிறோம். அதன் ஆசிரியர் என்ன சொல்கிறார் என்றால், நான் என்னுடைய



முற்பகல் 10-55

நிருபர் சொல்வதை நம்புவேன் ; அதைத்தான் நம்புகிறேன் ; அதை மாற்றிக் கொள்வதில்லை என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்வது, இந்த நாட்டிலே இப்போது மற்றையப் பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்றன—இதற்குப் பெயர் சுதந்திரம் ; இது சுதந்திரம் தானா? இப்படியெல்லாம் எழுதலாம் ; நாங்கள் எழுதுவோம் என்கின்றன. நான் எல்லாப் பத்திரிகைகளையும் சொல்லவில்லை. இந்த மூன்று பத்திரிகைகளை மாத்திரம்தான் சொல்கிறேன். மற்றவைகள் எல்லாம் அதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்களா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்போது இருக்கிற—எவ்வளவு பத்திரிகைகள் இருக்கும் போதும், எல்லாப் பத்திரிகைகளையும் நாங்கள் மதிக்கிறோம் ; அவர்களைக் கௌரவப்படுத்துகிறோம் ; அவர்களைப் பாராட்டுகிறோம், ஆனால், இப்போது வந்திருக்கிற பிரச்சினை. இந்த மூன்றைப் பொறுத்து, ஏன் வந்தது? எங்களுக்கு வேறு வேலையில்லையா? அதற்காக இந்த வேலையை எடுத்துக் கொண்டோம்? ஆகவே, ஒரு பிரச்சினை. வந்ததன் காரணமாகத்தான், இப்படியெல்லாம் எழுதுவது தவறு என்கிற காரணத்தினால் தான், நான் சொல்ல வேண்டிய அவசியம் வந்தது. ஆக, இதற்குப் பிறகும்கூட, இப்படி எழுதியிருப்பது மட்டுமல்லாமல், பதில் எழுதாமல் இருக்கமாட்டேன் என்று சொல்வதும், யாரும் அறியாத நிலையில் எப்படித் தாக்கியிருக்க முடியும் என்று கேட்டால், நான் கண்ணாரப் பார்த்தேன் என்று கோவை மாலைமுரசு நிருபர் சொல்வதும், நிருபர் சொல்வதைத்தான் நான் நம்புவேன் என்று பொறுப்புள்ள ஆசிரியர் சொல்வதும் ஆகிய இவைகள் எல்லாம் செய்தித் தாள்களின் சுதந்திரத் தன்மைகளின் எடுத்துக் காட்டுகளாகும் என்று பொறுப்புள்ள, பேர்பெற்ற, புகழ்பெற்ற சில ஆங்கில ஏடுகளும், சில தமிழ் ஏடுகளும் வாதாடி வருவது வேடிக்கையாகவும் இருக்கிறது. விசித்திரமாகவும் இருக்கிறது. வேதனையாகவும் இருக்கிறது! ஆக, சுட்டிக் காட்டியபடி எழுதுவதும், வெளியிடுவதும் செய்தித்தாள்களின் சுதந்திரம் என்று வாதாடும் அவர்களை, பாதிக்கப்பட்ட பேரவையும், பாதிக்கப்பட்ட உறுப்பினர்களும் அவற்றைப் பற்றி எதுவும் கேட்கக்கூடாது. சட்டமன்ற விதிமுறைகளின்படி எந்தவித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று சொல்வது எப்படி செய்தித்தாள்களின் தர்மம் ஆகும், இப்படியெல்லாம் இழிந்த முறையில், விதிகளுக்குப் புறம்பான முறையில், களங்கம் கற்பிக்கிற நோக்கத்தோடு எழுதுவதுதான் செய்தித்தாளின் சுதந்திரத்தின் இலக்கணமா என்பதை அறிவுடைய சான்றோர் பெருமக்களும், அரசியல் பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள அறிஞர் பெருமக்களும் உள்ளபடியே சிந்தித்துப் பார்க்க வேண்டிய கட்டப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். இந்தப் பேரவை, செய்தித்தாள்களுக்கு உரிய மதிப்பும், மரியாதையும் காட்டி வருகின்ற அதே நேரத்தில், இந்தப் பேரவையின் அவை உரிமை

களையும் உறுப்பினர்களின் சிறப்பு உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பினைக் கொண்டிருக்கிறது.

இந்தியப் பாராளுமன்றத்தினுடைய மக்களவைச் செயலகம் பாராளுமன்ற அவை உரிமைகள் நிகழ்வுகளில் சுருக்கம் 1950 முதல் 1985 வரை Parliamentary Privileges-Digest of Cases 1950-1985. என்ற நூலை வெளியிட்டிருக்கிறது. அது பாராளுமன்றத்தின் மக்களவை மற்றும் மாநிலங்கள் அவை ஆகிய இரண்டு அவைகளிலும் 195!-க்கும், 1985-க்கும் இடையில் எழுப்பப்பட்ட 563 அவை உரிமைப் பிரச்சினைகளைப் பற்றி பட்டியல் போட்டு காட்டியிருக்கிறது. அந்த நூல்தான் இது. அதில் 90 சதவிகிதத்தினை எதிர்க்கட்சித் தலைவர்களும், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களும் தான் எழுப்பியிருக்கிறார்கள். அவற்றில் குறிப்பிட்ட 55 நிகழ்வுகள், செய்தித்தாள்கள் வெளியிட்ட செய்திகளைப் பொறுத்து உரிமைப் பிரச்சினையாக எழுப்பப்பட்டு, அவற்றிற்குரிய தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த 55 பிரச்சினைகளில் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிடுவது குற்றம். அவைத் தலைவர் எந்தப் பகுதியை நீக்குகிறார்களோ அதைப் பத்திரிகைகளில் வெளியிடுவது குற்றம் என்று, அது அவை உரிமையைப் பாதிக்கும் என்று சொல்லி, அவை உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வரப்பட்டுத் தீர்ப்புகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

1959-ல் பி.எஸ்.பி. கட்சியைச் சார்ந்த என். என். திரிவேதி ஃப்ரீ-ஜெர்னல் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார். அந்த உரிமைப் பிரச்சினை விவாதிக்கப்பட்டதற்குப் பிறகு அதன் ஆசிரியர் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அதற்குப் பிறகு அதன் ஆசிரியர் விடுவிக்கப்பட்டார் 1966-ல் காங்கிரஸ் கட்சியினைச் சார்ந்த கே. டி. மாளவியா அவர்கள் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அதை முதல் பக்கத்திலே வெளியிட வேண்டும் என்று கூறப்பட்டது. ஆசிரியர் மன்னிப்பும் கேட்டுக் கொண்டு, அந்த ஏட்டின் முதல் பக்கத்திலே அந்தச் செய்தியும் வெளியிடப்பட்டது. 1982-ல் .பி. ஜே. பி. கட்சியைச் சார்ந்த திரு. ஏ. பி. வாஜ்பாய் அவர்கள் உள்துறை அமைச்சர் மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை இரண்டின் மீதும் சேர்த்து உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். அது விளக்கப்பப்பட்டதற்குப் பிறகு அமைச்சர் அவர்களால் அவையிலே வருத்தம் தெரிவிக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. கே. கே. திவாரி அவர்கள், பம்பாய் இந்தியன் எக்ஸ்பிரஸ் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார். அது உரிமைக் குழுவிற்கு வந்து உரிமை மீறல் பிரச்சினைதான் என்று முடிவு கட்டப்பட்டது. பிறகு அந்த ஆசிரியர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு—'அபாலஜி' எடுத்திருக்கிறார்.



தவறான செய்திகள் இவைகள், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிட்டதற்கான தீர்ப்புகள் இவைகள். தவறான செய்திகளை, முரண்பாடான செய்திகளை செய்தித்தாள்களில் வெளியிடுவது முறையல்ல என்று உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. 1956 ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட பிராங்க் அந்தோணி இந்துஸ்தான் டைம்ஸ் மீது ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்தார். அந்த உரிமைப் பிரச்சினை மீது துணை ஆசிரியர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதன் பேரில் அந்தப் பிரச்சினை விடப்பட்டது. 1963-ல் எஸ்.எஸ்.பி. கட்சியைச் சார்ந்த திரு. ஆர். எஸ். யாதவ் அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

1965-ஆம் ஆண்டு எஸ்.எஸ்.பி.-ஐச் சேர்ந்த மணிராம் பக்ரி அவர்கள் ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். நிலைமை தெளிவுபடுத்தப்பட்டு அந்தப் பத்திரிகை அறிவுறுத்தப்பட்டது. 1965 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.பி.ஐச். சேர்ந்த கே. பட்நாயக் அவர்கள் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை ஆசிரியர் மனப் பூர்வமான வருத்தம் தெரிவித்ததற்குப் பிறகு அவர் மன்னித்து விடப்பட்டார்.

முற்பகல் 11-00

அதைப்போன்று 1966 ஆம் ஆண்டு சுதந்திரா கட்சியைச் சேர்ந்த கபூர்சிங், ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு வருத்தம் தெரிவித்து சாட்சியம் சொன்னார். 1966—ல் சுயேச்சை உறுப்பினரான எச். வி. காமத் அவர்கள் பி.டி.ஐ மீதே ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். அந்த உரிமைப் பிரச்சினை குறித்து விளக்கப்பட்டதற்குப் பிறகு வருத்தம் தெரிவிக்கப்பட்டு விடப்பட்டது. 1966 ஆம் ஆண்டு சுதந்திரா கட்சியைச் சேர்ந்த கபூர்சிங் அவர்கள் இன்டியன் எக்ஸ்ப்ரஸ் பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவந்தார். எக்ஸ்ப்ரஸ் பத்திரிகை ஆசிரியர் வருத்தம் தெரிவித்ததற்குப் பிறகு அது விடப்பட்டது. 1967 ஆம் ஆண்டு காங்கிரசின் திரு. சி. கே. பட்டாச்சாரி அவர்கள் இன்டியன் எக்ஸ்ப்ரஸ் பத்திரிகை மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார். 1967ஆம் ஆண்டு சுதந்திரா கட்சியைச் சேர்ந்த பி. கே. தேவ் அவர்கள் கலிங்கா என்ற பத்திரிகை மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

1968-ல் யோகேந்திர சர்மா என்பவர் ஆரியாவர்த்தா அன்ட் இந்துஸ்தான் சமாச்சார் என்ற பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு வருத்தம்

தெரிவித்தார் என்பதோடு மட்டுமல்லாமல் அவருடைய இதழின் முதல் பக்கத்திலேயே அந்த வருத்தத்தையும், தவறு ஏற்பட்டதையும் வெளியிட்டார்.

**1969**-ல் சுயேட்சை திரு. டி. விஸ்வநாதம் அவர்கள் இந்துஸ்தான் டைம்ஸ் என்ற பத்திரிகை மீது. அதாவது அதன் ஆசிரியர் மீதும், கட்டுரையாளர் மீதும். ஆக இரண்டு பேரும் வருத்தம் தெரிவிக்கிற அளவுக்கு உரிமை பிரச்சினை கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு அது விடப்பட்டது.

**1969**-ல் காங்கிரஸ் கட்சியின் ஷஷிபூஷன், இன்டியன் எக்ஸ்ப்ரஸ் பத்திரிகை மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு வருத்தம் தெரிவித்தார். வருத்தம் தெரிவித்ததற்குப் பிறகு அது விடப்பட்டது.

**1969**-ல் எஸ். எஸ். பி.ஐச் சேர்ந்த மதுலிமாயி, ஆல் இன்டியா ரேடியோ மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். நிலைய இயக்குநர் தவறுக்கு வருத்தம் தெரிவித்தார்.

**1970**-ல் காங்கிரஸ் கட்சியின் ஷஷிபூஷன், சமாச்சார் பாரதி என்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

**1970**-ல் சி.பி.ஐ.-யைச் சேர்ந்த ஜோதிர்மாய்பாசு அவர்கள் நார்தெர்ன் இன்டியா பத்திரிகா என்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு வருத்தம் தெரிவித்து அந்தத் தவறையும், வருத்தத்தையும் வெளியிட்டார்.

**1970**-ல் எஸ்.எஸ்.பி. யின் சிவசந்திரராஜா என்பவர் இன்டியன் நேஷன் என்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு வருத்தம் தெரிவித்தார் என்பதோடு இதழில் வெளியிடவும் செய்தார்கள்.

**1970**-ல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பி.ஜி. சென், நேஷனல் ஹெரால்ட் என்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக வருத்தம் தெரிவித்தார். இது கொஞ்சம் நீட்டமாக இருந்தாலும் கூட பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இதை எல்லாம் நீங்கள் படிக்கவும் மாட்டீர்கள். படிக்க நேரமும் இருக்காது. ஆகவே சொல்லி வைத்தால்தான் எல்லோருக்கும் தெரியும் என்பதற்காகச் சொல்கிறேன். நான் குறிப்பிட்ட அந்த உரிமைப் பிரச்சினைகள் கொண்டுவரப்பட்டது எல்லாம் சாதாரண பத்திரிகைகள் மீதல்ல. ஸ்டேட்ஸ்மென், இன்டியன் எக்ஸ்ப்ரஸ், இந்துஸ்தான் டைம்ஸ், நேரு ஆரம்பித்த நேஷனல் ஹெரால்ட் என்ற அத்தகைய பத்திரிகையின் ஆசிரியர்





கள் எல்லாம் மன்னிப்பும் கேட்டிருக்கிறார்கள். வருத்தமும் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் உரிமைக்குழு அவற்றை விட்டிருக்கிறது. எனவே ஒருவர் மன்னிப்புக் கேட்பதே தப்பு என்று இப்போதெல்லாம் கூக்குரல் இட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவையின் உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது, எனவே வருத்தம் தெரிவி என்றால் வருத்தமும் தெரிவிக்க மாட்டேன், மன்னிப்பும் கேட்க மாட்டேன், வரவும் மாட்டேன், கூண்டுக்குக் கூப்பிட்டால் கூண்டில் வந்து ஏறவும் மாட்டேன் என்று சொல்வது சரிதான் என்று எழுதுகிற அளவுக்கு பத்திரிகைகளின் நிலைமை போய்விட்டதே என்பதோடு, சரி என்று சொல்லி வாதாடுகிற அளவுக்கு நல்ல பத்திரிகைகளும் முன்வந்திருக்கிறார்கள் என்பதுதான் நமக்கு இருக்கிற வருத்தம். நான் குறிப்பிட்ட அவர்கள் எல்லாம் பெரும், பெரும் ஆசிரியர்கள் இல்லையா? மாலை முரசை விட; முரசொலியை விட; இவற்றை விட நாடு, உலகமெங்கும் அறிந்த பத்திரிகைகள் அல்லவா? எனவே அவர்கள் எல்லாம் தங்களுடைய மரியாதையும், மதிப்பையும் காப்பாற்றிக் கொள்ள முடியும், இப்படி வருத்தம் தெரிவித்தாலும், ஏற்பட்ட தவறுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டாலும் தங்களுடைய புகழ், பெருமை பாழாகாது என்று அவர்கள் நினைக்கும்போது இங்கே என்ன வந்தது?

முற்பகல் 1-05

அதே மாதிரி **1972**-ல் ஜனசங்க கட்சியைச் சேர்ந்த ஏ. பி. வாஜ்பாய் அவர்கள் டைம்ஸ் ஆஃப் இன்டியா பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார்கள்.

ஆசிரியர் தவறு ஏற்பட்டதை உணர்ந்து தவறுக்காக வருந்தி வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

**1972**-ல் ஜனசங்க கட்சியைச் சேர்ந்த ஈஸ்வர் சௌத்ரி பேட்ரியட் பத்திரிகையின் மீது உரிமைப்பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறை ஒப்புக்கொண்டதோடு மட்டுமல்லாமல், அவர்கள் இதழிலே திருத்தத்தையும் வெளியிட்டார்.

**1973**-ல், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கே.பி. உன்னி கிருஷ்ணன், பம்பாய் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக வருத்தம் தெரிவித்தார்.

**1974**-ல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமிரித் நாவா, ஈ.என்.ஐ., இந்துஸ்த்தான் டைம்ஸ் ஆகிய இரண்டு பத்திரிகைகளின் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். விளக்கமும், வருத்தமும் தெரிவிக்கப்பட்டன.

1974-ல் சுயேச்சை, ராம்நாத் கோயங்கா, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின், எல்லா பத்திரிகைகளுடைய அதிபர் அவர்கள். அவர்களே உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார், ஆல் இந்தியா ரேடியோ மீது. அவர் சுட்டிக் காட்டியதை, உரிமைக் குழு ஏற்று உரிமைப்பிரச்சினை காரணமாக சுட்டிக் காட்டியபோது., ஆல் இந்தியா ரேடியோவைச் சேர்ந் தவர்களுடைய தவறு என்றுசுட்டி காட்டியபோது, சுட்டிக்காட்டப் பட்ட அந்த தவறுக்குரியவர் எக்ஸ்பிளனேஷன் கொடுத்ததற்குப் பிறகு அது தள்ளப்பட்டிருக்கிறது.

1974-ல் அவைத் தலைவர், ஸ்பீக்கர் அவர்களே இந்துஸ் தான் டைம்ஸ் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண் டார், இந்துஸ்த்தான் டைம்ஸ் ஆசிரியர் பாராளுமன்றத்தினு டைய தலைவர் அவர்களிடத்திலே,

1974-ல் சி.பி.ஐ. (எம்) ஜோதிர்மாய் பாசு அவர்கள் ஜுகன்தார் என்கின்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினைக் கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

1977-ல் காங்கிரஸ், கே.பி. உன்னி கிருஷ்ணன் அவர்கள் ஆல் இந்தியா ரேடியோ மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார். தவறுக்கு உரிய அமைச்சரே எழுந்து சபையிலே வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

1978-ல் ஜனதா கட்சியைச் சேர்ந்த மணிராம் பக்ரி அவர்கள் ஆல் இந்தியா ரேடியோ மீது உரிமைப் பிரச்சினைக் கொண்டு வந்தார். இயக்குநர் தவறுக்காக வருந்தி வருத்தம் தெரிவித்தார்.

1978-ல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வயலார் ரவி அவர்கள் இந்துஸ்த்தான் டைம்ஸ் மீது ஆசிரியர் தவறுக்கு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக் காக வருந்தி வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

1978-ல் காங்கிரஸ் (ஐ)-யைச் சேர்ந்த வசந்த் சாத்தே அவர்கள் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகைமீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்கு வருந்தி வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

1978-ல் காங்கிரஸ், கே.பி. உன்னி கிருஷ்ணன் அவர்கள் நேஷனல் ஹெரால்டு பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக வருத்தம் தெரிவித்தது



மட்டுமல்லாமல் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். மன்னிப்புக் கேட்டுக் கொண்டது மட்டுமல்லாமல் திருத்தத்தையும் பத்திரிகையிலே வெளியிட்டார்.

1979-ல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மல்லிகார்ஜுனன் அவர்கள் இந்துஸ்த்தான் டைம்ஸ் பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியரும் வெளியிடு பவரும் தவறுக்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள்.

1980-ல் ஜனதா (எஸ்) கட்சியைச் சேர்ந்த மணிராம் பக்ரி அவர்கள் ஹிந்த் சமாச்சார் என்கின்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக் காக வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

1980-ல் ஜனதா (எஸ்) மறுபடியும் ஆல் இந்தியா ரேடியோ மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தது. ஆல் இந்தியா ரேடியோ எச்சரிக்கப்பட்டது.

1980-ல் ஜனதா (எஸ்) கட்சியைச் சேர்ந்த மணிராம் பக்ரி அவர்கள் பேட்டிரியட் பத்திரிகை மீது உரிமைப் பிரச் சினை கொண்டு வந்தார். ஆசிரியர் மனப்பூர்வமான வருத் தத்தைத் தெரிவித்துக்கொண்டு, அதையும் வெளியிட்டார்.

1981-ல் பி.ஜே.பி.-யைச் சேர்ந்த சத்திஷ் அகர்வால் அவர்கள் டெல்லி ரெகார்டர், பிளிட்ஸ் பத்திரிகைகள் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர்கள் முறையே திரு. இராஜ்பால் சிங் மற்றும் திரு. ஆர். கே. கராஞ்சியா தவறுக்காக நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுக்கொண் டார்கள். ஆக அவர்கள் பிளிட்ஸ் மீதும் டெல்லி ரெக்கார் டர் மீதும் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தபோது கராஞ்சியாவே வந்து நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் என்று லோக்சபாவினுடைய ரெக்கார்ட் கூறு கிறது. ஆக கராஞ்சியாவைப் பற்றி, பிளிட்ஸ் ஆசிரியரைப் பற்றி நாடே அறியும். எல்லோரும் அறிவார்கள். தவறு சுட்டிக் காட்டியதற்குப் பிறகு தவறு என்று உணர்ந்தது மட்டு மல்லாமல் வருத்தம் மட்டும் தெரிவிக்கவில்லை, அப்பாலஜியே கேட்டுக்கொண்டிருக்கிறார். கராஞ்சியா மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்ற மாநிலங்கள் அவையிலே 1959-லே சி.பி. ஐ.-ஐச் சேர்ந்த புபேஷ் குப்தா, 'தாட்' என்கின்ற பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக வருத்தம் தெரிவித்தார்.

1964-ல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அர்ஜுன் அரோரா அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக வருத்தம் தெரிவித் தார். மன்னித்து விடப்பட்டார்.

1966-ல் சி.பி.ஐ.-யைச் சேர்ந்த புபேஷ் குப்தா அவர்கள் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் எச்சரித்து விடப்பட்டார்.

சி.பி.ஐ.-யைச் சேர்ந்த புபேஷ் குப்தா அவர்கள் 'ஸ்டேட்மென்ட்' பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார், 1972-ல், ஆசிரியர் எச்சரித்து விடப்பட்டார்.

முற்பகல் 11–10.

1973–ல் குருநானந்த் தாக்கூர் என்பவர் மதர்லாண்ட் என்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். செய்தி தாள் எச்சரிக்கை விடப்பட்டது.

1973–ல் தி.மு. கழகத்தைச் சேர்ந்த எஸ். எஸ். மாரிசாமி அலையோசை என்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக வருத்தம் தெரிவித்தார்.

1978-ல் ஜனதா சுரேந்திரமோகன், நேஷனல் ஹெரால்ட் பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக வருத்தம் தெரிவித்தார். இதழில் திருத்தமும் வெளியிட்டார். 1979—ல் சி.பி.ஐ. (எம்) பி. இராமமூர்த்தி அவர்கள் எக்கனாமிக் டைம்ஸ் என்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக வருத்தம் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

1980—ல் காங்கிரஸ் விபின்பால்தாஸ் அவர்கள் அஸ்ஸாம் டிரிபியூன் என்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினைக் கொண்டு வந்தார். ஆசிரியர் தவறுக்காக வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு அதனையும் வெளியிட்டார்.

1980—ல் நரசிங்க் பிரசாத் மற்றும் 8 பேர் ஒரு வெளியீட்டாளர் சி. பி. கார்க் என்பவர் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார்கள். இந்த உரிமைப் பிரச்சினை மிக விசித்திரமான ஒரு பிரச்சினை. ஆகையினால் தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை என்ன என்று கேட்டால் இந்த சி. பி. கார்க், ஏ. கே. கார்க் , வி.கே. கார்க் என்ற சகோதரர்கள் மூவரும் சேர்ந்து நூல் வெளியிட்டார்கள். அதாவது சட்டம் சம்பந்தமான நூல் வெளியிட்டார்கள். அந்த நூல் வெளியீட்டில் 1980-81—ல் வெளியிட்ட அந்த நூலில் அவர்கள் குறிப்பிட்டிருப்பது அதாவது "Gargs Income Tax Ready Reckoner 1980-81 and 1981-82".





என்று அந்த நூலுக்கு பெயர். அதில் என்ன போட்டார்கள் என்றால் பினான்ஸ் நம்பர் 2 பில் 1980, அது லோக்சபாவில் நிறைவேற்றப்பட்டு ராஜ்யசபாவுக்கு போயிருக்கிறது. லோக் சபாவில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ராஜ்ய சபாவில் போய் அது பில்—ஆக இருக்கிறது. அதாவது பினான்ஸ் நம்பர் 2 பில் 1980 என்று பெயர். ஆனால் அப்படி இருக்கும்போது இந்த வெளியீட்டாளர் என்ன செய்தார் என்றால் பினான்ஸ் நம்பர் 2 ஆக்ட் 1980 என்று போட்டுவிட்டார். ராஜ்யசபாவில் பாஸ் பண்ணிய பிறகுதான் பில் என்பது ஆக்ட் ஆகிறது. அது ஆக்ட் ஆகவில்லை. ராஜ்யசபாவில் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எடுத்துக்கொண்டு அது பாஸ் ஆவதற்கு முன்னாலே இந்த புஸ்தகத்திலே பினான்ஸ் நம்பர் 2, ஆக்ட் 1980 என்று போட்டு விட்டார். அவர் செய்த தவறு இதுதான். அது உடனே உரிமைப் பிரச்சினையாக 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4 ஆம் நாள் வந்தபோது நரசிங் பிரசாத் கொண்டு வந்தார். அவரைத் தவிர மற்ற 8 பேர் நோட்டீஸ் கொண்டு வந்தார்கள். அதிலே இரா. செழியன், அஜீத்குமார், சர்மா, என்.பி.கே. சால்வே, சதாசிவ் பகத்கான், இராமநாந்த் யாதவ், தினேஸ் கோஸ்வாமி, முரளீதர், சந்திரகாந்த் மாந்த்ரே, திருமதி மார்க்ரட் ஆல்வா இவர்கள் அத்தனைபேரும் நோட்டீஸ் கொடுத்திருந்தார்கள். அவர் செய்தது, பில் என்று போடுவதற்கு பதிலாக ஆக்ட் என்று போட்டுவிட்டதுதான். அதுதான் பிரிவிலேஜ் மோசன் ஆக வந்து அதற்கு அவர்கள் நேராக வருவதற்கு அவை உரிமைக் குழுவைக் கூட்டினார்கள். அவர்கள் அவை உரிமைக் குழு முன் நேராக வந்து

.. "when Garg was confronted with the facteagain admitted it and stated that it was his error to have published the book and regretted and apologised for the same"

முற்பகல் 11–15.

தவறு ஏற்பட்டு விட்டது, அதை பதிவு செய்து விட்டோம். அது என் தவறுதான். அதற்காக வருந்துகிறேன். வருந்துகிறேன் என்பது மட்டுமல்ல, நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்று சொன்னார். அப்படி செய்தும், வருத்தம் தெரிவித்த காரணத்தினாலே தன்னை விடுவிக்க வேண்டுமென்று கேட்கவில்லை. இன்றைக்கு சுனில் சுப்ரீம் கோர்ட்டுக்கு போயிருக்கிறார். அன்றைக்கு அவர் அங்கே வந்து மன்னிப்பு கேட்டிருக்கிறார். பில் என்று போட வேண்டிய இடத்தில் ஆக்ட் என்று போட்டது தவறு, மன்னிப்பு கேட்டார். ரிக்ரெட் பண்ணிவிட்டார். ஆனால் அந்த அவை உரிமைக் குழு அவரை விடுவதாக இல்லை. என்ன செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் கடைசியில் விசாரித்துவிட்டு,

.. "The Committee is therefore of the opinion that a serious view is required to be . taken of the breach fo privilage committed by Shri Dinesh Chandra Garg in his capacity

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 ஏப்ரல் 27.

as the principle author and publisher of the book. The Commitee feels that the contemner should not be allowed to escape merely with a formal or customary expression of regret or apology on his part or by a mere reprimand or admonition even though in stern language administered to him in the House. The Commitee is canvinced that Shri Garg has committed contempt of sufficient gravity so as to deserve the penalty of imprisonment....

'பில்' என்பதற்கு 'ஆக்ட்' என்று போட்டார்கள் என்பதற்காக, தவறுதான், நான் வருந்துகிறேன், மன்னித்து விடுங்கள் என்று கமிட்டியிடம் வந்து 3 சகோதரர்களும் சொல்லியிருக்கிறார்கள் அப்படிச் சொல்லியும் அவர்களை விட்டுவிடக்கூடாது, வருத்தம் தெரிவித்தாலும், மன்னிப்பு கேட்டாலும், ரெப்ரிமான்ட் பண்ணுவதுகூடப் போதாது, கூண்டிலே கொண்டு வந்து நிறுத்தி தண்டிப்பதுகூட போதாது, சிறைக்கே அனுப்ப வேண்டுமென்று தான் கமிட்டி நிறைவேற்றி இருக்கிறது. அதற்குப் பிறகு அதனுடைய அறிக்கை அவைக்கு வந்த உடனே, அப்போது உறுப்பினராக இருந்த திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்கள்,

"....having considered the same this House recommits to the Commitee of privileges for reconsidering its recommendations regarding imposition of punishment on the contemner... "

என்று கூறி இதை மறுபரிசீலனைக்கு அவை உரிமைக் குழுவிற்கு மீண்டும் விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அப்படி அவை உரிமைக் குழுவுக்கு விட்டார்கள்.

அவை உரிமைக் குழு அலசிப் பார்த்து,

"..in view of the adoptation of the aforesaid motion by the House the Committee on reconsideration recommends that in the totalits of circumstances it would suffice if Shri Dinesn Chandra Garg iy also summoned to the bar of the House and reprimanded along with the other two co-authors Shri Anil Kumar Garg and Sri Vishnu Kumar Garg. The Commitee has nodoubt that the authority of the House would be vindicated and safeguarded by reprimanding the offenders for the breach of privileage and contempt of the House Committed by them.... "

மறுபடியும் மறுபரிசீலனை செய்தது. அவர்களை சிறைக்கு அனுப்ப வேண்டும், பாராளுமன்றம் கலைக்கப்படும் வரையிலும் அவர்களை சிறையில் அடைக்க வேண்டுமென்பது முதல் தீர்மானம். அதற்குப் பிறகு கேட்டுக் கொண்டதால், அவர்களை ரெப்ரிமான்ட்—கூண்டிலே ஏற்றி கண்டித்தால் போதும் என்று அந்தக் கமிட்டி சிபாரிசு பண்ணியது. அதை ராஜ்ய சபை ஏற்றுக்கொண்டது. ராஜ்ய சபை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் தேதி 3 பேரையும் அழைத்



1992 ஏப்ரல் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தார்கள். கூண்டு வைக்கப்பட்டது. வந்து இருக்கிறார்களா என்று கேட்டார். 3 பேரும் வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்போது கொண்டு வந்து கூண்டில் நிறுத்துங்கள் என்று சொன்னார். 3 பேரும் கூண்டிலே நிறுத்தப்பட்டார்கள். எதற்கு? பில் என்பதை ஆக்ட் என்று மாற்றியதால். அவன் யாருடைய உரிமையையும் பறிக்கவில்லை. அவன் யாரையும் கேலி பண்ணவில்லை. நொடோரியசாக எழுதவில்லை. நாளுக்குநாள் சண்டைக்களமாகப் போய்விட்டது என்று எழுதவில்லை. பில் என்பதை ஆக்ட் என்று போட்டான். ஆக்ட் என்று உரு எடுப்பது ராஜ்ய சபையில் நிறைவேற்றியதற்குப் பிறகுதான். அப்படி நிறைவேற்றுவதற்கு முன்னாலேயே ஆக்ட் என்று போட்டது அவன் குற்றம். அந்த அளவுக்குக் கடைசியிலே சொல்லும்போது,

'..This was a deliberate and wilful effort on your part as the authors to misrepresent the proceedings and actions of the House, and, therefore constituted a breach of privilege and contempt of the House. In the name of the House, I accordingly reprimand you for committing breach of privilege and contempt of the House.... "

என்று கண்டனத்தைத் தெரிவித்த பிறகு அவர்கள் போகலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு நீங்களும் யோசிக்க வேண்டும். உரிமைக் குழு முன்னாலே இங்கே இருக்கின்ற பத்திரிகை ஆசிரியர்களும், நிருபர்களும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்களுக்குப் பரிந்து பேச நல்ல பத்திரிகைகள் எல்லாம் முன் வந்திருக்கின்றன. அங்கே அவர்கள் போய் வருத்தம் தெரிவித்து, மன்னிப்பு கேட்டுக்கொண்டதற்குப் பிறகும், கூண்டுக்குக் கூப்பிட்டிருக்கிறார்கள். கரஞ்சியா உள்பட அவர்கள் ரெப்ரிமான்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். மன்னிப்பு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ரெப்ரிமான்ட் அல்ல, கரஞ்சியா மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இவர்கள் எல்லாம் கூண்டிலே நிறுத்தப்பட்டு கண்டிக்கப்படுகிறார்கள் என்றால், இங்கே இவர்களை எல்லாம் விட்டுவிட வேண்டும். கரஞ்சியாவுக்கு ரெப்ரிமான்ட்தான். கூண்டிலே நிறுத்தி வைத்து அவர்களும் கண்டிக்கப்பட்டார்.

முற்பகல் 11—20

அப்படியிருக்கிறபோது, இந்த அரசு அல்லது இந்தப் பேரவை, இந்தப் பேரவையின் மாண்புமிகு தலைவர் அவர்களுடைய ஆணையின் பேரில், அவை உரிமைக்குழு—அவை உரிமைக் குழு என்பதற்கு தனி அதிகாரம் கிடையாது—இந்த அவையின் ஒரு அங்கம், இந்த அவை செய்வதற்குப் பதிலாக இந்த உரிமைக் குழு செய்கிறது. அதற்குப் பிறகு, அதையும் கூட இந்த அவைக்கு ஒருவர் வருத்தம் தெரிவித்துக் கொண்டாலும், அந்த வருத்தத்தையோ மன்னிப்பையோ நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. உங்களை சிறையில்தான்

அடைப்பேன் என்று சொல்வதற்கு உரிமை உண்டு இந்த சபைக்கு. அதேமாதிரித்தான், இப்படி இந்த சாதாரணமான தன்மையில், எதற்காகச் சொல்கிறேன் என்றால், சிறிய உரிமையை, அதாவது ' பில் ' என்பதை ' ஆக்ட் ' என்று மாற்றியதையே பெரிய உரிமை என்று, பாராளுமன்றத்தின் உரிமை களங்கப்படுத்தப்படுகிற அளவுக்கு, புறக்கணிக்கப்படுகிற அளவுக்கு இருந்ததன் காரணமாக, மூன்று பேர் கூண்டிலே கொண்டுவந்து நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்று சொல்கிறபோது, நாம் எடுத்துக் கொண்டிருக்கிற எந்த நடவடிக்கை, எந்த இடத்திலே முறை தவறி, சட்டத்திற்குப் புறம்பாக இருக்கிறோம் என்பதை ' இந்து ' பத்திரிகையாவது, அல்லது ' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' பத்திரிகையாவது அல்லது ' டைம்ஸ் ஆப் இந்தியா ' பத்திரிக்கையாவது—மற்றவற்றுக்கெல்லாம் நாணயமான விளக்கம் தருகிறவர்கள்—இதற்கும் விளக்கம் தர வேண்டுமல்லவா ? காழ்ப்புணர்ச்சியைக் காட்டக்கூடாது அல்லவா ? எந்தப் பத்திரிகை மீதும் எங்களுக்குக் கோபமும் கிடையாது, தாபமும் கிடையாது. ஆனால் இதைப் பெரிய பிரச்சினையாக எடுத்துக் கொண்டு, இதற்கு ஒரு குழுக் கூட்டம் கூட கூடி, அதை அகில இந்திய அளவில் ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்க வேண்டுமென்று செயல்படுகிறார்கள். இப்போது நான் 55 கேஸ் சொன்னேனே, இதை பற்றி, சுதந்திரம் பறிக்கப்பட்டது என்று யாராவது அப்போது சொன்னார்களா ? அப்போது ஏதாவது கிளர்ச்சிகள் நடந்ததா ? பத்திரிகை சுதந்திரம் பறி போகிறது என்று யாராவது சொன்னார்களா ? அண்மையிலே இந்தியப் பாராளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பின் மூலமாக ஆட்சியின் தன்மையை நிர்ணயிக்க, மாண்புமிகு பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்கள் ஓட்டெடுத்து, அவையின் முழு ஆதரவும் தனக்கு இருக்கிறது என்பதைக் காண்பிப்பதற்காக ஓட்டெடுப்பு நடத்தியபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தேர்தல் காலத்தில் வைத்திருந்த கூட்டு, உறவின் அடிப்படையில், அந்த அவையிலும் நாம் முழு ஒத்துழைப்பைத் தருகிறோம் என்ற தன்மையில் பாராளுமன்றத்திலேயும் சரி, இந்த சட்டமன்றத்திலேயும் சரி, இருக்கின்ற பண்புக்கேற்ப மாண்புமிகு முதல்வர் அவர்கள், கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், பாராளுமன்றத்திலே இருக்கின்ற கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களையெல்லாம், திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்களுக்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டுமென்ற ஒரு ஆணையையும் கொடுத்தார்கள். அதற்கேற்றபடி வாக்களிக்கப்படுகிறது. அந்த வகையில் திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்களுக்கு, யாரும் அசைக்க முடியாத அளவுக்கு கணிசமான அளவுக்கு ஆதரவு இருக்கிறது என்பதும் நாளுக்கு நாள் அது வளர்ந்துகொண்டிருக்கிற ஒரு பாங்கினைப் பெற்றிருக்கிறது என்பதும் நிலைநாட்டப்பட்டுவிட்டது. அப்படி





யிருந்தும் ' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' பத்திரிகையில் செய்தி எழுதுகிறபோது,

,Today there is hardly any newspaper in Tamil Nadu which has not beeu pulled up fcr the tone and tenor of its reporting Ms. Jayaalithas fragile ego, combined with her hold over the State Assembly and the virtual lake of opposition to the A.I.A.D.M.K. has contributed to creating an atmasphere in the siate in which the freedom of the Press is since threatened. No one can define scurrilous writing. But clearly definition of such writing cannot be left to Ms. Jayalalitha and her Party ........ Anyone familar with the reaction of the Indian press and people to an imperious rule would know that Ms, Jayalalitha who cannot bope to get away with her proposal shall be ill advised to allempo to go ahead with it. Her attempts to bully the Press and bound to be eounter productive and will only heighten popular resentment against it என்று ஒரு காரணமும் இல்லாமல் ஒன்றும் இல்லாமல் எழுதப்பட்டது மட்டுமல்லாமல், அப்படி வாக்களித்தவர்களோடு, முஸ்லீம் லீகைச் சேர்ந்த திரு. அப்துல் சமதும் வாக்களித்தார் என்று எழுதியிருந்தது. அப்போது அப்துல் சமது எம். பி. யே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 11—25

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் முதல் பக்கத்தில் மத்தியில் உள்ள காங்கிரஸ் ஆட்சிக்கு யார் யார் ஆதரவு தெரிவித்தார்கள் என்பதை வெளியிடுகிறபோது அனைத்திந்திய அண்ணா தி. மு. க. உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தார்கள். அவர்களோடு இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக்கைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் சமது அவர்களும் ஆதரவு அளித்தார்கள் ; அவர் வேலூர் தொகுதியைச் சார்ந்த நாடாளுமன்ற தொகுதி எம். பி., என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். 1989-ஆம் ஆண்டு தேர்தலில்தான் அப்துல் சமது அவர்கள் வேலூர் தொகுதியிலிருந்து வெற்றி பெற்று மக்கள் அவைக்குச் சென்றார்கள். அவர் 1991-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வேலூர் தொகுதியில்கூட நின்று போட்டியிடவில்லை. அவர் மயிலாடுதுறை தொகுதியில் நின்று போட்டியிட்டு மணிசங்கர் ஐயர் அவர்களிடம் தோற்றுப் போனார். அப்துல் சமது அவர்கள் இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இல்லை. ஆனால் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக்கைச் சார்ந்த வேலூர் தொகுதி எம்.பி. அப்துல் சமது அவர்கள் அங்கே ஆதரவு

தெரிவித்தார்கள் என்ற செய்தி அகில இந்திய நாளேடான இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் முதல் பக்கத்திலே வந்தது. இதற்கு நான் உடனடியாக நம்முடைய கட்சியில் இருக்கின்ற சிலரை விட்டு கடிதம் எழுதச் சொன்னேன். இது போன்ற ஒரு தவறை சட்டசபையில் ஓர் அமைச்சரோ ஓர் உறுப்பினரோ செய்தால் நீங்கள் விடுவீர்களா ? ஒரு பொறுப்பில் இருக்கின்ற நாளேட்டில் யார் இப்போது எம்.பி. யாக இருக்கிறார்கள் என்பதைக் கூட நீங்கள் தெரிந்துக் கொள்ளாமல் இப்படி ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறீர் களே,(மேசையைத் தட்டும் ஒலி) இப்போது வேலூர் தொகுதி எம். பி. யாக இருப்பவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அக்பர் பாட்சா அவர்கள் என்பதுகூட உங்களுக்குத் தெரிய வில்லையே, இத்தகைய ஒரு தவறை எப்படி நீங்கள் முதல் பக்கத்தில் வெளியிட்டீர்கள் என்று ஒரு மறுப்புக் கடிதத்தை எழுதி அனுப்பினால் அந்தக் கடிதத்தைக்கூட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை வெளியிடவில்லை. அந்த அளவிற்கு இன்றைக்கு பத்திரிகைகள் Journalistic ethics code of ethicsஐ மதிக்காமல் நடக்கிறார்கள் என்பதைத் தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது போன்ற ஒரு சிறிய தவறை இங்கே இந்த அவையில் பேசுகின்றபோது நானோ அல்லது அமைச்சர்களில் ஒருவரோ இப்படிப்பட்ட ஒரு தவறை செய்திருந்தால் இந்தப் பத்திரிகைகள் They would have gone down on it . அவர்கள் எத்தனை நாட்கள் எங்களைக் கிண்டல் செய்து, கேலி செய்து எழுதி யிருப்பார்கள் ? அவர்கள் இந்த பொறுப்புள்ள நாளேட்டில் இன்று எந்த தொகுதியில் யார் எம். பி.யாக இருக்கிறார்கள் என்பதுகூட தெரிந்துகொள்ளாமல் எம். பி. யாகவும் இல்லாத ஒருவரை இப்போது அங்கே மக்கள் அவையில் நரசிம்மராவ் அவர்களின் அரசாங்கத்திற்கு, ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்தார் கள் என்ற செய்தியை வெளியிட்டால், அந்தத் தவறை செய்து விட்டு ஒரு கடிதத்தை அனுப்பினால் அந்தக் கடிதத்தை வெளியிடுகின்ற அளவிற்குக் கூட அவர்கள் பத்திரிகை உலகின் கண்ணியத்தைக் காப்பாற்றவில்லை என்பதைத்தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதைப் போன்று உண்மைகளை எடுத்துத் தெரிவித்து பத்திரிக்கையில் போடுங்கள் என்று சொன்னாலும், போடவில்லை என்றால் அதுதான் பத்திரிக்கை சுதந்திரம். (சிரிப்பு) அவர்கள் விரும்புகின்ற, அவர்கள் காப்பாற்றுகின்ற, போற்றி பாராட்டி வருகிற சுதந்திரம் அதுதான் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.





இங்கே டாக்டர் பி. ஆர். அம்பேத்கர், இந்திய அரசியல மைப்புச் சட்டத்தை உருவாக்குகின்றபோது அரசமைப்புச் சட்ட அவையில் பேசுகின்றபோது தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அதைத்தான் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன், இந்த வாய்ப்பிலே,

'There is not the slightest doubt in my mind, and I am sure in the minds of the Drafting Committee, that Parliament would be exrosed fo calumny, to unjustified criticism and the Parliamentary institution in this country might be brought down to utter contempt and may lose all the respect which the Parliamentary institution should have irom the people for whose benefit they operate.'

" பாராளுமன்றம் அவதூறு கூற்றுகளுக்கு ஆளாக்கப்படும் போதும் நியாயமற்ற குற்றச்சாட்டு விமர்சனங்களுக்கு உள்ளாக் கப்படும் போதும் பாராளுமன்றத்தின் சில குறிப்பிட்ட அவை உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பது எனது உள்ளத் திலும் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் குடியினரின் உள்ளங்களிலும் ஐயப்பாட்டிற்கு சிறிதும் இடம் இல்லாத வகை யில் நிலைபெற்றிருக்கிறது. இல்லையெனில் பாராளுமன்ற நிறுவனம் மக்களால் வெறுக்கத்தக்க ஒன்றாகும் ; எல்லா மதிப்புகளையும் இழக்கக் கூடிய ஒன்றாகும் ; தரம் தாழ்த்தப் பட்டு விடும். எந்த மக்களின் நலனுக்காக பாராளுமன்றம் இருக்கிறதோ அந்த மக்களின் மதிப்பை அடியோடு இழக்கும் படியான நிலைக்கு அது ஆளாக வேண்டிய நிலை ஏற்படும் " என்று இந்த உரிமையைப் பற்றிக் கூறும் போது டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அவர்கள் நாடாளுமன்றத்திலே மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவையின் உரிமைகள் மற்றவைகள் காப்பாற்றப்படாமல் போகுமானால் மக்கள் வேறுக்கத்தக்க சூழ்நிலை, இழிவாகக் கருதத்தக்க சூழ்நிலை ஏற்பட்டு அடியோடு ஜனநாயகத்தினுடைய தன்மைகள் மாறிப் பொய் விடும் என்பதை அரசமைப்புச் சட்டம் வருகிறபோதே அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11–30

மற்றும் அவர்கள் கூறுகிறபோது—

'. . among the actions treated ascontemptin consultation with the publi cation of the debates or publishing false account ofthe proceedings of iee House, publishing scandalous misrepresentation of the preceedings hf the House or its debates, publishing a preceeding ordered to be fixpunged from the journals'.

என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது பாராளுமன்ற நிகழ்ச்சிகளையும், விவாதங்களையும் வெளியிடும்போது அவை யின் நடைமுறை நிகழ்ச்சிகளையோ, விவாதங்களையோ, உண் மைக்குப் புறம்பாக, இழிவான முறையில் வெளியிடுதல், செய்தித்

தாள்களில் வெளியிடக்கூடாது என்று சொல்லி, அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டவைகளை வெளியிடுதல் போன்றவைகள் அவை உரிமைக்கு களங்கம் ஏற்படுத்துவதாகக் கருதப்படும் என்று டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அவர்கள் மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

கவுல் அண்ட் ஷக்தர் அவர்கள் எழுதியுள்ள இந்திய பாராளுமன்ற நடைமுறையில் கூட—

'.. It is this power that gives reality to the privileges of parliment and emphasls the sovereign character so far as the protection of its rights and the maintenance of its dignity are concerned.

' பாராளுமன்றத்திற்கு என்று இருக்கிற ஆளுமை அதிகாரம் தான் பாராளுமன்றத்தின் உரிமைக்கே உண்மையான வடிவம் தருகிறது, இறையாண்மைத் தன்மையை, காப்பாற்றுகிற, உரிமையைப் பாதுகாக்கிறது, மதிப்பை நிலைநாட்டி வருகிறது' என்று அந்த நூலில் தெளிவுபட எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள்.

ஏன் இவற்றையெல்லாம் எடுத்துச்சொல்ல வருகிறேன் என்றால் இந்த அவையினுடைய நடவடிக்கைகளில் எந்தவித சிறு குற்றமும் இல்லாத வகையில், முன்நடவடிக்கைகளாக, முன் எடுத்துக்காட்டுகளாக இருக்கிற தன்மையினுடைய அடிப்படையை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அவை உரிமைக்குழு எடுத்த தீர்மானமும், இந்த அவை நிறைவேற்றியிருக்கிற தீர்மானமும், எவ்வளவு நியாயங்களுடைய அடிப்படையில் அமைந்திருக்கின்றன என்பதை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டும், ஆகவே. இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டோ வேறு எந்த கோர்ட்டோ— இந்த அவை ஏற்கனவே கூட முடிவு செய்திருக்கிறது, எந்த ஒரு கோர்ட்டும் இந்த அவையை கட்டுப்படுத்த முடியாது என்று. அவர்கள் நோட்டீஸ் அனுப்பினால் நோட்டீசை வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்று பேரவைத் தலைவர்கள், நாடாளுமன்றத் தலைவர்களுடைய மகாநாடே தீர்மானித்திருக்கிறது. இங்கேயும் பல தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் தான் சுப்ரீம் கோர்ட்டினுடைய, உச்ச நீதி மன்றத்தினுடைய நோட்டீசையோ மற்றவைகளையோ, இந்த அவையோ, பேரவைத் தலைவர் அவர்களோ அல்லது பேரவைத் தலைவரின் கீழே பணியாற்றுகிற செயலாளர் அவர்களோ வாங்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, நாம் முறைப்படி இந்த அவை என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அதை (மேசையைத் தட்டும் ஒலி) எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேசமயத்தில் நாம் உச்ச நீதிமன்றத்தை மதிக்கிறோம். அதனுடைய தனித்தன்மையை மதிக்கிறோம். அவர்களுக்கு இருக்கிற உரிமையை அறிகிறோம். நமக்கு இருக்கிற உரிமையை அறிகிறோம். அவர்களுடைய உரிமைகளில் நாம் தலையிடுவது இல்லை. நம்முடைய உரிமையிலும் அவர்கள் தலையிடக்



கூடாது என்பதற்கு ஏராளமான காரணங்கள் இருக்கின்றன. இதை நாடும் புரிந்து கொள்ள வேண்டும். உறுப்பினர் பெருமக்களும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் தான் இந்த அவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய சீரிய தலைமையின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் இப்போது வந்திருக்கிற பிரச்சினையைப் பொறுத்தும் எடுக்கும். இன்றைக்கும் இந்த கூண்டுக்குள்ளே கூப்பிட்டபோது முரசொலி ஆசிரியரும் வரவில்லை. கோவை மாலை முரசு ஆசிரியரும் வரவில்லை. வரவில்லை என்பது மட்டுமல்ல, நாங்கள் வழக்கு தொடர்ந்து இருக்கிறோம்,. அது 27-ஆம் தேதி வருகிறது. 27-ஆம் தேதி பார்ப்போம். ஆகவே, உங்களுடைய ஆணையை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு சட்டப்படி, முறைப்படி, விதிமுறைகள்படி என்னென்ன நடவடிக்கைகளை தொடர்ந்து எடுக்க வேண்டுமோ, இந்த அவையினுடைய உரிமையைக் காப்பாற்ற, தங்களுடைய உரிமையையும் காப்பாற்ற, அந்த வகையில் நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை இந்த அவையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்து இருக்கிற விரிவான விளக்கங்களுக்கு பிறகு, இன்றைய தினம் எழுந்துள்ள பிரச்சினையில் நாம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் எந்த அளவுக்கு நியாயம் என்பதை அமர்ந்து இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு உணர்வீர்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு விரிவான விளக்கம், நாடாளுமன்றத்தில் இது வரையில் எத்தனை நிகழ்வுகளில் இதைப்போன்ற பிரச்சினைகள் வந்து மிகப் புகழ்பெற்ற, உலகம் தழுவிய வெளியீடுகளைக் கொண்டிருக்கிற பத்திரிகைகள் எல்லாம், அங்கே இப்படிப் பட்ட நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன என்ற விளக்கங்களை எல்லாம் சொல்லி, அந்த நடவடிக்கைகள் எல்லாம் எந்த அளவுக்கு நியாயப்பூர்வமானவை என்று பத்திரிகையாளர்களும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்பதையெல்லாம் எடுத்து விளக்கினார்கள்

முற்பகல் 11—35

இன்றைக்கு நம்முடைய அவையில் நாம் நடவடிக்கை எடுத்திருக்கிற பிரச்சினையில், திரு. பட்டாபிராமன் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல, இன்றைக்கு நம்முடைய எல்லா உரிமைகளுக்கு உள்ளும் வந்து, நாம் எடுத்திருக்கிற நடவடிக்கைகளைத் தடை செய்து உத்தரவிட்டு இருப்பது எந்த வகையிலேயும் நம்மைக் கட்டுப்படுத்தக்கூடியது இல்லை என்பதைப் பல்வேறு விதிமுறைகள் மற்றும் நடைபெற்ற நடவடிக்கைகள் மூலம் அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பேரவைக்கு இருக்கக்கூடிய ஒரு தனி அதிகாரம் பொருந்திய விதி அரசியல் அமைப்புச் சட்டத்தின் 212-வது பிரிவாகும். 212-வது பிரிவு 1, 'The validity of any proceedings in the Legislature of a state shall not be called in question on the ground of any alleged irregularity of procedure.' என்று மிகத் தெளிவாக இருக்கிறது.

ஒருவேளை நடைமுறைகளிலே சில பல குளறுபடிகள் இருந்தால் தால் கூட, அவற்றின் அடிப்படையில் ஒரு நடவடிக்கை எடுக்கப் பட்டு இருந்தால் கூட, அதிலேகூட எந்த வழக்குமன்றமும் தலையிட முடியாது என்பது தெள்ளத் தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல, நாமும் எடுத்திருக்கிற நடவடிக்கைகளில் எந்தவிதமான நடைமுறை குறைபாடுகளும் இங்கே கிடையாது. அப்படி இருந்தும் கூட, இந்த விதியைக் காப்பாற்ற வேண்டிய உச்சநீதிமன்றம் இன்றைக்குத் தடையாணை வழங்கியிருப்பதாகப் பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகிறது.

அதற்கு பிறகு, இரண்டாவது விதி, 'No officer or member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers. அது இங்கே இருக்கிற அலுவலர்கள், இந்தச் சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகளை நிறைவேற்றுகிற அதிகாரம் பெற்ற அலுவலர்களையும் எந்தக் கோர்ட்டினுடைய நடவடிக்கைக்கும் உட்படுத்தக்கூடாது என்று மிகத் தெளிவாக இருக்கிறது.

அடுத்து, அரசியல் அமைப்புச் சட்டத்தின் 194-வது பிரிவு. 'No member of the Legislature of a State shall be liable to any proceeding in any court in respect of anything said or any vote given by him in the Legislature or any Committee thereof, and no person shall be so liable in respect of the publication by or under the authority of a house of such a Legislature of any report, paper, votes or proceedings என்று மிகத் தெளிவாக இருக்கிறது.

இவ்வளவு விதிகள் இருந்தும் கூட, இன்றைய தினம் நாங்கள் கோர்ட்டுக்குச் செல்கிறோம் என்று பேசுகிறவர்களும், வெளியிலே பத்திரிக்கைகளிலே எழுதுகிறவர்களும் இந்த அரசியல் சட்டத்தினுடைய 19-வது பிரிவு, Article 19, எங்களுக்கு பேச்சுரிமை, எழுத்துரிமை கொடுத்திருக்கிறது என்பதைக் கூறுகிறார்கள்.



அந்த 19-வது பிரிவையும்கூட உன்னிப்பாகக் கவனித்தால், 19-வது பிரிவினுடைய உட்பிரிவு (1)-ல், 'A' பிரிவுதான் அதைக் குறிப்பிடுகிறது. 'Right to freedom of speech and expression' 'B' 'C' 'D' எல்லாம் மற்ற Fundamental Rights பற்றிச் சொல்கிறது. இந்த 'A'க்குக் கூட அரசியல் சட்டத்திலே என்ன விளக்கம் இருக்கிறது என்று சொன்னால்' 'Nothing in sub-clause (a) of Clause (1) shall affect the operation of any existing law, or prevent the State from making any law.' இருக்கக்கூடிய சட்ட விதிகளில் எந்தப் பிரிவுக்கும் விரோதமாக இந்த 'Freedom of speech,' என்பதையோ, 'expression' என்பதையோ பயன்படுத்தக்கூடாது என்று இருக்கிறது. இதைப்போன்ற விதிவிலக்கு, சட்டமன்றத்திற்குக் கொடுத்திருக்கக்கூடிய அந்த உரிமைகளுக்கு எங்கும் கொடுக்க வில்லை. சட்டமன்றத்தில் எடுத்த நடவடிக்கைகளுக்காக, இதனுடைய புரசீடிங்சிற்காக எந்தக் கோர்ட்டும் தலையிடக் கூடாது என்று மிகத் தெளிவாக இருக்கிறது. ஆகவேதான், பல்வேறு நிகழ்வுகள், பல்வேறு சட்டமன்றங்களில் இதைப் போன்ற நடவடிக்கைகளை எடுத்த நேரத்தில், அதை எதிர்த்து பலரும் உச்சநீதிமன்றத்தை, அல்லது உயர்நீதிமன்றத்தை அணுகுகிற நேரத்திலே எல்லாம், தெளிவாகத் தீர்ப்புரைகளை அந்தக் கோர்ட்டுகளே கூட வழங்கியிருக்கின்றன.

முற்பகல் 11.40

1960-வது ஆண்டு பீகார் சட்டமன்றத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்வில், என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமானாலும்... அந்தந்த சட்டமன்றப் பேரவை தான் எடுக்க வேண்டும், அது நியாயமா, நியாயம் இல்லையா, முறைப்படி நடந்து இருக்கிறதா புரசிஜர் எல்லாம் ஃபாலோ செய்து இருக்கிறார்களா என்பதை அந்தச் சட்டமன்றப் பேரவை தான் முடிவு செய்ய வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டே 1960-வது ஆண்டு மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்த பெஞ்சினுடைய ஜட்ஜஸ் சொல்கிறார்கள், "In our opinion, this is also a matter within the jurisdiction of the Legislature which must decide whether or not it was reason enough to be taken serious notice of or whether any punishment in the event of the petitioner being found guilty is called for. They are matters with which this court is in no way concerned. என்று மிகத் தெளிவாகச் சொல்லி அந்த 'Petition' is accordingly dismissed' என்று 1960-லே முடிவு செய்து இருக்கிறார்கள்.

அதைப்போல 1958-ல் இதே சுப்ரீம் கோர்ட்டில் அதே பீகார் மாநிலத்தில் நடந்த ஒரு நிகழ்வு பற்றி சின்ஹா என்பவர் சட்டமன்றப் பேரவைத் தலைவரை எதிர்த்து வழக்குமன்றத்திற்குச் சென்ற நேரத்தில் அப்போதும்கூட நான் சொன்னேனே,

அவர்கள் ' எங்களுக்கு இருக்கிற பேச்சுரிமை காரணமாக, எழுத்துரிமை காரணமாக எழுதினேன் ' என்று போகிறபோது மிகத் தெளிவாக அப்போது தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள். 'Article 19 (1) (a) and article 194 (3) have to be reconciled and the only way of reconciling the same is to read Article 19(1) (a)as subject to the latter part of the Article 194 (3).' இந்தப் பேச்சுரிமை, எழுத்துரிமை என்று கூறி வழக்குமன்றத்திற்கு வந்து இருக்கிறவர்கள் இந்த 19 (1) (a)-படி எங்களுக்குப் பேச்சுரிமை என்று சொல்கிறவர்கள், இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு வழங்கி இருக்கிற அதிகாரங்களான இந்த 194 (3)-வது பிரிவையும் சேர்த்துப் படித்தால் தான் அந்த உரிமை என்ன என்பது தெரியும் என்று சொல்லி இருக்கிறார்கள். 'The provisions of Article 19 (1) (a) which are general must yield to Article 194 (1) and the latter part of clause 3 which are special in 19(1) (a)' என்று இருப்பது ஜெனரலாகச் சொல்லப்பட்டு இருக்கிற ஒரு உரிமை ஆகும். ஆனால் சட்டமன்றத்திற்குக் கொடுத்து இருக்கிற உரிமை என்று இருக்கக்கூடிய 194 (2), (3) என்பதும், அதற்குப் பின்னாலே வருகிற அதனுடைய 3-வது கிளாஸும் சட்டமன்றப் பேரவைகளுக்கு இருக்கக்கூடிய தனி அதிகாரம் என்று அந்த பீகார் வழக்கிலேயே சுப்ரீம் கோர்ட் ஏ.ஐ.ஆர். வால்யூம் 46/1959 என்பதில் 1958 டிசம்பர் 12 ஆம் தேதி நடந்த நிகழ்வில் தெளிவாகச் சொல்லி, கடைசியில் அவர்களுடைய அந்த பெட்டிசனையும் டிஸ்மிஸ் செய்து இருக்கிறார்கள். இவை சுப்ரீம் கோர்ட், சட்டமன்ற உரிமைகளில் தலையிடுவதில்லை என்று எடுத்து இருக்கிற பழைய முடிவுகள் ஆகும்.

இதைப்போல இன்னும் பல்வேறு நிகழ்வுகளில், இன்னும் பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் கூட நடந்து இருக்கின்றன. உத்திரபிரதேச சட்டமன்றத்தின் நிகழ்வுகளைப் பற்றி மாண்புமிகு அவை முன்னவர் எடுத்துத் தெரிவித்தார். அங்கே இதைப்போல ஒருவரை கைது செய்யச் சொல்லிப் பேரவைத் தலைவர் உத்திரவிட்டதை எதிர்த்து, அவர் ஹைகோர்ட்டை அணுகுகிறார். ஹைகோர்ட்டே, இப்போது கொடுப்பது போல ஒரு ஸ்டே கொடுத்து இருக்கிறார்கள். அந்த ஸ்டே கொடுத்த 2 நீதிபதிகளையும், அந்த பெட்டிஷன் போட்ட நபரையும், அவருக்காக வக்காலத்து வாங்கிய வழக்கறிஞரையும் ஆகிய 4 பேரையும் கைது செய்யச் சொல்லி சபாநாயகர் திரும்ப உத்திரவிட்டு (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினை சுப்ரீம் கோர்ட்டுக்கும் சென்று, சுப்ரீம் கோர்ட்டிலேயும் கூட பேரவைக்கு இருக்கக் கூடிய அந்த உரிமை என்பது தனித் தன்மை மிக்கது தான். அந்த வகையில் அவரை முதலில் கைது செய்யச் சொன்னாரே, கைது செய்யச் சொன்னதற்கு மட்டும் பேரவைத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் இதைத் திரும்ப



கோர்ட்டிலே வந்து எடுத்துக் கொண்டார்கள் என்பதற்காக அந்த ஜட்ஜையோ, அந்த வழக்கறிஞரையோ தண்டித்திருப்பது தான் தவறானது என்று சொல்லி, அதன் பின்னர் இது ஜனாதிபதி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, ஜனாதிபதியே உச்ச நீதிமன்றத்திற்கும், உத்தரப்பிரதேச சட்டமன்றப் பேரவைக்கும் ஒரு சமாதானமான முடிவை எடுக்கச் செய்து, கடைசியில் அந்தப் பிரச்சினை முடிந்திருக்கிறது. இன்றைக்கு நாம் வழங்கிவிட்ட அந்த வாரண்ட் உத்தரவிற்கு ஸ்டே வழங்கியிருக்கிறது என்று பத்திரிகை வாயிலாகத் தெரிய முடிகிறது. ஆனால் அப்படிப்பட்ட ஸ்டே வழங்கிய நேரத்தில் நம்முடைய பக்கத்து மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் 1983—ல் அங்கே இருக்கின்ற மேலவைத் தலைவர் ஒரு பத்திரிகை ஆசிரியரைக் கைது செய்யுமாறு உத்தரவிட்ட அந்த உத்தரவிற்கு எதிராக கோர்ட்டிலேயிருந்து தடையாணை வழங்கி, அந்தத் தடையாணையை கமிஷனர் நிறைவேற்ற வேண்டியதில்லை, என்னுடைய கைது வாரண்டை மட்டும் நிறைவேற்றவேண்டுமென்று உத்தரவிட்ட நிகழ்வு பக்கத்து மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் நடந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்..

முற்பகல் 11-45

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்ட அந்த நிகழ்வின் போது ஆந்திர மாநிலத்தில் இதேபோன்று பிரிவிலேஜஸ் கமிட்டிக்கு முன்னால் வந்து சாட்சியம் சொல்லவேண்டுமென்று அந்தப் பத்திரிகை ஆசிரியர் அழைக்கப்பட்டபோது, நான் வரத் தேவையில்லை என்று அவர் பதில் எழுதியதை அந்த 'பிரிவிலேஜஸ் கமிட்டி' ஏற்க மறுத்து, தீர்ப்பு அளித்ததையும் தாங்கள் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பத்திரிகை ஆசிரியர், In his letter dated 5th July 1983, Sri Ramoji Rao has raised a preliminary objection that "he was falling within the nature of the privilege which is alleged to have been breached." என்று சொல்லியும் "The charge of alleged breach of privilege has been made by Thiru Y. G. Renga Reddy, there was nothing further to be communicated to him in that connection."
என்று அந்தக் கமிட்டி முடிவு செய்ததற்குப் பிறகு, "He refused to appear before the committee and failed to avail the opportunity extended to him by the committee from time to time..", என்று வந்ததற்குப் பிறகு.. "the nature of the privilege which is"

alleged to have been breached, etc., does not hold to reason in view of his lengthy legal arguments advanced in his letter dated 5th July 1985 என்று அந்த கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

"Further he has attributed motives to the Committee. இன்றைக்கு இல்லஸ்டிரேடட் வீக்லி ஆசிரியரும். அதனுடைய கட்டுரையாளர் சுனிலும் பிரிவிலேஜஸ் கமிட்டி மீதே இன்றைக்கு சில மோடிவ் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல் அந்த ஆசிரியரும் தெரிவித்திருக்கிறார்கள். "He has also doubted the impartial functioning of the Committee by stating that he would be willing to face the decision of the importial Tribunal.'' என்று அவர் எழுதியிருக்கிறார். அதையே குறிப்பிட்டு இந்தக் கமிட்டியையும், அவர் விமர்சித்து இருக்கிறார். உள்நோக்கம் கற்பிக்கின்ற அளவிற்கு செய்திருக்கிறார் என்பதையும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ',The committee therefore recommends that Sri Ramoji Rao, Chief Editor, 'ENADU' should be summonned to the House and admonished to the House and admonished'' என்று முடிவு செய்ததற்குப் பிறகு அந்த பார் ஆப் தி கவுன்சிலுக்கு கூப்பிட்டு சம்மன் செய்தபோது வராததால் அதற்காக வாரண்ட் போட்டு அந்த வாரண்டிற்கும் வராத சூழ்நிலையிலே தான் நான் சொன்னதைபோல அந்த மேலவையினுடைய தலைவர் கோர்ட்டினுடைய உத்தரவிற்கு போலீஸ் கமிஷனர் செவி சாய்க்க வேண்டியதில்லை.

முற்பகல் 11-50

அரசியல் சட்டத்தின் 194 (2), (3) ஆகிய பிரிவுகளும், அரசியல் சட்டத்தின் 212-வது பிரிவின் (1), (2) ஆகிய உட்பிரிவுகளின் படியும் எந்த விதமான கோர்ட் நடவடிக்கைகளும் இந்தப் பேரவையினை எந்த வகையிலேயும் கட்டுப்படுத்த முடியாது தடைப்படுத்த முடியாது என்பதைத் தெளிவாக அவர்கள் சொல்லி, எனவே போலீஸ் கமிஷனரிடத்திலே இந்தத் தடை ஆணையை நிறைவேற்ற வேண்டியது இல்லை என்பதைத் தெரிவித்து இருக்கிறார். "As far as the proceeding of this House is concerned, this is the supreme body. Nothing else is supreme to this House, as far as the proceedings of this House is concerned." என்று மிகத் தெளிவாக இதற்கு முன்னர் பல்வேறு பேரவைத் தலைவர்களும் கூட நம்முடைய பேரவையிலேயே. கூட நடவடிக்கைகளை அறிவித்திருக்கிறார்கள், என்வே, இந்தச் சூழ்நிலையிலே வைத்துப் பார்க்கிற போது, இன்றைக்கு நிகழ்ந்திருக்கிற நிகழ்வுகள், இந்தப் பேரவை எடுந்த முடிவு திரு. கே. பி சுனிலை பிடி வாரண்ட் மூலம் இந்தப் பேரவையில் கொண்டுவந்து நிறுத்தவேண்டும் என்று இட்டிருக்கிற உத்திரவு அப்படியே இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போலீஸ் கமிஷனர் நிறைவேற்ற வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து இந்தத் துறையினுடைய செயலாளரர்க இருக்கிற நம்முடைய பேரவைச் செயலாளர் அவர்களுக்கும், இதில் அவரை ஒரு ரெஸ்பாண்டண்டாகச் சேர்த்து அவர்களுக்கும் அந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டிருப்பதாகப் பத்திரிகை வாயிலாக அறிய முடிகிறது. ஒரு டெலக்ஸ் செய்தி மட்டும் அவர்களுக்கு வந்திருக்கிறது. அது டெலக்ஸ் செய்தியாக இருக்கிற காரணத்தினாலே அவர்களுடைய அலுவலகத்தில் அது கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தவிர இந்தப் பேரவை எடுத்திருக்கிற நடவடிக்கைகளைச் செயல்படுத்துகிற அதிகாரி என்ற முறையில் அரசியல் சட்டத்தின் 212-வது பிரிவின் (2-வது) உட் பிரிவின்படி, இந்தப் பேரவை இடுகிற கட்டளை, இந்தப் பேரவை இடுகிற அறிவுரை தவிர வேறு எதையும் அவர் பொருட்படுத்த வேண்டியதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல திரு. பட்டாபிராமன் அவாகள் இன்னொரு பிரச்சினையை அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்றைக்கு நான் சொன்ன பீகார் பிரச்சினை மற்றும் இரண்டு பிரச்சினைகளிலேயும் கூட பத்திரிகை ஆசிரியர்கள் முதலமைச்சரைப் பற்றி எழுதியதற்காக எடுத்த நடவடிக்கைகள் ஆகும். அதேபோல உத்திரபிரதேசத்திலே முதலமைச்சரைப்பற்றி எழுதியதற்காக எடுத்த நடவடிக்கைகள் ஆகும். பீகார் சட்ட மன்றத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்வில் அவைக் குறிப்புகளிலே இருந்து நீக்கப்பட்ட பிரச்சினைகளைப் பிரசுரித்ததற்காக—முதலமைச்சர் மேல் குற்றம் சொல்லி ஒரு உறுப்பினர் பேசிய பேச்சை அவைத் தலைவர் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறார், அந்தப் பகுதியைப் பிரசுரித்து முதலமைச்சரைக் குறை சொன்ன காரணத்தினால்... எடுத்த நடவடிக்கைகள் ஆகும். ஆனால் இங்கே முதலமைச்சரை இழித்தும் பழித்தும் பேசுகிற எந்தப் பத்திரிகையின் மீதும் நாம் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தப் பேரவையைக் களங்கப்படுத்துகிற நடவடிக்கைக்காக அந்தப் பேரவையின் 2 உறுப்பினர்களைத் களங்கப்படுத்துகிற நடவடிக்கைக்காக பேரவைத் தலைவரை அதில் உட்படுத்துகிற நடவடிக்கைக்காக இந்தப் பேரவையை அவமதித்ததற்காக எடுத்த நடவடிக்கைகள் ஆகும். ஆனால் இதில் திரும்ப திரும்பப் பத்திரிகைகளில் அவர்கள் எழுதி இருப்பது முதலமைச்சரை வேண்டுமென்றே இழுத்து— எப்படியாவது முதலமைச்சரை இந்தப் பிரச்சினைக்கு உரியவர் என்று—அனைத்திந்திய அளவிலே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற, அவர்களுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய வளர்ந்து வருகிற செல்வாக்கையும், புகழையும் எந்த வகையிலாவது குறைத்திட வேண்டும் என்கிற வகையில் ஒரு உள்நோக்கத்தோடு திரும்பத் திரும்ப முதலமைச்சரை அந்தப் பிரச்சினைகளிலெல்லாம் இழுத்து எழுதி கொண்டிருக்கிற எழுத்துக்கள் ஆகும். அவர்கள் அன்றைக்கே கேட்டார்கள், இந்தப் பேரவையில் என் மீது இந்த அளவுக்கு இழிவுபடுத்தி எழுதுவதற்கு எந்த

நடவடிக்கையும் நீங்கள் எடுக்கவில்லையே என்று கூடச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் எதுவும் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொன்ன காரணத்தினாலே பேசாமல் இருக்கிறோம் இல்லை என்று சொன்னால் அவர்கள் மீது இன்றைக்கு எழுதிக் கொண்டிருக்கிற பல்வேறு பத்திரிகைகளை இன்னும் வேறு விதமான தண்டனைகள் கொடுத்தால் தான் அதற்கு சரியான தண்டணைகள் ஆகும் (மேசையைத்தட்டும் ஒலி) அவர்கள் பெருந்தன்மையோடு என் மீது இருக்கிற பிரச்சினையை விட்டு விடுங்கள் என்று சொன்ன காரணத்தினாலே --விட்டிருக்கிறோம் ஆனால், எவ்வளவு பெருந்தன்மையோடு இந்தப் பேரவை நடந்து கொண்டிருக்கிறது அனில் தாக்கர் என்பவர் எனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த ஒரு வாசகத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு, அந்த கட்டுரை வெளியான நேரத்தில் நான் அந்த பத்திரிகையின் ஆசிரியராகவே இல்லையே, ஆகவே நான் எந்த வகையிலேயும் சம்பந்தப்படாத ஒரு சூழ்நிலையில் என்னைக் கண்டிக்க இருக்கிறீர்களே என்று எழுதினார். நான் ஏற்கனவே கோர்ட்டுக்கு போகிறேன் என்று சொன்ன காரணத்தினால், சரி அவர் எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை என்று இப்போதாவது சொல்லியிருக்கின்ற காரணத்தால் அதை ஏற்றுக்கொண்டு பெருந்தன்மையோடு அவர் இந்த கூண்டிற்கு வரவேண்டியதில்லை என்று முடிவு செய்து அந்தப் பிரச்சினையை அத்தோடு விட்டுவிடலாம் என்று முடிவு செய்தோம். அந்தப் பெருந்தன்மைக்குரியவராக இல்லாமல் அவர் சொன்னதைப்போல நாம் பெருந்தன்மையோடு விட்டுவிடுகிறோம் என்று சொன்னதையும் எழுதி விட்டு, பெருந்தன்மையோடு விட்டுவிடுவது என்று சொன்னால் எப்படி என்றால் அதாவது 'வித் சிவியர் வார்னிங்' என்று அதற்கும் ஒரு கேலி செய்து, பெருந்தன்மை என்பது சிவியர் வார்னிங்கோடு விடுவது தானா என்றும் கேலி செய்து. எந்தப் பிரச்சினைக்குரிய பகுதி இந்தப் பேரவையிலே எழுப்பப் பட்டு. திரு. அ. சுனில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வந்ததோ அதே பிரச்சினை—அந்தக் கட்டுரையிலே என்ன இருந்தது என்று திரும்ப எழுதி, கடைசியில் நான் மேற்கொண்டு எதுவும் இந்தப் .பத்திரிகையிலே அதைப்பற்றி எழுதக் கூடாது என்று கடுமையாக எச்சரிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் இத்தோடு விட்டு விடுகிறேன் என்று முடிப்பதாக இருந்தால் இது எந்த வகையில் பத்திரிகை தர்மம் ஆகும், நியாயம் ஆகும் என்பதை

முற்பகல் 11-55

இங்கே இருக்கின்ற நல்ல பத்திரிகையாளர்கள் இந்த நேரத்திலாவது அவர் செய்தது தவறு தான் என்று எழுதுவீர்களானால் நாட்டுக்கு சில நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று பொருள். ஆனால், நாம் பெருந்தன்மையோடு விட்டதற்குப் பிறகும் பல்வேறு



சங்கங்கள் சார்பில் இன்றைக்கு வேண்டுகோள் விடுகிறார்கள் இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுங்கள் பெருந்தன்மையோடு இதை விட்டுவிடுங்கள் என்று பெருந்தன்மையோடு விட்ட ஒரு பிரச்சினையில் என்ன நடந்திருக்கிறது என்பதற்கு அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும், நாளைக்கு இதையே நீங்கள் சொல்கிறீர்கள் என்பதற்காகப் பெருந்தன்மையோடு முரசொலியை விடுகிறோம் ; கோவை மாலை முரசை விடுகிறோம் என்று சொன்னால் நாளை மறுநாள் அவர்கள் இதையே வைத்து. திரும்ப இதே வகையில் அனில்தார்க்கரைப் போல எழுதுகிறார்கள் என்றால் இதற்கு யார் உத்திரவாதம் கொடுக்கப் போகிறார்கள் ? பெருந்தன்மைக்குக் கிடைத்த பரிசு திரும்பவும் அதே பத்திரிகையில் எழுதுகிறோம். அதே பிரச்சினையை எழுதுகிறோம் என்று சொல்கின்ற அளவிலே இருக்கின்ற காரணத்தால் இந்தப் பத்திரிகையில் திரும்ப எழுதியதில் எந்தவகையில் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் என்னுடைய தீர்ப்பை நாளை வழங்குகின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்தப் பிரச்சினையில் என்ன நடவடிக்கை என்பது நாளைய தினம் தெரிவிக்கப்படும், இந்த கோர்ட் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் நமக்கு எந்த அளவுக்கு மேலாண்மை இருக்கிறதோ அந்த அளவுக்கு கோர்ட்டுகளுக்கும் இருக்கிறது என்று இந்தப் பேரவையில் நாம் மதித்து நடந்து வந்திருக்கிறோம், எந்த சட்டமன்றப் பேரவையிலும் கோர்ட்டை பற்றி விமர்ச்சிக்கூடாது. ஜட்ஜ்களைப் பற்றி விமர்ச்சிக்கக் கூடாது என்று இருக்கக் கூடிய அரசியல் சட்டத்தின் 211-வது பிரிவை நாம் முழுவதுமாக மதித்து இந்தப் பேரவையில் பல்வேறு பிரச்சினைகளில்— சிறு பிரச்சினை வந்தாலும்கூட அந்த நேரத்திலே எல்லாம் நாம் அந்த கோர்ட்டிலே இருக்கக்கூடிய பிரச்சினையைப் பற்றி யாரேனும் ஒரு உறுப்பினர் ஏதோ ஒரு வகையிலே கூட சுற்றி வளைத்துச் சொல்லிவிட்டால் கூட அவைக் குறிப்பிலிருந்து நீக்கி வந்திருக்கிறோம், அந்த அளவுக்குக் கோர்ட்டை மதிக்கின்ற, இந்தப் பேரவையை மதிக்கின்ற வகையில் இந்தப் பேரவைக்கு இருக்கக்கூடிய ஒரு தனி அதிகாரத்தைச் செயல்படுத்துகின்ற வகையில் கோர்ட்டுகளும் நடந்துகொள்ள வேண்டும் என்பதை மட்டும் என்னுடைய வேண்டுகோளாக இந்த நேரத்திலே தெரிவித்து, எந்தக் கோர்ட்டிலிருந்தும் நாம் எடுத்து இருக்கின்றஎந்தநடவடிக்கையையும், எந்த வகையிலேயும் தடுக்கின்ற வகையில் வரும் எவ்வித நோட்டீஸ்களோ, எவ்வித உத்திரவுகளோ இந்தப் பேரவையைக் கட்டுப்படுத்தாது என்பதை மீண்டும் தெரிவித்து அமர்கின்றேன், (மேசையைத் தட்டும் ஒலி),

## 3. கவன ஈர்ப்பு

### (அ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூரில் 'டைபாய்டு காய்ச்சல் பரவியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ''வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம் திருப்பத் தூர் நகரில் 'டைபாய்டு' காய்ச்சல் பரவியுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு திரு, சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

சென்ற ஆண்டில் மழைக்காலம் துவங்கிய ஓரிரு மாதங்களிலேயே திருப்பத்தூர் நகரில் என்டிரிக் காய்ச்சல் பரவத் தொடங்கியது, நவம்பர் மாதத்தில் 7 நபர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டனர். டிசம்பர். சனவரி. பிப்ரவரி ஆகிய மாதங்களில் இந்நோயின் நிகழ்வுகள் அதிகமாகவே காணப்பட்டன, இந்நகரில் பொது சுகாதாரம் சரிவர பேனப்படாததாலும். குப்பைக் கூளங்கள் அகற்றப்படாமலேயே அங்காங்கே குவிக்கப்பட்டிருந்ததாலும். கழிவுநீர்க் கால்வாயில் தூர் எடுக்கப்படாததாலும் அந்நகரில் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் போதுமான அளவு பாசிகையூட்டுதல் செய்யப்படாததாலும். இந்நோய் இந்நகரில் பரவியது என சுகாதாரத்துறை இணை இயக்குநர் கண்டறிந்து. தகுந்த சுகாதார நடவடிக்கைகளை எடுத்து மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்யுமாறு திருப்பத் தூர் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன, தகுந்த நேரத்தில் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் சுகாதார அதிகாரிகளால் எடுக்கப்பட்டதின் விளைவாக மார்ச் மாதத்தில் இந்நோயின் நிகழ்வுகள் குறையத் தொடங்கின, மார்ச் மாதத்தில் இதுவரையிலும் எட்டு நபர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டதாக தகவல் வந்திருக்கிறது, இந்நோய் மேலும் பரவாவண்ணம் கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் அப்பகுதியில் எடுக்கப்பட்டு வருகின்றன,



(1) பொது சுகாதார நலத்தை பேணிகாக்கும் பொருட்டு குப்பை கூளங்கள். மலம் போன்றவற்றை அவ்வப்பொழுது அகற்றி சுகாதார முறைப்படி அழித்துவிடுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன,

(2) பொது மக்களுக்குத் தேவையான அளவு பாசிகை யூட்டப்பட்ட (Chlorination) பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன,

(3) நோய் பாதிப்புக்கு இலக்காகும் பகுதி வாழ் மக்களுக்கு டைப்பாய்டு தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது,

(4) இப்பகுகளில் ஈ ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன,

(5) உணவு விடுதிகளில் உண்ணும் உணவுப் பொருட்கள் துப்புரவான முறையில் வழங்கப்பட்டிருக்கின்றனவா, என்பதை காண அவ்வப்போது உணவு விடுதிகள் பார்வையிடப்படுகின்றன,

இந்நோய் மேலும் பரவாவண்ணம். இந்நகர் தீவிர கண்காணிப்பில் உள்ளது,.

திரு. ஏ.கே,சி. சுந்தரவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருபபத தூர் தொகுதியில். திருப்பத்தூர் நகரிலே கடந்த 6 மாத காலமாக டைபாய்டு ஜுரம் மக்களை வாட்டி வதைக்கிறது, ஒவ்வொரு குடும்பத்திலும் 3 அல்லது 4 பேர்களுககாவது டைபாய்டு ஜுரம் வருகிறது, நகர சுகாதாரத் துறையின் அஜாக்கிரதை தான் காரணம் என்று நான் கருதுகிறேன். மேலும் குடிநீர்த் தொட்டிகள் மற்றும் குடிநீர் இணைப்புக் குழாய்களை பல நாட்களாக சுத்தம் செய்யாமல் இருப்பதால் தான் இவ்வாறு ஏற்படுகிறது. குடிநீரில் தினமும் குளோரின் கலக்கவேண்டும். மேலும் நகரத்தில் உள்ள கால்வாய்களைச் சரியாக எடுப்பது இல்லை. கழிப்பறைகளை சரியாக சுத்தம் செய்வதில்லை. நகரத்தில் விழும் கழிவுப் பொருட்களை அதற்காக உள்ள இடத்திலே கொட்டாமல், திருப்பத்தூரில் உள்ள பெரிய ஏரியில் கொண்டு வந்து கொட்டி விடுகிறார்கள். இதனால் சுற்றிலும் குடியிருப்புகள் இருப்பதால் கழிவுப் பொருட்கள் மக்கி கொசு உற்பத்தியாகிறது. இதனால் டைபாய்டு காய்ச்சல் பரவ ஏதுவாகிறது. இந்த டைபாய்டு ஜுரம் நன்றாக ஆக வேண்டும் என்றால் 26 ரூபாய் விலை கொண்ட மாத்திரைகள் 10, 15 சாப்பிட வேண்டும். டைபாய்டு ஜுரம் ஒருவருக்கு வந்தால் 500 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. திருப்பத்தூர் மருத்துவமனைக்கு வந்தால் இதை குணப்படுத்த போதிய வசதி இல்லை. எனவே இது குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து எங்கள் பகுதி மக்களை காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12—00.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூட 10 நாட்களாக டைபாய்டு ஜுரத்தில் இருக்கிறேன். டைபாய்டு ஜுரத்திலேயே தான் பேசிக் கொண்டு வருகிறேன். இந்த டைபாய்டு ஜுரத்திலிருந்து திருப்பத்தூர் நகர மக்களைக் காப்பற்ற தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன். அதற்குண்டான ஏற்பாடுகள் அந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனையின் மூலமாக எடுக்கப்படும். அதேபோல் நகராட்சியோடு பேசப்பட்டிருக்கிறது. அங்கே சுத்தமாக வைத்துக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க வேண்டுமென்று சொல்லி அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பதாகவும் எனக்கு தகவல் வந்திருக்கிறது. எனவே, நிச்சயமாக உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

(ஆ) பண்ருட்டி வட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் கண்டரக் கோட்டை முதல் மேல குமாரமங்கலம் வரையிலான தென் பெண்ணையாற்றின் வலது கரை உடைபட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. தாமோதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பண்ருட்டி வட்டத்தில் 17–11–1991-ல் ஏற்பட்ட வெள்ளத்தால் கண்டரக்கோட்டை முதல் மேல குமாரமங்கலம் வரை உள்ள தென்பெண்ணையாற்றின் வலது கரை உடைப்பட்டிருப்பது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

கடந்த 17–11–1991 அன்று பெண்ணையாற்றில் வந்த பெரு வெள்ளத்தில் பண்ருட்டி வட்டம், கண்டரக்கோட்டை முதல் மேல குமாரமங்கலம் வரை வலது கரை தாழ்வாக இருந்த காரணத்தால் தண்ணீர் 2.20 கி.மீ. நீளத்துக்கு வழிந்து புலவனூர், மேல் குமாரமங்கலம், பட்டாம்பாளையம் முதலிய ஊர்களில் வெள்ள நீர் புகுந்தது. இதனைத் தடுக்க கும்பகோணம்-



சென்னை சாலை பாலத்தின் கீழிருந்து மேல் குமாரமங்கலம் வரை 4 கி.மீ. நீளத்துக்கு பெண்ணையாற்றின் வலது கரைக்கு வெள்ளக்கரை அமைப்பது அவசியம். சுமார் 2.20 கி.மீ. நீளத்துக்கு வந்த பெரும் வெள்ளத்தைத் தற்காலிகமாக தடுக்க இயலாததால் உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை. ஆகவே நிரந்தர அடிப்படையில் வெள்ளத் தடுப்புப் பணிகள் செய்து முடித்தால் இனி வருங்காலத்தில் வெள்ளத்தினால் சேதம் விளைவிப்பதிலிருந்து பாதுகாக்க இயலும். இதற்கு பின்வரும் பணிகள் மேற்கொள்வது அவசியம்:—

(1) கும்பகோணம்-சென்னை சாலைக்குக் கீழ் பெண்ணையாற்றின் வலது கரையில் மேல் குமாரமங்கலம் வரை சறுக்கை (revetment) அமைப்புடன் வெள்ளக்கரை அமைக்கும் பணி ரூ. 50.00 இலட்சம்.

(2) கும்பகோணம்-சென்னை சாலைக்குக் கீழ் 1.50 மீட்டரில் பெண்ணையாற்றின் வலது கரையில் 1972, 1978–ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உடைப்புகளைச் சீர் செய்ய 100 மீ நீளத்துக்குத் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி— ரூ. 4.00 இலட்சம்

(3) மேல் குமாரமங்கலம் வாய்க்கால் 1 கிலோ மீட்டரிலிருந்து 2.20 கி.மீ. வரை சீர் செய்து சறுக்கையுடன் கூடிய தளம் (revetment with bed lining) அமைக்கும் பணி— ரூ. 3.00 இலட்சம்.

(4) மண்மேடிட்ட நிலங்களைச் சீர்செய்து கொடுக்க— ரூ 3.00 இலட்சம்.

(5) பகண்டை கிராமத்தில் பெண்ணையாறு வலது கரையில் நீர் வழிந்து ஓடுவதைச் சரி செய்ய கரையை உயர்த்தும் பணி— ரூ. 1.30 இலட்சம்.

2. மேற்படி வெள்ள உடைப்பு பகுதிகளைத் தல ஆய்வு செய்து மதிப்பீடு தயாரித்து நிதி ஒதுக்கீடு பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்ட கண்டரக்கோட்டை முதல் மேல குமாரமங்கலம் வரை தென்பெண்ணையாற்றின் வலதுகரை கடந்த 17–11–1991 அன்று ஏற்பட்ட வெள்ளத்தால் உடைபட்டு அங்கே இருக்கின்ற புலவனூர், மேல் குமாரமங்கலம், பட்டாம்பாளையம் போன்ற கிராமங்களில் விவசாயப் பயிர்கள் அழிந்ததுடன், விவசாய விளை நிலங்கள் மீது மணல் மேடிட்டு அங்கே இருக்கின்ற குடியிருப்புகள் குறிப்பாக ஆதி திராவிட மக்களின் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகுந்து வீடுகள் எல்லாம் பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. இப்படிப்பட்ட பெரு வெள்ளத்தால் அந்த புலவனூர் கிராமம் பலத்த உடைப்புக்கு

உள்ளாகியதால் அங்கேஉடனடியாக ஒரு தடுப்புச் சுவர் ஏற்படுத்தி எதிர் வரும் காலங்களில் வெள்ளத்தால் ஏற்படுகின்ற சேதத்திலிருந்தும், அந்த கிராம மக்களை, அங்கே உள்ள விவசாய குடும்பங்களை பாதுகாக்கவேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொண்டு அங்கே 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள தடுப்புச் சுவரை உடனடியாகக் கட்டித் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தை சீர்படுத்துவதற்காக ரிவெட்மெண்டு என்று சொல்லப்படுகின்ற அந்த சறுக்கை கட்டுவதற்காக ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு செய்திருக்கிறோம். மற்றும் பல்வேறு கட்டங்களில் இந்த வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக revetment with bed lining என்பதற்கு 3 லட்சம் ரூபாயும், மண் மேடிட்ட நிலங்களைச் சீர் செய்வதற்கு 3 லட்சம் ரூபாயும், பகண்டை கிராமத்தில் பெண்ணையாறு வலது கரையில் நீர் வழிந்து ஓடுவதைச் சரிசெய்ய கரையை உயர்த்தும் பணிக்காக 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாயும் இப்படி பல்வேறு திட்டங்களுக்கு இன்றைக்கு பொதுப்பணித்துறையின் மூலமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வெள்ள நிவாரணப் பணிகளைச் செய்வதற்காக நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் தடைப்பட்டு இருக்கிறது. அதற்கான மதிப்பீடுகள் தயாரித்து, இருக்கின்ற நிதி ஆதாரஙகளை சரி செய்து ஏற்கனவே அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவை அவர்களே. மாண்புமிகு ஆமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அதேசமயத்தில் அந்த குறிப்பிடப்பட்ட கிரமங்களில் மன் மேடிட்டு. 150 ஏக்கர்களுக்கு மேற்பப்பட்ட பகுதி முழுலதும். மீண்டும் ளிவசாயம் செய்ய முடியாமல் அங்கே விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்சிறார்கள், எனவே புல்டோசர்கள் மூலம் அந்த மணலை அப்புறப்படுத்த வேண்டிய நடவடிக்கை எடுத்து மீண்டும் அந்த நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றித்தர வேண்டுமென இந்தத் தருனத்திவே கேட்டுக்கொண்டு, அந்த சமயத்தில், மேல்லுமாரமங்கலம் ஏரிக்கு நீர்வரத்து வருகின்ற வாய்க்காலும் இந்த வெள்ளத்தால். தூர்ந்துபோய்விட்டது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, எனவே, அவற்றையும் மறுமதிப்பீடு செய்து, சரி செய்து கொடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே, இந்த ஆண்டாவது அதை நீங்கள் செய்துத்தர, முன் வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக் காட்டியதைப் போல, விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு இருந்தால், உடனடியாக முன்னுரிமை கொடுத்து, அவற்றை சீர் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கின்றோம். அவர்கள் சொல்லியதைப் போல புல்டோசர்கள் மூலம் அந்த மண் மேடுகளையெல்லாம் அகற்றி, மறுபடியும், திரும்ப அந்த நிலத்தை, பழையபடி விவசாயத்திற்கு உகந்த நிலமாகச் செய்கின்ற பணியை இந்த அரசு முன்னுரிமை கொடுத்து செய்யும். அதைப்போல எதிர்காலத்திலே வெள்ளப் பெருக்கு ஏற்படா வண்ணம் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்காகத்தான் இன்றைக்கு நாங்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல பல நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். ஆகவே, நிதி ஆதாரங்களைப் பொறுத்த மட்டிலே ஏறத்தாழ 65 இலட்சம் தேவைப்படுகின்ற காரணத்தினாலே எந்தெந்தப் பணிகளுக்கு இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்து முன்னுரிமை கொடுக்கலாம் என்பதை நம்முடைய பொறியாளர்கள் முடிவு செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்த முன்னுரிமைப் பணிகளை முதலிலே எடுத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைக் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வ. சத்தியமூர்த்தி, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக, குழுவின் மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

இவற்றில் மூன்றாவது, நான்காவது அறிக்கைகளின் அச்சிட்ட பிரதிகள் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. போதிய கால அவகாசம் இல்லாமையால் ஐந்தாவது அறிக்கையின் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் ஐந்தாவது அறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. கண்டனம்

### "முரசொலி மற்றும் கோவை மாலைமுரசு" ஆசிரியர்களுக்குக் கண்டனம்—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை தீர்மானித்த
படி இன்றையதினம் பேரவையின் கண்டனத்தை ஏற்றுக்கொள்ளு
மாறு "முரசொலி" பத்திரிகை ஆசிரியருக்கும், கோவை
"மாலை முரசு" பத்திரிகை ஆசிரியருக்கும் சம்மன் அனுப்
பப்பட்டு இருந்தது. "முரசொலி" ஆசிரியரிடமிருந்து இன்
றைக்கு எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. இன்றையதினம்
அவர் இந்தத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரிம் கோர்ட்டுக்குச் செல்ல
இருப்பதாகவும், இன்றையதினம் அவருடைய வழக்கு விசா
ரணைக்கு வருவதாகவும், ஆகவே, 27—4—1992ஆம் தேதி
பேரவைமுன் ஆஜராக முடியாது என்றும், இவ்வாறு ஆஜரா
காமல் இருப்பதை, பேரவையை அவமதித்ததாக ஏற்றுக்
கொள்ள வேண்டாம் என்றும் சொல்லி ஒரு கடிதம் எழுதி
இருக்கிறார். அதேபோல, வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை,
மாறாமல் கோவை "மாலை முரசு" ஆசிரியருடைய கடிதம்
ஃபேக்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும், எந்த வார்த்
தையும், எந்த எழுத்தும், எந்த எண்ணும், எந்த அமைப்பும்,
பேராகிராப் அமைப்பும் எந்த வகையிலும் வித்தியாசமே இல்லை.
இதிலேயிருந்து, பேரவை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளலாம்,
இதற்கெல்லாம் சூத்திரதாரி எங்கேயிருந்து இதையெல்லாம்
ஊக்குவிக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். (மேசை
யைத் தட்டும் ஒலி) எனவே, அதைப்பற்றி நாம் கவலைப் பட
வேண்டியதில்லை. இந்தப் பேரவைக்கு இருக்கிற மேலாண்
மையையும், இந்தப் பேரவைக்கு, நான் சொன்னேனே, எந்த
வழக்கு மன்றமும் தலையிட முடியாத ஒரு உரிமையும் இருப்
பதைப் பயன்படுத்தி, பல்லாண்டு பயன்பட்ட ஒரு ஆள் இத்த
னைக்கும் பின்னாலே இருக்கிறார் என்பதை மட்டும் நீங்கள்
புரிந்து கொள்ளலாம். ஆகவேதான், இந்தப் பேரவையை
அவமதிக்கிற வகையில், இங்கே வர வேண்டும் என்று சம்மன்
அனுப்பினால், வர மறுப்பதும், சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லு
கிறோம் என்று முடிவெடுது, சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லு
வதுமான நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், இப்
பேரவையைப் பொறுத்தமட்டில் நான் உங்களுக்கு ஏற்கெனவே
தெரிவித்ததைப்போல, இந்தப் பேரவையின் நடவடிக்கைகைப்
பொறுத்தமட்டிலும், இதுதான் சுப்ரீம்; வேறு ஒரு சுப்ரீம்
நமக்குக் கிடையாது. இங்கே எடுத்த நடவடிக்கைகளை,
எடுத்த முடிவுகளை மாற்றவோ, மறுபரிசீலனை செய்யவோ
எல்லா அதிகாரமும் கொண்ட ஒரே அமைப்பு இந்தப் பேரவை
தானே தவிர, வேறொன்றில்லை. எனவே, அவர்கள் கூறி
யிருக்கிற காரணம் எவ்வகையிலேயும் இந்தப் பேரவையின்





உரிமைக்கு உகந்ததாக இல்லை என்று என்னுடைய முடிவினைத்
தெரிவித்து, அந்த வகையில் 27ஆம் தேதி இங்கே வந்து ஆஜராக
வேண்டும் என்ற நம்முடைய பேரவையின் சம்மனை நிராகரித்து
வராமல் இருக்கிற "முரசொலி" யினுடைய ஆசிரியர் எஸ்.
செல்வம் என்பவரையும், "கோவை மாலை முரசினுடைய
ஆசிரியர் திரு. ச. க. சுந்தர் என்பவரையும் இந்தப்பேரவைமுன்
கொண்டு வந்து ஆஜர்படுத்துமாறு காவல்துறைக்குப் பிடி
வாரண்ட் பிறப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 12–10

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, நீங்கள் இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்து
கண்டனத்தோடு அதை நிறுத்திக் கொள்ளலாம் என்கிற ஒரு
வேண்டுகோளை விடுக்கிறேன். அதுமட்டுமல்ல, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே கேளுங்கள்,
அதாவது, இந்தப் பேரவையை நீங்கள் இப்பொழுது அவமதிக்
கிறீர்கள். இந்தப் பேரவை எடுத்த முடிவு. நான் எடுத்த
முடிவு அல்ல. (குறுக்கீடு) நீங்களும் சேர்ந்து "ஆம்" என்று
சொன்ன முடிவு. (குறுக்கீடு) இங்கே கேளுங்கள். இந்தப் பேரவை
எடுத்த முடிவு. இந்தப் பேரவை எடுத்த முடிவை
நான் செயல்படுத்துகிறேன். அவ்வளவுதான். நீங்களெல்லாம்
எனக்கு ஆதரவாக இருக்க [illegible] வேண்டும்.
இல்லையென்று சொன்னால், இந்தப் பேரவையினுடைய உரிமை
போய். . (குறுக்கீடு) எதற்காக மறுபரிசீலனை செய்யச் சொல்
கிறீர்கள்? இந்தப் பேரவைக்கு இருக்கக்கூடிய உரிமையைப்
பறிப்போம் என்று சொல்வதற்காக நீங்கள் மறுபரிசீலனை
செய்யச் சொல்கிறீர்களா ? இந்தப் பேரவைக்கு இருக்கிற இத்
தனை உரிமையையும் பயன்படுத்தி 10, 12 ஆண்டுக்காலம்
என்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து கொண்ட
ஒருவர் பின்னணியிலே இருந்து இயக்குகிறார் என்று சொல்கி
றேனே அதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்கிறீர்களா ?
இல்லை, எதற்காக? மறுபரிசீலனை? மறுபரிசீலனை என்றால்
ஏதாவது நியாயம் இருக்க வேண்டும். இந்த இரண்டிலே எந்த
நியாயமும் இல்லை. இந்தப் பேரவை எடுத்த முடிவை நான்
செயல்படுத்துகிறேன். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமார
தாஸ் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி போன்ற
வர்களெல்லாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்
காகத்தான், நாடாளுமன்றத்திலே எப்படிப்பட்ட உரிமைப்

பிரச்சினைகள் வந்தன, எது எதற்கெல்லாம் வந்தன, அந்த உரிமைப்பிரச்சினையை மீறி வந்தவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையெல்லாம் நான் தெரிவித்தேன். ஆகவே, அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் அவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டேன். அதற்குப் பிறகும் அவர்களுக்குப் புரியவில்லை என்பது மட்டுமல்ல ; இந்த அவை உரிமை பாதிக்கப்படுவதைப்பற்றி உறுப்பினர்களுக்குக் கவலை இல்லை ; அவையைக் களங்கப்படுத்துவது பற்றியும் கவலையில்லை என்ற அளவிற்கு உறுப்பினர்கள் இரண்டு பேர் இங்கே இருக்கிறார்கள் (மேசையை தட்டும் ஒலி) என்பதை எண்ணுகின்ற பொழுது எனக்கு மிக வருத்தமாக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை எடுத்த முடிவை நான் செயல்படுத்தினேன். (குறுக்கீடு) இந்தப் பேரவை எடுத்த முடிவின்படி நான் சம்மன் அனுப்பினேன். நீங்கள் எடுத்த முடிவுதான். நான் கொடுத்த சம்மனுக்கு இன்று ஆஜராகவில்லை. அடுத்து எனக்கு இருக்கக்கூடிய ஒரே வழி, பிடிவாரண்ட் போடுவதுதான். அதை இன்றைக்குப் போட்டிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பிடிவாரண்ட் போட வேண்டாம், நாங்கள் இருவரும் பொறுப்பேற்றுக் கொள்கிறோம். நாளைக்கு இந்தக் கூண்டிலே வந்து நிறுத்துகிறோம் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். இப்பொழுது நான் வாரண்ட் போட்டிருக்கிறேன். வாரண்டை மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொன்னால், பழையபடி சம்மனே அனுப்புங்கள், நாளைக்கு இங்கே கொண்டு வந்து நிறுத்துகிறோம் என்று பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்களா? (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை, நான் ஏற்கெனவே சம்மன் அனுப்பியது, சம்மனுக்கு அவர்கள் ஆஜராகவில்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவையினுடைய முன்னவர் நாவலர் அவர்கள் இந்தச் சபையில் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் நடைபெற்றிருக்கிற பிரிவிலேஜுக்கு, எதிர்க்கட்சியினர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அவர் சொல்லி அதற்குப்பிறகு நான் ஒரு முடிவு சொல்லி முடிந்து விட்டது. இப்பொழுது அவைமுன் இருக்கிற பிரச்சினை (குறுக்கீடு) கேளுங்கள். நீங்கள் பேசினால் ஆதரவாக இருக்கிறீர்கள் என்று இது பேப்பரிலே வரவேண்டுமென்று நினைக்க வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது எனக்கு இருக்கிற, அவைமுன் இப்பொழுது இருக்கிற பிரச்சினை (குறுக்கீடு) நீங்கள் பாருங்கள் (குறுக்கீடு) இல்லை, இங்கு கொடுத்திருக்கிற அஜெண்டாவில் பாருங்கள். இப்போது அவைமுன் இருக்கிற பிரச்சினை—நான் சம்மன் அனுப்பிய பிரச்சினை. சம்மனை



மதித்து அவர்கள் வரவில்லை. (குறுக்கீடு) கேளுங்கள், நான் சம்மன் அனுப்பியிருக்கிறேன். அவர்கள் வரவில்லை. அதிலே என்ன நடவடிக்கை என்று தான் நீங்கள் சொல்லலாம். திரு. எஸ். திருநாவுக்கரசு.

பிற்பகல் 12-15

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இல்லஸ்டிரேடட் வீக்லி''க்கும் நீங்கள் இது மாதிரி பிடி வாரண்ட் இஷ்யூ பண்ணியிருக்கிறீர்கள். அதற்கு அவர்கள் ஒரு கடிதம் கொடுத்தார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் :அதற்கு அவர்கள் ஒரு கடிதம் கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த கடிதத்தில் இருக்கக்கூடிய ஒரு வாசகத்திற்காக அதை ஏற்றுக்கொண்டு, பெருந்தன்மையோடு நாம் நடந்து கொண்டிருக்கிறோம். அப்படி இவர்கள் இல்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி நான் சொல்லவில்லை. நீங்கள் பிடிவாரண்ட் கொடுத்திருக்கிறீர்கள். சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே கொடுத்து விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றிக் கவலையில்லை. நீங்கள் அதைப்பற்றி பேச வேண்டியதில்லை. உரிமையின் காரணமாகத்தான், இந்தப் பேரவைக்கு இருக்கக்கூடிய விதிமுறைகளின் காரணமாகத்தான், இன்றைக்கு நீங்களே இங்கு நின்று கொண்டிருக்கிறீர்கள், நானும் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் அதைக் குறைவுபடுத்திப் பேசவேண்டாம். அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. சுப்ரீம் கோர்ட், வாரண்டுக்கு ஸ்டே கொடுத்திருக்கிறது என்கிற பிரச்சினையெல்லாம் இப்போது அவைக்குத் தேவையில்லாத பிரச்சினை. இப்பொழுது இருக்கிற பிரச்சினை என்னவென்றால், நான் சம்மன் அனுப்பியிருக்கிறேன். சம்மனுக்கு அவர்கள் வரவில்லை. எனவே, பிடிவாரண்ட் போடுகிறேன். அதற்கு மட்டும் பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இப்பொழுது நீங்கள் அனுப்பியிருக்கிற பிடிவாரண்டுக்கும் சுப்ரீம் கோர்ட் ஸ்டே வழங்கினால், சுப்ரீம் கோர்ட்டுக்கும், சட்டமன்றத்திற்கும் இதுபோன்ற முரண்பாடுகள், தகராறுகள் தொடர்ந்து கொண்டே போவது நல்லதல்ல. . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இல்லை, இல்லை, நான் தான் சொன்னேனே. அதைப் பற்றி பல்வேறு சட்ட மன்றங்களில் பிரச்சினை நடந்து, சட்டமன்றத்திற்கு அத்தகைய உரிமை இருக்கிறது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது உச்ச நீதிமன்றத்திற்கும், நமக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுவது போல ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கு மன்றத்திற்கும் நமக்கும் பிரச்சினையே இல்லை. இது ஒரு தனி அமைப்பு. அது ஒரு தனி அமைப்பு. அவர்கள் விவகாரத்தில் நாம் தலையிட முடியாது. அவர்களும் நம் விவகாரத்திலே தலையிட முடியாது (குறுக்கீடு). இதில் மோதல் என்பதற்கு இடமே இல்லை (குறுக்கீடு). இப்போது இருக்கிற பிரச்சினை. நான் சம்மன் அனுப்பியிருகிறேன். அவர்கள் வரவில்லை. பிடிவாரண்ட் போடுகிறேன். இதுதான் என்னுடைய முடிவு. அந்த முடிவிலே நீங்கள் என்ன மறுபரிசீலனை செய்யச் சொல்லுகிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள். நான் சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு மறுபரிசீலனை வேண்டுமானால் நீங்கள் மூவரும் பொறுப்பேற்றுக் கொண்டு, நாளைக்கு இந்தக் கூண்டுக்குக் கொண்டு வருகிறோம். பிடி வாரண்ட் போடாதீர்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். அதுதான் மறு பரிசீலனைக்கு இடமே தவிர, வேறு இல்லை. (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் சொல்லுங்கள். டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் கே. குமாரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, கருத்து வேறுபாடு யாருக்கும் கிடையாது. ஆனால் இந்தப் பத்திரிகைகளையெல்லாம் நீங்கள் கூண்டிலே ஏற்றி விசாரிக்க வேண்டும் என்கிற முன் உதாரணத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று. ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவை எடுத்த முடிவு. அது விவாதத்திற்கு வைக்கப்பட்ட போது நீங்கள் யாராவது அதற்குத் திருத்தத் தீர்மானங்கள் கொடுத்திருக்கலாமே தவிர, இன்றைக்கு அவை எடுத்த முடிவை நான் நடைமுறைப்படுத்த, நான் சம்மன் அனுப்பியதற்குப் பிறகு, இன்றைக்கு அதை மறு பரிசீலனை செய்யுங்கள் என்று சொல்வது நியாயம் இல்லை. இன்றைக்கிருக்கிற பிரச்சினை சம்மன் அனுப்பப்பட்டிருக்கிறது. சம்மனை அவர்கள் மதித்து வரவில்லை. இந்தப் பேரவையை அவமதிக்கிற வகையில் திட்டமிட்டு ஏதோ வெளியே நடை



பெறுகிற சில சதிக் கும்பலோடு சேர்ந்து வராமல் இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. எனவே, அப்படி வராமல் இருக்கிறபோது பிடி வாரண்டு போட்டுத்தான் கொண்டு வர வேண்டியிருக்கிறது. பேரவை முடிவு செய்து இன்னாரைக் கூண்டிலே கொண்டு வந்து நிறுத்தித் தண்டிக்க வேண்டும் என்று முடிவு எடுத்ததற்குப் பிறகு (குறுக்கீடு) உட்காருங்கள். முரசொலி ஆசிரியர் செல்வம் என்பவரையும், கோவை மாலை முரசு ஆசிரியரையும் கூண்டில் ஏற்றி கண்டிக்க வேண்டும் என்று முடிவு எடுத்ததற்குப் பிறகு, நான் அந்த முடிவினை செயல்படுத்தியிருக்கிறேன். இந்தப் பேரவை எடுத்த முடிவை நான் செயல்படுத்துவதில் இந்தப் பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேரும் துணை இருக்க வேண்டுமே தவிர, என்னுடைய காலை இழுத்து விடுவது போல் மூன்று பேர்கள் நின்று கொண்டு பேசுவது சரியல்ல. நீங்கள் எடுத்த முடிவை நான் செயல்படுத்தினேன். அவர்கள் மதித்து வரவில்லை. எனவே, பிடி வாரண்ட் போடுகிறேன். இதிலே நீங்கள் எனக்கு ஆதரவாக இருக்க வேண்டுமே தவிர, உங்கள் அத்தனை பேருடைய ஒட்டுமொத்தமான ஆதரவை நம்பித்தான், இந்த விதிகள் எனக்கு வழங்கியிருக்கிற உரிமையைப் பயன்படுத்தித் தான், இன்றைக்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறேன், அதிலே நீங்கள் எனக்குத் துணையாக இருக்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களுக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களுக்கும், புபேஷ் குப்தாவுக்கு இருந்த உணர்வு, ஜோதிர்மாய்பாஸுக்கு இருந்த உணர்வு இல்லை என்பது மட்டுமல்லாமல், நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களுடைய நடவடிக்கைகளை ஆதரிப்பவர்களாகவும், அவர்களுடைய போக்குகளை ஆதரிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் வந்தபோது மறுப்புத் தெரிவித்திருக்கலாம். இருந்தாலும் இந்த அவை எடுத்த முடிவைத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமே தவிர, அவர்களுடைய நடவடிக்கைகள், போக்குகள் ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் இவ்வாறு ஆதரவு தெரிவிப்பது தான் மிக மிக வருந்தத்தக்கூடிய ஒரு பிரச்சினையாக இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. புபேஷ்குப்தா, (குறுக்கீடு) கேளுங்கள், திரு. புபேஷ் குப்தா, மாநிலங்கள் அவையில் உறுப்பினராக இருந்த நேரத்திலேதான், அவர்களும் சேர்ந்து ஆதரவு தெரிவித்து, 'பிளிட்ஸ்' ஆசிரியர், இதுபோன்ற கூண்டிலே நிறுத்தி வைக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார். (குறுக்கீடு)

கேளுங்கள்; அந்த ஆர். கே. கரஞ்சியாவைவிட பெரியவர்களா இவர்கள்? இப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் வக்காலத்து வாங்குவதுதான் வருத்தமாக உள்ளது. இந்தக் கூண்டிலே நிறுத்துவது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. (குறுக்கீடு) அதாவது இன்றைக்கு அவர்கள் அவமதித்து இருப்பது என்பது, என்னை மட்டுமல்ல இந்தப் பேரவையிலே இருக்கிற மற்றைய உறுப்பினர்களை மட்டுமல்ல; உங்கள் மூவரையும் சேர்த்துத்தான் அவமதித்திருக்கிறார்கள். 'சம்மன்' அனுப்பிய தன் பின்னாலே நீங்களும் இருக்கிறீர்கள்; நீங்கள் இல்லாமல் இல்லை. உங்கள் மூவரையும் சேர்த்துத்தான் அவமதித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) வருவாய்த் துறை அமைச்சர் ஏதோ சொல்கிறார்; கேளுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களையும், மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்களையும் ஏன் நீங்கள் ஜோதிர்மாய் பாஸுவையும், மற்றவர்களையும் நீங்கள் பின்பற்கூடாது என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அவர்கள் பின்பற்றுகிறார்கள் என்பது உண்மை. மற்ற விஷயங்கள் எல்லாவற்றிலும் அவர்களைத்தான் இவர்கள் பின் பற்றுகிறார்கள். ஆனால், இங்கே நடக்கிற விஷயத்தில் மட்டும் இவர்கள் பின்பற்றவில்லை. இங்கே, யாரோ ஒருவரை இங்கே சொன்னதைப் போல—இவர்கள் பின்பற்றுவதால்தான், குறுக்கே குறுக்கே பேச வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்பதை அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வேறு யாரையும் பின்பற்றவில்லை; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடும், தேர்தலிலே கூட்டு வைத்திருக்கிறோம்; திராவிட முன்னேற்றக்கழகத்தோடும் கூட்டு வைத்திருக்கிறோம். எந்தக் கட்சியும், எங்களை கட்டுப்படுத்தாது. நாங்கள் எடுக்கிற முடிவுதான், எங்களை கட்டுப்படுத்துமே தவிர, எங்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. நாங்கள் யாரோடும் பின் செல்கிறவர்கள் அல்ல. நான் கேட்டுக் கொள்வதெல்லாம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து, திரு. பழனிசாமி அவர்கள் அதிலே போக வேண்டாம். (குறுக்கீடு) நீங் எடுத்த முடிவைச் செயல்படுத்தியிருக்கிறேன். அவர்கள் வரவில்லை; எனவே பிடி வாரண்டு போட்டிருக்கிறேன். வேறொன்றும் இதிலே இல்லை. உங்களை பேசவிட்டால் நீங்கள் சம்பந்தமே இல்லாமல் பேசுகிறீர்களே? (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கூறியதைப் போன்று ஒரு கூட்டு உடன்பாட்டிலே இருக்கிற ஒரு கட்சியே மற்றக்கட்சியைக் கட்டுப்படுத்த முடியாது; எங்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது என்னும்போது, சுப்ரீம்கோர்ட்டு இந்த அவையைக் கட்டுப்படுத்த முடியாது என்று சொல்வது, அதிலே என்ன தவறு இருக்க முடியும்? இரண்டாவது, பொதுவாக வருகிறபோது, உறுப்பினர்களையும், இந்த அவையையும் பற்றி, உரிமையைப் பற்றி, மான அவமானத்தைப் பற்றி, மரியாதையை, மதிப்பைப் பற்றி, கவலைப்படுகிறவர்கள் பல பேர் இருக்கிறார்கள். சில பேர் கவலைப்படாமல் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைச் சொன்னேன். (குறுக்கீடு).

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் நான் உறுப்பினர்களுக்குச் சொன்னேன். அதாவது, நீங்கள் எடுத்த முடிவை நான் செயல்படுத்தினேன். அவர்கள் அவையை அவமதித்திருக்கிறார்கள். எனவே, 'வாரண்ட்' போட்டிருக்கிறேன். இதிலே குறுக்கே நின்று கேட்பதற்கு எதுவும் இல்லை. (குறுக்கீடு) இதிலே வேறு ஒன்றும் வேண்டாம். நான் 'வாரண்ட்' போட்டிருக்கிறேன். அதற்கு அடுத்து மறுபரிசீலனை என்ன என்றால், 'வாரண்ட்' இல்லாமல் செய்யலாம். நான் உங்களையே கேட்டேன் நாளை கொண்டுவந்து நிறுத்துகிறோம், வாரண்ட் போடாதீர்கள் என்றுவேண்டுமானால் சொல்லுங்கள். அது இல்லை என்கிறபோது பிறகு ஏன் வீணாகப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு). எனவே அதற்கு இடம் இல்லை என்கிறபோது அடுத்த அலுவலுக்குப் போகவாவது என்னை விடுங்கள்.

## 6. சட்ட முன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

### (அ) வரி வழக்குத் தனித் தீர்ப்பு மன்றச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன் வடிவுகள், அறிமுகம் செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்குத் தனித் தீர்ப்பு மன்றச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்குத் தனித் தீர்ப்பு மன்றச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

எனக் கோருகிறேன்.

[1992 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும், தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்ட முன் வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு, உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



[1992 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு 1992. (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்த) சட்ட முனவடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

(இ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

(பேரவைத் தலைவர்) [1992 ஏப்ரல் 27

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) மோட்டார் வாகனங்கள் (தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகை முறைகள்) சட்ட முன் வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (தனி வகை முறைகள்) சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





(உ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(எ) ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-30.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.





ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஏ) நகர மற்றும் ஊரமைப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி ; பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஐ) நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி ; மாண்பமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (ஆ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1992) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

### (அ) சம்பளங்கள் வழங்கல், (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1992) மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



''1992 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1992) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இங்கே இந்த மாமன்றத்திலே அமர்ந்துகொண்டு இருக்க கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் தொகுதிப்படியாக 250 ரூபாய் வழங்குவதற்காக தமிழக அரசு எடுத்திருக்கின்ற, கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்ட திருத்தத்தை இங்கே நான் வரவேற்று உண்மையிலேயே அனைத்து உறுப்பினர்கள் சார்பாகவும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இன்னும் அரசு சில திருத்தங்களை கொண்டு வந்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய கஷ்டங்களை கொஞ்சம் பகிர்ந்துகொண்டிருக்கலாம். இங்கே 250 ரூபாய் என்பது உண்மையிலேயே ஒரு நாளைக்கு நாம் டாக்சிக்குக் கொடுத்தால் கூட ரூ. 500 கொடுத்தால்தான் டாக்சி வரும். இது அரை நாள் டாக்சி வாடகைக்குக் கூட போதாத ஒரு படிதான் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன், இது ஏற்கெனவே முடிவாகிவிட்டது. இப்போது அந்த 250 ரூபாயைக் கொடுப்பதற்கு மசோதா கொண்டு—வந்திருக்கிறார். அது வேண்டாம் என்கிற மாதிரி பேசுவது சரியல்ல. அது 250 ரூபாய் என்று ஏற்கனவே நாம் எல்லாம் பேசி ஆயிற்று. அந்த 250 ரூபாய் போதுமா போதாதா என்பதைப் பேசவேண்டாம். இப்போது 250 ரூபாய் கொண்டுவருவதற்கு என்று கொண்டு வந்திருக்கின்ற இந்த பில் சரியா, தப்பா என்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அதற்கும் நன்றியை சொல்லிவிட்டேன். இருந்தாலும் இருக்கக்கூடிய குறைகளை நான் இந்த மாமன்றத்திலே உங்கள் வாயிலாகத்தான் சொல்ல முடியும். ஆகவே, இதை வருகின்ற காலகட்டத்திலாவது நிச்சயமாக நிதி அமைச்சர் அவர்கள் சற்று தாராள மனதோடு நிச்சயமாகக் கூட்டிக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே நேரத்தில் நிதி நெருக்கடி இருக்கக்கூடிய இந்த சூழ்நிலையில், நான் இரண்டு மூன்று முறை ஏற்கனவே இந்த மாமன்றத்தில் நிதி நெருக்கடி

@21-4-92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்படுத்தாத சில வேண்டுகோள்களை வைத்திருக்கிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கின்ற இந்த 250 ரூபாய் தொகுதிபடியையும் நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் உங்களுக்கு நிதிநெருக்கடி இல்லாத ஒரு சூழ்நிலையை—இப்போது ஒரு முனிசிபாலிட்டியிலே மீட்டிங் கிளார்க் என்று ஒருவர் இருக்கிறார்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைக் கேளுங்கள். பில்-லினுடைய 'ஸ்கோப்'-ஐ வெட்டுவிட்டுப் போகிறீர்கள். பில் ஸ்கோப் வந்து ஏற்கனவே ரூ. 250 என்பது சென்ற ஆண்டு முடிவு செய்தது. இப்போது பில் இன்ட்ரட்யூஸ் பண்ணி வந்திருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான சட்ட முன்வடிவுகள் நிறைவேற வேண்டும். இங்கே என்ன கருத்துக்களைச் சொன்னாலும் இந்த பில்லில் ஏறப் போவதில்லை. ஆகவே, ஆதரிக்கிறீர்களா எதிர்க்கிறீர்களா என்று தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை உண்மையிலேயே ஆதரிக்கிறோம். அனைத்து உறுப்பினர்களும் ஆதரிக்கிறோம். ஆனால் 1991 செப்டம்பரிலிருந்து இதனை அமுலுக்குக் கொண்டு வருவதாக சொல்லியிருக்கிறீர்கள். இதை இன்னும் முன்கூட்டி நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்தோமே அந்த தேதியிலிருந்து அமுல் படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மெத்த பணிவன்புடன் நான் உங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். தொகுதி படி சென்ற ஆண்டு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு என்னென்ன வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தொகுதி படி வழங்குவதில் சட்டத் திருத்தம் செய்து சட்டத்திலே ஏற்படவேண்டும். சட்ட வடிவம் கொண்டு வர வேண்டும். அதற்காக தான் இது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டால், எந்த நாளையிலிருந்து தொகுதி படி வழங்குவோம் என்று சொன்னோமோ, ஒட்டுமொத்தமாக சேர்த்து எல்லா திங்களுக்கும் உறுப்பினர்களுக்கு தரப்படும். இது இல்லாமலும் உறுப்பினர்கள் தங்களுடைய காரியங்களை செய்கிறார்களா இல்லையா என்று



தான் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆகவே, அந்தத் தொகுதி படி இல்லாமலேயே முடியும் என்பதைதான் எல்லா உறுப்பினர்களும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் சேர்த்து தொகுத்து வழங்கலாம் என்பதையும் எடுத்துச்சொல்லி, இப்போது வந்திருக்கிற செலவுகளுக்கு மாற்றங்கள் செய்கிறபோது அடுத்த சட்டமுன்வடிவுகள் வரும். இந்த சட்டமுன்வடிவு சென்ற ஆண்டு முடிவு செய்தது. இதை நிறைவேற்றித் தரும்படியாக நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 16/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.**

## இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1992,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1992), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1992@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்,

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்து சமய அறநிலைக் கட்டளைகள் துறையில் ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 50 லட்சம் ரூபாய் வரை திருக்

---

@24–4–92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது,





கோயில்களுக்கு செலவுகள் செய்ய அந்தத் துறையின் பொறுப்புகளையும். வாரிய தலைவராகவும் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அதிகாரம் கோருகின்ற இந்த சட்டமுன்வடிவை வரவேற்று அறநிலையங்களில் உள்ள உண்டியல்களில் பசை தடவிய குச்சிகளை விட்டு பணம் திருடிய ஆட்சியை அப்புறப்படுத்தி நல்லவர்கள் கோயிலுக்கு செல்கின்ற வகையில். பக்தர்களுக்கு. உண்மையான தெய்வ பக்தர்கள் சிறந்த முறையில் வழிபடவும். அறநிலையங்களில் நீதியும். நேர்மையும். நிலைநாட்டப்படவும் அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனனுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன,

அறநிலையங்களில் கட்டிடங்கள். கோபுரங்கள். வளாகங்கள். சுவர்கள் அவற்றின் தன்மைகளோடு உள்ளனவா என்று அறிந்து அந்தந்தக் கோயில்களின் பணிகளை உடனடியாக துவக்க வேண்டும். போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஆலைய வழிபாட்டு பணிகள். புராணங்கள். கலாசாரங்கள் முழுமையாக அறிந்த தெரிந்தர்களைக் கொண்டு குழு அமைத்து பார்வையிட்டு ஆய்வு செய்ய இன்றைக்கு அந்தப் பணிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கோருகிறேன். ஏன் என்றால் நல்ல வலுவான அறநிலையங்களையும். கட்டிடங்களையும். கோபுரங்களையும் கூட திருப்பணிகள் என்ற பெயரில் கட்டிடங்கள் கட்டாமலே. வெறும் பெயிண்டுகள் மூலம் வர்ணம் பூசி குடமுழுக்கு திருவிழாவுக்கு ஏற்பாடு செய்து பல லட்சக்கணக்கான ரூபாய்களை முந்தைய ஆட்சியாளர்கள் விரயம் செய்ததை இங்கே சுட்டிக்காட்டி அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருக்க அந்தக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதனை நான் இங்கு வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மடாதிபதிகள் என்ற பெயரில் இந்து அறநிலையத் துறையைச் சாராமல். அரசுக்குச் சம்பந்தமில்லாமல் குட்டி ராஜ்ஜியம்போல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை. சொத்துக்களை. கல்லூரிகள் போன்றவற்றை வைத்துக்கொண்டு கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்களை சேர்த்துக்கொண்டு தங்கள் இஷ்டம்போல் நடந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட மடங்களின் சொத்துக்களை இந்து அறநிலையத் துறையின் கீழ் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு. இந்த இந்து அறநிலையத் துறை குறித்த மசோதாவில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றியைக் கூறி. இந்த மசோதாவை வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்,

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 1992 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை திருத்தச் சட்டமுன்வடிவின் மீது கருத்துக்களை வழங்கி இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வௌவால்களின் பாழ் மண்டபங்களாக இருந்த பல கோவில்களைப் புதுப்பித்து, வரலாற்றுச் சித்திரமாக அவற்றை மாற்றிய பெருமை தமிழகத்தின் வரலாற்றில் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன், (மேசையை தட்டும் ஒலி)

இங்கே உரையாற்றுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சில கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டினார்கள், உண்டியலிலே இருக்கிற பணத்தைப் பசைபோட்டு குச்சியிலே எடுக்கிறார்கள் என்ற காலம் மாறி. கோவில் சிலைகளைக் கடத்தியவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆட்சி மறைந்து கோவில் கோபுரங்களை உயர்த்திய புரட்சித் தலைவியின் புனித ஆட்சியைக் கொண்டுவர வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் இன்றைக்கு ஆட்சியை மாற்றிக் காட்டியிருக்கிற பெருமை தமிழகத்தின் வரலாற்றிலே இடம் பெற்றிருக்கிறதென்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், இந்த அமைப்பிலே, சமயத் துறையிலே பங்கு கொண்டிருக்கிறவர்கள். பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் இடம் பெற்றிருக்கிற பாங்கினை இன்றைக்கு நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம், இந்த வாரியத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தலைமை ஏற்று நடத்தியதற்குக் காரணம், ஆலயங்கள் அழிந்துவிடக்கூடாது. ஆலயங்களில் விளக்கு ஏற்றப்பட வேண்டும். கோவில் இல்லாத ஊரிலேகூட இருக்கக்கூடாது என்று அன்றைக்குப் பாடிவிட்டுச் சென்றார்களே, அந்தக் கோவில்களை எல்லாம் சிறப்பான முறையிலே பராமரிக்க வேண்டுமென்பதற்காக ஆற்றல் மிக்க முதலமைச்சராக இன்றைக்கு இருக்கிறார்கள். இந்து மதத்தைப் பற்றி எத்தனையோபேர் பேசினாலும்கூட இந்து மதத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அளவுக்கு மாற்றி அமைத்த பெருமைக்குரியவராக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்(மேசையைத் தட்டும் ஒலி)விளங்கிக் கொண்டிருக்கிற பாங்கினை இன்றைக்கு கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். தவறான அணுகுமுறை காரணமாகவும், நம்பிக்கை இல்லாதவர்கள் தலைமையில் நிர்வாகம் அமைந்த காரணத்தாலேயும் கடந்த ஆட்சிக் காலங்களில் திருக்கோவில்கள் வெறும் தெருக் கோவில்களாக மாற்றப்பட்ட காரணத்தால்தான் மக்கள் வீறு கொண்டு, அன்னையின் ஆட்சியிலே



தான் அதற்கு ஒரு மாற்றத்தைக் காண முடியும் என்று வாக்களித்து, தமிழகத்திலே ஒரு சரித்திரத்தைப் படைத்துக் கொண்டிருக்கிற பாங்கினைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆகவேதான் மாண்புமிகு முதல்வரவர்கள் இன்றைக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் அன்றைக்கு சில கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டினார்கள், இந்த வாரியத்திற்கு வருகிற வருமானத்திற்குக் கணக்கு காட்டவில்லை என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். கணக்கு காட்டாமல் சென்றவர்கள் இருக்கிறார்கள், உண்டியலை உடைத்த சரித்திரம் இருக்கிறது, மருதமலை பற்றி நமக்கு தெரியும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அந்தக் காலம் மாறி, ஒரு கணக்கை எடுத்து வைக்கும் நேரத்தில் யார் தவறு செய்தாலும் தண்டிக்கும் வல்லமை படைத்தவர்களாக, ஆற்றல் மிக்க முதலமைச்சராக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள், ஒரு முதலமைச்சர் 20 மணி நேரம் உழைக்கிறார் என்று சொன்னால், அதற்கு மேலாக ஒரு நாளைக்கு 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டிருக்கிற ஒரு முதலமைச்சரைத் தமிழகம் இன்றைக்குக் கண்டு கொண்டிருக்கிற பாங்கினைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம், (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு புள்ளி விபரத்தைத் தருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ●

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, கோவில் நிதிக்குக் கொடுத்துள்ள பட்டியல் அனைத்தும் அவையின் எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது,

பிற்பகல் 12–45

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பட்டியலில் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்கள் 9-4-1992 வரை உள்ளது. இன்றைய தேதி வரையிலும் நமது ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு கணக்கில் கொண்டு வந்திருக்கிற நிதி ரூ. 4,11,34,570 என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். 88 பைசாவைக்கூட விட்டுவிடவில்லை. மறந்துவிடக்கூடாது. 88 பைசாகூட கணக்கில் ஏற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் புரிந்து கொண்டாக வேண்டும். அந்த அளவுக்கு ஆலயங்களின் மீது நம்பிக்கை, ஆன்மீகத்தின் மீது நம்பிக்கை ஆலயங்களின் சார்பாக மரியாதை இருந்தால் தான் நல்ல மழை பெய்யும் என்ற சரித்திரத்தைச் சொல்கின்ற

முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு விளங்கிக் கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டுல் ஒலி) கோயில் நிதி சேர்த்து ஆண்டவனுக்கே அள்ளித் தந்த ஆயிரங்காலத்து வள்ளல் நமது புரட்சித்தலைவி என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஆற்றல் மிக்க புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டதிருத்தம்—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் சட்டத்தின் 7-ஈ என்னும் பிரிவுக்குப் பின்னர் 7—ஈஈ என்ற பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.அதன் அடிப்படையில்தான் ரூ.10 வரையிலும்பணி என்றால் உதவி ஆணையாளருக்கு அந்த அதிகாரத்தை வழங்கியிருக்கிறார்கள். ரூ. 25,000 வரையிலும் என்றால் துணை ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்கள். ஒரு லட்சம் ரூபாய் வரையிலும் என்றால், ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் முதல் 50 லட்சம் வரையிலும் என்று இருந்தால், அந்த ஆலயங்களைப் பராமரிப்பதற்காக, அந்த ஆலயப் பணிகளை மேற்கொள்வதற்காக, காவியத் தலைவியாக இருக்கிற, ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல் புரட்சித்தலைவி அவர்களுக்கு அந்தக் குழு அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. சிறந்த ஆலயங்களின் பணி காக்கப்படவும், நமது முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்களே, ஆலயங்களில் இருக்கிற சிலைகள் உடைக்கப் படுகின்ற நேரத்தில், இந்திய நாட்டிலே வரலாற்றை நீங்கள் புரட்டிப் பார்க்கிற நேரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் படுகின்ற அளவுக்கு 4,000 காவலர்களைத் துப்பாக்கி ஏந்திய நிலையில் அமர்த்தி, அறநிலையத் கோயில்களைக் காத்தே தீருவோம் என்ற சூளுரை எடுத்திருக்கிற முதலமைச்சர் இந்திய நாட்டிலே ஒருவர் இருக்கின்றார் என்றால் அது புரட்சித் தலைவியை தவிர யாரும் (மேசையைத் தட்டும் ஒலி) கிடையாது என்ற அளவுக்குச் சிறப்புக்கு உரியவராக விளங்கிக் கொண்டிருக்கிற நமது முதல்வருடைய ஆட்சியில் இந்தச் சட்டங்களை நிறைவேற்றித் தருகின்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற விளக்கங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேற்படி சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)





மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைய கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1992) நிறைவேற்றப்பெற வேண்டும். எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## இ) பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1992). மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1992)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் மூலமாக பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது குறித்து கொண்டு வந்துள்ள சட்டத்தை நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக, இதயப்பூர்வமாக வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஒரு சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன்.

அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் ஒரு அரசியல் கட்சி என்பதனுடைய கடமை என்ன என்பதைப் பார்க்கின்ற போது அரசியல் கட்சி என்பது பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதுதான். பொது மக்களுக்குச் சேவை

@ 24–4–92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



செய்வதன் வாயிலாக அவர்களுடைய சக்திகளையும், திறமைகளையும் மக்களுக்கு காண்பித்து அதன் வாயிலாக ஓட்டுக்களைப் பெற்றுசட்ட மன்றத்திலோ, பாராளுமன்றத்திலோ, ஆட்சியிலோ அல்லது எதிர்க் கட்சியிலோ அமர்வதுதான் அந்தக் கட்சியினுடைய கடமையாகும். மொத்தமாக பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதுதான் அதனுடைய அடிப்படை. அதன் வாயிலாக ஒவ்வொரு உறுப்பினர்களும் கட்சிகளாக அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி என்பது காந்தியவாதக் கொள்கையைக் கொண்ட கட்சியாகும். இந்தச் சட்டத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிப்பதற்கு என்ன காரணம் என்று சொன்னால், கடந்த கால ஆட்சிக் காலங்களில் நாங்கள் அடி வாங்கியே பழக்கப்பட்டவர்கள், சாதுக்கள். காந்தியவாதிகள், நாங்கள் அடிக்க மாட்டோம். வந்தே மாதரம் என்று சொல்லிக் கொண்டு, குண்டடிப்பட்டு பல்வேறு வகையான கஷ்டங்களையும் நஷ்டங்களையும், துன்பங்களையும் துயரங்களையும்,வேதனைகளையும் அடைந்து இந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த காங்கிரஸ் பாரம்பரியத்திலே வந்தவர்கள். ஆகவேதான் அன்று முதல் இன்று வரை என்றும் நாங்கள் அப்படித்தான் இருப்போம். காந்தியார் கொள்கையை இந்த நாட்டிலே கொண்டு வர வேண்டும் என்பது தான் எங்களுடைய கொள்கை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் 1967 வரையில் காங்கிரஸ் கட்சி ஆட்சி இருந்தது. அந்தக் ஆட்சிக் காலத்திலே எல்லாம் இப்படிப்பட்ட பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பது, அடிப்பது, பாலங்களை நொறுக்குவது, கட்சியினுடைய தலைவர்களை அடிப்பது அவர்கள் இல்லத்தை சூறையாடுவது பத்திரிகைகள் அலுவலகங்களை சூறையாடுவது போன்ற பழக்கங்கள் எல்லாம் இல்லை. 1967-க்குப் பிறகு, இன்னும் சொல்லப் போனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இறந்ததற்குப் பிறகு,திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் இப்படிப்பட்ட சூழ்நிலை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் வேதனையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகேவ தான் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த நாங்கள் இதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். இதிலே எங்களுக்கு ஒரு பெரிய பாதுகாப்பு இருக்கிறது.

பத்திரிகைகளைப் பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். நான் ஒன்றைச் சொல்லுகிறேன். இந்த வாரப் பத்திரிகைகளில் விவகாரமாகவே எழுதுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி, பெண் உறுப்பினர்களைப் பற்றி தாறுமாறாக, உண்மைக்குப் புறம்பான செய்திகளையெல்லாம் எழுது

கிறார்கள். நான் ஒன்றைச் சொல்லுகிறேன். நான் முதலமைச்சரைப் பார்த்து என்னுடைய சொந்த மகனுக்கு பி.ஆர்.ஓ. போஸ்ட் வாங்குவதற்காக நான் அம்மையாரைப் பார்த்துகேட்டதாகவும் அவர்கள் அந்த உத்தியோகத்தை கொடுத்ததாகவும் அதறகாகத்தான் நம்முடைய முதலமைச்சரை நான் பாராட்டுகிறேன் என்று ஒரு பத்திரிகை விவகாரமாக எழுதியிருக்கிறது. என்னுடைய ஒரே மகனுக்கு வயது 14.** ஒரே மகன்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே மகன் மட்டும் என்று இருக்கட்டும். ** என்பது தேவையில்லை.

திரு. ஆர். சிங்காரம் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். மற்ற உறுப்பினர்களைப் பற்றித் தப்பாக நினைக்க வேண்டிய நிலை வரும். அதுவும் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம்.

திரு. ஆர். சிங்காரம் : ஒரே மகன். 14 வயது அவனுக்கு. அந்த பையனுக்கு பி.ஆர்.ஓ. போஸ்ட் வாங்குவதற்காக முதலமைச்சரைப் பார்த்தேன் என்று பத்திரிகை எழுதுகிறது என்றால் இந்த பத்திரிகைகள் எழுதுவது எல்லாம் உண்மையா, பொய்யா என்பதை இந்த நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இது போன்று பல்வேறு வாரப் பத்திரிகைகள் உண்மைக்கு மாறாக எழுதிக் கொண்டிருக்கின்றன. பொதுச் சொத்து சேதத்திற்கு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால் தனியார் சொத்து பாதுகாப்புக்கும் முன்பே சட்டம் இருக்கிறது. யாரும் அதை நடை முறைப்படுத்துவதில்லை. ஆகவே தனியார் சொத்துக்களுக்கும் பாதுகாப்புத்தர வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்கள் என்று சொன்னால் கட்சியின் தலைவர் வீட்டிலே தாக்குகிறார்கள், கடந்த கால ஆட்சியில். அதே நேரத்தில் எங்களுடைய தலைவர் வாழப்பாடியாரை கொலை செய்ய முயற்சித்தார்கள். சுப்பிரமணியம் என்ற வக்கீல் கொல்லப்பட்டார். புள்ளிவிவரங்களை அள்ளித் தருகின்ற எங்கள் சட்டச் செயலாளர் கிள்ளிவளவன் தாக்கப்பட்டு ஒரு கண்ணை எடுத்துக் கொண்டார். எனக்கு மட்டும் ஒரு கண் இருக்கிறது : உனக்கு ஏன் இரண்டு கண் இருக்க வேண்டும் என்று அவருடைய ஒரு கண்ணை எடுத்து விட்டார். அப்படிப்பட்ட கொடுமைகள் தி.மு.க. ஆட்சியில்.

இன்று பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. துக்ளக் பத்திரிகை. துக்ளக் பத்திரிகையில் அன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிர்ப்பாக எழுதி விட்டார்கள் : உண்மையை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



எழுதினார்கள். அதற்காக அந்தப் பத்திரிகை அலுவலகமே சூறையாடப்பட்டது. அந்தப் பத்திரிகைகளை எல்லாம் பறித்து, அலுவலகச் சிப்பந்திகளை எல்லாம் அடித்து, அலுவலகத்தைத் தகர்த்தார்கள். இப்படி பல்வேறு தொல்லைகளுக்கு, துன்பங்களுக்கு துக்ளக் பத்திரிகை ஆளாக்கப்பட்டது. இது நடந்தது தி.மு.க. ஆட்சியில். இதை எல்லாம் யார் தூண்டியது ? டென்ஷனாக, யதார்த்தமாக நடந்த நிகழ்ச்சியா? இல்லை. அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதியின் தூண்டுதல் பேரில் துக்ளக் பத்திரிகை தாக்கப்பட்டது ; தராசு பத்திரிகை தாக்கப்பட்டது. உண்மையான விவரங்களை எல்லாம் இன்னும் அவர்கள் எழுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அது உண்மையா, பொய்யா என்பது உங்களுக்குத் தெரிய வேண்டுமானால், அன்றைக்கு தி.மு.க ஆட்சிக் காலத்தில் நடந்த விவகாரங்களை விமர்சித்ததற்காக தராசு பத்திரிகை தாக்கப்பட்டது. பல முறை தாக்கப்பட்டது. [illegible] ஆனந்த விகடன் தாக்கப்பட்டன; மக்கள் குரல் பத்திரிகை தாக்கப்பட்டது யார் தாக்கியது ?

பிற்பகல் 12–55

இந்த ஆட்சி ஏற்[illegible] மாத காலம் ஆகிறது. எந்தப் பத்திரிகையாவது [illegible]ருக்கிறதா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இல்லை. காரணம் முதலமைச்சர் அவர்கள் யாராவது தவறு செய்தால், ''அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்'' என்று சொல்லிக் கொண்டிருக்கிற முதலமைச்சர் இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). எதையும் தனக்குத் தகவல் தெரிந்தால் உடனடியாக ஆளும் கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சியானாலும் சரி, தட்டிக் கேட்கின்ற முதலமைச்சர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோம். ஆகவே, எந்த நிகழ்ச்சி நடந்தாலும் தமிழ்நாட்டிலே நம்முடைய காலத்தில் நடக்கக் கூடாது என்று இந்த முதலமைச்சர் நினைக்கிறார்: அதனால் நடக்கவில்லை. ஆனால் அன்றைய முதலமைச்சர் எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும், அவர்களுக்கு வருத்தமாக இருந்தால் இங்கே அவையிலே சொல்வதில்லை. சபையிலே, வீதியிலே, தெருவிலே, ரோட்டிலே அடிப்பார்கள்: பத்திரிகைகளைத் தாக்குவார்கள். பல்வேறு பத்திரிகைகள் பல்வேறு காலங்களில் தாக்கப்பட்ட வரலாறு இருக்கிறது. இது பற்றி விவரமாகச் சொல்வது என்றால் 42 நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அதை எல்லாம் சொல்வதற்குள், பேரவைத் தலைவர் பெல் அடித்து விடுவார்கள். ஆகவே பல்வேறு நிகழ்ச்சிகள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தூண்டுதலின் பேரில் நடந்த நிகழ்ச்சிகளாகும். அப்படிப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பொது மக்கள் சொத்துக்கள், தனியார் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன, பேருந்துகள் எரிக்கப்பட்டன, தாக்கப்பட்டன,

இன்னும் சொல்லப் போனால் எங்களுடைய அருமைத் தலைவி இந்திரா காந்தி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் மக்களால் நேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியையே பறித்து, ஜெயிலிலே அடைத்தார்கள். அப்போது நாடு முழுவதும் நாங்கள் போராட்டம் நடத்தினோம். எந்த இரயிலாவது கொளுத்தப்பட்டதா? பஸ் தாக்கப்பட்டதா? தமிழ்நாட்டிலே சுமார் 50,000 பேர் கைது செய்யப்பட்டோம் ஜெயிலிலே அடைக்கப்பட்டோம்: விடுதலையானோம். போராட்டம் நடத்தினோம். மீண்டும் கைது செய்யப்பட்டோம்: ஜெயிலில் அடைக்கப்பட்டோம் மீண்டும் போராட்டம் நடத்தினோம். போராட்டம் நடத்தினால், முதலிலே ஒரு கோரிக்கையை முன் வைத்து நடத்த வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவரவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ், நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறானத் தகவலைச் சொல்லக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அந்தப் போராட்டத்தின் போது நாகர்கோவிலில் ஒரு பஸ் எரிக்கப்பட்டது. அதிலிருந்த 13 பேர்கள் எரிக்கப்பட்டார்கள்.

திரு. ஆர். சிங்காரம் : ஏதோ ஒரு பஸ் எரிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அவர்கள் காலத்திலே ஆயிரக்கணக்கான பஸ்கள், லாரிகள் எரிக்கப்பட்டன; பொது மக்களுடைய சொத்துக்கள், கடைகள், வீடுகள் எல்லாம் தாக்கப்பட்டு, சூறையாடப்பட்டன என்பது எனக்குத் தெரியும். ஆனால் எங்கோ ஒரு கோடியில் யாரோ சில விஷமிகள் ** எல்லாம் செய்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவல் அவைக்குள் வரக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். யாரும் அந்தப் பஸ்ஸுக்கு நெருப்பு வைக்கவில்லை. யாரோ தவறாக எடுத்துச் சென்ற பாஸ்பரஸ் அந்தப் பஸ்ஸில் இருந்த காரணத்தினாலே அந்தப் பஸ் எரிந்துவிட்டது. சில பேர் மீது குற்றம் சுமத்தப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பட்டு, அவர்கள் எல்லாம் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்திராகாந்தி அவர்கள் கைது செய்யப்பட்டதற்கும் அந்தப் பஸ் எரிக்கப்பட்டதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுகின்ற போது இதற்குப் பதில் சொல்லலாம். நீங்கள் உங்கள கருத்தைச் சொல்லி விட்டீர்கள். அதற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். மேற்கொண்டு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் நீங்கள் பேசும்போது சொல்லலாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : அந்தக் குற்றம் சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்திலே விடுதலை செய்தார்கள். ஆனால் இந்திராகாந்தி அம்மையார் கைது செய்யப்பட்டார் என்பதற்காக பஸ் கொளுத்தப்பட்டது. அதில் 13 பேர்கள் இறந்தார்களா? இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசும்போது விளக்கமாகப் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கிறது; அப்போது பேசுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாக அந்த வழக்கிலே கூறப்பட்டிருக்கிறது. யாரும் அந்த முயற்சியிலே ஈடுபடவில்லை. அப்போது எரிக்கப்படவும் இல்லை. பஸ்ஸிலே பாஸ்பரஸ் இருந்தது. அதைக் கொண்டு வந்தது யார் என்று யாராலும் நிருபிக்கப்படவில்லை. டாக்டர் ஜோசப் குற்றவாளி அல்ல என்று சொல்லித் தான் நீதிமன்றம் விடுதலை செய்தது.

பிற்பகல் 1-00.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை எல்லாம் நான் எதற்காகச்சொல்கிறேன் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தூண்டுதலால் தான் அந்தக் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் யாவும் நடைபெற்றது என்பதற்கு ஒரே ஒரு எவிடன்ஸ், நான் இந்த அவையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தாக்கப்பட்டபோது, கொலை செய்ய முயற்சி செய்த போது, இதைப் பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தவர் அன்றைய முதல்வர் கருணாநிதி அவர்கள். இதைவிட என்ன எவிடன்ஸ் வேண்டும்? ஒரு பொறுப்புள்ள முதலமைச்சர் எதிர்க்கட்சியாக அன்று இருந்த புரட்சித் தலைவி அவர்கள் தாக்கப்பட்ட போது, கொலை செய்ய முயற்சி செய்த போது, 20 நிமிடங்கள் நடந்த அமளியின் போது, ''அம்மா, அம்மா''

என்று அலறியபோது அன்றைய முதலமைச்சர் எதிரே உட்கார்ந்து பார்த்துக் கொண்டு இருந்தார்: பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தார். ஆக, இதைவிட ஒரு எவிடன்ஸ் என்ன வேண்டும்? அந்தக் கட்சியினுடைய தலைவர் நாட்டிலே நடக்கின்ற கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள் அத்தனைக்கும் அவரே தான் காரணமாக இருந்தார் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னும் சொல்லப் போனால், என் பேராவூரணியிலே நான் முன்பே சொன்னேன். சுமதி என்ற பெண் கற்பழிக்கப்பட்டாள்: நான் புகார் கொடுத்தேன். இங்கே அவையிலே கிளப்பினேன்: அதற்கு அவர் சொன்னார், அந்தப் பெண்ணினுடைய சம்மதத்தோடு தான் கற்பழிக்கப்பட்டாள் அந்தப் பெண் என்று இந்த அவையிலே சொன்னார்: ரிக்கார்டு இருக்கிறது. அப்படி என்றால், அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டது உண்மை தானே? அது முதல் அமைச்சருக்குத் தெரியும் தானே? அதை ஏற்றுக் கொண்டவர் தானே? ஏன நடவடிக்கை எடுக்கவில்லை? ஆக, அந்த முதல் அமைச்சருடைய பார்வையில் தான் எல்லாமே நடந்து கொண்டு இருந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> முடித்து விடுங்கள்.

<u>திரு. ஆர். சிங்காரம் :</u> முடித்து விடுகிறேன். அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், அந்த போராட்டங்கள் செய்கின்றபோது, பல்வேறு கொலைகள், பல்வேறு தொல்லைகள், கற்பழிப்புகள், பல்வேறு அ.தி.மு.க. காங்கிரசு தோழர்களின் மண்டை உடைப்புகள் போன்ற சம்பவங்கள், பஸ் எரிப்புகள், கடைகள் சூறையாடல் போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்து இருக்கின்றன. இதையெல்லாம் தடுகக வேண்டும் என்பதற்காகத்தான் இன்று சட்டம் கொண்டு வந்து இருக்கிறீர்கள். நான் அதை வரவேற்கிறேன்.

அதே நேரத்தில், பாட்டாளி மக்கள் கட்சி கடந்த காலங்களில் பல போராட்டங்கள் நடத்தின. அந்த போராட்டங்கள் எல்லாம் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்தில், மோஸ்ட் பேக்வேர்டு ஆகக வேண்டுமென்று நடத்திய போராட்டத்திலே பல்வேறு பஸ்கள் எரிக்கப்பட்டன. ரோடுகள், பாலங்கள் தகர்க்கப்பட்டன. இது தான் முறையா? ஒரு போராட்டம் ஒரு கொள்கையை, ஒரு எண்ணத்தை, ஒரு கோரிக்கையை மக்களுக்கு அல்லது ஆட்சிக்கு தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால் முதலிலே ஒரு ஆர்ப்பாட்டம், ஊர்வலம், அதன்பிறகு ஒரு உண்ணாவிரதம், அதன்பிறகு ஒரு மறியல், போராட்டம், மறியல் போராட்டம் என்றால் காந்திய முறையில், அதேபோல இந்த அரசை இங்கே அதையும் மீறி சட்டமன்றத்திலே பிரச்சினையை கிளப்புவது போன்ற முறைகள் தான் ஜனநாயக நாட்டில் இங்கே நாம் கிளப்ப வேண்டிய உரிமை ஆகும்.



ஆனால் எடுத்த உடனே, எந்த உண்ணாவிரதமும் இல்லை; ஆர்ப்பாட்டம் இல்லை, ஊர்வலம் இல்லை, கோரிக்கை மனு கொடுப்பது இல்லை, எதுவுமே கொடுக்காமல், எடுத்த உடனே பஸ்களை மறிப்பது, அதே நேரத்தில் பஸ்களிலே வருகிற பொது மக்களை தாக்குவது, பஸ்களை எரிப்பது, நொறுக்குவது, அது போல தனியார் கடைகளை உடைப்பது, பாலங்களை தகர்ப்பது, ஒரு வாரம் 10 நாட்களுக்கு அந்த வழியிலே போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைப்பது போன்ற தொல்லைகளை செய்வது தான் அரசியல் கட்சியா? முறையல்ல. ஆகவேதான் இந்த சட்டம் வருகிறது.

இதற்கும் மேலாக, கர்நாடகா தமிழர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்; அனைவருக்கும் தெரியும்; நம்மையெல்லாம் விட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உணர்ச்சிபூர்வமாக, உளப்பூர்வமாக மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்; மத்திய சர்க்காரிடத்திலே போர் கணைதொடுக்கிறார்கள். இப்படியெல்லாம் தொடுத்து அந்த தமிழ் மக்களை காக்க வேண்டுமென்று குரல் கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு நாமெல்லாம் துணையாக நின்று ஆதரவு அளித்து அந்த மக்களை பாதுகாக்க ஜனநாயக ரீதியில் செயல்பட வேண்டுமே அல்லாது, ஆயிரம் பஸ்களை கொண்டுபோய், கர்நாடகத்துக் கொண்டு போனால், அங்கு என்ன நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால், அந்த தலைவர்களே அந்த தொண்டர்களை ஊக்குவித்து அந்த கலவரங்களை செய்ய வேண்டும்; அங்கே கடைகளை நொறுக்க வேண்டும், பஸ்களை எரிக்க வேண்டும்; பஸ்களை உடைக்க வேண்டும் என்று தலைவர்களே உத்தரவிட்டு செய்கிறார்கள்: அதற்காக செல்கின்றார்கள், ஆக, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பல்வேறு நிகழ்ச்சிகள் எல்லாம் நாம் சுட்டிக் காட்ட முடியும்.

அதேபோல இங்கே நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சி நண்பர் மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டியார் அவர்கள் தாக்கப்பட்டதாகச் சொல்லி வெளியிலே மிகப் பெரிய கலவரம், மிகப் பெரிய கொந்தளிப்புகள், இப்படி பதட்ட நிலை, போக்குவரத்து ஸ்தம்பித்து, இதுபோன்ற அநாகரிகமான முறையில் ஜனநாயக ரீதியில் அமைக்கப்படுகிற ஆட்சியில் மக்களுக்கு சேவை செய்ய தான் இங்கே வருகிறோம் என்று சொல்கின்ற அரசியல் கட்சிகள் செயல்படக் கூடாது என்பதற்கு, இதைவிட இந்தக் காலத்தில் இந்த புரட்சித் தலைவியைத் தவிர இந்த நாட்டு மக்களை, இந்த ஏழை மக்களையும் எங்களையும் பாதுகாக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே தலைவியை நாட்டிலே எங்கும் பார்க்க முடியாது. இன்னும் சொல்லப் போனால், நீங்கள் என்ன செய்தாலும், எதுவும் நீங்கள் செய்ய முடியாது என்பதை நான் முதலில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்; இங்கே வால் ஆட்டவோ, அசைக்கவோ, இந்த முதலமைச்சரை உங்களால்

[திரு. ஆர் சிங்காரம்] [1992 ஏப்ரல் 27

ஒன்றும் செய்ய முடியாது என்பதற்கு (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் இன்னும் ஒரு எவிடன்ஸ் (மணி அடிக்கப் பெற்றது), ஒரு 2 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்; நாங்கள் மட்டும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை; தமிழக மக்கள் மட்டும் ஆதரவு அளிக்கவில்லை; அனைத்துக் கட்சிகளும் — ஒரு சில கட்சிகளைத் தவிர ஆதரவு அளிக்கவில்லை. ஆண்ட வனே ஆதரவு அளித்து இருக்கிறார்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) கடவுளே அந்த ஆதரவை அளித்து இருக்கிறார்! ஒரு எவிடன்ஸ் சொல்கிறேன், அம்மாவி னுடைய ஜாதகமே நான் சொல்கிறேன். (சிரிப்பு) அம்மாவினுடைய ஜாதகமே மக்களுக்கு சாதகமாக இருக்கிறது, நமக்கும் சாதகமாக இருக்கிறது; இந்த ஆட்சிக் கும் சாதகமாக இருக்கிறது. நேற்று தான் மழை கொட்டோ கொட்டு என்று திரும்பவும் கொட்டிவிட்டது. ஒரே வெயில். வெயிலுக்கு என்ன காரணம் தெரியுமா? இந்த எதிர்க் கட்சி கள் விடுகின்ற விஷ வாயு; (சிரிப்பு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). அந்த விஷ வாயு தான் நாட்டிலே எரிந்தது; அம்மா விருந்து வைத்தார்கள். அது விடுவதற்குள்ளே மழை கொட்டு கொட்டு என்று கொட்டியது. தமிழ்நாடு பூராவும் சில சில இடங்களிலே மழை; பேராவூரணியில் இல்லை; ஆனால் எல்லா இடங்களிலேயும் பெய்தது; என்ன காரணம் தெரியுமா? இந்த ஆண்டு. ஆங்கிரச ஆண்டு. காங்கிரஸ் ஆட்சியிலே ஆங் கிரச ஆண்டு சிறப்பாக இருக்கும். மத்தியிலே காங்கிரஸ்— இங்கேயில்லை. இந்த ஆண்டு பிறப்பே மக நட்சத்திரம். நம் முடைய முதலமைச்சருடைய நட்சத்திரம் மக நட்சத்திரம். ஆகவே மகத்தில் பிறந்தவர்கள் இந்த யுகத்தில் ஜகத்தை ஆள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தில் பிறந்த நம் முடைய முதல்வர் இந்த ஆண்டில் ஜகத்தை ஆளுகிறார். யாரும் ஒன்றும் செய்ய முடியாது. என்ன பண்ணுவது—இப்போது நினைத்து என்ன பண்ணுவது? வருடம் பிறந்தது கடக லக்னம். நம்முடைய முதலமைச்சருக்கும் கடக லக்னம். வருடம் பிறந் தது சிம்மராசி. நம்முடைய முதலமைச்சருக்கும் சிம்மராசி. (மேசையைத் தட்டும் ஒலி) இது கரெக்ட்டாக இருக்குமென்று நினைக்கிறேன். (சிரிப்பு)

■

பிற்பகல் 1–05

நமக்கெல்லாம் பொங்கல் வாழ்த்து வந்தது. எதிலே வந்தது? சிம்மத்திலே. இதெல்லாம் அடையாளம். இயற்கை. யாரும் மாற்ற முடியாது. அம்மாவுக்கு பிடித்தது சிம்ம ராசி— சிம்மம்—சிங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் ஒன்றும் செய்ய முடியாது. ஆட்டவோ, வால் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு எல்லாம் பொங்கல் வாழ்த்து சிம்மத்திலே வந்தது. . .



1992 ஏப்ரல் 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு சிங்காரம் அவர்களுடைய ஜாதகம் சாதகமாக இருக் கிறதா, இல்லை, பாதகமாக இருக்கிறதா? (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் சிம்ம லக்னம் தான். (சிரிப்பு) அதுதான் சிம்ம லக்னம் சிம்ம ராசியை ஆதரிக்கிறது. எங்களுக்கெல்லாம் சிம்மத்திலே பொங்கல் வாழ்த்து — எதிரிகளுக்கு எல்லாம் சிம்ம சொப்பனத்திலே வாழ்த்து. (மேசையைத் தட்டும் ஒலி) சிம்மத்திற்கு ஆறில் சனி. ஆறில் சனி பல அற்புதங்களைத் தருவான். ஐம்புலன்களுக்கும் ஒத்துழைப்பைத் தருவான். (சிரிப்பு) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: பின்னால் ஏழில் சனி கேந்திர சனி. முதலமைசசருக்கோ மிகுந்த சிறப்பு. அதன் பின்னாமல நட்பில் எட்டில் சனி. எட்டில் சனி என்பது யாரும் எட்டிப்பார்க்க முடியாத உச்சக்கட்டததிலே இருக்கிறது. (மேசையைத் தட் டும் ஒலி) எதிரிகள் எட்டிப்பார்ததால் விட்டில் பூச்சிகள். ஆகி விடுவாகள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவரையில் முத லமைச்சருக்கு பொங்கும் சனி. அதனால் இனி முதலமைச் சருக்கு என்றும் பொங்கும் சனி. எங்கும் பொங்கும், எல்லா இடத்திலும் பொங்கும், எல்லா நலனும் பொங்கும், மக்களுக் கும் பொங்கும். இது மண்டல சனி. மேலும் புகழ் ஓங்கும் சனி. இவ்வாண்டில் மழை குறுணி. குறுணி மழை போட்டிருக் கிறது இந்த வருடம். (சிரிப்பு). இந்த வருடம் பறவை என்ன தெரியுமா? கோழி. நீங்கள் சேவல் என்று நினைத்துக்கொண் டாலும் சரிதான். (மேசையைத்தட்டும்ஒலி) எல்லா சிறப்பும் ஆங்கிரச ஆண்டில் காங்கிரஸ் ஆதரவில் வாய்த்துள்ளது... (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைக் கடைசியில்தான் சேர்த்துக் கொண்டீர்கள் என்று தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதை விட (சிரிப்பு) ஜாதகம் பார்க்கிற வேலையைப் பார்த்தால் நிறைய சம்பாதிப்பார் என்று தெரிகிறது. (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலபேர் சாதகமும் தெரியாமல், ஜாதகமும் தெரி யாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள் நாட்டில். அதற்காகத் தான் இந்த ஜாதகம் எல்லாம் சொல்ல வேண்டும். இயற்கை சரியாக இருக்கிறது. மக்களும் சரியாக இருக்கிறார்கள். எல்

லோரும் சரியாக இருக்கிறார்கள் என்பதற்காக சொல்ல வருகிறேன். வேறு ஒன்றும் இல்லை. தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். தெரியாமல் சிலர் கா்லை விட்டு விடுகிறார்கள். அவஸ்தைப்படுகிறார்கள். ஆகவே, அகராசி, முகராசி கொண்ட மகராசி, முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியை வாழ்த்துவோம், (மேசையைத் தட்டும் ஒலி) வணங்குவோம் என்று சொல்லி, இறுதியாக,

''போற்றுவோர் போற்றட்டும்
புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும்
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் சரியென்றால்
எடுதுரைப்பேன், எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்''

என்று சொல்லி, தங்களுடைய பணி தொடரட்டும், எங்கள் பணி பின் தொடரட்டும், (மேசையைத் தட்டும் ஒலி) பிரச்சினைகள் தீரட்டும், மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி புகழ் தொடர்ந்து மலரட்டும், எங்கள் தலைவர் வாழப்பாடியார் தோழமை தோள் கொடுக்கட்டும் என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச்சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1–10*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி]

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட அமைச்சர் மூலமாகக் கொண்டு வந்திருக்கிற பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கின்ற சட்ட முன்வடிவினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அதை நான் மறுத்துப் பேச முன்வருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தமட்டில், பொதுச் சொத்துக்கள் என்பது இந்த நாட்டு மக்களுடைய வரிப் பணத்தினுடைய சொத்து. அதிலே அக்கறை கொண்டு இருக்கிறவர்கள்தான் நாங்கள். (குறுக்கீடு). அதிலே அக்கறை கொண்டு இருக்கிறவர்கள்தான் நாங்கள்.

தொடர்ந்து, இந்தியநாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழகத்திலே எங்களுடைய ஆட்சி, தொழிலாளர் வர்க்கத்தினுடைய உரிமைக்காக: பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் உண்ணாவிரதங்கள் ஆகியவற்றை அமைதியான முறையிலே நாட்டிலே நடத்தியபோது..... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்,





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கட்சி என்றைக்கு தமிழகத்திலே ஆட்சி நடத்தியது என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தது, அவர்கள் ஆரம்பிக்கும்போதே, — இது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதைத் தடுக்கிற சட்டம்— அவர்கள் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கின்ற சட்டம் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

திரு. ஜி. பழனிசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சைத் திசை திருப்பிடக்கூடாது. (குறுக்கீடு). ஆட்சியிலே இருப்பது என்பதை நிர்ணயிக்க வேண்டியது, மக்கள். எந்த ஆட்சிக்கும் நிரந்தரம் கிடையாது. இது கடந்த காலத்தினுடைய வரலாறு. 20 ஆண்டுக்காலம் ஆட்சி நடத்தியவர்கள் பின்னாடி,— அண்ணா தி.மு.க. வினுடைய ஆட்சியை, நான் பின்பற்றி வருகிறேன் என்று சொல்லக் கூடிய நிலைமையை எல்லாம் நாம். பார்க்கிறோம், அப்படிப்பட்ட பரிதாபமான நிலைமை கூட தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிறது. இருந்தாலும் கூட ஆட்சிக்கு வருவது என்பது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட .......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே காங்கிரஸ் கட்சி தான் ஆட்சியிலே இருக்கிறது. அவர்களை நாங்கள் பின் தொடர்ந்து போகிறோம். எனவே, எங்களுடைய நிலைமை என்ன பரிதாபமான நிலைமையா? (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஜி. பழனிசாமி : புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையினாலேதான் பொதுச் சொத்துக்களுக்கு எந்த ஒரு திசையிலிருந்து சேதம் விளைவித்தாலும், பாலங்களைத் தகர்த்தாலும், பஸ்களைக் கொளுத்தினாலும், பல்வேறு பொதுச் சொத்துக்கள், மருத்துவமனைகள், குடிநீர் போன்ற சொத்துக்களைத் தடுத்தாலும், அது தேசத்தினுடைய நஷ்டம். நாங்கள் எப்போதுமே அதை ஏற்றுக்கொள்வதில்லை. அனேகமாக காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோதுகூட, இப்படிப் பட்ட சம்பவங்கள் நடைபெற்றது என்பது நாட்டுக்குத் தெரியும். அதற்குப் பின்னாலேதான், தமிழகத்திலே இப்படிப்பட்ட அசம்பாவிதமான சம்பவங்கள், மனிதர்களே விரும்பத்தகாத வகையிலே, பொது மக்களை அச்சுறுத்துகின்ற வகையிலே இதுபோன்ற சம்பவங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன.

ஆகவே, இதற்கான சட்டங்கள் நாடாளுமன்றத்திலே சட்ட மன்றத்திலே ஏற்கெனவே இயற்றப்பட்டு இருக்கின்றன. அந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி இப்படிப்பட்ட சமூக விரோதிகள் செய்யக்கூடிய தவறான காரியங்களை முழுமையாகத் தடுத்துவிட முடியும். காரணம், அதற்கு முழுமையாக காவல்துறையைப் பயன்படுத்த முடியும். தவறு செய்தவர்களை நாம் தண்டிக்க முடியும்.

ஆனால் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற சட்டம், அனேகமாக, எங்கேயாவது ஒரு கட்சித் தொண்டன் இது போன்ற சம்பவங்களில் ஈடுபட்டால், அந்தக் கட்சியே பொறுபேற்க வேண்டும் என்று இருக்கிறது. இந்த நாட்டிலே, கட்சிக்கு அப்பாற்பட்டு இருக்கிற சமூகவிரோதிகள் பல பேர்கள் இருக்கிறார்கள் என்பதனை நாம் யாரும் மறந்துவிட முடியாது. இதற்குப் பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர், மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர், அவர்கள் மறைந்த பின்னால், தமிழகத்திலே நடந்திருக்கிற பல்வேறு சம்பவங்கள், சென்னையிலே நடந்திருக்கிற பல்வேறு கடைகளினுடைய சூறையாடல்கள், பல்வேறு திருட்டுக்கள் அவ்வளவும் அண்ணா தி.மு.க. என்று சொல்லிவிட முடியாது. அதைப் பயன்படுத்தி பல பேர்கள் அந்தக் காரியத்திலே ஈடுபட்டார்கள்.

அதேபோல், மரியாதைக்குரிய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இறந்தார்கள். தமிழகத்திலே என்ன சூழ்நிலைமை ஏற்பட்டது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆனால் முழுமையாக நான் காங்கிரஸ் கட்சி என்று குற்றம் சொல்லிவிட முடியுமா, இல்லை அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்று குற்றம் சொல்லிவிட முடியுமா? இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களும் இருக்கிறார்கள். ஆகையால்தான் அரசியல் கட்சி நடத்தக் கூடிய இயக்கங்களின் நேரத்தில் இது போன்ற ஊடுறுவல்கள் பின்னாடி நான்கு பேர் இந்த ஊர்வலத்திலே வந்து பஸ்களின் மீது கல்லெடுத்து எறிந்து, கடைகளின் மீது கல் எடுத்து எறிந்து, இல்லை பொதுச் சொத்துக்களின்மீது ஏதாவது சேதம் விளைவித்தால் இந்த அரசியல் கட்சிகள்எப்படி பொறுப்பேற்க முடியும்? இந்த அரசியல் கட்சி எப்படி நஷ்டஈடு வழங்க முடியும்? அப்படி என்று சொன்னால், இது ஒரு 'மினி மிசா' வாக இந்த நாட்டில் உருவாகிவிடக் கூடாது. அனேகமாக ஏன் என்றால் வனவாசம், இம் என்றால் சிறைவாசம் என்பதைப் போல ஒரு நிலைமையை தமிழகத்திலே உருவாக்கிட வேண்டாம். அந்த நிலையிலிருந்து மாறுபடவேண்டும். அதற்காக வேண்டி காவல்துறையினர் இருக்கிறார்கள். (குறுக்கீடு).





பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ தலைவருக்குத் தெரியாமல் நடக்கின்ற போராட்டம் என்று அவர் சொல்கிறார். ஏதோ தலைவரால் சொல்லப்பட்டு (குறுக்கீடு) இல்லை. இம் என்றால் சிறைவாசம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இரண்டாவது கடந்த ஒரு வாரகாலமாக 'மோஸ்ட் பேக்வர்டு' ஆக்கவேண்டுமென்று சொன்ன கோரிக்கையை முன்வைத்து நடத்திய வன்னியர்கள் போராட்டத்திலே, பாட்டாளி மக்கள் கட்சி போராட்டத்திலே ஒரு வாரகாலமாக நடைபெற்ற போராட்டத்திலே பஸ்கள் எரிக்கப்பட்டன, சாலைகள் நொறுக்கப்பட்டன. இது தலைவருக்குத் தெரியாமல் நடக்கவில்லை என்பதற்காகச் சொன்னேன். தலைவரின் தூண்டுதலால் நடத்தப்படுகின்றது. சமூகவிரோதிகள் 'செய்வது அல்ல. அப்போது கட்சிக்காரர்களே அந்தச் சாலைகளில் நின்று கொண்டு குண்டுகளை வெடித்து, போலீசாரை அடித்து, பஸ்களை நொறுக்கி, எரித்து சாம்பலாக்கினார்கள், கடந்த ஒரு வாரகாலமாக. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே பேசி விட்டீர்கள்.

திரு. ஆர். சிங்காரம்: அதைத்தான் சொல்கிறேன். அவர் இல்லை என்று சொல்கிறார். அதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்ட பிறகு, நாட்டில் பல வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. அவைகள் எல்லாம் குறிப்பிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் தூண்டுதலின் பேரில் நடைபெறவில்லை. அவைகள் எல்லாம் தாமாக நடைபெற்ற சம்பவங்கள். பல கடைகள் சூறையாடப் பட்டன, பல சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. அதற்கெல்லாம் அரசியல் கட்சிகள் எப்படி பொறுப்பேற்க முடியும் என்ற கேள்வியினை மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கேட்டார்கள். ஆனால் மாண்புமிகு முன்னாள்

பிரதமர் ராஜிவ்காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்ட பிறகு ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களின் போது நடைபெற்ற சொத்துக்களின் சேதங்களுக்கு நஷ்ட ஈட்டினை இந்த அரசு வழங்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறதே, அதற்கு இந்த அரசு மட்டும் எப்படி பொறுப்பேற்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்கவிரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால் அன்றையதினம் இந்த அரசு இன்னும் ஆட்சி பொறுப்பிற்கே வரவில்லை. அன்றைய தினம் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கவர்னர் ஆளுகையின்கீழ் தான் இந்த மாநிலம் இருந்தது. ஆனால் அன்றையதினம் 'spontaneous uprising' ஆக இருந்தாலும் மக்கள் உணர்ச்சிவசப்பட்டு, அதன்மூலமாக பல வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டு, பலருடைய வீடுகள், கடைகள், சொத்துக்கள், தொழிற்சாலைகள், இப்படிப்பட்டவை எல்லாம் சூறையாடப்பட்டு, பல்வேறு சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் அவற்றுக்கெல்லாம் இப்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள புதியதாக ஆட்சிக்கு வந்துள்ள இந்த அரசு பொறுப்பேற்கவேண்டும், பொறுப்பேற்பது மட்டுமல்ல, உரியவர்களுக்கு உரிய நஷ்ட ஈட்டினை வழங்கவேண்டுமென்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனால்தான் இந்த அரசு அரசியல் கட்சிகளோ அல்லது வேறு யாரோ இத்தகைய சேதங்களை ஏற்படுத்தினால், அதற்கான நஷ்ட ஈட்டினை அந்த கட்சிகளே செலுத்த வேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறது. யார் யாரோ செய்கின்ற காரியங்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும், அரசாங்கம் அதற்கான நஷ்ட ஈட்டினை செலுத்த வேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கின்றபோது ஏற்படுகின்ற நஷ்டங்களுக்காக உரிய நஷ்ட ஈட்டினை அந்த அரசியல் கட்சிகளே வழங்க வேண்டுமென்று கேட்பதில் என்ன தவறு இருக்கமுடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை உண்மையில் நான் ஏற்றுக் கொள்கிறேன். 1972–ஆம் ஆண்டு விவசாயிகளுடைய போராட்டம் மின்சாரக் கட்டணத்திற்காக நடத்தினார்கள். அதேபோன்று கோயம்புத்தூர் போன்ற இடங்களிலே எல்லாம் காவல்துறையினர் தங்களுடைய ஜீப்புகளை கொளுத்திவிட்டு அந்த அரசியல் கட்சிகளின் மீது வழக்குகளை போட்டார்கள். இப்படிப்பட்ட சம்பவம். இன்றும்கூட, நம்முடைய மத்திய அமைச்சர் அனேகமாக திருச்சிக்கு வந்தபோது விவசாயிகள் காவிரி நதிநீர் பிரச்சினையில் இன்றையதினத்திலே பஸ்களை உடைத்தார்கள். அநேகமாக அரசியல் கட்சிகளின் மீது கேஸ்கள் போடமுடியா. ஏனென்று சொன்னால் அப்போது விவசாயிகள் என்ற பெயரால் போராட்டம் நடந்தது. இப்படிப்பட்ட சம்பவங்களில் யார் மீது கேஸ் போடுவது? ஆகவே இந்த சட்டத்தின் மூலமாக, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, எங்காவது ஒரு சம்பவம் நடைபெறுகிறபோது அரசியல் கட்சிகளின் மீது ஆண்டு ஒரு முதல் ஐந்தாண்டு, இரண்டாண்டு முதல் 10 ஆண்டுகள் வரையில் மற்றும் ஜாமீனிலேயே வர முடியாது என்கிற இந்த சட்டமுன்வடிவை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்பது தான் கேள்வி. இன்றைக்கு அண்ணா தி.மு. கழகம் ஆட்சியிலே இருக்கிறது. அதே நேரத்தில் நாளைக்கு எதிர் கட்சியாக இருந்தால் இப்படிப்பட்ட சட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?



பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆட்சியில் இல்லை என்றாலும், நாங்கள் கொண்டு வந்த சட்டத்தை நிச்சயமாக நாங்கள் ஏற்றுக் கொள்வோம். அதன்படியே நடப்போம் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையினால்தான் இது போன்ற சட்டம் வருவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள், அதற்குப் பதில் சொன்ன உடனே நீங்கள் வேறு எங்கோ போய் விடுகிறீர்கள் (சிரிப்பு).

திரு. ஜி. பழனிசாமி : அதற்குப் பின்னால் பதில் சொல்லிக் கொள்ளலாம் என்றிருந்தேன். டைம் ஆகிறதே என்று தான் சொல்லவில்லை. அதே போன்று சென்ற தடவை தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தது. ஆனால் அவர்கள் கொண்டு வந்த சட்டங்களை எல்லாம் இன்றைய தினத்தில் ஆளும் கட்சியாக இருக்கிற அண்ணா தி.மு.க. மாற்றம் செய்கிறது. அதேபோல வேறு ஏதாவது அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தால் அவர்கள் இந்த சட்டத்தை மாற்றம் செய்யலாம். ஆகையினால் நிரந்தரமாக ஜனநாயகத்தை பாதுகாக்கக் கூடிய வகையில் சட்டங்களை இயற்ற வேண்டும். பொதுவாக 1952 ஆம் ஆண்டு 72 சதவீதம் வாக்காளர்கள் இந்த நாட்டிலே உள்ள அரசியல் கட்சிகளின் மீது உள்ள

நம்பிக்கையில் பெயரில் வாக்களித்தார்கள். ஆனால் 1991-ம் ஆண்டு வாகக்களித்த போது 52 சதவீத வாக்காளர்கள் வாக்களித்தார்கள். அப்போது அரசியல் கட்சிகளின் மீது நம்பிக்கையோடு வாக்கு அளிப்பதற்கு சாதாரண வாக்காளர்கள் முன்னுக்கு வரவில்லை...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் 52 சதவீதம் என்று சொல்வது தவறு. தவறான தகவலை அவைக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். 60 சதவீதத்திற்கு மேல் வாக்களித்திருக்கிறார்கள். 52 சதவீதம் என்று சொல்வது தவறு.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே தான் இது போன்ற சட்டம் என்பது ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்பட்டு, விடக்கூடாது. மக்களுக்கு விரோதமாக செயல்பட்டு விடக் கூடாது. அரசியல் கட்சிகளின் மீது உள்ள அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இதை கொண்டு வரக் கூடாது. இது போன்ற சட்டம் கொண்டு வருவதை விட வேறு எந்த அரசியல் கட்சிகளுமே நாட்டிலே இருக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும். அந்த வகையிலே அந்த நிலைமைகளை நீங்கள் உருவாக்கி விட வேண்டாம் என்று சொல்லி இந்த சட்டத்தை எதிர்த்து நான் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய அரசியல் சூழ்நிலையில் வேறு எந்த அரசியல் கட்சி மீதும் எங்களுக்கு காழ்ப்புணர்ச்சி இருக்க நியாயம் இல்லை. தேவையில்லை என்பதை தான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாறாக வேறு சில அரசியல் கட்சிகளுக்கு எங்கள் மீது காழ்ப்புணர்ச்சி இருக்கிற காரணத்தினால்தான் இந்த அரசுக்கு எப்படியாவது தொல்லை கொடுக்க வேண்டும் தொந்தரவு கொடுக்க வேண்டும் என்பதற்காக பொதுச் சொத்துக்களை நாசப்படுத்துவதில் அவை ஈடுபடுகின்றன. ஏற்கெனவே இங்கே பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் இதைப் போலவே தனியார் சொத்துக்கள் சேதப்படுத்தப் பட்டால் நாசப்படுததப்பட்டால் அதற்கும்



நடவடிக்கை வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் தனியார் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டால் அதற்கு for awarding punishment and for claiming compensation என்று ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் பொதுச் சொத்துக்களைப் பொறுத்தவரையில், இந்த பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தால் ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின் படி தண்டனை வழங்கத்தான் சட்டத்தில் இடம் இருக்கிறதே தவிர அந்த சொத்துக்களுக்கு உரிய நஷ்ட ஈட்டினைப் பெறுவதற்கு அந்த சட்டத்திலே எந்தவிதமான குறிப்பும் இல்லை, எந்த விதமான இடமும் இல்லை. எனவே தான் இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எங்களுக்கு எந்த அரசியல் கட்சிகளின் மீதும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் காழ்ப்புணர்ச்சி இருக்கத் தேவையில்லை. அப்படி எதுவும் இல்லை. மாறாக சில அரசியல் கட்சிகள் அவர்களுக்கு இந்த ஆட்சியின் மீது இருக்கிற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதை நாசம் ஆக்குவதை தான் தங்களது நடவடிக்கைகளில் பிரதான நடவடிக்கையாக மேற்கொண்டு வருகின்றன. எனவே தான் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பணம் செடிகளில் விளைவது இல்லை, மரங்களில் விளைவது இல்லை. அவர்கள் தொடர்ந்து பொதுச் சொத்துக்களை நாசப்படுத்திக்கொண்டே வந்தால் அவற்றை எல்லாம் புதுப்பிக்க எங்கேயிருந்து பணம் வரும்? அதனால்தான் யார் இந்த காரியங்களுக்குக் காரணமாக இருக்கின்றார்களோ அவர்களிடமிருந்து இந்தப் பணத்தை வசூல் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது.

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட பொதுச் சொத்து சட்ட முன்வடிவை எதிர்த்து சில கருத்துக்களை கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் பொதுவாகவே தமிழகத்தின் ஜனநாயகத்தின் அடிப்படை உரிமையான பேச்சுரிமை, எழுத்துரிமை, போராட்டங்கள் தடை செய்யப்படுகின்ற ஒரு அவல நிலை வந்திருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப்போராட்டத்தை இந்த அரசு தடை செய்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ், உங்கள் கையிலே விவரம் இல்லாமல் பேசிவிட்டு மாட்டிக்கொள்ளக் கூடாது.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமாரதாஸ் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். இது அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற பில். அரசாங்கத்தின் பில் மீது நீங்கள் சொல்லாமல் இங்கே தீர்மானம் நிறைவேற்றி உரிமைக் குழு சம்மன் அனுப்புவதைப் பற்றி பேசுவதாக இருந்தால், எந்த உரிமையாலே இந்த இடத்திலே நின்று கொண்டிருக்கிறீர்களோ அந்த உரிமையைக் கொச்சைப் படுத்துகிறீர்கள் என்று சொன்னால் நீங்கள் இங்கே பேசுவதிலே அர்த்தம் இல்லை. நீங்கள் ஏன் அரசாங்கத்தைச் சொல்கிறீர்கள்? நான் முதலிலிருந்தே உங்களைச் சொல்வது இந்த மாதிரி விவரம் இல்லாமல் ஒவ்வொரு தடவையும் பேசாதீர்கள். உரிமைக் குழுவிலிருந்து சம்மன் அனுப்பியது எப்படி அரசாங்கம் அனுப்பிய சம்மன் ஆகும். (குறுக்கீடு) இல்லை. அரசாங்கத்திற்கும் உரிமைக் குழுவிற்கும் வித்தியாசம் இருக்கிறது. (குறுக்கீடு) இப்போது நீங்கள் பேசுவது. அரசாங்கத்தைப் பார்த்து கேட்கிறீர்களே எப்படி? (குறுக்கீடு) இல்லை, இல்லை. ** இந்த விவரம் கூட தெரியாமல் பேசாதீர்கள். (குறுக்கீடு) இந்த அவையை அவமதிக்கிறீர்கள். தயவு செய்து இந்த அவையை அவமதிக்கின்ற குற்றத்திற்கு ஆளாகாதீர்கள். (குறுக்கீடு) அப்படியானால் இந்த அவையினுடைய உரிமையை நீங்கள் அவ்வளவு குறைத்து மதிப்பிடுகிறீர்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரே ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ், அவ்வளவு விவரங்கெட்டதனமாக நீங்கள் பேசக்கூடாது. எப்பவும் இப்படித்தான் பேசுகிறீர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லி முடித்துவிடுகிறேன். ஒரு அமைச்சரைப் பற்றியோ அல்லது முதலமைச்சரைப் பற்றியோ கூட அல்லது சட்டமன்ற உறுப்பினரைப் பற்றியோ வெளியிலே நடந்த விவகாரங்களைப் பற்றி அவர்கள் எவ்வளவு கேவலமாகப் பேசியிருந்தாலும்கூட அதை இங்கே நாம் கொண்டு வந்திருக்கப் போவதே கிடையாது. ஆனால் சட்ட மன்றத்திலே பெண் உறுப்பினர்கள் இந்த ஆண்டு அதிகமாக வந்திருக்கிறார்கள். சட்டமன்றத் தலைவர் கொடுக்கின்ற ரூலிங் பேரிலே, அவர்களை பேச அழைக்கின்ற அந்த கருத்துக்களை எல்லாம் வைத்து, சட்டமன்றத்திற்குள்ளே நடந்த விவகாரங்களை மிக மோசமாக வாயில் சொல்லக் கூசக்கூடிய பல விவரங்களை அவர் பேசிய— கொச்சைப் படுத்திப் பேசிய காரணத்தினாலேதான் அந்த விவகாரம் இங்கே வந்தது. தனிப்பட்ட முறையிலே ஒரு அமைச்சரைப் பற்றி கேவலமாக வெளியிலே நடந்த விவகாரங்களைப் பேசியிருந்தால் இங்கே வரப் போவதே கிடையாது. அரசாங்கம் கூட— அரசாங்கமோ முதலமைச்சரோ, அமைச்சர்களோ கொண்டுவர வேண்டுமென்று முடிவு எடுக்கவில்லை. இந்தப் பேரவை ஒட்டுமொத்தமாக முடிவு எடுத்திருக்கிறது. அதைப் பேரவைத் தலைவர் நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே ஆட்சிக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது. எனவே, இதைப் பொறுத்தவரை ஆட்சி கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம் எனவே, இதையும், அதையும் ஒப்பிட்டு பேசுவது என்பது கொஞ்சம் கூட பொருத்தம் அல்ல என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களுடைய பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன். இன்றுகூட நான் காலையிலே கேட்டேன். சபார்டினேட் டு சீஃப் மினிஸ்டர் என்று ஒரு வார்த்தை குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டிலே கொடுத்த— தி.மு.க. நண்பர்கள் கொடுத்திருந்த மனுவிலே நம்முடைய முதலமைச்சருடைய சபார்டினேட் என்று கூட எழுதியிருக்கிறார்கள். நான் கேட்டதற்கு கூட சொன்னார்கள். இதை விட்டுவிடுங்கள் சுந்தரதாஸ்; நீங்கள் இதைக் கிளப்ப வேண்டாம் என்று சொன்னார்கள். அவ்வளவு பெருந்தன்மையாக நடந்து கொண்டார் நம்முடைய பேரவைத் தலைவர் என்பதைப் பெருமையாகச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் இதே அவையிலே நான் பேசி 15 நிமிடம் கழிந்ததற்குப் பின்னாலே முதலமைச்சரை கைகாட்டி ஒருவர் பேசி, அந்த நிகழ்ச்சியும் நடந்திருக்கிறது. அதை எல்லாம் யாரும் பேசவில்லை.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மேலும் என்னால் கேட்கக் கூட முடியாத அளவுக்கு, கேசட் போட்டு கேட்கக் கூட முடியாமல் நான் டேப்பை ஆப் செய்த கதை எனக்குத் தெரியும். எவ்வளவுதூரம் கொச்சைப்படுத்தி, என்னால் திருப்பி பேச முடியாத அளவுக்கு கொச்சைப்படுத்தி நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் தாங்கிக் கொண்டு இருக்கிறோம். அதற்காக நம்முடைய நண்பர் வக்காலத்து வாங்குவது சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால்தான் முதலிலேயே சொன்னேன். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை பேரவையின் சார்பில் தி.மு. கழக உறுப்பினருக்கு தண்டனை அளிப்பதற்காக எந்த விதமான சம்மனும் அனுப்பப்படவில்லை. இப்போது அனுப்பப்பட்டிருக்கிற சம்மன் உரிமை மீறல் குழுவின் சார்பில் அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே வந்து அவர் சாட்சியம் அளிக்கவேண்டும். அதிலே கேள்விகள் கேட்டு, விசாரித்த பிறகுதான் முடிவு செய்யப்படும். முதலிலே உரிமை மீறல் குழு அதைப்பற்றி விசாரிக்கவேண்டும். அதற்குப் பின்னர் தான் இந்தப் பேரவையின் முன்னால் இந்தப் பிரச்சினை வந்து பேரவை முடிவு செய்ததற்குப் பின்னால் தான் எதையும் செய்ய முடியுமே தவிர** அது அவைக்குறிப்பிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக்குழுவின் தலைவர் அனுப்பிய சம்மன் பற்றி அதற்கு எந்தவிதமான தொடர்பும் இல்லாத ஒரு பில்லில் அரசாங்கம் அனுப்பிய சம்மனைப் போல நினைத்துக்கொண்டு அவர் பேசிய அந்தக் குறிப்பு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. டாக்டர் குமாரதாஸ், நீங்கள் சீக்கிரமாக, வேகமாகப்பேசி முடிக்கவேண்டும். இப்போதே நேரம் 1.31 ஆகிவிட்டது.

டாக்டர் தே. குமாரதாஸ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இங்கே கூறிய விளக்கத்திற்கு நன்றி. ஆனல் வெளியே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் நம்முடைய பேரவை டைரக்டாக இன்வால்வ் ஆகின்றபோது இப்போது பத்திரிக்கைகள் (குறுக்கீடுகள்)....

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இருங்கள். இப்போது நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். டாக்டர் குமாரதாஸ் இங்கே பேசிய பேச்சை ஒருவர் கொச்சைப்படுத்தி வெளியே பேசினால் அது இந்த அவையை மீறிய செயல், அது தண்டனைக்குரிய குற்றம் என்றே விதியிருக்கிறது. அதைப்போலவே பேரவைத் தலைவர் இங்கே உட்கார்ந்து ரூலிங் கொடுக்கிறேன். அந்த ரூலிங்கை ஒருவன் கொச்சைப்படுத்திப் பேசிக்கொண்டு இருப்பான். அவனுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு நீங்கள் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : அப்படி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசியது அப்படித் தான் இருக்கிறது. இந்தப் பேரவைத் தலைவரை அவமானப் படுத்தி, அசிங்கப்படுத்திப் பேசலாம். அதற்காக உரிமைக் குழுவிற்கு இந்தப் பேரவை அனுப்பி, உரிமைக் குழுவிலிருந்து ஒரு சம்மன் அனுப்பினால் அதை அரசாங்கத்தின் மீது குற்றமாகப் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை இருக்கிறது, அது அங்கு வரப் போகிறதோ என்கின்ற பயத்தில் பேசிக்கொண்டு இருக்க வேண்டாம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த பில்லில் பேசுவதற்காக அவர் வரவில்லை. பில் இருக்கிறது. அதை விட்டுவிட்டுப் பத்திரிகையில் சில செய்திகள் வர வேண்டும் என்பதற்காக எதை எதையோ பேசிக்கொண்டு இருக்கிறார்கள். பில்லைப்படித்துவிட்டு பேசுகிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை. அதை விளக்கினால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ் இந்தப் பில்லைப் பற்றிப்பேசுங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முறையாக இந்த பில்லை இண்டர்டியூஸ் செய்ததற்கு அதை அவர்கள் எதிர்த்தார்கள். இப்போது திரு. குமாரதாஸ் அவர்கள் இந்த பில்லில் பேச வேண்டும். வெளியிலே இருக்கின்ற அரசாங்கச் சொத்துக்களை எப்படி எல்லாம் எரிப்பதற்கும், குண்டு வைத்து தகர்ப்பதற்கும் தங்களுக்கு உரிமை வேண்டும் என்பதை மட்டும் தான் அவர்கள்

கேட்கவேண்டுமே ஒழிய இதிலே போய் அவர்கள் பத்திரிகைகள் பற்றிப் பேசிக்கொண்டு இருப்பது நியாயம் அல்ல. ஏன் என்றால் பொதுச் சொத்துக்களை எரிப்பதற்கு உரிமை வேண்டும் என்று கேட்கிறார். அதைப்பற்றி அவர்கள் எப்படி எல்லாம் உரிமை கேட்பதற்கு நியாயம் இருக்கிறது என்பதைத் தான் பேச வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் பேசுவதற்கு எழுந்தபோது இப்போது இந்த ஆட்சியில் போராட்டங்கள் நடத்துவதற்கு சுதந்திரம் இல்லை என்றார். எந்தப் போராட்டம் தடை செய்யப்பட்டது? யாருக்கு எந்த அரசியல் கட்சிக்கு போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டுவாரா என்று கேட்டேன். அதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுவரை பதில் சொல்லவில்லை.

அதுமட்டுமல்ல, இந்த ஆட்சியில் பேச்சுரிமை தடுக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது என்றார். ஏற்கெனவே இங்கே பலரும் சுட்டிக்காட்டியபடி ஒரு தி.மு.கழக. உறுப்பினர் இந்த அவையில் உறுப்பினர்களாக இருக்கின்ற பெண் எம்.எல்.ஏ. க்கள் பற்றி அவதூறாகப் பேசியதற்குத்தான் இந்த உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரப்பட்டது. நாங்கள் என்ன சொல்கிறோம், இருக்கின்ற பெண் எம்.எல்.ஏ.க்கள் பற்றி அவதூறாகப் பேச வேண்டாம் என்று தான் சொல்கிறோமே தவிர யாரும் பொதுக் கூட்டங்களில் பேச வேண்டாம் என்று தடை செய்யவில்லை. எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்த பேச்சாளர்களும் இன்றும் பல இடங்களில் பொதுக் கூட்டங்களில் பேசிக்கொண்டு தான் இருக்கிறார்கள். இந்த ஆட்சியில் யாருடைய பேச்சுரிமையும் கட்டுப்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இருங்கள், திரு. பழனிசாமி, இங்கே இந்த அவையில் எழுப்பப்பட்ட ஒரு உரிமை மீறல் பிரச்சினை (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டது எந்த போராட்டம் என்பதை நேரடியாக அவரைக் கேட்கிறார், நீங்கள் ஏன் வருகிறீர்கள். அவர் பேசட்டும். நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள். அதை கேட்டதற்கு பேச்சுரிமை என்றார், அப்படி என்ன உரிமையைத் தடுத்து விட்டார்கள் என்றால் அவையிலிருந்து அனுப்பப்பட்ட சம்மனைச் சொன்னார். அவையெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், நீங்கள் நேரடியாக....







<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி போராட்டத்திற்காக நாங்கள் மறியலுக்குச் செல்ல புறப்பட்ட நேரத்திலே, நாகர்கோவிலிலேயே தடுத்து நிறுத்தப்பட்டோம். அதெல்லாம் போராட்டம் இல்லையா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அது நடவடிக்கை எடுப்பது. நீங்கள் தடையைமீறி ஊர்வலம் போகும்போது தடுப்பது என்பது ஒரு அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய கடமை. அதற்கும் அந்தப் போராட்டத்தைத் தடை செய்தார்கள் என்பதற்கும் சம்பந்தம் இல்லை.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம், ஆர்ப்பாட்டம், மறியல் போன்றவைகளுக்கு செல்கிறோம் என்று சொன்னால், அதற்கு பிரிவென்டிவ் அரஸ்ட் என்று சொல்கிறார்கள். அதற்கு முந்தின நாளே வந்து கைது செய்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டங்களோ, ஆர்ப்பாட்டங்களோ நடத்துவதாக இருந்தால் முன் கூட்டியே காவல் துறையினரிடம் அனுமதி பெறவேண்டும். காவல் துறையினரைப் பொறுத்தவரை எல்லா இடங்களிலும் இதுபோன்ற போராட்டங்களும் ஆர்ப்பாட்டாங்களும் நடத்துவதற்கு அனுமதி வழங்க மாட்டார்கள். எனவே, காவல் துறையினரிடம் அனுமதி பெறாமல் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கத்தான் செய்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> திரு. மா. சுந்தரதாஸ்.

<u>திரு. மா. சுந்தரதாஸ் ;</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சம்பவத்தை இங்கே கூற கடமைப்பட்டிருக்கிறேன். கழிந்த ஆட்சியை எதிர்த்து, நாகர்கோவிலிலே உண்ணாவிரதம் இருப்பதற்காகச் சென்று இருந்தோம். என்னை உண்ணாவிரதம் இருக்கச் சொல்லவில்லை. தொடங்கி வைக்கத்தான் என்னை கூப்பிட்டு இருந்தார்கள். நான் $8\frac{1}{2}$ மணிக்கு, கலெக்டரேட்டுக்கு நாகர்

கோவில் சென்ற போது அங்கே எஸ்.பி. நிற்கிறார்கள். அவர்கள் ''யாராக இருந்தாலும் கைது செய்வோம்'' என்றார்கள். கைது செய்து பாருங்கள் என்று நானும் போய் உட்கார்ந்தேன். என்னைக் கைது செய்தார்கள். அந்த கேஸ்கூட இன்னும் வித்ட்ரா ஆகவில்லை. உண்ணாவிரதம் இருந்ததற்காக கைது செய்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சர்க்காரை கண்டித்தீர்களா நீங்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

__மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா ;__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணாவிரதம் இருந்ததற்காக கைது செய்தது மட்டுமல்ல, நான் உண்ணாவிரதம் இருப்பதற்கே தி.மு. கழக ஆட்சியில் அனுமதி வழங்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது எங்களுடைய கட்சிக்கு துரோகம் செய்த சிலரை துணையாக வைத்துக் கொண்டு, தலைமைக் கழகத்தில் புகுந்து, கட்சித் தலைவர்களை வெளியேற்றியபொழுது (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தலைமைக் கழக கட்டிடத்திற்கு சீல் வைத்த பொழுது, அதை கண்டித்து, நான் பொது இடத்தில் உண்ணாவிரதம் இருக்கவேண்டுமென்று விரும்பினேன். அன்றைய தினம், அன்றைய தி.மு. கழக ஆட்சி அதற்கு அனுமதி வழங்காததால்தான் என்னுடைய இல்லத்திலேயே, காம்பௌண்டிலேயே நான் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

__டாக்டர் தே. குமாரதாஸ் ;__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, இன்றைக்கு நாங்கள் போராட்டங்களுக்குப் போகின்ற போது, அனுமதிகள் பெற்றிருந்தாலும் அதற்குப் பிறகு, போராட்டத்திற்குப் போகின்றபோது, போக முடியாது என்று தடுக்கின்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதைத்தான் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் ;__ சரி, அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? ஆதாரம் இருக்கிறதா? ஆதாரம் சொல்லுங்கள்.

__டாக்டர் தே. குமாரதாஸ் ;__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தோடு தான் பேசுகிறேன்.



__மாண்புமிகு பேரவைத் தலைவர் ;__ அனுமதி கொடுத்துவிட்டு எங்களைத் தடுத்தார்கள் என்கிறீர்களே, அதற்கு ஆதாரம்?

__டாக்டர் தே. குமாரதாஸ் ;__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இருக்கிறது.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் ;__ ஆதாரம் எங்கே காடுங்கள்.

__டாக்டர் தே. குமாரதாஸ் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கே நான் சப்மிட் பண்ணுகிறேன். கையிலே வைத்துக்கொண்டா இருப்பார்கள், நீங்கள் எப்படி கேள்வி கேட்பீர்கள்என்று சொல்லி.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

__மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி காவல்துறையினர் ஒரு போராட்டத்திற்கு அனுமதி வழங்கிய பிறகு காவல்துறையினரே அதைத் தடை செய்ய முடியாது என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

__டாக்டர் தே. குமாரதாஸ் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தைக் கொடுக்கத் தயராக இருக்கிறோம். அதிலே ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் ;__ இப்போது நீங்கள் கொடுக்க வேண்டும். நீங்கள் கொடுத்தால் தானே பேச முடியும்.

__டாக்டர் தே. குமாரதாஸ் ;__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கிறோம்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ கொடுக்கிறோம் என்கிறீர்கள்; எங்கே? என்ன, சொல்லுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

__மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா ;__ மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஒரு போராட்டத்திற்கு அனுமதி வழங்கிய பிறகு அந்த இடத்தில் ஏதாவது சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படக்கூடும்; வன்முறை வெடிக்கக் கூடும்; அதனால் பொது அமைதி கெடக் கூடும் என்று காவல்துறைக்குத் தெரிந்தால் அப்போது நிச்சயமாகத் தடை செய்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் தே. குமாரதாஸ்; மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, அவர்கள் எந்தக் காரணமும் சொல்லவில்லை. தடை செய்தார்கள். அதைத்தான் இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஆக, இப்போது பொதுக் கூட்டம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தடை செய்தார்கள், தடை செய்தார்கள்'' என்று சொல்கிறார்கள். நீங்களும் பலமுறை அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டு விட்டீர்கள். எனவே, ஆதாரம் இல்லாமல் அவர் சொல்லிக் கொண்டு இருப்பது, வீணான குற்றச்சாட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விவரமே இல்லாமல் முதலிலேயிருந்து பேசிக்கொண்டு இருக்கிறார். அதைத் தவிர என்னாலே எதுவுமே சொல்ல முடியவில்லை. எங்கே நடந்தது? எப்படி நடந்தது என்றாவது சொல்ல வேண்டும். மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுடைய உற்ற நண்பர்கள், நீதி மன்றத்திற்குப் போய் நீதி கேட்கச் சென்ற வி.பி. சிந்தனையும் குசேலரையும் தாக்கிய கதையை நாடு மறந்துவிடவில்லை. நீதிமன்றத்திற்கு நீதி கேட்பதற்காகச் சென்ற இடத்திலேயே குண்டர்களை வைத்து தாக்கிய வரலாறை இவர் மறந்து இருப்பார் என்று கருதுகிறேன். பெருந்தலைவர் காமராஜரையே கேவலமாகப் பேசியவர்கள். நாட்டில், கறைபடியாத கரங்களின் சொந்தக்காரர் பெருந்தலைவர் காமராஜர். அவரையே ஒரு காலத்தில் ஜாதியைச் சொல்லி, கேவலமான சொற்களைப் பயன்படுத்தியவர்கள். கல்கி, ஆனந்த விகடன் போன்றவற்றைத் தாக்கியவர்கள். துக்ளக்கினுடைய ஆசிரியர் மேல் முட்டை அடித்த கதைகளையெல்லாம் நாடு மறந்து விடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு முதல்வர் அவர்கள்.



மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குசேலர் தாக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்வளவு பின்னால் செல்லத் தேவையில்லை. கடந்த தி.மு. கழக ஆட்சியின்போது அந்த ஆட்சியில் நடைபெற்ற ஒரு அரிசி பேர ஊழலை நான் வெளிப்படுத்தினேன். அதற்காக என் மீது அந்த ஆட்சி ' Criminal defamation case ' போட்டது. அதனால் என்னை நீதிமன்றத்திற்கு இழுத்தார்கள். நான் நீதிமன்றத்திற்குச் சென்ற பொழுது எனக்கு ஆதரவாகக் கழகத் தொண்டர்கள் பலரும் அங்கே கூட்டமாக வந்து கூடினார்கள். எனக்கு ஆதரவு தெரிவித்து அவர்கள் கோஷங்கள் எழுப்பி நீதிமன்ற கட்டிடத்தின் வளாகத்திற்குள் வந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக எங்கள் கட்சித் தொண்டர்கள் பலர் மீது அன்று வழக்குகள் போடப்பட்டு அவர்கள் கைது செய்யப் பட்டார்கள். இதையும் மாண்புமிகு குமாரதாஸ் அவர்கள் அறிவாரா, ஆதரிக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–4⁰

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, வன்முறை என்று வருகின்றபொழுது யார் செய்தாலும் அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆனால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வன்முறையே அங்கு நடக்கவில்லை. அங்கே வந்த தொண்டர்கள் மீது வழக்கு போடப்பட்டது. வெளியிலேதான், ரோட்டிலே தான் நின்றுகொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்ல, புரட்சித்தலைவி அவர்கள் மீது லாரி ஏற்றிக் கொல்வதற்காக முயற்சி நடந்தபொழுது தெய்வாதீனமாகத் தப்பினார்கள். அன்றைக்கு அதைப் பற்றி அறிக்கை கொடுத்ததற்காக எங்களையெல்லாம் கைது செய்தார்கள். எங்கள் மீது வழக்கு போட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வன்முறை நடந்தால் நடவடிக்கையெடுப்பார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அன்றையதினம் நான் நீதிமன்றத்திற்குச் சென்றபொழுது எவ்வித வன்முறைச் சம்பவமும் நடைபெறவில்லை. வன்முறை நடந்திருந்தால் காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் நடைபெற்றிருக்கும். அப்படிப்பட்ட சம்பவம் எதுவுமே நடைபெறவில்லை. எல்லோரும் அங்கே அமைதியாகக் கூடினார்கள். நான் இறங்கி வந்த பொழுது ''வாழ்க'' என்று கோஷமிட்டார்கள். அவ்வளவுதான். அங்கே ஒரு பெரும் கூட்டம் கூடி விட்டதே இந்தப் புகைப்படங்களெல்லாம் பத்திரிக்கைகளில் வந்து விட்டதே, இந்த அரசியல் தலைவருக்கு இவ்வளவு மக்கள் செல்வாக்கு இருக்கிறது என்பது பத்திரிக்கைகளில் வெளியாகி விட்டதே என்ற ஒரே காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அங்கே முக்கிய கழக பிரமுகர்கள் யார் யார் அன்றையதினம் கோர்ட்டுக்கு வந்திருந்தார்களோ அவர்கள் மீதெல்லாம் வழக்குகள் போட்டு—பொய் வழக்குகள் போட்டு அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய முதல்வரவர்கள் மீது அப்பொழுது லாரியை ஏற்றிக் கொல்ல முயன்ற நிகழ்ச்சி பற்றி போஸ்டர் அடித்ததற்காக நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்கள் மீதுகூட வழக்குகள் போடப்பட்டது என்பது கடந்த ஆட்சியிலே நடந்த உண்மை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கைதே செய்யப் பட்டேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> ஆகவே, ஒரு போஸ்டர் அடிப்பதற்காகக் கூட உரிமையில்லாத ஒரு அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசாங்கம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குமாரதாஸ் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.





<u>*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதி எங்கே போனாலும் அன்றிரவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மகளிர் பிரிவைச் சார்ந்தவர்கள் இரவோடு இரவாகக் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டார்கள். ஆனால் இன்றையதினம் புரட்சித் தலைவி அவர்கள் எந்த ஒரு பெண்ணையும் இரவிலே கைது செய்து சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்ற வரலாறு இல்லை என்கிற ஆட்சியை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு குமாரதாஸ் அறிவாரா என்று கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>டாக்டர். தே. குமாரதாஸ்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பில்லுக்கு வாருங்கள். வேறு எங்கேயெங்கேயோ போவது முறையல்ல.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> இல்லையில்லை. நான் போகவில்லை. இங்கே அறிமுகப்படுத்தியிருக்கக்கூடிய சட்டத்திலே, அரசியல் கட்சிகளாலோ அல்லது வகுப்பு, மொழி அல்லது இனக் குழுக்களாலோ ஏற்பாடு செய்யப்படும் ஊர்வலம், அதிலே வரக்கூடிய அந்தக் கூட்டத்தின் அடிப்படையில், கூட்டம் கிளர்ச்சி, ஆர்பாட்டம் அல்லது பிற, நடவடிக்கைகளின்போது ஏற்படுகின்ற சொத்துகளுக்கு, அத்தனையையும் எந்த அமைப்புகள் ஏற்பாடு செய்கின்றனவோ அவைகள் பொறுப்பேற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல நாம் ஒரு போராட்டத்திற்கு அல்லது ஆர்பாட்டத்திற்கு அல்லது ஒரு கட்சியினுடைய அணிவகுப்பை செய்கிற பொழுது ஒரு எதிர்கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லது ஏதாவது ஒரு சமூக விரோதிகள் கூட்டத்திலே வந்து கலாட்டாக்கள் செய்கின்ற நேரத்தில் அதற்கு அந்த ஊர்வலத்தையோ, போராட்டத்தையோ நடத்துகின்றவர்கள் பொறுப்பேற்க முடியுமா?

அதுமாத்திரம் அல்ல. அந்தப் போராட்டம் நடைபெறுவதைப் பரவலாக நீங்கள் பார்ப்பீர்கள் என்று சொன்னால் காவல் துறையினுடைய கட்டுப்பாடு மிக அதிகமாக இருக்கும். ஊர்வலம் புறப்பட்டவுடன் ஜீப் அல்லது வேன்களைக் கொண்டு வந்து விட்டுவிட்டு ஓரமாகப் போ, ஓரமாகப் போ என்று லத்தி சார்ஜ் போன்றவற்றின் மூலம் துரத்தியடிப்பதும், விரட்டியடிப்பதும் போன்ற இப்படிப்பட்ட ஒரு டென்ஷன் சுச்சுவேஷனை இவர்கள் உருவாக்குகின்ற காரணத்தால், பெருவாரியான கலாட்டாக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலைகளைக் காவல் துறையினர் முதலாவதாக மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பார்கள் என்று சொன்னால் இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் நடைபெறாது என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, ஒரு சாரார் மாத்திரம்— காரணம் இல்லாமல் காரியம் இருக்காது — எனவே, ஒரு டென்ஷன் வர வேண்டுமென்று சொன்னால் அதற்கு மூலகாரணமாக யார் இருக் இருக்கிறார்களோ அவர்களும் தண்டிக்கப்பட வேண்டும் எனகிற ஒரு வேண்டுகோளை நான் உங்கள் முன்னாலே

பிற்பகல் 1–45

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லி விட்டார்கள்; காரணம் இல்லாமல் காரியம் இருக்காது என்று. எனவே, காவல் துறையினர் அப்படி நடந்து கொள்கிறார்கள் என்றால், அதற்கு ஏதாவது காரணம் இருக்கும். போகக்கூடியவர்கள் வன்முறையில் இறங்கி இருப்பார்கள். அதைத் தடுப்பதற்கு அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்துத்தான் ஆக வேண்டி இருக்கும். அதேபோன்று ரோட்டிலே கண்ட இடத்திலே போவதற்கு அவர்களை நிச்சயமாக அனுமதிக்க முடியாது. நூறு பேர் அந்த ரோட்டையே அடைத்துக்கொண்டு போக வேண்டுமென்றால், எப்படி அனுமதிப்பார்கள்? ஓரமாகப் போக வேண்டுமென்றுதான் சொல்வார்கள். எனவே, அதிலே நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று ஊர்வலங்கள் நடக்கிறபோது, பெருவாரியாக காவல் துறையினர் மூலமாக இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் தொடர்ச்சியாக—இப்போதுள்ள சர்க்காரில் மாத்திரமல்ல:; from the begining எல்லாவற்றிலும் முக்கியக் காரணமாக இருந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று, பொதுச் சொத்துக்களுக்குச் சேதாரம் விளைவிக்கின்ற சூழ்நிலைகள் என்று வருகிறபோது—இப்போதுகூட மரியாதைக்குரிய இராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட நேரத்திலே நாடு முழுவதும் ஒரே கொந்தளிப்பு வந்தது. எத்தனைகோடி ரூபாய்க்கு என்று தெரியாத நஷ்டங்கள் பல்வேறு பகுதிகளிலே இருந்து வந்தன. அவர்களுக்கெல்லாம் நஷ்டஈடு வாங்கிக் கொடுப்பதற்கு நீங்கள் முன்வர தயாராக இருக்கிறீர்களா? பாதிக்கப்பட்ட அத்தனைப் பேர்களுக்கும் வழங்கத் தயாராக இருக்கிறீர்களா?



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஹைகோர்ட்டிலே வழக்குத் தொடரப்பட்டு, விசாரித்த நீதிபதி, அதிலே முழுமையாக எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அரசாங்கம் நஷ்ட ஈடு தரவேண்டுமென்று அவர் தீர்ப்பளித்திருக்கிறார். அதன்படி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில் நம்முடைய ஹைகோர்ட்டினுடைய ஆணைக்கேற்ப, இப்போது நமது அரசு அதன் அடிப்படையில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் இராஜீவ்காந்தி அவர்களின் மரணத்தையொட்டி ஏற்பட்ட வன்முறை சம்பவத்தின்போது ஏற்பட்ட பொருள் சேதங்களுக்கு, சொத்து சேதங்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து, அடுத்து அவரே ஒரு One Man Commission ஐயும் நியமித்து, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் இந்த நஷ்டஈட்டை தீர்மானம் செய்யவேண்டும்; நிர்ணயம் செய்யவேண்டும், மதிப்பிட வேண்டும் என்று அவரே அந்தத் தீர்ப்பில் கூறி அந்தப் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால்தான், அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி–திரு. கே. ஜே.எம். ஷெட்டி அவர்கள் ரிடையர்மெண்ட் ஆகிவிட்ட போதிலும் 31 மார்ச்சுடன் அவர் ரிடையர் ஆகிவிட்டார்; இந்தக் கமிஷனின் பணி இன்னும் முடியவில்லை என்பதற்காக அவருக்கு 6 மாத காலம் 'எக்ஸ்டென்சன்' கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> முடியுங்கள், டாக்டர் குமாரதாஸ்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> ஆக, இப்படிப்பட்ட பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகிறபோது, அங்கு நடைபெறுகிற பிரச்சினைக்கு, அவற்றை நடத்துகிற அணிதான் அல்லது கட்சியைத்தான் பொறுப்பேற்க வேண்டுமன்று சொன்னால், இப்போது ஜனநாயக அடிப்படையில் தொழிலாளர் அன்பர்கள்

போராட்டத்திற்கு வருகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், அந்தப் போராட்டம் நடைபெறுகிறபோது அல்லது ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறபோது, ஏதாவது ஒரு அசம்பாவிதம் வந்தது என்று சொன்னால், அதற்குத் தொழிலாளர்கள் அதற்காக ஈடுகட்ட முடியுமா? முடியாது. ஆக, அப்படிப்பட்ட தடைகள் வருகிற போது, அடிப்படை ஜனநாயக அடிப்படையில் போராட்டம், ஊர்வலம் இப்படிப்பட்டவைகள் தடை செய்யப் பெறவேண்டிய சூழ்நிலை வந்துவிடுகிறது. எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் இதை வன்மையாகக் கண்டித்து அமர்கிறேன்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** அவைக் குறிப்பிலே இருந்து நீக்கி விடுகிறேன் நான் பேசியதை. நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) தயவுசெய்து நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) நான் கண்டித்து உட்காருகிறேன் என்று முடித்து உட்கார்ந்ததற்குப் பிறகு, திரும்ப ஏதாவது பேசுவது எந்தவகையிலே முறையாகும்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. எந்தவகையிலே முறையாகும்? நீங்கள் பேசி உட்கார்ந்ததற்குப் பிறகு, நான் இன்னொன்றைப் பேசுகிறேன் என்று பேசுவது எப்படி முறையாகும்? தயவுசெய்து உட்காரவேண்டும். நான் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ....(குறுக்கீடு)

டாக்டர் தே. குமாரதாஸ் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி அளிக்காமல் பேசிக் கொண்டிருப்பது தவறு (குறுக்கீடுகள்). நான் ஆத்திரத்தில் சொன்னதை நானே திரும்பப் பெற்றுக் கொண்டு அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறேன். அதற்கும் மீறி மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. நான் சொன்ன மறுநிமிடமே நீக்கி இருக்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

பிற்பகல் 1–50

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார். இதுபோன்று அவர் பேசுவது முறையல்ல. பல உறுப்பினர்கள் தங்கள் அனுமதி பெற்று ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகின்ற போது அவர் அமருவது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



இல்லை. நின்று கொண்டேதான் பேசிக் கொண்டிருக்கிறார். அமைச்சர்கள் பேசினார்கள். நான் பேசி இருக்கிறேன். உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஒவ்வொருவர் பேசும்போதும் அமராமல் நின்று கொண்டே பேசுவது அவையினுடைய கண்ணியத்தைக் குறைப்பதாக ஆகிறது. யார் பேசினாலும் தங்களுடைய அனுமதி பெற்று குறுக்கிடுகின்ற நேரத்தில் நின்று கொண்டிருக்கிற உறுப்பினர் அமர்ந்துவிட வேண்டுமென்பது இந்த அவையிலே பின்பற்றப்படுகிற விதி மட்டுமல்ல; உலகத்திலே இருக்கிற நாடாளுமன்ற ஜனநாயக மரபைப் பின்பற்றுகிற அனைத்து நாடுகளிலும், எங்கேயாக இருந்தாலும் உட்கார்ந்து விடவேண்டும். ஆனால் இவர் உட்காருவது இல்லை. (குறுக்கீடு திரு. பழனிசாமி அது உங்களுக்கும் பொருந்தும். தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் அவ்வாறு நடந்து கொண்டதால்தான் எனக்கே ஆத்திரம் வந்தது. இன்னொரு உறுப்பினர் பேசுகின்றபோது, நான் உட்கார மாட்டேன், பேசிக் கொண்டுதான் இருப்பேன். பேரவைத் தலைவர் 'சொன்னால்கூட உட்காரமாட்டேன் என்பதனால் தான் நானே கூடச் சொன்னேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசிய பல சொற்றொடர்கள் அவைக் குறிப்பிலே ஏறியிருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கடைசியில் பேசி முடித்து உட்கார்ந்த பிறகு பேசிய எதுவுமே அவைக் குறிப்பிலே ஏறாது. நான் பேசியது உட்பட. (குறுக்கீடு) திரு. தண்டாயுதபாணியை அழைத்திருக்கிறேன்.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு. தண்டாயுதபாணியை அழைத்திருக்கிறேன். டாக்டர் குமாரதாஸை அழைக்கவில்லை, (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி: முன்னாள் பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு உறுதுணையாக இருந்தவர்கள், இராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்குப் பின்னால் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று கொலை செய்வதற்கு உறுதுணையாக

இருந்தவர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்பட்டதே என்பதற்காக இந்த நீதிமன்றம் கொலை செய்தவர்களைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் அவர்களுக்கும் நஷ்டயீடு வழங்க வேண்டுமென்று தீர்ப்புக் கொடுத்ததற்குப் பின்னால்தான் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஜனநாயகத்திற்கு எதிராக இருக்கின்றது. ஆகவே, இந்தியாவிற்கே வழிகாட்டுகிறது தமிழ்நாடு என்கிற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இல்லை என்று சொன்னால் ஒவ்வொரு இடத்திலேயும் ஜனநாயகம் என்கிற அகல் விளக்கு—அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல் அந்த அகல் விளக்பை வன்முறை, எதேச்சாதிகாரம், கொடுங்கோன்மை இவைகளிலேயிருந்து பாதுகாக்கிற ஒரு தலைவியாகத்தான் இந்தியாவிற்கே (மேசையைத் தட்டும் ஒலி) வழிகாட்டுகின்ற சட்டமாகத்தான் இந்தச் சட்டம் இங்கே வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தைத் தொடர்ந்து மற்ற மாநிலங்களும் பின்பற்றும் என்பதை நான் இங்கே உறுதியாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவு, பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக் கொண்டுவரப்படுகிறது என்கிற தலைப்பிலே வருகிறபோது, பொதுச் சொத்துக்களை நாசமாக்குவதையோ, அழிக்கப்படுவதையோ நிச்சயமாக யாரும் வரவேற்க முடியாது, ஏற்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிற போது இந்தச் சட்டமுன்வடிவு அதிலே இருக்கிற ஷரத்துக்கள் மிக நியாயமானவையாகத் தோன்றும். அதை ஆழமாகப் பார்க்கிற போது அதிலே இருக்கிற ஒவ்வொரு பிரிவுகளிலும் அரசியல் சட்டத்திற்கு முரணாகக் கூட சில ஷரத்துக்கள் இருக்கின்றன. யாராவது நீதிமன்றம் போனால்—நீங்கள் இதைச் சட்டமாக நிறைவேற்றினாலும் இதை நடைமுறைப்படுத்த முடியுமா என்கிற சந்தேகம் வருகிற ஷரத்துக்கள் இதிலே சில இருக்கின்றன. அதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

உதாரணத்திற்கு ஒன்று, பஸ் மீது கல் வீசினால்,கல் வீசியவர் சில ஷரத்துக்களைப் பார்த்தால், எறிகிற செயலைப் புரிகின்ற அல்லது அதைத் தூண்டுகின்ற அல்லது ஏவி விடுகின்ற அல்லது மற்றபடி உடந்தையாக இருக்கிற எவர் ஒருவரும் சுமார் ஏறக் குறைய ஐந்து ஆண்டுக் காலம் சிறைத் தண்டனைக்கு உட்படுவார்கள். அந்த மாதிரி அவர்களை ஆளாக்க வழி இருக்கிறது இந்த ஷரத்து சட்டமாக ஆகிறபோது யார் பஸ் மீது கல் வீசினார்களோ அவர்கள் மட்டுமல்ல,



காவல் துறையினர் நினைத்தால் கல் வீச இன்னார் எல்லாம் காரணமாக இருந்தார்கள் என்று சொல்லி அரசியல் கட்சியில் இருக்கின்ற எந்த நிர்வாகியையும், எந்தத் தலைவரையும் குற்றவாளியாகக் கொண்டு வந்து நிறுத்த முடியும். இது ஒன்று.

பிற்பகல் 1—55

இப்போதிருக்கின்ற ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்றல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசியபோது ஒரு வேளை நாங்கள் எதிர்க்கட்சியாக வந்தாலும் அப்போதும் இந்தச் சட்டம் இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். பொதுவாக யார் ஆளும் கட்சி, யார் எதிர்க்கட்சி என்பதைவிட்டுவிட்டு இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கிறபோது இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்கிறபோது அதனால் ஏற்படுகிற பாதிப்புகளைப் பார்க்கிறபோது ஆட்சியில் இருக்கிற யாரும் தனக்குப் பிடிக்காத எவரையும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அல்லது கட்சிக்கு அப்பாற்பட்டவராக இருந்தாலும் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் கொண்டுவந்து நிறுத்த முடியும். இது ஒன்று.

அடுத்தது அப்படி குற்றவாளி என்று கருதப்படுகிற யாரும் ஜாமீன் பெற முடியாது. ஒரு மினி தடா சட்டம் மாதிரி. தடா சட்டத்தில் கைது செய்யப்படுகிற யாரும் எப்படி ஜாமீனில் வர முடியாதோ அதைப்போல இதிலே இருக்கிற ஷரத்து (அ)ன் பிரகாரம் ஜாமீனில் ஆண்டிசிபேட்டரி பெய்ல் வாங்க முடியாது. ஆண்டிசிபேட்டரி பெய்ல் என்பது வழக்கமாக கோர்ட்டில் கிடைக்கிற ஒன்று. அதை யாரும் வாங்க முடியாது. இதுவும் நேச்சுரல் ஜஸ்டிஸ்க்கு எதிரானது.

அடுத்து அப்படி ஜாமீன் கொடுத்தால் கூட அது குறித்து அரசு வழக்கறிஞர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அவர்கள் அதை ஒத்துக்கொண்டால், நீதிபதி விரும்பினால் அவரை விடலாம். இதற்கிடையில் 10 நாட்கள் ஆகலாம்; ஒரு மாதம் கூட ஆகலாம். எனவே நிரபராதி அதுவரையில் ஜெயிலில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். ஏனவே இதன்மூலமும் தனக்குப் பிடிக்காத யாரையும் சிறையில் வைப்பதற்கு, எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களையும் குற்றவாளியாக, பெயிலில் கூட வராமல், ஜாமீனில் கூட வராமல் செய்வதற்கு இந்த ஷரத்தில் வாய்ப்பு இருக்கிறது.

அப்புறம் டேமேஜஸ். நஷ்டம் என்கிறபோது ஷரத்து 7-ல் பார்த்தால் நஷ்டத்தை யார் மதிப்பிடுவது? நஷ்டத்தை மதிப்பிடுவது அதிகாரி, அப்படி அவர் நஷ்டத்தை மதிப்பிடுகிறபோது ஏதோ ஒரு இயக்கம் என்று வைத்துக் கொள்ளுங்கள், 10 கோடி ரூபாய் தரவேண்டும் அல்லது ஒரு 10 இலட்சம் ரூபாய் தரவேண்டும் அதாவது டேமேஜை

அவர்கள் தரவேண்டும் என்று ஒரு அதிகாரி உத்தரவு போட்டால் அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போக முடியாது. அப்படி ஒரு ஷரத்து, அதாவது அதிகாரி என்ன நினைக்கிறாரோ அதைக் கட்டித்தான் ஆகவேண்டும். அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போக முடியாது என்று 7-வது ஷரத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தியாவில் வட மாநிலங்களில் பஞ்சாப், காஷ்மீர், அஸ்ஸாம் இதுபோன்ற மாநிலங்களில் அரசாங்கத்தின் சொத்துக்கள் மிகப் பெரிய அளவில் அழிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட மாநிலங்களில் கூட இதுபோன்ற ஒரு கடுமையான சட்டம் கொண்டுவரப் படவில்லை. குற்றவாளிகள் பெயிலில் வர முடியாது. டேமேஜ் அசெஸ் பண்ணுகிறபோது அதன்மீது 'இது அதிகம், குறைவு' என்று சொல்லி யாரும் கோர்ட்டுக்குப் போக முடியாது. இப்படி ஒரு ஷரத்து இருக்கிறபோது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பில்லில் க்ளாஸ் நம்பர் 5-ல்

"whoever, commits or instigates, incites or otherwise abets the act of throwing stones, bricks, soda-bottles or any other material whatsoever upon the persons travelling in any motor vehicle, shall be punished with imprisonment for a term which shall not be less than six months but which may extend to five years and with fine", என்று இருக்கிறது.

"provided that the court may, for any adequate and special reason to be mentioned in the judgment, impose a sentence of imprisonment for a term of less then six months."

என்று எக்ஸ்பிளனேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"For the purposes of this section "motor vehicle" shall have the same meaning as in clause (28) of Section 2 of the motor vehiclesa Act, 1988."

அதுமட்டுமல்ல இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அதைக் கவனிக்கத் தவறிவிட்டாரோ என்று கருதுகிறேன். அடுத்து செக்ஷன் 6-ல்



"No person accused or convicted of an offence punishable under this Act shall, it in custody, be released on bail or on his own bond unless the prosecution has been given an opportunity to oppose the application for such release,"

என்று இருக்கிறது. எனவே அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தம்முடைய வாதங்களை எடுத்து வைக்க வாய்ப்பு அளிக்கப்படும். அதுமட்டுமல்ல. க்ளாஸ் நம்பர் 5-இல் தெளிவாக இருக்கிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசுகிற போது யாரோ ஒருவர் ஒரு பஸ்ஸின் மீது ஒரு கல்லை எறிந்தால் எங்கோ இருக்கிற ஒருவரை அரசியல் காழ்ப் புணர்ச்சியின் காரணமாக குற்றவாளி என்று கூறி அவர் மீது நடவடிக்கை எடுத்து அவரைக் கைது செய்ய இந்தச் சட்டம் இடம் கொடுக்கிறது என்று கூறுகிறார். அப்படி அல்ல. ஒரு சாலையில் ஒரு பஸ்ஸின்மீது ஒரு கட்சியின் தொண்டர்கள் கல் எறிவார்களேயானால் அவர்களுக்குத்தான் தண்டனை. அவர்கள்மீது தான் நடவடிக்கை எடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சிறைத்தண்டனை என்பது யார் ஆக்சுவலாக அந்த ஆக்டில் ஈடுபட்டார்களோ, அந்தச் செயலில் யார் ஈடுபட்டார்களோ அவர்கள்மீது தான் இந்தச் சிறைத்தண்டனை என்பது விதிக்கப்படும். ஆனால் அவர்கள், அந்த பஸ்ஸிக்கு சேதம் விளைவிப்பார்களேயானால் அந்த நஷ்ட ஈடுதான் அந்த கட்சியின் தலைமையிடமிருந்து வசூலிக்கப்படும் என்பது தெளிவாக இருக்கிறது. எனவே கட்சியின் தலைமை எங்கேயோ உட்கார்ந்துகொண்டு இருக்கிறபோது, கட்சியின் தொண்டர்கள் இத்தகைய காரியத்தில் ஈடுபட்டால், அந்த தலைவர் இதற்காக பழி வாங்கப்படுவார்கள் என்று கூறுவது சரியல்ல.

பிற்பகல் 2-0$^{0}$

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே நீண்ட நேரம் எடுக்கவேண்டும் என்பதில்லை என்னவென்றால் ஏற்கனவே பொதுக்கூட்டம் மாதிரி நிறைய பேச்சு முடிந்திருக்கிறது. இன்னும் நிறைய பில்கள் இருக்கின்றன. நான் படித்தது, கிளாஸ் நெ. 5-லே இருக்கின்ற விளக்கம். 'கல் எறிபவர்' அதை திருப்பிச் சொன்னேன். முதலிலே ஏற்கனவே இருப்பதை எடுத்துக்கொண்டால், 'ஏவி விடுபவர்' அதற்கு உடந்தையாக இருந்தவர் என்று இப்படி 7, 8 வார்த்தைகள் இருக்கின்றன. வரிசையாகப் பார்த்தால் யாராவது ஒருவர் கல் வீசினார் என்று பார்த்தால், இவரைத் தூண்டியவர் இன்னார் என்று சம்பந்தம் இல்லாதவர்களைத்

கூட சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நான் சொன்னேன் இந்த கிளாஸ் பிரகாரம். நீங்கள் பார்த்தால் இதிலே பலபேர்களை இந்த குற்றத்திற்கு சம்பந்தப்படாதவர்களை சம்பந்தப்பட்டதாக, ஏவி விட்டார், தூண்டி விட்டார் என்றெல்லாம் யாரையும் கைது செய்யமுடியும். கோர்ட்டிலே போய் நிருபணம் ஆனால்தான் அவர்களுக்கு தண்டனை, அதை நான் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் இவ்வளவு சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால் ஒரு குற்றமும் செய்யாத எங்களை எல்லாம் கடந்த ஆட்சியிலே பொய் வழக்குகளைப் போட்டு இல்லாத செக்ஷனிலே திரித்து எங்களை சிறையிலே தள்ளினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இதிலே வர வேண்டாம். இதிலே வேண்டாம். நீங்கள் உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் அவர் பழைய கதையை சொல்கிறார். நானும். . . .(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களிடம் நீங்கள் கேட்டதற்கு சொன்னது, அதிலே இன்ன இன்னார் என்றெல்லாம் இருக்கிறது. தூண்டிவிடுபவர்கள் மீதுதான் வழக்கு என்று இருக்கிறதே தவிர அதற்காக ஒன்றும் செய்யாதவர்கள் மீது வழக்கு இருக்கும் என்பதற்கு அதிலே ஒன்றும் இடமில்லை என்பதுதான்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேஸ் என்று பார்த்தீர்கள் என்றால், இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொன்ன மாதிரி, உண்ணாவிரதம் இருந்து அடிபட்ட போது என் தொகுதியிலேகூட இரண்டு பஸ்கள் எரிக்கப்பட்டு நூறு பேர்கள் ஜெயிலுக்குப் போய், இன்னும் ரூ. 50 செலவு பண்ணி, மாதம் ஆயிரம் செலவு செய்துகொண்டு கோர்ட்டில் கேஸ் நடத்திக்கொண்டிருக்கிறோம். கோர்ட்டிலே தான் இருக்கிறது. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் பேசும் போது பேசினார். அதெல்லாம் பழைய சம்பவங்கள். அதில் நான் போக விரும்பவில்லை. இப்போது இருக்கின்ற சரத்திலே இருக்கிற விதிகளைத் தான் சொன்னேன். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி 7ஆவது என்னவென்று சொன்னால்



அரசு அதிகாரிகள் நிர்ணயம் செய்வார்கள். டேமேஜ் எவ்வளவு என்று சொல்லி அதற்கு மேலே கோர்ட்டுக்கு போக முடியாது. இதை எதிர்த்து நிச்சயமாக யாராவது கோர்ட்டுக்குப் போனார்கள் என்றால், இது வந்து அரசியல் சட்டத்திற்கு முரணானதாக இருக்கிறது என்று அடிபட்டுப் போகும்.

முதலமைச்சர் அவர்கள் 6-வது சரத்தைப் படித்தார்கள். 6-வது சரத்திலே என்ன இருக்கிறது என்று கேட்டால், அது வந்து 'பெயில்' எடுக்கிறபோது கவர்ன்மெண்டுக்கு நோட்டிஸ் கொடுத்து வரவேண்டும் என்று இருக்கிறது. 'பெயிலே' கொடுக்கமுடியாது என்று நீங்கள் சட்டமே கொண்டுவர முடியாது. ஆனால் ஏற்கனவே இருந்த ஆண்டிசிப்பேட்டரி பெயில்லே வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தான் முதலிலேயே பேசினீர்கள். பெயிலிலே வரமுடியாது என்று பேசினதாலே, வரமுடியும் என்பதற்கு விளக்கம் சொன்னார்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசினதுதான். இந்தச் சட்டத்தின்படி ஜாமீனிலே வரமுடியாது, 'தடா' சட்டத்தை விட மோசமான சட்டம், ஜாமீனிலேயே வரமுடியாது என்று சொன்னீர்கள். ஜாமீனிலே வரமுடியும் என்பதற்கான கிளாஸ்-ஐ சொன்னார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இரண்டு பக்கத்திலே. . . .பேசினால் சொல்லியாகவேண்டும் அல்லவா ? நீங்கள் வந்து (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள்தான் கேட்டீர்கள் ஜாமீனிலே வரமுடியாது என்று சொல்லி கேட்டீர்கள். ஜாமீனிலே வரமுடியும் என்று சொன்னார்கள். அதைத் தான் சொல்லித் தீரமுடியும். நான் சொல்லாமல் இருக்கமுடியாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வெளியிலே எப்படி வேண்டுமானாலும் பேசலாம். அவையிலே திசை மாறிப் போகின்றபோது ஏதோ ஒரு கட்டத்திலே நிறுத்தியாக வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இந்த மசோதாவை எதிர்த்துப் பேசலாம். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார், ஆனால் அவர் என்ன பேசினார் என்று பேரவைத் தலைவர் எடுத்துச் சொன்னதற்காகவே அவர் மீது களங்கம் கற்பிக்கின்ற மாதிரி சொன்னது சரியல்ல. அதை அவர்கள் வாபஸ் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியது இல்லை. இந்த அவையில் நீங்கள் ஒரு கேள்வியை, ஒரு வாதத்தை எடுத்து வைக்கிறீர்கள். அதற்குப் பதில் முதலமைச்சர் சொல்லி விட்டார்கள். நீங்கள் கிளப்பிய காரணத்தினாலேயே சொல்லி விட்டார்கள் என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். நீங்கள் சொன்னது, இது ஜாமீனிலே வரமுடியாத சட்டம். தடா சட்டத்தை விட மோசமாக இருக்கிறது என்று சொன்னீர்கள். இதற்கு முதலமைச்சர் அவர்கள் இந்த செக்ஷன்படி ஜாமீனிலே வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே ஜாமீனிலே வரமுடியாது என்று பேச வேண்டாம் என்றுதான் கேட்டுக் கொண்டார். இப்போது நான் அதைச் சொல்லவில்லை என்று திரும்பச் சொல்கிறீர்கள். நான் அதை உங்களுக்குக் கோடிட்டுக் காட்டினால் * * இதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

பிற்பகல் 2.05

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசுவதைப் பார்த்தால், இந்தச்சட்டம் எப்படியாவது நிறைவேறி, முறையாக செயல்படுத்தப்பட வேண்டும் என்ற அக்கரையோடு அவர் பேசுகிறார் என்று தான் நான் நம்புகிறேன். எனவே, அதிலே சில மாற்றங்கள் வராமல் இதை தடுக்க வேண்டும். அரசாங்கத்தோடு அவர் ஒத்துப் போகிறார், இது நியாயமான சட்டம் என்று தான் அவர் ஏற்றுக்கொள்கிறார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அவர் இதை ஏற்றுக் கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு.எஸ். திருநாவுக்கரசு:**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கவனித்துத் தான் சொல்கிறேன். நீங்கள் பேசியதை கவனிக்காமல் பேசவில்லை. நீங்கள் பேசியதை நான் கவனித்துதான் சொல்கிறேன்.

---

* மாண்புமிகு பெரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



(குறுக்கீடு) நீங்கள் இப்படியே பேசினீர்கள். நான் அதைச் சொன்னதும் ** என்கிறீர்கள். நான் இதைத்தான் சொல்ல வந்தேன். (குறுக்கீடு) நீங்கள் பேசியதைச் சொல்ல வந்தேன்.

திரு.எஸ்.திருநாவுக்கரசு: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது ஆன்டிசிபேடரி பெயிலைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை. இந்தச் சட்டத்தின்படி யாரும் ஜாமீனில் வர முடியாது. பெயிலில் வர முடியாது என்பதைத்தான் அவர் சொன்னார். அதற்கு நான் பதில் சொன்னேன். இந்தச் சட்டத்தில் unless the prosecution has been given an opportunity to oppose the application for such release என்று இருக்கிறது. என்று சுட்டிக் காட்டினேன். அதற்காகப் பேரவைத் தலைவர் அவர்கள் மீதே களங்கத்தை அவர்கள் சுமத்தி, ** என்று கூறியதை எல்லாம் நங்கள் கடுமையாக ஆட்சேபிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நீங்கள் பேரவைத் தலைவர் மீது சொன்ன வாசகம். நீங்களே திரும்பப் பெற்றுக் கொண்டால் ஆயிற்று. (குறுக்கீடுகள்).

திரு. எஸ்.திருநாவுக்கரசு ; **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு, இது சரியல்ல. நான் பெருந்தன்மையோடு நடந்து கொண்டதை நீங்கள் இப்படித் தவறாகப் பயன்படுத்தக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : ** என்று சொன்ன வார்த்தையை நீக்க வேண்டும் ** என்று சபையில் பேசக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் தலைவராகிய தங்களைப் பழித்துப் பேசிய சொற்றொடர்கள் அவைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. ** உறுப்பினர் இந்த மாதிரிப் பேசுவதைத் தவிர்க்கக் கேட்டுக் கொள்கிறேன். பேசிய பேச்சை வாபஸ் வாங்குகிற காரணத்தாலே உங்களுடைய பெருமை ஒன்றும் குறைந்துபோய் விடாது. (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. (குறுக்கீடுகள்.)

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அது உங்களுடைய பெருந்தன்மையை எல்லாம பார்த்ததற்குப் பிறகு கடைசியில் சொன்னார்கள். அது உங்களுடைய பெருந்தன்மையை இந்த அவை உணர்ந்து கொள்ளட்டும் என்பதை தெரிந்ததற்குப் பிறகு அவர்கள் சொன்னது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அது தான் இப்பொழுது தெரிகிறது. என்னுடைய சர்ட்டிபிகேட் மட்டுமல்ல. என்னுடைய அனுமதியைப் பெற்றுதான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுமாதிரி அத்து மீறிப் போக வேண்டாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்து மீறிப் போக வேண்டாம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15, 20 நிமிடங்களாக ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேலாக தாங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். அவர் பில் மீது பேசுகிறாரா இல்லையா? வேண்டுமென்றே திட்டமிட்டு ஏதோ குழப்பத்தை உண்டாக்குவதற்காக பேசிக் கொண்டிருக்கிறார் என்றால் தயவுசெய்து நீங்கள் இதை அனுமதிக்கக் கூடாது என்று இந்தச் சபையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேரவைத் தலைவரைப் பார்த்து ** என்று சொன்னதிலிருந்து இதுவரையிலும் அவர் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பேசி முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி நான் சரத்து வாரியாகச் சுட்டிக் காட்டினேனே தவிர குழப்பம் உண்டாக்கவில்லை. சில் பேர் இப்படிச் சொல்லியே, குற்றம் சாட்டி, குற்றம் சாட்டி முதலமைச்சருடைய அன்பைப் பெறுவதற்காக முயற்சிக்கிறார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து அதை இந்த மாதிரி உள் நோக்கம் கற்பிக்கக் கூடாது. திரு. திருநாவுக்கரசு, ஏற்கெனவே ஒரு முறை இந்த மாதிரிச் சொல்லி, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து நீங்கள் இங்கே பேசும்போது உள்நோக்கம் கற்பிப்பது முறையல்ல. (குறுக்கீடு).

இது எல்லாம் முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள், உறுப்பினர்கள் பேசியதற்கு, அமைச்சர்கள் கேட்டதற்கு உள் நோக்கம் கற்பிக்கிறீர்கள். (குறுக்கீடு) அதற்கெல்லாம் நேரம் ஒதுக்க முடியாது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தேவையில்லாமல் உள் நோக்கம் கற்பிக்கிறார்கள். தயவு செய்து அவருடைய அரசியல் வாழ்க்கையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். என்னுடைய அரசியல் வாழ்க்கையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். 40 ஆண்டுக் காலமாக திராவிட இயக்கத்திலே பெரியாரோடு, அண்ணாவோடு, பிறகு புரட்சித் தலைவரோடு, பிறகு புரட்சித் தலைவியோடு இருக்கிறோம் என்றால் நாங்கள் எல்லாம் அண்ணா தி.மு.க.–வினுடைய உண்மையான விஸ்வாசிகள். We are committed to the people, A.I.A.D.M.K. is an ideological home for us. நாங்கள் ஒன்றை எடுத்தால், அதிலே உறுதியாக இருப்போம். தயவு செய்து உள் நோக்கம் கற்பிக்க வேண்டாம். ஏனென்றால் நாங்கள் பொது வாழ்க்கைக்கு வந்தவர்களே தவிர, உங்களைப் போல பதவிக்கு வந்தவர்கள் இல்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

திரு. எஸ். திருநாவுக்கரசு: உங்களுடைய கடந்த கால, 40 ஆண்டுக்கால வாழ்க்கையை நான் ஒப்புக் கொள்கிறேன். உறுதியைப் பற்றி எல்லாம் பேச ஆரம்பித்தால் நானும் அதைப் பற்றி விளக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாம் சரியல்ல. ஏதாவது பில்லில் பேசுவதாக இருந்தால் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசினீர்கள். அதனால் பதில் சொல்கிறார்கள். நீங்கள் பேசிவிட்டு, அவர்கள் பேசுகிறார்களே என்று வருத்தப்பட்டால் எப்படி? நீங்கள் தான் ஆரம்பித்தீர்கள். (குறுக்கீடு) பில்லில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு, பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பில்லை விட்டு விட்டு எங்கெங்கோ பேசிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கே தெரியும். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களோடு நாங்கள் இருந்த நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் என்ன செய்தார் என்பது பேரவைத் தலைவர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். கடைசி கட்ட நேரத்தில் புரட்சித் தலைவி அவர்களுடைய இல்லத்திற்கு நாங்கள் செல்கிற நேரத்தில், அங்கே வேறு அணியிலே இருக்கிறவர்கள் இவ்வளவு கோடி ரூபாய் தருகிறார்கள், நீங்கள் அதற்குத் தயாரா என்று கேட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு இங்கே அமர்ந்து கொண்டு விமர்சனம் செய்வதுதான் எங்களுக்கு கேலித்தனமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு, பில்லில் பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எனக்குவேண்டும், இந்தத் தண்டனை. அவர் சொன்னார் அல்லவா, இது வேண்டும். திரு. செங்கோட்டையன் சொன்னது மாதிரி, அந்தக் குற்றச்சாட்டு எனக்குப் பரிசு. அதை நான் ஒத்துக் கொள்கிறேன். நான் அன்றைக்கு ஆதரிக்கவில்லை என்றால் அவரெல்லாம் மந்திரியாக வந்திருக்க மாட்டார். நான் ஏதோ ஒரு கோடி என்று சொன்னேன் என்று சொல்கிறார்கள். ஒரு கோடி கேட்டவர்கள் எல்லாம் ஓடிப் போய்விட்டார்கள். பல பேர் ஓடிப் போய் விட்டார்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாம் வேண்டாம் நீங்கள் சொன்னதால் பதில் சொன்னார்கள். அதோடு விட்டு விட்டு பில்லுக்குப் போங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து பில்லுக்குப் போங்கள். நீங்கள் உறுதியோடு இருக்க வேண்டுமென்று சொன்னீர்கள். என்ன உறுதி என்று அவர் சொன்னார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஜானகி அம்மா அணி, இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கிற அவர்களுடைய அணி என்று இருக்கிறபோது, கோடி வாங்கிக் கொண்டு, அங்கே மந்திரியாக இருந்துவிட்டு அப்புறம் ஓடி வந்தவர்கள் எல்லாம் நிறைய இருக்கிறார்கள். அல்லது ஓடிப் போனவர்கள் நிறைய இருக்கலாம். நான் கோடியாக செலவு பண்ணிக் கொண்டிருந்தேன். அந்தக் கட்சியை உருவாக்க.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் அவர் சொல்கிறார். எப்படிச் செலவழித்தீர்கள் என்றுதான் கேட்கிறார். (குறுக்கீடு) தயவுசெய்து இந்தப் பில்லில் பேசுங்கள். இல்லை என்றால் திரு. தம்புசாமியை அழைக்க வேண்டி வரும். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வை புரட்சித் தலைவி அவர்கள் துவங்குகிற போது புரட்சித் தலைவி அவர்களே அவர்கள் சொத்தை அடமானம் வேத்து, இந்த இயக்கத்தை நடத்தினார்களே தவிர உங்களைப் போன்றவர்களுடைய கருங்காலி இனத்திலிருந்து ஒரு ரூபாய் கூட பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: கோடி எங்கே இருந்து வந்தது என்பதைக் கேட்க விரும்புகிறேன். இந்தத் திருநாவுக்கரசு ஒழுங்காக இருந்திருந்தால், இந்தத் திருநாவுக்கரசு இல்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நீங்கள் எப்போதும் நிரந்தரமாக இருந்தீர்கள். அதில் பிரச்சினை இல்லை. எனவே நான் சொல்ல விரும்புவது, நீங்கள் எல்லோரும் முதலமைச்சரை ஆதரிக்கிறீர்கள். அது வேறு. அதற்கெல்லாம் பரிசு—அமைச்சர்கள் எல்லாம் இருக்கின்றனர். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்க வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-15

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி,ஆர். அவர்களின் மறைவுக்குப் பின்னால் கட்சியைக் காப்பாற்ற மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பல கோடிகளைச் செலவழித்தேன் என்று இங்கே கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் தஞ்சாவூரிலே கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நாட்களில் அவர் தங்கியிருந்த ஹாஸ்டலின் மெஸ் பில்லைக் கட்டுவதற்குக் கூட பணம் இல்லாமல், எனக்குத் தெரிந்த ஒருவர் அந்த பில்லைக் கட்டினார் என்று எனக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியிருந்த திருநாவுக்கரசு அவர்களுக்கு இத்தனை கோடிகள் எங்கிருந்து வந்தன என்பதை அவர் விளக்கினால் நன்றாக இருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி )

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நிலைகளில் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசுகின்ற நேரத்தில், எங்களைப் பார்த்து ஜூனியர் என்றே சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா தி, மு. க ஆரம்பித்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த நிலையில் இருந்தார் என்பதும் எங்களுக்குத் தெரியும். அதிராம்பட்டினம் கல்லூரியில் படிக்கிற போதும், 1977 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக அவர் அறந்தாங்கி தொகுதியில் சீட் கேட்கிற நேரத்தில் அவருடைய சொத்துக்கள் பற்றிய முழு விபரமும் எங்களுக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு நிலையில் இங்கே பேசுகிறபோது, கோடி ரூபாய் செலவு செய்தேன் என்று சொல்கிறார்கள் அவர் அதிராம்பட்டினம் கல்லூரியில் படித்து விட்டு சட்டக் கல்லூரியில் படிக்கிற போது அவருக்கு தீயத்தூரில் இருந்த சொத்துக்கள் பற்றிய முழு விபரமும் எங்களுக்குத் தெரியும் இந்த நேரத்தில் மறைந்த முதல்மைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்ததற்குப் பின்னாலே தி.மு.க. வுடைய 'முரசொலி' ஏட்டில் ஆங்கிலத்தில் அவருடைய சொத்துக்கள் பற்றிய முழு விபரமும் வெளியிடப்பட்டு, அதனுடைய தமிழாக்கமும் முரசொலியில் வந்திருக்கிறது அதைப்பற்றி முரசொலி ஏட்டில் (குறுக்கீடு) அவருக்கு என்னென்ன சொத்துக்கள் இருந்தன என்பதை முழுமையாக ஒரு பக்க அளவில் வெளி வந்திருக்கிறது. அந்த ஏட்டில் வெளி வந்திருக்கிற சொத்துக்கள் பற்றி இப்போது பேரவைத் தலைவர் மூலம் கேட்டுக்கொள்வதெல்லாம் அவருக்கு எப்படி இந்தச் சொத்துக்கள் வந்தன, எப்படி அந்தச் சொத்துக்களை சம்பாதித்தார் என்பது தான். மாண்புமிகு முதல்வர் அவர்களும் முழுமையான





விசாரணை வைத்து அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தப் பேரவையின் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தன் வாயாலேயே புரட்சித் தலைவர் மறைவுக்குப் பின்னர் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. இரண்டு அணிகளாகப் பிரிந்தபோது, இந்த அணிக்காக 'ஜெ' அணிக்காக ஒரு கோடியோ பல கோடியோ செலவு செய்தேன் என்று இங்கே கூறியிருக்கிறார்கள். நான் ஒன்றை மட்டும் தெளிவாகக் கூற முடியும். அவர் 'நால்வர் அணி' என்று பிரிந்து கொண்டு போனாரே, அந்த நால்வர் அணிக்காகத்தான் பல கோடியோ ஒரு கோடியோ செலவு செய்திருப்பாரே தவிர, நிச்சயமாக அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வுக்கு அவர் எதனையும் செலவு செய்யவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, நான் ஹாஸ்டலில் இருந்தபோது யாரிடமோ கடன் வாங்கி படித்ததாகவும் ஹாஸ்டலில் பணம் கட்டாததாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கோடிக்கணக்கில் செலவழித்தேன் என்று சொன்னதால், அவர்கள் அதையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், அவர் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்குந்தபோது, மெஸ் பில்லைக் கட்டாமல் வந்து விட்டார் என்று சொல்லவில்லை. அன்றையதினம் ஹாஸ்டலில் உள்ள மெஸ் பில்லைக் கட்ட முடியாமல் அவதிப்பட்ட நேரத்தில், எனக்குத் தெரிந்த நண்பர்கள் அவருக்கு உதவி செய்து அந்தப் பணத்தைக் கட்டினார்கள் என்று தான் கூறினேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே கொஞ்சம் கூட எந்தவிதமான உண்மையும் கிடையாது. அடிப்படை உண்மையே கிடையாது. இது

ஒன்று. முதலமைச்சர் அவர்கள் எனக்கு மெஸ் பில்லை யார் கட்டினார்கள் என்பதை வேண்டுமானால் சொல்லட்டும். நான் 1977-ல் முதன் முதலில் சட்டமன்ற உறுப்பினராக வந்த போது, என்னுடைய சொத்துக் கணக்கை இங்கே கொடுத்திருக்கிறேன் அப்போது என் தந்தையார் ,. . . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் கட்சியிலே சீட் கேட்ட நேரத்தில் அவருக்கு டெபாசிட் கட்டியதே நாங்கள் தான். அவருக்கு அன்றையதினம் டெபாசிட் கட்ட பணம் இல்லை என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிச்சை எடுத்துக்கொண்டு இருந்தேன் என்று சொல்லிக்கொண்டுகூட நீங்கள் பெருமைப் பட்டுக் கொள்ளுங்கள் ; ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது நீங்கள் 'கோடி' என்று சொன்னதால் இப்போது எல்லாம் வருகிறது. ஒரு கோடியைச் செலவழித்தேன் என்று சொல்கிறபோது, அந்த ஒரு கோடியை எப்படிச் செலவழித்திருக்க முடியும், அவர் அமைச்சரானபோது இவ்வளவு தானே என்று எல்லாம் சொல்கிறார்கள். மாண்புமிகு வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 2-20

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோடியினுடைய இரகசியம் 1987-ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதி புரட்சித் தலைவர் அவர்கள் மறைவதற்கு முன்னாலும், மறைந்ததற்கு பின்னாலே இருக்கின்ற கோப்புகளிலே இருக்கிறது. அந்த கோப்புகள் தற்போது பரிசீலனையில் இருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நீங்கள் அமைச்சர்கள், எழுந்து பேசுகின்றபோதும் ஒலிபெருக்கி கொடுக்கின்ற காரணத்தால் அவர்கள் பேசுவதெல்லாம் ரிக்கார்ட் ஆகிறது. அதைப்பற்றி எல்லாம் நான் கவலைப்படவில்லை,



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் பேசுகிறீர்கள். அது ரிக்கார்ட் ஆகிறது. ஆகவே உங்களுக்கும் அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ரிக்கார்ட் ஆவது பற்றிக் குறை கூற வேண்டாம். உங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறேன். நீங்கள் பேசுகிறீர்கள். அதற்கு உரிய பதிலைச் சொல்லிவிட்டால் முடிந்து போகும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அதை இப்போதே சொல்லுகிறேன். அவர் சொன்னதைப் போல ஏறக்குறைய 1977-ல் நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தபோது சட்டமன்றத்திற்கு என்னுடைய தந்தையாருடைய சொத்து கணக்கு, எவ்வளவு நிலம் இருக்கிறது என்பதையெல்லாம் கொடுத்திருக்கிறேன் அது சட்டசபையிலே இருக்கிறது. ஏறக்குறைய 30, 35 ஏக்கர் நிலம் அன்றைக்கு என்னுடைய தந்தையாருக்குச் சொந்தமாக இருந்தது. அந்த அக்கவுண்ட் கொடுத்திருகிறேன். படிக்க வைத்தது யாரோ என்றும் யாரோ கடன் கொடுத்ததாகவும் கைமாற்று வாங்கிப் படித்ததாகவும், முதலமைச்சருக்கு வேண்டியவர் கொடுத்ததாகவும், டெப்பாசிட்டே திரு. ரகுபதி கட்டியதாகவும், இப்படி ஏதேதோ சொல்லியிருக்கிறார்கள் இன்னும் சொல்லப் போனால் பிச்சை எடுத்தேன் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு கோடி ரூபாய் செலவழித்தேன் என்பது மட்டும் உண்மையாக இருக்க வேண்டும் ; இதெல்லாம் தவறாக இருக்க வேண்டும் என்பது போல நீங்கள் வாதாடுவது எப்படி ? மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1977-ல் அவருக்கு டெப்பாசிட் கட்டவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு மறுக்க முடியுமா ? (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படியே சொல்லிக் கொண்டே போனால், "நீங்கள் சாப்பிட்டுக் கொண்டு இருந்ததே நான் கொடுத்த காசில் தான் ; இந்த பத்து வருஷமும் நான் உதவி பண்ணியதால் தான் நீங்கள் உயிரோடு இருந்தீர்கள் என்று சொல்லலாம் ரகுபதியை. இதற்குப் பின்னாலே தான் மந்திரியாக முடிந்தது என்று கூட சொல்லலாம், இதெல்லாம் வாதமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவுக்கரசிடம் காசு வாங்கும் அள

விற்கு எங்களுடைய குடும்பம் தாழ்ந்த குடும்பம் அல்ல. திரு நாவுக்கரசுக்கு பணம் கொடுக்கிற இடத்திலேதான் நாங்கள் இருந்தோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆமாம். அவர் செட்டிநாட்டு ராஜா குடும்பத்தைச் சேர்ந்தவர். நான் சாதாரண விவசாயி ; பிச்சை எடுத்துக் கொண்டிருந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதெல்லாம் புதுக்கோட்டை மக்களுக்குத் தெரியும். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு யார் குடும்பம், என்ன குடும்பம், அவர் என்ன, நான் என்ன என்று தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேறு பிரச்சினைக்குப் போகலாம். நீங்கள் பேசி முடிக்கலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நீங்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி இருக்கின்ற காரணத்தால் நான் சொன்னேன். இங்கே ஒரு கோடி ரூபாய் எப்படி வந்தது என்று கேட்டார்கள். ** எப்படி முதலமைச்சருக்கு செலவு செய்தார் என்று கேட்கிறார்கள். பல பேரிடமும் நன்கொடையாகப் பெற்று செலவு செய்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மறைந்த முதல்வர் புரட்சித் தலைவரைப் பற்றி இந்த அளவிற்கு அபாண்டமான ஒன்றைச் சொல்வது, தன் மீது ஏற்படும் பழியை அவர் மீது சுமத்த முற்படுவது முறையல்ல. எனவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் இந்த பில்லில் பேசி முடிக்கலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உங்கள் மீது இருக்கிற நூற்றச்சாட்டு கோடிக்கணக்கான பணம் உங்களுக்கு எப்படி வந்தது என்கிற ரகசியம் என்னிடத்திலே கோப்பாக இருக்கிறது என்று அமைச்சர் சொல்லுகிறார். அதற்கு விசாரணை வையுங்கள் என்று நீங்கள் கேட்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் தேவையில்லாத பிரச்சினையை இப்போது கிளப்பிக் கொண்டிருக்கிறார். இங்கே பொது சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதை பற்றிய சட்ட முன் வடிவைப் பற்றி பேசுவதை விட்டு விட்டு

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றன.



சொந்த சொத்துக் கணக்கைப் பற்றி பேசிக்கொண்டிருப்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. எனவே பில் மேல் அவர் பேசினால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. இப்போது நீங்கள் இந்த பில்லிலே பேசி முடிக்கலாம். நேரம் ஆகிவிட்டது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேசி முடித்து விடுகிறேன். நான் என்ன சொல்லுகிறேன் என்றால், இது மிக கொடுமையான சட்டம் ; கடுமையாக இருக்கிறது. இதிலே இறுக்கமான ஷரத்துக்கள் இருக்கின்றன. எனவே இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி இந்த மாதிரி பொதுச் சொத்துக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சட்டம் கொண்டு வருவதாக இருந்தாலும் கூட எதிர்க் கட்சிகளுடைய அனைத்துத் தலைவர்களையும் அழைத்து, வழக்கறிஞர், அட்வகேட்-ஜெனரல் ஆகிய எல்லோரையும் வரச் சொல்லி மீண்டும் மறு பரிசீலனை செய்து நியாயமான சட்ட முன் வடிவாக கொண்டு வருவதற்கு முயற்சிக்கலாம். As it i இப்போது இருப்பது மிகக் கடுமையான சட்டம். அது ஏற்கெனவே நான் சொன்னபடி 'தடா' மாதிரி உள்ள சட்டம். இதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவர், துறையின் சார்பில் உங்களுக்கு எப்படி எப்படி பல கோடிகள் வந்தன என்ற அந்த ரகசியம் அந்த கோப்புகளில் இருக்கின்றது என்றும் அதை விசாரித்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்றும் சொன்னார்கள். நீங்கள் இந்த பில்லிலே பேசி முடியுங்கள். அதைத் தவிர திரும்பத் திரும்ப விசாரணைக் கமிஷன் என்று ஆரம்பிப்பது சரியல்ல. அவர் பேசியது, புரட்சித் தலைவர் மறைந்ததற்கு பின்னர், எப்படி பல கோடிகள் வந்தது என்ற ரகசியம் என்னிடத்திலே கோப்பிலே இருக்கிறது என்கிறார். அதை முடிக்கவும். திரு. தம்புசாமி. (குறுக்கீடு) திரு. தம்புசாமி அவர்கள். (குறுக்கீடு) சபாநாயகருக்காக அல்ல. நான், நடக்கிறதுக்கு சொல்ல வேண்டியது தானே இருக்கும். (குறுக்கீடு) இல்லை, அவர் சொன்னது வேறு ; நீங்கள் கேட்பது வேறு. திரு. தம்புசாமி அவர்கள். (குறுக்கீடு) திரு. தம்புசாமி.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பிற்பகல் 2–25

திரு. எஸ். திருநாவுக்கரசு : ** (குறுக்கீடு).

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு கடைசியில் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது. (குறுக்கீடுகள்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : முதலிலிருந்து நீக்கினால் வெளியே சொல்வேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு முறை தவறி நடக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) திருநாவுக்கரசு முறை தவறி நடக்கக் கூடாது. நான் திரு. தம்புசாமியை அழைத்ததற்குப் பிறகு, திருநாவுக்கரசு இப்படிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.. திருநாவுக்கரசை அவையிலிருந்து வெளியேற உத்தரவிடுகிறேன். திருநாவுக்கரசை அவையிலிருந்து வெளியேற உத்தரவிடுகிறேன்.. திருநாவுக்கரசை அவையிலிருந்து வெளியேற உத்திரவிடுகிறேன். (குறுக்கீடு) திருநாவுக்கரசை அவையிலிருந்து வெளியேற உத்தர விடுகிறேன். (குறுக்கீடுகள்) சார்ஜெண்ட், திருநாவுக்கரசை வெளியேற்றவும். (குறுக்கீடுகள்) சார்ஜெண்ட், திருநாவுக்கரசை வெளியேற்றவும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் உட்கார்ந்து தானே இருக்கிறேன். .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மார்ஷல் சென்று திருநாவுக்கரசை வெளியேற்றவும். (குறுக்கீடுகள்).

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே. .

திரு. எஸ். திருநாவுக்கரசு : ** (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மார்ஷல் வெளியேற்றுறபோது, மார்ஷலோடு இவ்வாறு தவறாக நடந்து கொள்வது . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்ற பெற்றது.





திரு. எஸ். திருநாவுக்கரசு **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடனே அப்புறப்படுத்த வேண்டும் ; உடனே வெளியேற வேண்டும் ; (குறுக்கீடு) உடனே வெளியே அப்புறப்படுத்த வேண்டும்.

(உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்).

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது சொத்துக்கு சேதம் விளைவிக்ககக் கூடாது என்ற அதற்குரிய சட்டம் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொது சொத்துக்கு சேதம் விளைவிக்க வேண்டுமென்ற நோக்கத்திலிருந்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாக நான் பேசவில்லை ; ஆனால், பொதுச் சொத்துக்கு சேதம் என்று, அதைத் தடுப்பதற்கு சட்டம் என்ற பேராலே, அதன் உள்ளடக்கம் முழுமையும். . . .

— மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டவர்கள் லாபியிலே இருந்து பத்திரிகையாளர்களைச் சந்திப்பதும் தவறு ; அப்படிப்பட்டவர்களைப் பத்திரிகையாளர்கள் லாபியிலிருந்து பேட்டி காண்பதும் தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : அந்த பொது சொத்துக்கு சேதம் விளைவிப்பதை தடுப்பதற்குரிய சட்டம் என்ற பேராலே சொல்லப் பட்டு இருக்கிற உள்ளடக்கம் முழுமையும் ஜனநாயகத்திற்கு ஆபத்தாக கூறப்பட்டு இருக்கிற விஷயமாக அது இருக்கிறது. பொதுவாக இந்த ஜனநாயக உரிமை என்பது நீண்டகாலமாக போராடிப் பெற்று இருக்கக்கூடிய சலுகைகளாகும். உதாரணத்திற்கு சொன்னால், இந்திய நாட்டிலே பிரிட்டிஷ்காரர்கள் ஆட்சி நடத்திய காலத்திலே கூட அவர்கள் இந்திய நாட்டிலே இருந்து வெளியேற வேண்டுமென்று நாடு முழுமையும் நடைபெற்ற தேசிய இயக்கப் போராட்டக் காலத்திலேயும் கூட பிரிட்டிஷ்காரர்கள் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து பயன்படுத்தவில்லை. உதாரணத்திற்கு, 'தடா' சட்டம் அமலில் இருக்கிறது. அந்த 'தடா' சட்டம் ஒரு கடுமையான கொடுமை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

யான சட்டமாகும். அது இப்போது அமல்படுத்தப்படுகிறது. ஆனால், அந்த 'தடா' சட்டம் 1911-வது ஆண்டில் பிரிட்டிஷ்காரர்களால் கொண்டுவரப்பட்ட சட்டமாகும். அப்படி கொண்டு வந்த பிரிட்டிஷ்காரர்கள் கூட அந்த சட்டத்தை பயன்படுத்தியதாக இதுவரையில் வரலாறு கிடையாது. அதற்குப் பிறகு வெள்ளையர்கள் வெளியேறியபிறகு, சுதந்திரமடைந்த பிறகு, இந்த நாட்டை ஆளுகின்ற மாநில அரசாக இருந்தாலும், மத்தியில் இருக்கிற அரசாக இருந்தாலும், அந்த தடா சட்டத்தை இதுவரையில் பயன்படுத்தியது கிடையாது. ஆனால், இப்போது தமிழகத்திலே அது பயன்படுத்தப்படுகிறது. அது போன்ற பொது சொத்துக்கு சேதம் விளைவிக்கக் கூடியதை தடுப்பதற்கான சட்டமாக இருந்தாலும், இதிலே சொல்லி இருக்கக்கூடிய விஷயங்கள் முழுமையும் ஒரு ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதாகும். உதாரணத்திற்கு 'தடா' சட்டத்தை விட கடுமையாகக் கூறப்படுகிறது. ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டு, அவர் கைது செய்யப்படுவாரானால், அவர் ஜாமீனில் வர முடியாது. ஆறாவது நேரத்தில் ஜாமீனில் வருவதற்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியென்றால் அது பொது சொத்துக்கு ஏதோ சேதம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. ஆனால் அந்த பொது சொத்துக்கு சேதம் விளைவிக்க கூடாது என்ற இந்த சட்டத்திற்குள்ளே சாதாரண மக்களுடைய ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஊர்வலம் நடத்துகிற போதுஅல்லது பொதுக்கூட்டம் நடத்துகிறபோது ஆர்ப்பாட்டம் நடத்துகிறபோது அல்லது மறியல் செய்கிறபோது, உண்ணாவிரதம் செய்கிறபோது—இப்படி பல்வேறு இயக்கங்கள் நடைபெறுகின்றன. இந்த இயக்கங்கள் முழுமையும் தொடர்ந்து கோரிக்கை வைக்கிற மக்கள் போராடி பெற்றிருக்கிற சலுகைகள் ஆகும். இந்த சலுகைகளை ரத்து செய்கிற நிலைமை தான் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த இயக்கத்தை நடத்துகிறபோது, அந்த இயக்கத்திலே ஏதாவது தூண்டப்பட்டு, அதன்மூலம் ஒரு சேதம் ஏற்படுமானால்....

பிற்பகல் 2-30

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> தலைவர் அவர்களே ஊர்வலம் நடத்துவது எல்லாம் தடை செய்யப்பட்டிருப்பதைப் போல சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அல்ல.

<u>திரு. வே. தம்புசாமி :</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி நடத்துகிறபோது அதனால் விளைவுகள் ஏற்பட்டால் இந்த சேதம் முழுவதற்கும் அந்தக் கட்சியிலிருந்து வசூலிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது காவல் நிலையத்தில், பொதுக்கூட்டம் நடத்த வேண்டுமென்றால் எழுதிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பொதுக் கூட்டம் நடத்துகிறபோது, அதனால் உயிர்ச் சேதம், உடைமைச் சேதம் ஏற்படு



மானால், பொதுக்கூட்டம் நடத்துகிற கட்சியே பொறுப்பு என்று எழுதிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட எழுதிக் கொடுத்த நிலைமையே கிடையாது. இப்போது எழுதிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. உண்ணாவிரதம் இருந்தாலும் கூட, தர்ணா நடத்தினால் கூட, இப்போது எழுதிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது வரையில் எந்தப் பொதுக்கூட்டமும் நடந்து அதனால் சொத்து சேதம், உயிர்ச் சேதம் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட நடைமுறை கிடையாது. சாதாரண மக்கள் இன்றைக்கு உரிமைக்காக பல்வேறு முறைகளில் போராட வேண்டியிருக்கிறது. அது யாராக இருந்தாலும் கூட, இன்றைக்கு போராடாதவர்களே யாரும் இருக்க முடியாது. சின்னஞ்சிறு குழந்தைகள் கூட தங்களுடைய கோரிக்கைக்காக பலவேறு இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி நடத்திக்கொண்டிருக்கிற அந்த உரிமை இன்றைய தினம் பறிக்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமைக்கு எதிர்காலத்தில் ஏதோ விளைவுகளை ஏற்படுத்தி, அதனால் சேதத்தை ஏற்படுத்தி, ஏற்படுகிற இழப்பை நடத்துகிற கட்சியே கொடுக்க வேண்டும் என்று கூறுகிறபோது, எந்த விதத்திலும் இது பொருத்தமாக இருக்காது. எந்த மாநிலத்திலும், எந்த நாட்டிலும், இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வரப்படவில்லை யென்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இது எதிர்காலத்தில் ஜனநாயக உரிமைகளை பழி வாங்குகிற நிலைமைக்கு கொண்டு போய்விடும்.

முதலமைச்சர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இறந்த நேரத்தில் ஏற்பட்ட விளைவுகளுக்கு பூராவும் அரசு கொடுக்க வேண்டும் என்று கோர்ட் இப்படி தீர்ப்பு அளித்து இருக்கிறது என்றார்கள். தீர்ப்பு அளித்து இருப்பது உண்மை. ஆனால் அண்ணா தி.மு.க. அரசு இதைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. எந்த ஒரு அரசாக இருந்தாலும், தமிழ்நாட்டை ஆட்சி நடத்துகிற அந்த அரசு, பொதுவாக ஏற்பட்டிருக்கிற சேதங்களுக்கு பொறுப்பு ஏற்கவேண்டும். கொடுக்க வேண்டுமென்று கூறுகிறது. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அந்த முடிவு தான் வரும். அதிலே கருத்து வித்தியாசம் கிடையாது. ஆனால் அதுகூட இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, இதைப் பயன்படுத்தி, தொடர்ந்து இருக்கிற பல்வேறு நடைமுறைகள் தெரியும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகூட இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவது தவறு. எந்த அளவுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது, எவ்வளவு நஷ்டயீடு வழங்க வேண்டும் என்பதை உயர்நீதிமன்றம் நியமித்த அந்த 'ஒன் மேன் கமிஷன்', ஐ.ஏ.எஸ். அதிகாரி, திரு. கே. ஜே. எம். ஷெட்டி, இன்னும் அந்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அந்த நஷ்டத்தை மதிப்பீடு செய்கிற பணி இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. அது என்றைக்கு முடிவடைகிறதோ. அன்றைக்கு அந்த கமிஷன் வழங்குகிற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நஷ்டயீட்டை இந்த அரசாங்கம் நிச்சயமாக வழங்கப்போகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. இதை அப்படி பயன்படுத்திக் கொண்டு கீழே தவறாக ஜனநாயக இயக்கங்கள் நசுக்கப்படும். இதற்கு பல வரலாறுகள் உண்டு. உதாரணமாகச் சொன்னால் காங்கிரஸ் கட்சி மத்தியிலே ஆட்சி நடத்துகிறபோது அன்றையதினம் சாதாரண விவசாயத் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கை வைக்கக்கூடாது என்பதற்கு அவர்களுடைய இயக்கத்தை கட்டுப்படுத்துகிறபோது, அன்றைக்கு எவ்வளவு கடுமையான அடக்குமுறைகள்.. (குறுக்கீடுகள்) வரிசையாகச் சொல்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி, நேருக்கு நேர் பேசக் கூடாது. இடம் கேட்கிறார்கள். அதைச் சொல்லுங்கள்.

திரு. வே. தம்புசாமி : அப்போது வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்திற்குப் பின்னால் காங்கிரஸ் கட்சி ஆட்சி ஏற்பட்டது. இந்தச் சாதாரண விவசாயத் தொழிலாளர்கள், தங்களுடைய கோரிக்கைகளை வைக்கிறபோது, என்ன நடந்தது? செவராமணி சுடப்பட்டது. இரணியன், நடேசன், ஆறுமுகம், தனப்பால் குப்பு என்று சேலக்கரையிலே 22 பேர்களைக் கொண்டு வந்து.. (குறுக்கீடுகள்).

பிற்பகல் 2-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் (குறுக்கீடு). நேருக்கு நேர் பேசவேண்டாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே..



திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சமூக விரோதிகள், சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று.. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் (குறுக்கீடு) சி.பி.எம். இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ, 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சைத் தரணியிலே நடைபெற்ற அந்த விவசாயப் போராட்டங்களை எல்லாம் நினைவு கூர்ந்தார்கள். ஆனால் அதில் எங்களுக்கும் பாத்திரம் உண்டு. ஆனால் அன்றைக்கு இருந்த தலைவர்களுக்கும், இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சியிலே நீங்கள் எல்லாம் இருக்கிறீர்களே, அதற்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. அன்றைக்கு விவசாயிகளுக்காகவே அவர்கள் இருந்தார்கள். ஆனால், இன்றையதினம் விவசாயிகளுடைய விரோத கொள்கைகளுக்காக இருக்கிற காரணத்தாலேதான், இன்றைக்கு ஒவ்வொரு முறையும், சட்டமன்றத்திலே தேய்ந்து ஒரு உறுப்பினராக ஆக்கி, அந்த விவசாயிகளே உங்களைத் துரத்தி தஞ்சையிலிருந்து அனுப்பி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால், எனக்குத் தெரியும். சீனிவாசராவ், உங்களுடைய பவுண்டர்லீடர், அவர்கள், அரைக்கால் சட்டையைப் போட்டுக்கொண்டு, விவசாயிகளுக்காக பாடுபட்டார். ஆனால், இன்றைக்கு இங்கே பழனிசாமி அவர்களையும், பார்க்கிறேன், அருமைச் சகோதரர் அவர்களையும் பார்க்கிறேன், ஒரு பூர்ஷுவா போல இருக்கிறார்களே, தவிர, அந்த சீனிவாசராவைப் போல எதையும் இழக்கவில்லை சீனிவாசராவ் யார், அந்த கிசான் மூவ்மெண்டினுடைய பவுண்டர் லீடர். உங்களுக்குத் தெரியும், அவருடைய தியாகம் என்ன, தன்னலமறுப்பு என்ன? எனவே விவசாயிகள் உங்கள் பக்கத்திலே அன்றைக்கு இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு விவசாயிகளிடமிருந்து நீங்கள் அப்புறப்படுத்தப்பட்டீர்கள். எனவேதான், ஒன்றே ஒன்று என்று இங்கே இருந்து கொண்டிருக்கிறீர்கள் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி அவர்கள் சொல்லட்டும். (குறுக்கீடு) பேசுகிற உறுப்பினர் அவர்தானே. அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு). அவர் இதற்கு பதில் சொல்லமாட்டாரா? தயவுசெய்து திரு. தம்புசாமி அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு). திரு. தம்புசாமி, நீங்கள் பேசுகிறீர்களா, அல்லது பேசி முடித்துவிட்டீர்களா? (குறுக்கீடு) திரு. தம்புசாமி அவர்களைப் பேச அழைத்தால், அவர்கள் பேசவேண்டும். (குறுக்கீடு).

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இப்போது நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு ஓரிரு கிராமங்களிலே 10, 15 கிராமங்களிலே இருந்த விவசாயிகளுடைய சங்கம், இன்றையதினம் 1 லட்சத்து 23 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். விவசாயிகளிடமிருந்து நாங்கள் ஒதுங்கவில்லை. நாங்கள் பூர்ஷ்வாக்களும்கிடையாது. நீங்கள்வேண்டுமானால், உங்களுடைய ரகசிய போலீஸ் மூலம் எங்களுடைய வாழ்க்கையை விசாரித்துத் தெரிந்து கொள்வது மிகமிக அவசியம் என்று இந்தச் சட்டமன்றத்தின் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படி யாரும் நீங்கள் சொல்வதைப் போல கிடையாது. வேண்டுமானால், சட்டமன்றத்திற்கு வரவேண்டும் என்று, எங்கள் கட்சியால் தைத்துக் கொடுக்கிற இந்த வெள்ளைச் சட்டையை வேண்டுமானால், போட்டுக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, எங்களுடைய வாழ்க்கையை நீங்கள் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம் என்பதை இப்போதும் சொல்கிறேன். (குறுக்கீடு). இப்போதும் கூறுகிறேன். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் சம்பளம் கட்சிக்கு முழுமையாக அளிக்கப்படுகிறது. எங்களுக்குக் கொடுக்கப்படுகிற படியும் எங்களுடைய கட்சிக்கு அளிக்கப்படுகிறது. கட்சி அன்றாடம் எங்களுக்கு உணவுச் செலவுக்கு என்ன ஆகிறதோ, அதைக் கொடுக்கிறது. தபால் செலவை கட்சி செய்கிறது, போன் செலவை கட்சி ஏற்றுக்கொள்கிறது. எனக்கு உணவுச் செலவுக்கு நான் செலவழித்துவிட்டுத் தகவல் கொடுத்தால், அதற்கு கட்சியிலே பணம் கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே, எங்களுடைய சம்பளம் முழுமையும் இன்றையதினம் கட்சிக்குக் கொடுக்கிறோம். ஆனால் இன்றைக்கு எந்தக் கட்சியிலேயும் இப்படிப்பட்ட நிலை இல்லை என்பதை இப்போது நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே மாதிரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இந்தச் சம்பளம் முழுமையும் கட்சிக்குத்தான். அந்த அளவிற்கு நாங்கள் உழைத்துக் கொண்டு இருக்கிறோம். வேலை செய்து கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் சொல்கிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தை பயன்படுத்துகிறபோது, தவறாக பயன்படுத்தக்கூடிய சூழ்நிலைக்குத்தான் கொண்டு போய் நிறுத்தும். ஏன் என்றால், கடந்த காலத்திலே அவசர காலத்திலே பல பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். எங்களுடைய தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். சம்பந்தம் இல்லாதவர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டார்கள். அந்த நிலைமைக்கு, அதிகாரிகளுக்குப் பிடிக்காதவர்கள் அல்லது ஆளும் கட்சியிலே இருப்பவர்களுக்குக்கூட பிடிக்காதவர்கள் என்கிற நிலைமை இருக்குமானால் இதைப் பயன்படுத்தி, இந்தத் தவறைச் செய்தார்கள், அதைச்



செய்தார்கள் என்று இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்தக் கூடிய நிலைமை எதிர்காலத்திலே ஏற்படும். எனவேதான், எதிர்க்கட்சிக்கு இருக்கிற ஒரு குறைந்தபட்ச உரிமையை சீரழிக்கக்கூடிய, அதைப் பாதுகாக்க முடியாத அளவிற்கு இந்தச் சட்டம் எதிர்காலத்திலே செயல்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் பல்வேறு பிரச்சினைகள் வந்து கொண்டுஇருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பிற்பகல் 2-40

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். அம்மாப்பேட்டையில் கடந்த 20 ஆம் தேதி எங்கள் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டிருக்கிறது. தாக்கி அதிலிருந்த சொத்து, கொட்டகை முழுவதையும் பிரித்து எடுத்துக்கொண்டு சென்று விட்டார்கள். யார் என்று தெரியவில்லை. காவல் துறைக்கு புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதன் பிறகு அம்மாப்பேட்டையினுடைய ஒன்றியச் செயலாளர், சிகாமணிதான் ‹பிரித்தார் என்று அவரே ஒத்துக் கொண்டிருக்கிறார். இது ஊர் அறிந்த உண்மை. நீங்கள் அந்த ஊரிலே விசாரியுங்கள். நான் அது தவறு என்று சொல்லவில்லை. அவரே அதை ஒத்துக்கொண்டு, எங்கள் தோழர்களை அடித்து, நான்தான் எடுத்துக்கொண்டு போவேன், உன்னால் முடிந்ததைச்செய் என்று சொல்லி அது நடந்திருக்கிறது. ஆனால் காவல்துறையில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த மாதிரியான சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழக்கூடிய நிலைமைகள் வரும். அதனுடைய விளைவுகளை யார் தாங்குவது? இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுமேயானால், இந்தக் கட்சிகளுக்கு எதிர்க் கட்சியில் இருக்கின்றவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் ஏற்பட முடியாது. அவர்கள் பல சிக்கலான பிரச்சினைகளை சந்திக்கின்ற ஒரு சூழ்நிலைமை ஏற்படும்.

இன்றைய தினம் பத்திரிகைகளைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். நான் அதற்குள் செல்லவில்லை. தானாகவே சில பத்திரிகைகள் என்பது கொளுத்தப்பட்டு வருகின்றது என்று பத்திரிகையிலே வருகிறது. பத்திரிகைகள் கடைகளிலிருந்து கைப்பற்றப்பட்டு கொளுத்தப்படுவதாக பத்திரிகையில் வருகிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்றபோது இது நிச்சயமாக எதிர்காலத்திலே போராடுகின்ற அல்லது அதனுடைய கோரிக்கைகளை வைத்து ஒரு இயக்கம் நடைபெறுகின்ற அந்த மக்களுக்கு விரோதமாக அவர்களுக்கு அளித்திருக்கின்ற இந்தச் சலுகையை பறிக்கக்கூடிய வகையில் இது இருக்கிறது. எனவே, தமிழக அரசு இதனை வாபஸ் பெறவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதிய சட்டம், கலகக்காரர்கள், குழப்பவாதிகளுக்கு எதிராக கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, இவர்களைப் போன்று கம்யூனிஸ்டுகாரர்களுக்கு எதிராக அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. வே. தம்புசாமி : நான் சொல்வது, கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களுக்கு மட்டுமல்ல. கோரிக்கைகளுக்காகப் போராடுகின்ற அனைத்து மக்களுக்கும் இந்தச் சட்டம் என்பது பாதகம். ஆகவேதான் இதை வாபஸ் பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, இது ஒரு கடுமையான சட்டம். இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டாம். என்னுடைய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இந்த கண்டனத்தை தெரிவித்து, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களும் பேசுகின்ற நேரத்தில் வன்முறையைப் பற்றி எல்லாம் பேசினார்கள். இன்றையதினம் தஞ்சைமாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த இரண்டு கட்சிகளிலிருந்து யாராவது தோழர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்தால், அவர்களை உடனடியாக அடிப்பது, கைகால்களை வெட்டுவது, வீடுகளைக் கொளுத்துவது என்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னால், கொறடாச்சேரி என்ற ஊரில் ஒரு கழகத் தோழருடைய கையை வெட்டி, அவர் இறந்து, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 50,000 கழக நிதியிலிருந்து வழங்கியிருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து அந்த மாவட்டத்திலே அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற தோழர்களை வெட்டுவதும், படுகொலை செய்வதும் அவர்களுடைய வீடுகளைக் கொளுத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கிற கட்சிக்காரர்களுக்கு இந்தச் சபையில் வன்முறையைப் பற்றிப் பேசுவதற்கு யோக்கியதை இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமையாகும். கொறடாச்சேரியில் நடந்திருக்கிற சம்பவம், கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேரவில்லை. மாண்புமிகு முன்னாள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு





ஆர். எம். வீ. அவர்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்த்து, ஏற்கெனவே அவருடைய பெயர் கல்வெட்டில் போடப்பட்டிருக்கிறது. அந்தப் பெயர் எல்லாம் இன்னும் இருக்கிறது. அதேபோல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்து கூட்டுறவுத் தேர்தலில் நின்று இருக்கிறோம். அவர் நின்று இருக்கிறார். அதற்குப் பின்னால் நடந்திருக்கிற பொதுத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்-கம்யூனிஸ்டு கட்சியிலே அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக பணியாற்றியிருக்கிறார். அதற்குப் பின்னால் அவருடைய உறவினருக்குள்ளே ஒரு பெண் கடத்தல் மூலமாக அந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. உங்களுக்குத் தவறான தகவல் அவர் தந்திருக்கிறாரே தவிர நான் குற்றம் சாட்ட முடியும். நான் சொல்லவா ? முன்னாள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய ஒப்பற்ற நாடாளுமன்ற உறுப்பினர். . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி குற்றச்சாட்டை அவர் சொல்லியிருக்கிறார். அதற்குப் பதில் வந்து விடுகிறது. இன்னொரு சம்பவத்திற்குப் போனால் அது தவறு. அவர் சொல்வது தவறான தகவல் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அது ரெக்கார்டில் இருக்கிறது. அவ்வளவுதான். தயவுசெய்து இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்டாம். இந்த வாய்ப்பை நீங்கள் தவறாகப் பயன்படுத்த வேண்டாம். அவர் சொன்னதற்கு பதில் சொல்லிவிட்டீர்கள் அல்லவா ? திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.

பிற்பகல் 2-45

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒரு தவறான தகவல் சொல்லப்பட்டு அது இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தவறான தகவல் என்ற முறையில் போகக் கூடாது. அப்படி ஒரு தவறான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பிலேயிருந்து எடுத்திருந்தால் கூட, அந்த கருத்து இங்கே சரியாக இருக்காது என்ற உணர்வோடு, சற்று காலதாமதமாக யோசித்து பார்த்து பிறகு நான் சரியாக சொல்லுகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் மறைந்ததற்கு பின்னாலே, கடைசியாக மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களின் பக்கத்திலே இருந்து நாங்கள் விலகும் அந்த காலம் வரை, ஒவ்வொரு நெருக்கடியிலேயும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய நேரிடை உத்திரவிலே பல சிரமங்களுக்கு மத்தியிலே இருந்து அவர் எங்களுக்கு பணம் கொடுத்து உதவியிருக்கிறார்கள். பொதுக் குழு நடந்த நேரத்திலே கூட மாண்புமிகு முதல்வருக்கும் மரியாதைக்கூரிய சகோதரர் திரு. செங்கோட்டையன் அவர்களுக்கும் ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். நானே பொதுக் குழு நடந்த நேரத்

திலே அங்கேயே பேசியிருக்கிறேன். வீட்டிலே இருக்கின்ற வெள்ளி பாத்திரங்களையெல்லாம் அடகு வைத்து கொடுத்து இந்தக் கட்சியை காப்பாற்றினார்கள் என்று சொல்லி அன்றைக்கு நாங்கள் கொண்டு வந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே பணம் கொடுத்தது - ஏதோ ஒருவர் கொடுத்து இந்தக் கட்சியை வளர்த்தது போல் சொல்வது சரியல்ல. நானும் யோசித்து யோசித்து பார்த்தேன். ஒரு தலைமுறை உண்டாக்கப் பட்டிருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு தலைமுறையை உண்டாக்கினார் என்றால் புரட்சித்- தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் மறைந்த பின்னாலே ஒரு புதிய தலைமுறையை ஒரு திராவிட இயக்கத்தை மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்டாக்கியதை (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டவேண்டுமே தவிர, அதிலே போய் நாங்கள் கூட இருந்தோம் கஷ்டப்பட்டோம் என்று சொல்வது கூட இருந்தோம் என்று சொல்வதற்கு வேண்டுமானால் உரிமை இருக்கலாமே ஒழிய நாங்கள் தான் பணம் கொடுத்தோம் நாங்கள் தான் உங்கள் பக்கத்திலே இருந்தோம் என்று சொல்வது எல்லாம் சரியான தகவலாக இருக்காது என்பதை இந்த சட்டமன்றத்திலே சொல்வது சரியாக இருக்காது என்று சொல்லி ஒரு புதிய தலை முறையை உண்டாக்கி இந்த இயக்கத்தை நடத்தி நான் இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால் பல பேர் நாங்கள் புரட்சி தலைவியோடு இருந்தும் பார்த்திருக்கிறோம்—வெளியே வந்து நாங்கள் தான் தலைவர்கள் என்று செ ல்லியும் பாத்திருக்கிறோம், எங்களால்தான் அந்த அம்மையாருக்கு ஆதரவு என்று சொல்லியும் பார்த்தோம்— எடுபடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஒத்துக் கொண்டு அமைதியாக இருக்கவேண்டுமே ஒழிய, ஏதோ தான் எல்லாம் தெரிந்தவர் போல தாங்கள்தான் தமிழ்நாட்டிலே ஒரு பெரிய தலைவர் போல பேசுவது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு அழகாக இருக்காது என்று சொல்லி இந்த இபக்கத்திற்கு முழுமையாக சிரமங்கள்பட்ட — இன்றைக்கு உயிருக்கு ஆபத்து என்று சொல்கிறார்களே, அன்றைக்கே புரட்சி தலைவியினுடைய உயிருக்கு ஆபத்து வந்திருக்கிறது. அவர்கள் எவ்வளவோ சிரமங்கள் பட்டார்கள். வெளியே போவதற்கு கூட அச்சப்படும் நிலையிலே இருந்தார்கள். பல நேரங்களிலே பொதுக் கூட்டங் களுக்கு பேசப்போகிற நேரத்திலே கல்லடி விழுகின்ற நேரத்திலே யெல்லாம் நாங்கள் கூட மேலே ஏறி உட்கார்ந்தால் நீங்கள் கீழே இறங்குங்கள் என்மீது அந்தக் கல் விழட்டும் என்று சொல்லுகிற ஒருதலைவிதான் இன்றைக்கு முதலமைச்ச ராக இருக்கிறார்கள். (மேசையை தட்டும் ஒலி) இந்தக்கட்சி வளர்ந்ததற்கும் இந்த கட்சி ஆளுகிற பொறுப்பை அடைந்ததற்கும் அத்தனைக்கும் அவர்தான் பொறுப்பே ஒழிய நாங்கள் யாநம் அதிலே எந்த பொறுப்பும் இல்லை என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்னதைப் போல—நான் இங்கே உட்கார்ந்திருந்தாலும் தெரிந்த சில உண்மைகளைச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லு கிறேன். இந்த கட்சிக்காக சல்லிக்காசு வேறு யாரும் தன்னுடைய கையிலே இருந்து செலவழித்தது கிடையாது. (மேசையைதட்டும் ஒலி) அதற்காகக் கோடிக்கணக்கிலே ஒருவர் செலவழித்தார் என்று சொன்னால், அந்த ஒரே ஒருவர் மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் தானே ஒழிய அவர்களைத் தவிர வேறு யாரும் ஒரு சல்லிக்காசு கூட சொந்தக் காசிலிருந்து செலவழித்தது கிடையாது என்பதை நான் சொல்லியாக வேண்டும்.

பேரவையில் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4—30 மணிக்குக் கூடும். இன்று காலையில் நடைபெறுவதாக இருந்த காமென்வெல்த் பாராளுமன்ற சங்கத்தினுடைய பொதுக்குழு கூட்டம் மாலை 6 மணிக்கு பழைய மேலவை அரங்கத்தில் நடைபெறும். மீண்டும் அவை இன்று மாலை 4—30 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவை மீண்டும் பிற்பகல் 4—30 மணியளவில் மாண்புமிகு பேரவைத்தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

மாண்புமித பேரவைத்தலைவர் : தமிழ்நாடு பொதுச் சொத்து சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல் சட்ட முன்வடிவின் மீது விவாதம் — தொடர்ச்சி . திரு. செ. கு. தமிழரசன்,

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பொதுச் சொத்தை பாதுகாத்திட, அழிவிலிருந்தும் சேதத்திலிருந்தும் அவைகளை காப்பாற்றிட, நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்டமுன்வடிவின் மீது இந்திய குடியரசுக் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புதந்த உங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய நாடு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியிலே பொதுச் சொத்துக்களை நாம் மிகுந்த கவனத்தோடு பாதுகாக்க வேண்டிய கட்டாயம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை நாம் வலியுறுத்திட தேவையில்லை.

இங்கே பேசிய பல எதிர்கட்சியினரும் கூட பொதுச் சொத்துகளை நாம் காப்பாற்றிட வேண்டும் என்பதிலே வேறு கருத்து எதுவும் இல்லாமல் பேசினார்கள். ஆனாலும் கூட இவற்றைக் காப்பாற்றிட வேண்டும் என்பதற்காக நாம் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளமுயலுகின்றபோது என்ன காரணத்தினாலோ அவர்கள் எதிர்க்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் கிராமங்களிலே சொல்வார்கள். எங்கள் அப்பன் குதிருக்குள்ளே இல்லை என்று, அது போல இருக்கிறது. இவர்களுக்கு என்ன அதிலே பயம் வருகிறது என்பது விளங்கவில்லை. கிராமத்திலே ஒரு கதை சொல்வார்கள் ஒருமுறை ஒரு கோழி திருடு போய்விட்டதாம். யார் திருடியவன் என்று பஞ்சாயத்திலே விசாரித்துக் கொண்டிருந்தபோது பலருமே இல்லை என்று சொல்ல கடைசியிலே பஞ்சாயத்துக்காரர் கோழி திருடியவன் தலையிலே இறகு இருக்கும் என்று சொன்னவுடன் திருடியவனுக்கு தானே தன்னுடைய கைகள் தலைக்கு போனதாம். அதைப்போல பொது சொத்துக்களைக் காப்பாற்ற வேண்டும், வன்முறையிலிருந்து அரசியலை ஒழுங்குபடுத்த வேண்டும். ஆரோக்கியமான ஒருநிலையை அரசியலிலே உருவாக்கவேண்டும் என்கின்ற ஒப்பற்ற அந்த லட்சியங்களுக்காக இன்றைக்கு இந்த அரசு ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வருகின்றபோது அதை இவர்களாகவே எதிர்க்கின்ற போது இவர்களுக்கு இதிலே பங்கு இருக்கின்றது என்பதை நாம் தெளிவாக உணரமுடிகிறது. வளர்ந்து வருகின்ற ஒரு ஜனநாயக நாட்டிற்கு இப்படிப்பட்ட ஒரு கடுமையான சட்டம் தேவை என்பதை நாம் மறுக்க முடியாது.

இன்றைக்கு பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் கூட எல்லாவற்றிலும் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். நம்முடைய ரூபாயினுடைய மதிப்பு குறைந்துக் கொண்டே போய்கொண்டிருக்கிறது என்று ஆதங்கப்பட்டுக்கொண்டு இருக்கிறபோது எப்போதும் எந்தப் போராட்டத்திலும் ஒவ்வொரு முறையும் இலட்சக் கணக்கிலே இந்த அரசுக்கு தொடர்ந்து நஷ்டம் விளைவித்துகொண்டிருந்தால் நாம் அரசு நடத்துவதற்கே கஷ்டப்படுகிற நிலைமைக்கு கொண்டு வந்துவிடும். எனவே இந்தப் பிரச்சினையை இந்த சட்டத்தின் மூலம்தான் மிகக் கடுமையான சட்டத்தின் மூலம்தான் நாம் அணுக முடியும். இது எப்படி இருக்கிறது என்றால், இந்த தேசம் நாசமாகப் போனாலும் பரவாயில்லை, ஆனால் நாங்கள் எப்படியாவது ஏதாவது ஒரு வகையிலே இந்த முதலமைச்சரை குறை சொல்லிக்கொண்டிருப்போம். கிராமத்திலே பழமொழி சொல்வார்கள். மகன் இறந்தாலும் கூட பரவாயில்லை மருமகள் தாலி அறுக்க வேண்டும் என்று. ஆக எவ்வளவோ நாட்டிற்கு நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. சொத்து அழிந்தாலும் பரவாயில்லை. இந்த முதலமைச்சரை நாம் குறை சொல்ல வேண்டும். அவர்களை





குறை சொல்வதற்கு இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும் என்று ஒரு குறுகிய எண்ணத்தோடு தான் இவைகளை மற்றவர்கள் குறை சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்கு இதிலே ஒரு பயம்கூட உண்டு. எனவே தான் இந்த சட்ட திருத்தத்திலே கூட இன்னொரு திருத்தத்தை சேர்த்திருந்தால் கூட கொஞ்சம் அது பயன் உள்ளதாக இருந்திருக்கும் என்கிற வகையில் என்னுடைய பயத்தை என்னுடைய வேதனையை இங்கே வெளிப்படுத்த விரும்புகிறேன். 1988லே பாட்டாளி மக்கள் கட்சி சாலை மறியல் போராட்டம் நடத்திய போது தென்னாற்காடு மாவட்டத்திலே ஒரு சம்பந்தமும் இல்லாத தாழ்த்தப்பட்ட மக்களுடைய குடிசைகள் — 3,000 குடிசைகளுக்கு மேலே தீயிட்டு கொளுத்தப்பட்டன.
ஒரு போராட்டத்தின் போது ஏதோ ஒரு கோரிக்கைக்காக போராடுகிறபோது சம்பந்தமே இல்லாத தாழ்ந்தப்பட்ட மக்களின் குடியிருப்புகள், குடிசைகள் 3 ஆயிரத்திற்கு மேற்பட்டவைகளை கொளுத்தினார்கள். அந்தப் பகுதியில் நான் சுற்றிச் சுற்றிப் பார்த்த போது அந்த வேதனையை என்னால் இன்னமும் மறக்க முடியவில்லை. பல குடிசைகளில் உள்ள ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மாணவர்களின சர்ட்டிபிகேட்டுகள் எல்லாம் இழந்துவிட்டு இன்று அளவும் வேலைக்குப் போகமுடியாமல், மேற்படிப்புத் தொடர முடியாமல் இன்று அளவும் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த வேதனையிலிருந்து இன்னும் பல குடும்பங்கள் அங்கே விடுபடவில்லை. மூன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட குடிசைகளை அரசு கட்டித் தர முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. எனவே நான் சொல்ல விரும்புகிறேன், அரசு சொத்து மட்டும் அல்ல, ஒரு காரணமும் இல்லாத தங்களை ஆதரிக்கவில்லை என்பதற்காகவே அவர்களுடைய கோரிக்கைகளை ஆதரிக்கவில்லை, மரம் வெட்டிப் போடுவதற்கு ஆள் வரவில்லை, இந்த எண்ணத்திற்காகவே அத்தனை குடிசைகளையும், ஆயிரக்கணக்கான குடிசைகளையும் தீ வைத்து கொளுத்தினார்கள். எனவே, இந்தச் சட்டத்தில் அப்படிப்பட்ட ஒருதிருத்தத்தைக்கூட சம்பந்தம் இல்லாதவர்களை, அப்பாவிகளை பாதிக்காமல் இருப்பதற்கு இதை கூட சேர்த்துக் கொண்டு வந்தால் அது கூட சௌகரியமாக இருக்கும். நான் ஏன் இதை வலியுறுத்த விரும்புகிறேன் என்றால் தாழ்த்தப்பட்டவர்களின் நலனில் அக்கறைக் கொண்ட இந்த அரசுக்கு தாழ்த்தப்பட்டவர்களின் நலனில் அவர்களுடைய பாதுகாப்பில் மிகுந்த ஆர்வம் செலுத்துகின்ற அரசுக்கு இதை நான் சுட்டிக்காட்டவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். பலருக்கு இதில் அக்கறை இல்லை, ஆர்வம் இல்லை. அந்த தென்னாற்காடு மாவட்டத்தில் இந்தத் தவறுகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம் அன்றைக்கு தி. மு. கழகத்தவர்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் கொடுத்தார்கள் என்பதற்காக இத்தனை ஆயிரம் குடிசைகள் கொளுத்தப்பட்டன. இன்றைக்கு முன்னாள் முதலமைச்சர்

பிற்பகல் 4–35

கருணாநிதி அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த அரசு விரோதமாக இருக்கிறது என்று கூட ஒரு நீலிக் கண்ணீர் விட்டு அறிக்கை விடுத்து இருக்கிறார்கள். இன்றைக்கு பெரிதாக பத்திரிகையில் வந்திருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் ஒரு துரையை டி.ஜி.பி.யாக ஆக்கிவிட்டு நான் டி. ஜி.பியாக ஆக்கினேன், மற்றவர்கள் என்ன செய்தார்கள் என்று ஒரு பெரிய அறிக்கையை இன்றைக்கு தந்திருக்கிறார்கள். டி.ஜி.பி. துரை அவர்கள் அந்தப் பதவியில் எவ்வளவு வேதனையோடு உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஒரு தாழ்த்தப்பட்டவரை டி.ஜி.பி. யாக ஆக்கிய அதே நேரத்தில் நான் வேறு ஒன்றையும் இங்கே நினைவுப்படுத்த விரும்புகிறேன். வேறு எந்த அரசும் செய்யாத அளவுக்கு தயாசங்கர் என்கிற டி.ஜி.பி.யையும், காளியப்பன் என்கிற ஒரு டி.ஜி.பி. யையும் ஆக 2 டி.ஜி.பி.க்களை டிஸ்மிஸ் செய்தவர்கள் தான் இந்த கருணாநிதி. ஒருவருக்கு பதவிக் கொடுத்ததை இன்றைக்கு பெரியதாக அறிக்கைக் கொடுத்து இருக்கிறார். ஆனால் 2 டி.ஜி.பி.யை டிஸ்மிஸ் செய்தார்.

அது மட்டுமல்ல, ஒரே இரவில் இவருடைய பத்திரிக்லை அலுவலகத்திற்கு ஒரு இடம் தேவை என்பதற்காக கோடக பாக்கத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதியை ஒரே இரவில் காலி செய்து வேறு இடத்திற்கு அனுப்பினார். அவருடைய பத்திரிக்கை அலுவலகத்திற்கு இடம் தேவை என்பதற்காக.

நான் இதை பயன்படுத்திச் சொல்ல விரும்புகிறேன். அம்பேத்காருக்கு சிலை எடுக்கிறேன் என்று சொல்லி 25 ஆண்டு காலமாக இடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கிடைக்கவில்லை. இதை அவர் சொல்லி 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. எங்கள் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒரு வெங்கல சிலையை சென்னையில் வைப்போம் என்று சொல்லி 20 ஆண்டுகள் ஆகிறது. இன்னமும் இடம் பார்த்துக் கொண்டிருக்கிறார். சென்னையில் தகுதியான இடப் கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்கு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பாபா சாகிப் அம்பேத்கார் அவர்களுக்கு ஒரு கோடி ரூபாயில் (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையில் மண்டபம் கட்டுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். நான் சுருக்கமாக சொல்ல விரும்புவது, இன்றைக்கு இந்த அரசை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரோத அரசு என்று அறிக்கை விட்டிருக்கிற அவர்களுக்கு சுருக்கமாக சொல்ல விரும்புவது, அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் 3 பேருக்கு உயர் பதவிக் கொடுத்தார்கள். மற்றவர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு எல்லாம் எவ்வளவு கொடுமையை செய்தார்கள் என்று நான் சொல்ல விரும்ப





வில்லை. 3 பேருக்குத் தந்தார்கள்; முன்னாள் அமைச்சர் திரு. இராமகிருஷ்ணன், முன்னாள் சட்டப்பேரவைத்துணைத் தலைவர் திரு. துரைசாமி, வேறு ஒருவர். அந்த 3 பேரில் 2 பேர் இங்கே வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இதைவிட சாதாரணமானவர்களுக்கு அவர்கள் எவ்வளவு கொடுமை செய்திருக்கிறார்கள் என்பதற்கு வேறு விளக்கமே தேவையில்லை. அவர்களால் முக்கிய பதவி தரப்பட்ட 3 பேரில் 2 பேர் இங்கே வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இதைவிட வேறு கொடுமையை சாதாரணமானவர்களுக்கு, மற்றவர்களுக்கு எவ்வளவு செய்திருப்பார்கள் என்று நான் எடுத்துக் காட்டத் தேவையில்லை. அப்படிப்பட்ட அவர்கள் தான் இன்றைக்கு இந்த அரசை விரோத அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தச் சட்டத் திருத்தத்திலே அந்த ஒரு சின்னத் திருத்தத்தையும் சேர்த்துக் கொண்டால் சம்பந்தம் இல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகளை இந்தப் போராட்டக் காலங்களின் போது கொளுத்துவதற்கும் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று இணைத்துக் கொண்டால் எனக்கு அதிலே ஒரு ஏற்பு உடையதாக இருக்கும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தை முதல் மாநிலமாக கொண்டுவர வேண்டும். இந்தியாவுக்கு முன் உதாரணமாக கொண்டு வர வேண்டும் என்பதற்காக நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சபதம் இட்டு பல காரியங்களை ஆற்றி வருகிறார்கள். எனவே தான் இப்படிப்பட்ட ஒரு நல்ல முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழக மாநிலத்தை இந்தியாவுக்கே ஒரு முன் உதாரணமாக கொண்டு வரவேண்டும் என்று இருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட அந்த நிலையிலே ஒரு தாயின் பண்பு அவருக்கு வேண்டும். கட்டாயம் வேண்டும்; அரவணைப்பும் வேண்டும். பொதுச் சொத்துக்களை பங்கப்படுத்துகின்றபோது, அதிலே கட்டாயம் இருக்க வேண்டும் எளிய மக்களை தூக்கி விடுகிறபோது அரவணைப்பு வேண்டும். அப்படிப்பட்ட கட்டாய உணர்வோடும் அரவணைப்போடும் இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்கள் இந்த அருமையான சட்டமுன் வடிவைக்கொண்டு வந்திருக்கிறார். எனவே இதைப் பாராட்ட விரும்புகிறேன். வரவேற்க விரும்புகிறேன்.

பிற்பகல் 4-40

பல தலைவர்களை இன்றைக்கு அரசியலில் பார்க்கிறோம். ''கொடியோடு வா'' என்று சொன்னால் ''தடியோடு வா'' என்று பொருள். தம்பி, ''நீ கொடியோடு வா'' என்று ஒருவர் எழுதினால் அதற்கு ''நீ தடியோடு வா'' என்று அவர்களுடைய கட்சியிலே அர்த்தம். பல

நேரங்களிலே அவர்கள் பேசுகிறபோது, தமிழகத்தை ரத்தக் களறி ஆக்குவோம்; ரத்தம் சிந்துவோம்; யுத்தக்களம் ஆக்குவோம்; பஞ்சாப் ஆக்குவோம்; அஸ்ஸாம் ஆக்குவோம் என்று இப்படியெல்லாம் இவர்கள் பேசினால் அதற்கு என்ன பொருள். வன்முறையைத் தூண்டுவது; பொதுச் சொத்துக்களை நாசப்படுத்துவது, ஏமாளிகளை, அப்பாவிகளைத் தாக்குவது, இப்படித்தானே அதற்குப் பொருள், எனவே இந்த சட்ட முன்வடிவை நான் முழுமனதோடு ஆதரிக்க விரும்புகிறேன். இதிலே நாம் உண்மையாகவே யோசனை சொல்ல விரும்பினால், இந்தச் சட்டத்தை அமல்படுத்துகிறபோது ஒரு ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ்., அதிகாரியையோ, ஓய்வுபெற்ற நீதிமன்ற அலுவலர்களையோ அல்லது முக்கிய பிரமுகர்களையோ உள்ளடக்கிய ஒரு குழு வைத்து, எவ்வளவு சேதம் விளைவித்து இருக்கிறார்கள் எப்படி செய்யலாம் என்பது போன்ற யோசனைகளைச்; சொல்லலாம். ஒரு அட்டானமஸ் ஒரு சுய அதிகராம் உள்ள நிறுவனத்திற்குக் கொடுங்கள் இந்த அதிகாரத்தை, அவர்கள் வேண்டுமானால், எப்படி யார், எந்த அளவுக்குச் செய்தார்கள் என்று ஆராயட்டும், இப்படி யோசனைகளைச் சொல்லலாம். அதை விட்டுவிட்டு, இதைக் கண்மூடித்தனமாக எதிர்ப்பது என்பது இந்த முதல்வரை எதிர்க்க வேண்டும் என்கிற எண்ணமே தவிர, இந்த தேசத்தை வளர்க்க வேண்டும், இந்த மாநிலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற உணர்வு இதுபோன்றவர்களுக்கு இல்லை என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை எங்கள் இயக்கத்தின் சார்பிலே ஆதரித்து, வரவேற்று அமைகிறேன் நன்றி.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கா. ப. பட்டாபிராமன்.

<u>*திரு. கா. ப. பட்டாபிராமன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் இந்த மாமன்றத்தின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கின்ற, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துவது பற்றிய இந்தச் சட்டமுன்வடிவை நான் முழுமனதாக வரவேற்கிறேன். இதுவரையிலே, எந்தவொரு சட்டமன்றத்திற்கும் முன்னாலும் வைக்கப்படாத அளவுக்கு இந்த முன்வடிவு மிக விழிப்போடு வரையப்பட்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு சட்டம் ஏற்கெனவே 1982-இல் Act 29 of 1912 என்கின்ற சட்டவடிவில் அமலில் இருந்து, அதற்குப் பின்னாலே 1984 ஆவது ஆண்டு சென்டிரல் ஆக்டாக, ஒரு



ஆக்ட் வந்திருக்கிறது. இந்த இரண்டு சட்டங்கள் இருக்கின்ற பொழுது, இந்தச் சட்டத்தை இந்த மாமன்றத்திலே வைப்பதில் அடிப்படைக் காரணமே அந்தச் சட்டங்களிலே இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் நீக்கி, சட்டங்கள் மூலமாக பொதுச் சொத்துக்கள் காப்பாற்றப்பட வேண்டிய அவசியத்தின் அடிப்படையை மிக ஆழ்ந்து ஆய்ந்து இந்தச் சட்டமுன்வடிவினை இந்த மாமன்றத்திலே வைத்திருக்கின்றார்கள். இன்றைய தினம், சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி, பாராளுமன்ற உறுப்பினர்களானாலும் சரி, அவர்கள் நாட்டு மக்களிடத்திலே நாட்டைப்பற்றிப் பேசுகின்ற போதெல்லாம் இந்த நாடு காப்பாற்றப்பட வேண்டும்; இந்த நாட்டு மக்கள் காப்பாற்றப்பட வேண்டும், இந்த நாட்டினுடைய சொத்துக்கள் காப்பாற்றப்படவேண்டும் என்றுதான் மக்களிடையே பேசி, அவர்களுடைய ஆதரவைப்பெற்று, அது சட்: மன்றமானாலும் சரி, பாராளுமன்றமானாலும் சரி, அங்கே அங்கம் வகிக்கிறார்கள். எனவே, ஒரு நாட்டினுடைய சொத்தை அது மாநிலமாக இருந்தாலும், சரி, அது தேசமாக இருந்தாலும் சரி, அந்தச் சொத்துக்களைக் காப்பாற்றவேண்டிய, அவசியம், சாதாரண மக்களுக்கு மட்டுமல்ல, அதைவிட மேலாக ஒருபடி உயர்வாகவே சட்டமன்ற உறுப்பினர்க்ளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். நம் நாட்டைக் காப்பாற்றுகின்றபோது, நாட்டிலே இருக்கிற மக்களை மட்டுமல்ல நாட்டுக்குச் சொந்தமான சொத்துக்களையும் காப்பாற்ற வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம். அப்படி இருக்கின்ற இந்த நிலையில், இன்றைய தினம் சாதாரணமாக எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி, நாட்டு மக்களுக்காக நாங்கள் பாடுபடுகிறோம். என்று சொல்லி வருகின்ற எந்த இயக்கங்களாக இருந்தாலும் சரி: எந்தச் ங்கங்களாக இருந்தாலும் சரி, அவர்களெல்லாம் போராட்டம் என்கின்ற முறையிலே, போராட்டம் என்கின்ற அந்தப் போர்வையிலே நாட்டு மக்களிடத்திலே பிரச்சினைகளை உருவாக்குகின்றபோது சில நேரங்களிலே அந்தத் தலைவர்கள் சொல்கின்ற வார்த்தைகள் மூலமாகக் கூட திசை திரும்பி, நாட்டு மக்களுடைய சொத்துக்களுக்கு பாதகம் ஏற்படுகின்ற அளவுக்கு வன்முறை இந்த நாட்டிலே பெருக வேண்டுமென்பதற்கான வரலாறுகள் அதிகமாக இருக்கின்றன. காலையிலே பேசியபோது மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துப் பேசினார்கள். ராஜீவ் காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டபோது, இந்த நாட்டிலே எத்தனை எத்தனையோ, பொதுச் சொத்துக்களுக்கும், தனிப்பட்டவர்கள் சொத்துக்களுக்கும் இங்கே நஷ்டம் ஏற்பட்டது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

[திரு. கா.ப. பட்டாபிராமன்] [1992 ஏப்ரல் 27

பிற்பகல் 4-45

நான் இந்த நேரத்திலே ஒன்றை எண்ணிப் பார்க்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கருணாநிதி அவர்கள் அன்றைய தினம் நாட்டிலே குழப்பங்கள் விளைந்தபொழுது, இராஜீவ்காந்தி அவர்கள் கொல்லப்பட்டபொழுது, நாட்டிலே பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப் பட்டபொழுதெல்லாம் ஒருசில நாட்கள் கழித்து கருணாநிதி அவர்கள், அவர்களுடைய பத்திரிகையிலே எழுதினார்கள். ''உடன் பிறப்பே'' திரும்பிப் பார்'' என்று சொன்னார்கள். அப்படி, ''திரும்பிப் பார்'' என்று சொன்ன பிறகுதான் இந்த நாட்டிலே வன்முறைகள் அதிகமாகியிருக்கிறது என்பதை இன்றையதினம் அப்பொழுது வந்த நாளேடுகளையெல்லாம் பார்த்தாலே கூட நமக்கு நன்றாகத் தெரியும்.

அந்த அடிப்படையில் பார்க்கின்றபொழுது, எந்த அரசியல் கட்சியானாலும் சரி, நாட்டுச் சொத்தைக் காப்பாற்ற வேண்டியது அந்த அரசியல் கட்சிகளினுடைய கடமை என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அந்த அடிப்படையில் பார்க்கின்றபொழுதுதான், இன்றைய தினம் காலையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் மிகப் பணிவோடு சொல்லிக் கொள்வேன். கடந்த இரண்டாண்டுக் காலங்களிலே திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தபொழுது, இங்கே அமர்ந்திருக்கிறாரே மாமன்றத்தினுடைய தலைவரவர்கள், அவர்கள் ஒரு பத்திரிகைக்கு செய்தி கொடுத்தார் என்கின்ற காரணத்தினாலேயே அவர்மீது வழக்கு அந்தப் பத்திரிகையை வெளியிட்டார்கள், அந்த போஸ்டரை வெளியிட்டார்கள் என்பதனாலேயே (குறுக்கீடு) பத்திரிகை அல்ல போஸ்டர்— சுவரொட்டிகள்; சுவரொட்டிகளுக்குச் செய்திகளை எழுதிக் கொடுத்தார் என்பதற்காக, இங்கே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் எஸ்.டி.எஸ்., அவர்கள்மீது வழக்கு; இங்கே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு முத்துசாமி அவர்கள்மீது வழக்கு. இவர்களெல்லாம் ஒரு நிகழ்ச்சியை அன்றையதினம் பாண்டிச்சேரியிலேயிருந்து சென்னைக்குத் திரும்பி, தன்னுடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டுமென்ற அடிப்படையில், சென்னையை நோக்கி வந்துகொண்டிருந்த இன்றையதினம் முதலமைச்சராக இருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்மீது, தி.மு.க. சின்னம் வரையப்பட்ட லாரியை வைத்து, அவர்களை மாய்க்க வேண்டுமென்று திட்டமிட்டு செய்யப்பட்ட சதியின் விளைவாக அவர்கள் காயமுற்று, ஆஸ்பத்திரியிலேயிருந்தபொழுது, இப்படியெல்லாம் இந்த நாட்டிலே நடக்கிறதே, இந்த ஆட்சியிலே நடக்கிறதே என்கின்ற அந்தச் செய்தியினை ஒரு போஸ்டர் அடிப்ப





தற்காக எழுதிக் கொடுத்தார் என்பதற்காக இவர்மீது வழக்கு அவர் அன்றையதினம் பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருக்கிறார்கள். அவர்கள் எக்மோர் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டபொழுது அந்த நீதிமன்றத்தினுடைய நீதிபதி அவர்களிடம் நானே வாதாடிச் சொன்னேன். நாளையதினம் அவர்கள் பாராளுமன்றத்திலே கலந்து கொள்ள வேண்டிய, இரயில்வே பட்ஜெட்டிலே கலந்து கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அவர் பாராளுமன்ற உறுப்பினர்; அவர்களுக்கு நீங்கள் ஜாமீன் கொடுக்க வேண்டுமென்று சொன்னபொழுது அவர்கள் கொடுக்க மறுத்து, மறுநாளைக்கு இல்லாமல் 3-வது நாளைக்கு ஒரு கன்டிஷனல் பெயிலைக் கொடுத்து, அதற்குப் பிறகு அவர்களை விடுதலை செய்தார்கள்.

அதற்குப்பிறகு எஸ்.டி.எஸ். மீது வழக்கு ; முத்துசாமி மீது வழக்கு. இவர்களையெல்லாம் விட்டுவிட்டால்கூட, ஒன்றுமே தெரியாத அப்பாவியான ஒரு அச்சகத்தினுடைய முதலாளி, அந்த போஸ்டரை அடித்துக் கொடுத்தார் என்பதற்காக ஒரு வார காலம்—7 நாட்கள், ஒன்றுமே அறியாத அப்பாவியான அந்த அச்சக முதலாளியை அந்தச் சிறையிலே போட்டு, வாட்டி வதைத்து, கீழ்க் கோர்ட்டிலே ஜாமீன் மறுக்கப்பட்டு, அதற்குப் பிறகு செஷன்ஸ் கோர்ட்டிலே ஜாமீன் மறுக்கப்பட்டு, அதற்குப் பிறகு உயர் நீதிமன்றத்திலே ஜாமீனைப் பெற்றுத் தந்திருக்கிறேன்.

இப்படியெல்லாம் நடந்திருக்கிற இந்த நிலைமைகளை எடுத்துச் சொல்கிறபொழுது, அரசியல் கட்சிகள் எந்த அளவிற்குத் தமிழகத்திலே இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, போராட்டங்கள் என்கிற முறையிலே, பாதைகளை வெட்டுவது, மரங்களை வெட்டிப் பாதைகளிலே போடுவது ; அதன் காரணமாகப் போக்குவரத்து ஸ்தம்பிக்கச் செய்வது ; அதன் காரணமாக எங்கெங்கோ செல்ல வேண்டிய அவசியத்திலே இருப்பவர்களைத் தடுப்பது, இவைகளையெல்லாம் பார்க்கிறபொழுது, இந்த நாட்டில் இப்படிப் பட்ட நிலைமைகள் இனி வளரக் கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

காலையிலேகூட மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு ஏதேதோ எடுத்துப் பேசினார்கள். 1982-இலே இப்படிப்பட்ட ஒரு சட்டம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றும் பொழுது இதே மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் அமைச்சராக அங்கே அமர்ந்திருந்தார்கள். இப்பொழுது பேசுகின்ற நியாயமெல்லாம், இப்பொழுது பேசுகின்ற நீதியெல்லாம், இப்பொழுது அவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களெல்லாம், அன்றைய தினம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பார்களானால், நான் உண்மை

யிலேயே மனம் மகிழ்ந்திருப்பேன்; அவரைப் பாராட்டியிருப்பேன். மாறாக அன்றையதினம் தன்னுடைய நிலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அன்றையதினம் மற்றவர்களிடம் நன்மதிப்பையும், பெருமையையும் பெறுவதற்காக அன்றைய தினம் கை மூடி, கை கொட்டி, வாய் மூடி, அதாவது, '' கையது கொண்டு மெய்யது போர்த்தி பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் '' என்று சொல்வார்களே, அப்படித் தன்னை அடக்கிக் கொண்டு அமர்ந்திருந்தவர்கள்தான் இன்றையதினம் காலையிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சி, இப்படிப்பட்ட சட்டம் இந்த நாட்டுக்குத் தேவையா என்றெல்லாம் பேசுகிறார்கள்.

பிற்பகல் 4–50

ஆகவே, இந்த சட்டம் என்பது, இந்த நாட்டிலே இருக்கிற குடிமகன் யாராக இருந்தாலும் சரி, நான்கூட இந்தச் சட்டத்தைப் பார்த்தபோது, எண்ணிப் பார்த்தேன்—ஒரு போராட்டம் நடத்துகிற ஒரு அரசியல் கட்சி என்று சொன்னால், அந்தப் போராட்டத்திலே கலந்து கொள்கிறவர்கள் கல் எறிகிறார்கள் என்று சொன்னால், அந்தக் கல்லெறியின் மூலமாக அப்பாவி மனிதன் ஒருவன் உயிர் இழக்கிறான் என்றால், அவன் உயிருக்கு யார் பொறுப்பு? எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றையதினம் ஏதோ சமூக விரோதிகள் அந்த அரசியல் கட்சிக் கூட்டங்களிலே சென்றுவிட்டு, அவர்கள் ஏற்படுத்துகிற குறையின் காரணமாக, ஒரு பொதுச் சொத்துக்கு பங்கம் ஏற்படுகிறது என்று சொன்னால், அதற்கு அந்த அரசியல் கட்சி நஷ்ட ஈடு தரவேண்டுமா என்று கேட்கிறார்கள். நான் எந்த அரசியல் கட்சி என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாக, ஒரு அரசியல் கட்சி ஒரு போராட்டத்திலே ஈடுபட்டு, அதிலே ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொள்கிறார்கள் என்று சொன்னால், அந்த சமூக விரோதிகளையும் சேர்த்துத்தான் அந்த அரசியல் கட்சித் தலைவர்கள், அந்தப் போராட்டத்திலே இத்தனை ஆயிரம் மக்கள் கலந்து கொண்டார்கள் என்று சொல்வதற்கு, அந்த சமூக விரோதிகளையும் சேர்த்துத்தான் அவர்கள் கணக்கு சொல்கிறார்களே தவிர, அந்த சமூக விரோதிகளால் ஏற்படுகிற அந்த நஷ்டத்திற்கு அவர்கள் பொறுப்பேற்க மறுக்கிறார்கள் என்பதுதான் விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. ஆகவேதான், இந்தச் சட்டம், இந்தியப் பெருநாட்டிலே புகுத்தப்பட்டிருக்கிற அந்த விதிகளை, அந்த ஷரத்துக்களைக் கொண்டு இந்தச் சட்டத்தை உருவாக்கியிருக்கிறபோது, இந்தியப் பெருநாட்டிலே இப்படிப்பட்ட ஒரு மகத்தான சட்டம் இது வரையிலே எந்த மாமன்றத்திலேயும் வரவில்லை என்பதை எடுத்துச் சொல்லி, இங்கே அமர்ந்திருக்கிற எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்த இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்த மொழியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு நாட்டின் சொத்திலே தங்களுக்



கும் பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து, இந்த சட்ட முன்வடிவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஆதரித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதன்மூலம், சட்டமன்றம் தனக்கு இருக்கிற அதிகாரத்தை அரசுக்குத் தருகிறது. நான் எழுப்புகிற முதல் கேள்வி, சட்டமன்றத்திற்கு அந்த அதிகாரம் இருக்கிறதா என்பது. ஏனெனில், Freedom of Assosiation, Freedom of Speech, Freedom of Expression, அடிப்படை உரிமைகள்—கூட்டம் கூடுவதற்கு, அதேபோன்று ஒரு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அல்லது ஊர்வலம் போவதற்கு என்று அடிப்படை உரிமைகள் அரசியல் சட்டத்தில் உத்தரவாதங்களாக இடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால் பஸ்களை கொளுத்துவதற்கும் இந்த உரிமைகள் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்ததற்குப் பிறகு அவர் கேட்கட்டும்.

ஆகையினால் இந்தச் சட்ட முன்வடிவு அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று நான் சந்தேகப்படுகிறேன். சர்வதேச மனித உரிமை சட்டத்தில்கூட, ஆர்ட்டிகிள் 11 இத்தகைய உரிமையைத் தருகிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும் ; Reasonable restriction பண்ணலாம் : ஒரு நியாயமான தடை, அடிப்படை உரிமைகளிலே மேற்கொள்ளலாம் ; அதற்கு இடம் இருக்கிறது என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிடலாம். ஆனால், சாதாரணமாக ஒரு கூட்டம் நடத்துவது, ஊர்வலம் நடத்துவது இது போன்ற அமைப்புகள் செய்யக்கூடியவை, அரசியல் சட்டத்தில் உத்தரவாதம் தரக்கூடிய உரிமைகளாகும். அதன்மூலம் தீமைகள் அல்லது Public order என்கிற வகையிலே ஏற்படுமானால், அதற்கென ஏற்கெனவே சட்டப்பிரிவுகள் இருக்கின்றன. ஆகவே, முதலாவதாக நான் எழுப்பக்கூடிய பிரச்சினை, இந்தச் சட்டமுன்வடிவு, அரசிய

சட்டத்திற்கு உட்பட்டதா என்பது, அடுத்து, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில், it is unjust என்று சொல்ல விரும்புகிறேன். அதற்கு, அடிப்படை சட்டத்திலே உள்ள பிரிவுகள்படி, சொத்துக்களுக்கு இழப்பினை அரசியல் கட்சியின் மூலம் பெறலாம்; அதற்கு ஒரு அனுமானத்தின் பேரிலே it can be Presumed-Presumed என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு சொத்து இழப்புக்கு பெறுவதற்கு, அவர் நேராக அந்தத் தவறைச் செய்தார் என்று நிரூபிக்கப்பட வேண்டுமே தவிர, Presume பண்ணி, ஒரு அனுமானத்தின் பேரிலே இந்தக் குற்றதை இழைத்திருக்கிறது என்று சொல்லி, அதற்காக இழப்பீட்டைப் பெறுவது சட்டப்படி சரியாகுமா? நீதிக்கு முரணானது இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 4-55

அதேபோல, எந்தக் குற்றத்திற்கும் ஜாமீன் வழங்குவது என்பது சாதாரணமாக உண்டு. சில குற்றங்களைத் தவிர, Heinous crimes, murder attempt to murder Secton 302, 307 of I.P.C. இது போல, இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய ஜாமீன் பிரிவு, தடா சட்டத்திலே இருப்பதைவிட மோசமானது. தடா சட்டத்தில் பப்ளிக் ப்ராசிக்யூட்டருக்கு, அப்ஜெக்ட் பண்ணுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். கொடுத்து, நீதிமன்றம் தனக்குச் சரி என்றால் அவரை விட்டுவிடலாம் என்று விட்டுவிடலாம்.

where the public prosecutor opposes the application if the Court is satisfied that there are reasonable ground for believing that he is not guilty of such offence and that he is not likely to commit any offence while on Bail.

அவர்கள் ஜாமீனில் விடலாம். ஆனால், இந்தச் சட்டத்தில் அந்தப் பிரிவு இல்லை. ஆகையினால் தடா சட்டத்தை விட கடுமையான பிரிவு இதிலே இருக்கிறது. அத்தகைய ஒரு Special Enhancement ஒரு சிறப்பான சட்டத்தை உருவாக்குவதற்கு முடியுமா? அது முறையா என்பதை அறிய விரும்புகிறேன்.

சொத்துக்களுக்கு இழப்பீட்டைப் பெற வேண்டும் என்று முனைகிற போது இந்திய அரசேகூட இதைப்பற்றி நன்கு சிந்தித்து 'லயபிலிடிக்கு ஒரு பாடி ஒரு கூட்டம் ஆகவும், ஒரு அமைப்பாகவும் இருக்கக்கூடிய ஒரு அமைப்பில் லயபிலிட்டி' பிக்ஸ் பண்ணுவது என்பது கடுமையான காரியம் என்ற காரணத்தினால்தான் 1984 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்தினுடைய சட்டத்திலே அதைப் போடவில்லை. ஆகையினாலே, அது நீதிமன்றத்திற்கு முரணானது மட்டுமல்ல அது சட்டப்படி சாத்தியமா, நிற்குமா என்பதையும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது இது சட்டத்தில் நிற்குமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார். Sh rter Constituti n of India VIII Edition by Durgad s Bas என்ற புத்தகத்தில் நம்முடைய அரசியல் சாசனத்தில் Constitution of India-இல் 'இந்தியநாட்டின் குடி மக்களுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகின்ற அந்த நேரத்தில் நம்முடைய fore fathers இந்த Constitution of India வகுக்கின்றபோது இந்த நாட்டின் குடியக்களுக்கு என்னென்ன கடமைகள் இருக்கின்றன என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லோரும் இதை உணர வேண்டும். இந்த நாட்டின் குடி மக்கள் யாராக இருந்தாலும், குடிமகன் யாராக இருந்தாலும், அவருக்கு உரிமை இருக்கிறது என்றால் அதே சமயம் அவருக்கு சில கடமைகளும் இருக்கின்றன அதன்படி Article 51 (A) இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"It shall be the duty of every citizen of India toabide of the Constitution and respect its ideals and Institutions, the National Flag and the National Anthem."

என்று (a), (b), (c). (d). (e). (f). (g), (h) பல பிரிவுகளின் கீழ் இந்த நாட்டின் குடிமக்களுக்குக் கடமைகள் என்னென்ன இருக்கின்றன என்று குறிப்பிடும் போது Article 51-A (i)-இல்

"It shall be the duty of every citizen of India to safeguard public property and to abjure violence"

என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல "Utility of Fundamental Duties" என்ற தலைப்பின் கீழ் இதற்கு விளக்கம் அளிக்கின்ற நேரத்தில்

"The citizen, it is expected to be his own monitor while exercising and enforcing his fundamental rights remembering that he owes the duty specified in Article 51-A to the State and that if he does not care for the duties he should not deserve the rights."

என்று இருக்கிறது. அதாவது, இந்த நாட்டின் குடிமகன் யாராக இருந்தாலும், இந்த அரசியல் சாசனத்தில் குடி மக்களுக்கு என்று வகுக்கப்பட்டிருகின்ற கடமைகளை அவர் போற்றிப் பாதுகாக்கவில்லை என்றால் அந்த அரசியல் சாசனத்தில் ஒரு நாட்டின் குடிமக்களுக்குக் கூறப்பட்டுள்ள உரிமைகளைப் பெறுவதற்கு அவருக்கு அருகதை இல்லை. உரிமை இல்லை என்று இதில் தெளிவாகக் கு ் ிடப் பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல,

> "If the State makes a law to prohibit any act or conduct in violation of any of the duties the Courts would uphold that as a reasonable restriction on the relevant Fundamental Right."

என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கு விளக்கமாகக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-00

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எழுப்பிய பிரச்சினை இந்த சட்டமுன்வடிவில் 9-வது பிரிவு. அது புதிதாக இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது. ட்யூட்டீஸ் பற்றி அல்ல. பிரிடம் ஆஃப் அசோசியேஷன். ஆனால் ட்யூட்டீஸ் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே படித்தார்கள். நான் சொல்வது ஃபிரீடம் ஆஃப் அசோசியேஷன். இதில் என்ன இருக்கிறது. ஒரு பொலிடிக்கல் மீட்டிங். அதாவது சாதாரணமாக ஒரு கூட்டத்தை நடத்துவது கூட ஒரு பிரச்சினைதான். ஒரு கூட்டம் நடத்துகின்றபோது வேண்டுமென்றே வேறு கட்சிக்காரர்கள் ஒரு பத்துபேர் அந்தக் கூட்டத்தில் வந்து கல்லைவிட்டு எறிந்தால் கூட அதைத் தடுக்கலாம். அதில் ஏற்படுகிற சேதத்திற்கு இழப்புக்கு அந்தக் கூட்டத்தை யார் ஏற்பாடு செய்கிறார்களோ அவர்கள் பொறுப்பு என்ற வகையிலே வருகிறது. ஆக அந்த அடிப்படையில்தான் நான் இதை எடுத்துச் சொன்னேன்.

மூன்றாவதாக இந்தச்சட்ட முன்வடிவில் வரையறுக்கப் பட்டிருக்கிற திட்டம் அதாவது ஸ்கீம் சில நேரங்களில் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று சொல்ல விரும்புகின்றேன். உதாரணமாக அண்மையில் பத்திரிக்கைகளில்கூட நாம் செய்திகளைப் பார்க்கிறோம். தஞ்சாவூரில் வல்லத்தில் குடிநீர் கேட்டு திடீரென்று ஒரு சாலை மறியல்



நடத்தினார்கள். அதேமாதிரி விவசாயிகள் ஒப்பாரி ஊர்வலம் ஒன்று நடத்தினார்கள். அது திருச்சியில், சென்னையில் ஒரு சாலையில் ஒரு விபத்து ஏற்பட்டு, ஒருவர் அடித்து போடப்பட்டு விட்டார். உடனடியாக போலீஸ் வரவில்லை என்று கூறி அந்தப் பக்கத்தில் இருந்தவர்கள் எல்லாம் சேர்ந்து அங்கே ஒரு மறியலை நடத்தினார்கள். மாணவர்கள் திடீரென்று கல்லூரியில் வேலைநிறுத்தம் செய்து வெளியெ வந்துவிடுகிறார்கள். பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் வெளியே வந்துவிடுகிறார்கள். இப்படி அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு ஆங்காங்கே இருக்கக்கூடிய சிலபேர், சில க்ரூப்கள் வருகிறபோது அவர்களாகவோ அல்லது யாராவது சம்மந்தப்பட்டோ ஏதாவது ஒரு அசம்பாவிதம் ஏற்படுத்துவார்களேயானால் அவர்களை எல்லாம் இந்தச் சட்டம் போய்த் தொடும். அதனுடைய விளைவாக சாதாரணமாக ஒரு ரைட்டு ப்ரொட்டெஸ்ட். அதாவது ஒரு காவல் நிலையத்திலே ஒரு காவல் கைதி அடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுவிட்டார் என்றால் உடனே எல்லோரும் சேர்ந்து தகராறு பண்ணுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தமாதிரி இடங்களிலும் இந்தமாதிரி கடுமையான சட்டத்தைப் பயன்படுத்துகிறபோது அது உண்மையிலேயே குழப்பத்தை உருவாக்காதா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் அரசியல் கட்சிகள் பொறுப்பேற்கவேண்டும் என்று இந்தப் பிரிவில் இருக்கிறது. அதைப்பற்றி ஏற்கெனவே நான் குறிப்பிட்டேன். ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த தலைவர் இறந்துவிட்டாலோ அல்லது அதன் தலைவர் தாக்கப்பட்டாலோ அல்லது மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு தலைவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டாலோ அப்போது கூட ஆங்காங்கே சில நேரங்களில் வன்முறை ஏற்பட்டுவிடுவதை நாம் கடந்த காலத்தில் பார்த்திருக்கிறோம். அந்த சூழ்நிலையிலேயும் அப்படி தானாக ஏற்பட்டுவிட்ட வன்முறைக்கு அந்தக் கட்சியிலேயிருந்து பணம் வசூலிக்கப் போகிறார்களா? அதே போல் ஒரு 3, 4 கட்சிகள் சேர்ந்து ஒரு ஊர்வலம் நடத்துகிறார்கள். 1980 ஆம் ஆண்டில் அன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கலைக்கப்பட்டபோது எல்லா கட்சிகளும் சேர்ந்து ஊர்வலம் நடத்தினார்கள். அப்போது ஒரு இடத்தில் அசம்பாவிதம் நடந்தது. மவுண்ட் ரோடு பக்கத்தில் ஒரு அசம்பாவிதம் நடந்தது. அந்தமாதிரி நேரத்தில் எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு எவ்வளவு பணம் என்று எப்படி பிரிக்கப் போகிறார்கள். அதோடு மட்டுமல்ல. ஒரே கட்சியில் கூட உட்கட்சித் தகராறு ஏற்படுகிறது என்று வைத்துக்சொள்ளுங்கள். ஒரு கட்சியிலே உள்ள ஒரு தலைவரை அதே கட்சியிலே உள்ள சிலபேருக்குப் பிடிக்கவில்லை என்றால் கூட அவர்களே

கூட ஒரு கலவரத்தைத் தூண்டிவிடலாம் அந்த பிடிக்காத கட்சித் தலைவர், டெமேஜஸ், லாஸ் ஆகியவற்றை அவர் ஈடுகட்ட வரும். ஆகையினாலே இந்தச் சங்கடங்கள் எல்லாம் வரும்.

அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய நாட்டில் ஒரு கட்சி என்று கூறுகிறபோது ஒவ்வொரு உறுப்பினரையும் பார்த்து அவருக்கு அடையாள கார்டு எல்லாம் வழங்கப்படவில்லை. ஒரு கட்சியிலே இன்னும் மற்ற கட்சிக்காரரிடம் வந்து தகராறை வரவழைக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பாவி யான அந்த கட்சி தான் அதனாலே பாதிக்கப்படும். உதாரண மாக ஒரு கட்சியிலே வருகிறது. அங்கே இன்னோரு கட்சியி னுடைய கொடியைப் பிடித்துக்கொண்டேகூட தன் கட்சியிலே போய் ஏதாவது பிரச்சினையை ஏற்படுத்தினாலும்கூட, அது இன்னொரு கட்சியைத்தான் பாதிக்கவேண்டிவரும். ஆகபே் நடைமுறையிலே அரசியல் கட்சிகள் பொறுப்புக்கு உள்ளாக்கவ படுகின்ற இந்தச் சூழ்நிலையிலே மிகப் பெரிய பிரச்சினைகள் எல்லாம் உருவாகும். அதோடு மட்டுமல்ல, எனக்கே தெரியும். பல இடங்களிலே தொழிலாளர்கள் பல தொழிற்சங்கங்கள் கார்டு களை வைத்திருப்பார்கள். தொழிற்சங்கம் நடத்துகின்றவர் களுக்குத் தெரியும். எல்லா தொழிற்சங்கத்திலும் சந்தா கட்டி கார்டு வாங்கி வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். நம்நாட்டி டிலே கட்சிகள் என்ற வரையறை செய்கின்றபோது, அவை டிசிப் பிளின்ட். ஆக, ஒரு மிலிட்டரி மாதிரி தனி அடையாளம் கொடுத்து அதெல்லாம் பண்ணி, அந்த கொடியை வேறு யாரும் பயன்படுத் தக்கூடாது. அந்தச் சின்னத்தை வேறு யாரும் பயன்படுத்தக் கூடாது என்கின்ற மாதிரியெல்லாம் இல்லை. ஆக நடைமுறை யிலே பல சிக்கல்களை இது உருவாக்கும் என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 5—05

அடுத்தபடியாக சிறுபான்மையினர்களின் உரிமைகளை பறிப் பதற்கான வாய்ப்பு இதிலே நிறைய இருக்கிறது. ஏனென்று சொன்னால் இதிலே மூன்று 'கம்யூனல், லேங்குவேஜ் ஆர் எத்தினிக்' குரூப் என்று மூன்று பிரிவுகளை சேர்த்து இருக்கின் றார்கள். உதாரணத்திற்கு லேங்குவேஜ் என்று எடுத்துக்கொள் வோம். இந்தித் திணிப்பு எதிர்த்து ஒரு போராட்டம் நடத்துகிறார் கள். ஒரு பேராட்டம் நடக்கிறது என்றால் தமிழுக்காக ஒரு போராட்டம் நடக்கிறது என்றால் 'இட் இஸ் லேங்குவேஜ் குரூப்.''

கர்நாடகத்திலே நம்முடைய அரசாங்க பஸ்கள் தாக்கப்படு கின்றன என்று வைத்துக்கொள்வோம். அங்கே இருந்து இங்கே வருகிற வண்டியில் ஏதாவது ஒரு பையனோ அல்லது சில



பையன்களோ கல் எடுத்துப்போடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். 'இட் இஸ் எ லைங்குவேஜ் குரூப்'. நாளைக்கு இந்தித் திணிப்பே வந்தாலும்கூட அந்த இந்தித் திணிப்பை எதிர்த்து ஒரு போராட்டம் நடக்கிறபோது அதையும் இந்தச் சட்டம் பாதிக்கும் என்று சொல்லவிரும்புகிறேன்.

அதோடு மைனாரிட்டி என்று வருகிறபோது எப்போதுமே 'தே வாண்ட் சேப்கார்ட்ஸ்'. பெரும்பான்மையினர்கள் அவர் களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு கிடைக்காது. ஆகவே சிறுபான்மையினர் தங்களைப் போராடித்தான் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. உதாரணத்திற்கு இங்கே திருவல்லிக்கேணியிலே ஒரு பிரச்சினை வந்தது. இஸ்லாமிய மக்கள் அல்லது கிருத்துவ மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வந்து தங்கள் உரிமைக்காக போராடுகின்ற ஒரு சூழ்நிலை வருகிறபோது அதை பெரும்பான்மை மக்களும் அவர்களும் சேர்ந்து ஒரு கலவரம் வருவிக்கின்றபோது அதை கம்யூனல் என்று சொல்லி அவர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதிலே இந்தச் சட்டபிரிவின் மூலம் இவை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகை யினால் மிகமிக 'டெலிகேட் அன்ட் ஆல்சோ டேஞ்சரஸ். என்று சொல்ல விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் சட்டமன்றத்திலே பேசுகிறபோது சொன்னார்கள். ஒரு கட்சி என்று வருகின்ற போராட்டத்தில் ஏற்படுகின்ற சேதத் திற்கு அந்தக் கட்சி தலைவருடைய சொத்தைப் பறிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அன்றைய தினம் நான் கூட........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சி தலைவருடைய சொத்தைப் பறிக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. அந்த வார்த்தைகள் மாண் மிகு உறுப்பினர்தான் பயன்படுத்தினார். நான் சொன்னது ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் பொதுசொத்துக்கு சேதம் விளைவித்தால் அந்த கட்சிதான் அதற்குப் பொறுப்பு ஏற்கவேண்டும். கட்சி யினுடைய தொண்டர்கள் ஏழைகளாக இருப்பார்களேயானால் அந்தக் கட்சியின் தலைமையிடத்திலிருந்து நஷ்ட ஈடு பெறப்படும் என்றுதான் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சித் தொண்டர்கள் பெரும்பாலும் இதைப் போன்ற பிரச்சினைகளில் பாதிக்கப்படுகின்றவர்கள் ஏழைகள்

என்றும், ஆகையினால் அந்த நஷ்ட ஈட்டை அந்தக் கட்சியினுடைய பொறுப்பிலே, தலைவரோ, பொதுச்செயலாளரோ யார் இருக்கின்றார்களோ அவர்களிடத்திலே இருந்து பெற வேண்டும் என்றுதான் அன்றைய தினம் அவர்கள் சொன்னதாக என்னுடைய நினைவு. அப்படியே வாசகத்தைத் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் மறுக்கவில்லையே. இப்போதும் அதைத்தான் சொல்கிறேன். அன்றைக்கும் அதைத் தான் சொன்னேன். ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் பொதுச் சொத்துக்கு சேதத்தை ஏற்படுத்தினால் நஷ்டஈடு அந்த கட்சியிடம் இருந்து பெறப்படும். நானே சொன்ன வார்த்தைகளைத்தான் உறுப்பினர் சொல்கிறார். பெரும்பாலும் ஒரு கட்சியினுடைய தொண்டர்கள் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். எனவே அத்தகைய சூழ் நிலையில் கட்சியின் தலைமை இடம் இருந்து அந்த நஷ்ட ஈடு பெறப்படும் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி.

பிற்பகல் 5-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் ஓர் உண்மையைச் சொல்லியாக வேண்டும். அன்றைக்கு இந்த விவாதம் நடந்தபோது நீங்கள் குறிப்பிட்டுச் சொல்கிற அந்தக் கட்சித் தலைவருடைய சொத்தைப் பறிமுதல் செய்ய முடியுமா என்று கேட்டீர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் கட்சியினுடைய சொத்தைத்தான் எடுக்க முடியுமே தவிர, கட்சியினுடைய தலைவருடைய சொத்தை எடுக்க முடியாது. அதைக் குறிப்பிடுவதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒரு கட்சியிட மிருந்து நஷ்ட ஈட்டைக் கோரும்போது அந்தக் கட்சி, கட்சியின் சொத்தைக் கொடுக்கிறதா அல்லது கட்சியின் தலைவருடைய சொத்தைக் கொடுக்கிறதா என்பதைப் பற்றி அரசுக்குக் கவலையில்லை. அரசாங்கத்துக்குச் சொந்தமான, பொதுமக்களுக்குச் சொந்தமான பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டால் அந்த நஷ்ட ஈட்டினை அந்தக் கட்சிதான் கட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி.)



திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சிதான் கட்ட வேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் நாங்கள் எதிர்பார்த்தது, கட்சித் தலைவரையே கட்ட வைப்பதற்காக ஒரு சட்டம் வந்திருக்குமானால், உண்மையிலேயே கட்சித் தலைவருடைய சொத்தையே அதிலே பெறுவதற்கு ஏதாவது வழி இருந் திருக்குமானால் நன்றாக இருந்திருக்கும் என்பதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், பாட்டாளி மக்கள் கட்சிமீது இத்தகைய ஒரு பிரச்சினை வந்தால் அந்தக் கட்சியின் ஏழைத் தொண்டர் களைக் காப்பாற்ற மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய சொத்துக்களைக் கட்சிக்குக் கொடுக்க தயாராக இல்லை என்று அவர்களே ஒப்புக் கொண்டு விட்டார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் சொன்ன கருத்தை பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் இராமதாசிடத்திலே நான் சொன்னபோது, ஏழைத் தொண்டர் களை விட்டுவிட்டு பணக்கார தலைவரிடத்திலிருந்து அந்த இழப்பீட்டைப் பெறுவது என்றால் அதை நாம் ஆதரிக்க வேண் டும் என்றுதான் அன்றைக்குச் சொன்னேன். அதற்காகத்தான் நான் இந்தப் பாயின்டை இங்கே ரெயிஸ் பண்ணினேன். ஆக, கட்சி என்று வருகிறதே தவிர, கட்சித் தலைவர் என்று வர வில்லை. ஆகையினாலே (குறுக்கீடு) இல்லை, கட்சியிலே எங்கே சொத்து வைத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சியின் நிறுவனராக இருப்பவர்கள் பலபேர் தலைவராக இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப் பட்ட நேரத்தில் யாரையும் மாட்டி விடக்கூடாது என்பதை யும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவராக இருக்கின்றவர்கள் ராஜி நாமா செய்துவிட்டு கூட ஓடிவிடுவார்கள். அதை எல்லாம் பார்த்தால் முடியுமா ? ஆகவே, இந்தச் சட்டத்தைப்

பொறுத்த வரையில் அரசியல் சட்டத்திற்கு எவ்வளவு முரணானது என்பதாலும், நீதிக்கு முரணானது என்பதாலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசியல் சாசனத்திற்கு, அரசியல் சட்டத்திற்கு இது முரணானது என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். அதை ஏற்கனவே நான் விளக்கிக் கூறியிருக்கிறேன்.

இந்த கான்ஸ்டிட்யூசன் ஆஃப் இந்தியா ஆர்டிகிள் 51ஏ யின்படி "It shall be the duty of every citizen of India to safeguard public property and to adjure violence" என்பதைக் குறிப்பிட்டேன். சட்டத்திற்கு முரணானது, நீதிக்கு முரணானது என்று இங்கே குறிப்பிட்டார்கள்.

"I wish to point out that, in the case of Chandra Bhavan Boarding and Lodging vs. State of Mysore (AIR- 1970- SC- 2042), the Supreme Court has stated thus:

'The fundamental duties, as in the case of directives, are, I would say, fundamental in the governance of the country and hence, all the components of the State, including the Judiciary, are bound to enforce them.

Following the dictum of the Supreme Court in Chandra Bhavan's case, I would say that they are complementary and supplementary to each other. They are the two sides of a coin. The learned counsel for the respondents, therefore, submitted that a citizen cannot get his fundamental rights enforced without adhering to the fundamental duties prescribed by Article 51 A. I am of the view that they are well-founded in the above submission. Here, it is worth recalling the observation of the Supreme Court in Chandra Bhavan's case that it is a fallacy to think that, under our Constitution, there are only rights and no duties."

எனவே, சந்திரபவன் வெர்சஸ் ஸ்டேட் ஆஃப் மைசூர் என்ற வழக்கில், ஏற்கனவே உச்சநீதிமன்றத்திலே இத்தகைய ஒரு பிரச்சினை எழுந்தபோது ஆர்டிகிள் 51 (ஏ)-யின்படி அரசியல் சாசனத்தில் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் என்னென்ன உரிமைகள் இருக்கின்றனவோ அதுபோல என்னென்ன கடமைகள் உள்ளன என்பதும் தெளிவாகக் குறிப்



பிடப்பட்டுள்ளன. அந்தக் கடமைகளையும் பின்பற்றுகின்ற குடிமகனுக்குத் தான் அரசியல் சாசனத்தில், அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள உரிமைகளையும் பெறுவதற்கு உரிமை இருக்கிறது என்று சுப்ரீம் கோர்ட்டே தெளிவாகக் கூறியிருக்கிறது என்பதை இங்கே மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 5–15

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் மூலம் பல குழப்பங்கள், பிரச்சினைகள் நாட்டில் தோன்றும் என்பதனால்,— Remedy is worse than disease என்று சொல்லுவார்கள்—பொதுச் சொத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வோடு அந்தச் சொத்தை நோய் என்று கருதுவோமானால், அதைத் தீர்க்கும் மருந்தாக, சிகிச்சையாக கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவு அதைவிட மோசமாக இருப்பதனால் இந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள பொதுச் சொத்துக்களுக்கும், பொது மக்களுக்கும் விளைவிக்கப்படுகிற சேதம் மற்றும் இழப்புக்கான தண்டனைக்கும், இழப்பீட்டுக்கும் அது தொடர்பான விஷயங்களுக்கும் வகை செய்ய இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இங்கே பேசிய உறுப்பினர்களிலே பெரும்பாலானவர்கள் பொதுச் சொத்துக்கு பங்கம் விளைவிக்கக்கூடாது, பொது மக்களுடைய வரிப் பணத்திற்கு சேதம் விளைவிக்கக்கூடாது என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கின்ற போக்கு ஒரு கவலை அளிக்கும் போக்கு. அண்மைக் காலத்திலே அப்படிப்பட்ட போக்கு அதிகப்பட்டு வருவதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஆக, பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்படுகின்ற நேரத்தில், அதை எப்படி சரிக் கட்டுவது என்ற பிரச்சினை வரத்தான் செய்கிறது. காலையிலே இங்கே பேசிய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் ராஜிவ்காந்தி படுகொலை பற்றி குறிப்பிட்டார்கள். நம்முடைய மண்ணில், நமக்கு நிரந்தரமான தலைக் குனிவையும், பழியையும் ஏற்படுத்தும் வகையிலே இங்கே ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார்கள். ராஜீவ் காந்தி இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பு. ஆனால், அதே சமயத்தில் அவருடைய இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பு என்ற காரணத்தாலே வேறு சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது சரி என்று சொல்ல மாட்டேன். எனவே,

சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது என்று கூறி நஷ்ட ஈடு கோரி, உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். யார் வழக்கு தொடர்ந்து இருக்கிறார்கள்? திராவிட முன்னேற்றக் கழகம் வழக்கு தொடர்ந்திருக்கிறது. அந்த வழக்கை விசாரித்த நீதிபதி, சேதத்தைப்பற்றி முறையாக தெளிவாக மதிப்பிட வேண்டும், சேதம் விளைவிக்கப்பட்டவர்களுக்கு, அதாவது யாருக்கு சேதம் ஏற்பட்டதோ அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும், கட்சி உட்பட அனைவருக்கும் நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும்; அதை மதிப்பீடு செய்ய ஒரு தனி நபர் கமிஷன் போட்டு, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை, திரு. கே. ஜே. எம். ஷெட்டியை நியமித்திருக்கிறார்கள். ஆக சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் நேரத்தில், அந்தச் சேதத்திற்கு உண்டான நட்ட ஈடு வழங்க வேண்டும் அல்லது அந்த நட்ட ஈடு பெறப்பட வேண்டுமென்பதை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே எந்தவிதமான சர்ச்சைக்கும் இடமில்லை. இப்போது அதிலே என்ன சொல்லுகிறார்கள்? பாதுகாப்புத்தர அரசாங்கம் தவறி விட்டது, எனவே நட்ட ஈட்டுத் தொகை அரசாங்கம்தான் வழங்கவேண்டுமென்று, கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை உயர் நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுதான் கமிஷன் போட்டிருக்கிறார்கள். அப்படி இருக்க, பொதுச் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது என்றால் சேதத்திற்கு யார் பொறுப்பு? யாரிடமிருந்து அந்தப் பணத்தை, நிதியை வசூலிப்பது என்பதை நாம் கொஞ்சம் கருத்திலே கொள்ளத்தான் வேண்டும்.

இங்கே காலையிலே நண்பர்கள் பேசுகின்ற நேரத்திலே, குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர், இரண்டு பேரும் உணர்ச்சிப் பெருக்கோடு இங்கே பேசினார்கள். பெரிய தியாகங்களைச் செய்த கட்சி அவர்களுடைய கட்சி என்று சொன்னார்கள். நான் அதை மறுக்கவில்லை. கம்யூனிஸ்ட்டுகள் இலட்சியத்திலே தெளிவு உள்ளவர்கள், இலட்சியத்திலே பிடிப்பு உள்ளவர்கள் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. பெரிய தியாகங்கள் செய்திருக்கிறார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. நிறைய பேர் உயிர் இழக்க நேரிட்டது, அதுவும் காங்கிரஸ் ஆட்சியிலே என்று எடுத்துச் சொன்னார்கள். ஏதோ 10 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலேயோ, 15 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலேயோ நடைபெற்ற சம்பவத்தைச் சொல்லவில்லை. 45 ஆண்டுகளுக்கு முன்னாலே நடைபெற்ற சம்பவத்தை, சுதந்திரம் வந்ததற்குப் பிறகு நடைபெற்ற சம்பவத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அது ஏன் ஏற்பட்டது என்று பலருக்கும் தெரியாது. திடீரென்று 22 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், அங்கே 7 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், இங்கே 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்றால் ஏதோ



ஒரு இயக்கம் நடத்திய நேரத்தில் அரசாங்கம் போலீசை ஏவி சுட்டுக்கொன்றுவிட்டது என்ற தவறான எண்ணம் வந்துவிடக்கூடாது.

பிற்பகல் 5–20

நண்பர் இங்கே சொன்னபோது விவசாயிகளுக்காக இயக்கம் நடத்தினார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் அவர் எதைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டார் என்றால் அப்போது கம்யூனிஸ்ட் கட்சி இந்த நாட்டின் இறையாண்மையையும், இந்த நாட்டின் அரசாங்கத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நாட்டின் அரசாங்கத்திற்கு எதிராக, இந்த நாட்டு மக்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டம் நடத்தியவர்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. ஆயுதம் தாங்கிய போராட்டத்தை அவர்கள் நடத்திய காரணத்தாலே, கம்யூனிஸ்ட் இயக்கம் தடை செய்யப்பட்டிருந்தது. தடை செய்யப்பட்ட நேரத்தில் இவர்கள் '' அன்டர் கிரவுண்ட் '' ஆனார்கள். அதனால்தான் இன்றும் கூட யூ.ஜி. என்று சொல்வார்கள். அவர்களிலே பல பேர் சேலம் சிறைச்சாலையாக இருந்தாலும் சரி, வேறு இடங்களாக இருந்தாலும் சரி, சேலம் சிறைச்சாலையில் அவர்கள் நடத்திய வீர வீளையாட்டுக்களை கதை, கதையாக அந்தக் காலத்தில் மேடைகளில் பேசுவார்கள். நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், அந்த வீர விளையாட்டில் என்ன வென்றால் ஆட்டோ சங்கர் போல் தப்பிச் செல்ல முயன்றவர்கள், அங்கே இருக்கிற வார்டர்களையும், அங்கே இருக்கிற ஜெயிலர்களையும் அடித்தவர்கள், உதைத்தவர்கள், இப்படி நிறைய கதைகள் உண்டு. அதனால் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கலாம். எவ்வளவு பேர் செத்தார்கள் என்று தெரியாது. 22 பேர் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்றாலும் கூட, அவர்கள் அன்றையதினம் துப்பாக்கிப் பிரயோகத்தில் சாவதற்குக் காரணம் அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டத்தை இந்தியா முழுவதும் நடத்தினார்கள். அவர்கள் மீண்டும் ஜனநாயகத்தின் பாதைக்கு எப்போது திரும்பினார்கள் என்பது இரண்டு நண்பர்களுக்கும் நினைவிருக்கும் என்று நினைக்கிறேன்.

அஜாய் குமார் கோஷ் தலைமையை ஏற்றதற்குப் பிறகுதான் ரணதிவே லைனிலிருந்து மாறி மீண்டும் ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டு, 1952ஆம் ஆண்டு அவர்கள் தேர்தலில் போட்டியிட்டார்கள். அதிலே கூட இங்கே சில பேர் ஜெயிலில் இருந்தபடியே போட்டியிட்டார்கள். அதையெல்லாம் மறந்திருக்கமாட்டார்கள். எல்லோரும் முழுமையாக வெளியில் வந்துவிடவில்லை. அது மட்டுமல்ல, இவர்கள் பதவிக்கு வந்திருக்கிறார்கள். 1957-லே கேரளாவில் ஆட்சிக்கு வந்தார்கள். 1967ஆம்

ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேரளாவில், மேற்கு வங்கத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. மேற்கு வங்கத்தில் நேரடியாக ஆட்சிப் பொறுப்பு வராவிட்டாலும் அன்றையதினம் திரு. அஜாய் முகர்ஜி முதலமைச்சராக இருந்தாலும், அதைப் பின்னாலேயிருந்து இயக்கியவர்கள், அமைச்சரவையில் பங்கேற்று முழுக்க இயற்றியவர்கள் மார்க்சிஸ்ட்டுகள். அப்போது உள்துறை அமைச்சராக இருந்தவர் மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர், இன்றைய முதலமைச்சராக அங்கே இருப்பவர்கள். அவர்கள் அப்போது பதவியேற்ற ஒரு சில நாட்களுக்கெல்லாம், சட்டம் ஒழுங்கு சீர் குலைந்தது. நண்பர்களுக்கு நினைவில் இருக்குமென்று கருதுகிறேன். திடீரென்று நக்சல்பாரி இயக்கம் தலை தூக்கியது. அவர்களும் என்ன சொன்னார்கள் என்றால், மக்களுக்காக இயக்கம் நடத்துகிறோம் என்றார்கள். இங்கே கள்ளச் சந்தை பெருகிவிட்டது, இங்கேயிருக்கிற பழங்குடி மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன, அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைப்பதில்லை என்று சொல்லி, நக்சல்பாரி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தானு சன்யாலும், சாரு மஜூம்தாரும் இயக்கம் ஆரம்பித்தார்கள். கல்கத்தா நகரில் பெரும் வரவேற்பு அதற்கு இருந்தது. என்ன செய்தார்கள் தெரியுமா? கள்ளச் சந்தையில் ஈடுபட்டவர்களையெல்லாம் வெட்டினார்கள். சாதாரண மீன் வியாபாரியிலிருந்து சினிமா டிக்கெட் விற்றவர்கள் வரை அத்தனை பேரும் அதற்கு பலியானார்கள். அதற்கு முதலில் மக்கள் மத்தியில் எதிர்ப்பு இருக்கவில்லை. ஏனென்றால் விலைவாசிகள் குறையத் தொடங்கின. அது சரியான பாதை என்று நண்பர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? இவர்கள் ஏற்றுக் கொண்டாலும் அங்கேயிருந்த ஆட்சி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கண்மூடித்தனமாக அவர்களைச்சுட்டுக் கொன்றார்கள். அதை யாரும் மறந்துவிடக் கூடாது. அன்றைய தினம் நக்சலைட்டுகள் மார்க்சிஸ்ட்டுகள் மீது சுமத்திய குற்றச்சாட்டு, ''நியோ ரிவிஷனிஸ்ட்''—புதிய திரிபுவாதிகள் என்று. முன்பு தம்புசாமி அவர்கள் மீது பழனிசாமி குற்றம் சுமத்தினார், புதிய திரிபுவாதி என்று. அப்போது 62, 63, 64 வரையில் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டு திரிபுவாதிகள் என்பது தான். இவர்கள் அவர்கள் மீது சுமத்தினார்கள். இவர்கள் பதவிப் பொறுப்புக்கு வந்தவுடனேயே வெளியில் இருந்தவர்கள் சொன்னார்கள், திரிபுவாதம்—நியோ ரிவிஷனிஸ்ட் என்று, ஏனென்றால் அவர்கள் இவர்களைச் சுட்டுக் கொன்றார்கள். ஆக, சொத்துக்களைக் காப்பதற்காக, தனியுடைமையைக் காப்பதற்காக தனியாருடைய உயிரைக் காப்பதற்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டே தீரவேண்டுமென்பதை அனைவரும் ஏற்று கொள்வார்கள் என்றே நான் நம்புகிறேன். அன்றையதினம் நடந்த பல்வேறு சம்பவங்களைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் விட்டுவிடுகிறேன்.





இன்னொரு முக்கியமான பிரச்சினை, இங்கே அனைவரும் பேசியது, ஃபண்டமென்டல் ரைட்ஸ்—ஜீவாதார உரிமை. உண்மைதான். ஜீவாதார உரிமைக்குப் பங்கம் விளைவிக்கிற எந்தச் சட்டத்தையும் நிச்சயமாகச் சட்டமன்றம் மட்டுமல்ல மக்களவையும், நிறைவேற்றக்கூடாது. நாடாளுமன்றமும் நிறைவேற்றக்கூடாது. அதை முழுமையாக அதாவது நமக்கு வழங்கப்பட்டிருக்கிற உரிமையை முழுமையாக நாம் அனுபவிப்பதற்கு எந்த அரசாங்கமும் தடையாக இருக்கக்கூடாது. Freedcm of speceh, freedcm cf expressicr, freedcm cf asscciation. என்றெல்லாம் சொன்னார்கள். அவற்றையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் வாழ்வது மட்டுமே என்பதல்ல, வாழு, வாழவிடு என்று சொல்கிறார்களே தவிர, சித்தாந்தமாக இருந்தாலும், வாழ்வதற்கு மட்டும் வழி காணக்கூடாது. வாழு, வாழவிடு. அதுதான். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட 51-ஏயை இங்கே படித்துக் காட்டினார்கள். அது எல்லாம், மாநிலத்திலுள்ள போலீஸ் அதிகாரங்கள். நாம் வாழ்வதற்கு யார் தடையாக இருக்கிறார்களோ, அதை எப்படித் தடுப்பது, அதைத்தான் மாநிலத்தில் உள்ள போலீஸ்பவர் என்று சொன்னார்கள். அதில் அரசாங்கத்திற்கு சில அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன.

பிற்பகல் 5—25

உங்களுடைய எண்ண சுதந்திரம், உங்களுடைய பேச்சு சுதந்திரம், உங்களுடைய கூட்டம் கூடும் சுதந்திரம் பிறருடைய சுதந்திரத்திற்கு இடையூறாக இருக்கக் கூடாது. பிறருடைய சுதந்திரத்திற்கு இடையூறாக இருக்குமானால் அதை தவிர்ப்பதற்காக அதை தடுப்பதற்காக அரசாங்கம் சட்டங்களை இயற்றலாம் என்று தெளிவாக அரசியல் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுதான் 51-ஏ போலீஸ் ஃபோர்ஸ் ஆஃப் தி ஸ்டேட் என்று படித்தார்கள் அல்லவா, அதெல்லாம் இதைத்தான் குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றன

இப்போது இங்கே நமக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவைப் பொறுத்த வரையில், இங்கே பேசிய உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப அரசியல் கட்சிகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இதிலே எனக்குக் கூட கொஞ்சம் சிறிய சந்தேகம் உண்டு. "Political party" means political party recognised by the Election Commission under the Election Symbols (Reservation and allotment) Order, 1968.' என்று ஆங்கிலத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேதான் தமிழிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது, வேறுபாடு இல்லை. அரசியல் கட்சி என்றால் 1968 ஆம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு மற்றும் அளிப்பாணையின்படி தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சி என்ற பொருள்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழகத்தை எடுத்துக்கொண்டால் எனக்குத் தெரிந்த வரையில் இருக்கிற அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகள்— Bharatiya Janata Party (B.J.P.), Communist Party of India, Communist Party of India (Marxist), Indian National Congress, Janata Dal and Janata Party. இவைகள் எல்லாம் தேசீய கட்சிகள், தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற தேசீய கட்சிகள். தமிழ்நாட்டிலே அங்கீகரிக்கப்பட்டுள்ள கட்சிகள்—All India Anna Dravida Munnetra Kazhagam, Dravida Munnetra Kazhagam, Pattali Makkal Katchi. என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் பழைய சின்னங்கள். ஆக இந்தக் கட்சிகளைத் தவிர வேறு கட்சிகள் இதே போல பொது சொத்துக்கு பங்கம் விளைவிக்க முற்படுகிற நேரத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு என்ன வழி என்பது சட்டமுன்வடிவில் தெளிவாக விவரிக்கப்படவில்லை. ஏனென்றால் ஒன்பதாவது பகுதியை படித்துக் காட்டினார்கள். அதிலே அரசியல் கட்சிகளைப் பற்றி சொல்லப்பட்டிருந்தாலும் மற்ற அரசியல் கட்சிகளை எப்படி தீர்மானிப்பது நிர்ணயிப்பது என்பது பற்றி இல்லை. குழுக்கள் பற்றி அதிலே சொல்லப்பட்டிருக்கிறதே தவிர அரசியல் கட்சிகளைப் பற்றி அதிலே சொல்லப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மட்டுமே இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் இது போன்ற செயல்களில் ஈடுபடுகிறபோது அவர்களால் ஏற்படுகிற இழப்புகளை எப்படி சரி செய்யப்போகிறோம் என்பது பற்றிச் சொல்லப்படவில்லை.

அதே போல நண்பர்கள் மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட ஒன்று— அரசியல் கட்சிகள் நடத்துகின்ற ஊர்வலங்களில், அரசியல் கட்சிகள் நடத்துகின்ற இயக்கங்களில் சமூகவிரோதிகள் கலந்துவிடக் கூடும், நுழைந்து விடுவார்கள். அப்படி நுழைந்தால் அவர்கள் குழப்பம் விளைவிக்க வாய்ப்புகள் இருக்கின்றன. சின்ன ஆத்திரமூட்டும் செயல் நடந்தால்கூட அதை பயன்படுத்திக் கொண்டு பெரிய அளவிற்கு குழப்பம் விளைவிப்பார்கள், சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இவர்கள் கட்சி உறுப்பினர்கள் அல்ல என்று கோர்ட்டில் வாதாட முடியும். இவர்கள் எல்லாம் கட்சி உறுப்பினர்கள் அல்ல, அவர்களிடத்திலே கார்ட் இருக்கிறதா, போலீசார் இதற்காக நிரூபிக்க என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள், எங்களுடைய கட்சிதான் இதையெல்லாம் செய்தது என்று எப்படி நீங்கள் உறுதியாகச் சொல்வீர்கள் என்று எல்லாம் கேட்பார்கள். நிச்சயமாக பிராக்டிகல் டிஃபிகல்டீசா நாளைக்கு வரக்கூடும். இவைகளையும் நீங்கள் பார்க்க வேண்டும். உள்ளபடியே கட்சி உறுப்பினர்களாக இல்லாதவர்கள், கட்சிகளைச் சாராதவர்கள் யாராவது குழப்பம் விளைவிக்கும் நேரத்தில், சேதம் விளைவிக்கும் நேரத்தில் எந்தக் கட்சியும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் அரசாங்கம் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.





அதேபோல மதிப்பிடுவது குறித்தும் தெளிவாக குறிப்பிட வேண்டும். யார் மதிப்பிடப் போகிறார்கள், எப்படி மதிப்பிடப் போகிறார்கள், சேதம் நடந்தது என்பதை எப்படி மதிப்பிடப் போகிறார்கள் என்பதையெல்லாம் தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்பமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குறிப்பாக பெய்லபிள், நான்-பெய்லபிள் என்பதைப் பற்றி நண்பர்கள் இங்கே பேசினார்கள். இதிலேகூட நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் பேசியதைப் பற்றி நான் தவறாக நினைக்கவில்லை. வழக்குரைஞர்களாக இருக்கின்ற நண்பர்கள் ' நான்-பெய்லபிள் ' என்று வாதிட்டார்கள். பெய்லபிளுக்கும் நான்-பெய்லபிளுக்கும் என்ன வேறுபாடு என்பதை அவர்கள் கொஞ்சம் சுட்டிக்காட்டி இருக்கலாம். எந்தச் சட்டமாகஇருந்தாலும், ஐ.பி.சி.ஐ யை எடுத்துக்கொண்டாலும் கிட்டத்தட்ட 25, 35 சதவீதத்திற்கு மேற்பட்ட சட்ட‘ உட்பிரிவுகள் நான்-பெய்லபிள் நான்-பெய்லபிள் என்று சொல்லிவிட்டாலே ஜாமீனில் வெளியே வர முடியாது என்று அர்த்தமே கிடையாது. நான்-பெய்லபிளாக இருந்தாலும் கீழ் கோர்ட்டில் விடவில்லை என்றால் மேல் கோர்ட்டுக்குப் போகலாம். ' தடா 'விற்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. 'தடா'வைப் போல் அல்ல. இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதுஎன்று சொன்னால்.—You are safe. 'No person accused or convicted of an offence punishable under this Act shall, if in custody, be released on bail or on his own bond unless the prosecution has been given an opportunity to oppose the application for such release.' Any non-bailable section — 'Any non-bailable section' இதைப் போடவேண்டிய அவசியம்கூட இல்லை.

In non-bailable section without giving proper notice to the prosecntion you cannot ask for bail in a higher court. It is not possible Whether it is a Sessions Court, High Court or any Court even the lower courts, even if it is a lower court, that notice must be given to the prosecution side, to the other side because without issuing notice, without the other side taking the notice it is not possible to move for bail. அப்படி இருக்கும்போது அது ஒன்றும்' டிராகோனியன் செக்ஷன்' இல்லை. ஆனால், அதேநேரத்தில் தவறுகள் நேர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமையும் அரசுக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். செக்ஷன் 6-ஐ பொறுத்தவரையில் எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். இது தெளிவாக இருக்கிறது. அவர்களுக்கு நோட்டீஸ் தர வேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறதே தவிர, அதிலே வேறு எதுவும் புதிதாக இருப்பதாக நான் கருதவில்லை.

1992 ஏப்ரல் 27] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]
பிற்பகல் 5-30

இதிலே இருக்கிற நல்ல சில விஷயங்கள் என்னவென்று சொன்னால், போராட்டங்கள் நடைபெறுகின்றன அல்லது ஊர்வலங்கள் நடைபெறுகின்றன; அந்த நேரத்திலே முதலில் இலக்காவது அரசாங்கத்துக்குச் சொந்தமான பஸ்கள். அந்த பஸ்களிலே பல அப்பாவி மக்கள் பயணம் செய்வார்கள். கல் வீச்சிலே முதலிலே பாதிக்கப்படுவது யார்? அந்த அப்பாவி மக்கள். அவர்களுக்கும் போராட்டத்திற்கு வந்தவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. அரசாங்கத்தின் மீது இருக்கிற கோபத்தை, அரசாங்கத்தின் பஸ் மீது காட்டுகிறார்கள். அரசாங்கத்தின் பஸ் மீது வீசுகின்ற கல் அந்த அப்பாவி மக்கள் தலையிலே போய் விழுகிறது. அவர்களுக்கு நேருகின்ற இழப்புகளுக்கு இதுவரை யாரும் ஒன்றும் பேசியதில்லை. இந்தச் சட்டமுன்வடிவிலே, அவர்கள் புகார் செய்யலாம்; புகார் செய்தால் நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டு இருக்கிறது. அது உள்ள படியே வரவேற்கத்தக்க ஒரு அம்சம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இது கிட்டத்தட்ட மோட்டார் கிளைம்ஸ், ஆக்சிடென்ட் போல விரைவிலே அவர்களுக்கு கிடைப்பதற்கு வழி செய்யும் வகையிலே இதிலே ஏற்பாடு செய்ய வேண்டும். கோர்ட்டிலே விதிக்கப்படுகின்ற பைன் அவர்களுக்கு வழங்கலாம் என்று இந்தச் சட்டமுன் வடிவிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அது வேகமாக கிடைக்கின்ற வகையிலே இந்த வழக்கிலே அதை விசாரிப்பதற்கும் அவர்களுக்கு உடனடியாக நலம் கிடைப்பதற்கும் வழி காண வேண்டும்.

இதிலே இருக்கின்ற சின்ன குறைகளை பெரிதுபடுத்துவதற்கு இல்லாமல் அரசியல் கட்சிகளை பழி வாங்குகின்ற நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடாது என்று நான் திடமாக நம்புகின்றேன். அது போன்ற குறைகளை சுட்டிக்காட்டப்படுகின்ற நேரத்தில் அவைகளை எல்லாம் களைந்து பொது சொத்துகளுக்கு பங்கம் விளைவிப்பது, தனியார்களுக்கு இடையூறு விளைவிப்பது, இவைகளைத் தவிர்ப்பதற்காக மட்டுமே கொண்டு வரப்பட்டு இருக்கிற இந்த நல்ல சட்ட முன்வடிவினை, நல்ல சட்டமாக மாற்றி இதை யாரும் குறை கூறாதவண்ணம் நீங்கள் சிறப்பாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மாண்புமிகு சட்டஅமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது சொத்துகளுக்கு சேதாரம் மற்றும் இழப்பு தடுப்பு சட்டத்தின் மீது எட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் சிறந்த நல்ல கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள். இடையிடையே நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித்



1992 ஏப்ரல் 24] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

தலைவி அவர்களும் இந்தச் சட்டத்தினுடைய நல்ல அம்சங்களை எல்லாம் எடுத்துச்சொல்லி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுடைய நியாயமான ஐயங்களுக்குத் தகுந்த ஆதாரத்தோடு இங்கே விளக்கங்களை நல்கி இருக்கிறார்கள். பொதுவாக இந்தச் சட்டத்தை வரவேற்கின்ற நண்பர்கள் இந்தச் சட்டத்தில், அமல் நடத்துகின்றபோது இருக்கின்ற சில சங்கடங்களைப் பற்றியும், இந்தச் சட்டம் அரசாங்கத்தினுடைய கரத்திலே இருந்து அதைத் தவறாக பயன்படுத்தி, அதன் காரணமாக சில கசப்பான விளைவுகள் வந்துவிடுமோ என்ற நியாயமான அச்சத்தோடும் பொறுப்பு மிக்க உறுப்பினர்கள் இங்கே நல்ல கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். முதற்கண் நான் ஒரு உணர்வைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை பல நாட்கள், பல மாதங்கள் எண்ணி, பிறகு இந்த ஒரு சட்டத்தை அமல்படுத்தினால்தான், எப்படி இன்றைக்கு புறப்பகையை கட்டுப்படுத்தி இருக்கின்றோமோ, அதைப்போல தமிழ்நாட்டில் இருக்கிற தீயசக்திகளையும் அடக்க முடியும் என்ற தொலைநோக்கு பார்வையோடு (மேசையை தட்டும் ஒலி) இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 5-35

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்று 10 மாதங்கள் முடிந்து, 11-வது மாதத்தினுடைய தலைவாயிலில் நின்று கொண்டிருக்கிறோம். கடந்த 10 மாதங்களில் நம்மை எதிர்நோக்கியிருந்த எல்.டி.டி.ஈ., மெனேஸ், டெரரிஸம்—இவைகளை எல்லாம் அவர்கள் உறுதியாக அடக்கி, இன்றைக்கு அடுத்த கட்டமாக உள்நாட்டிலே இருக்கிற தீய சக்திகளையும், அரசியல் கட்சிகள், மத அமைப்புகள், ஜாதிய அமைப்புகள் என்ற வடிவத்திலே இருக்கிற தீய சக்திகளையும், அதனால் சமூகத்திற்கு உண்டாகிற தீமைகளையும் கட்டுப்படுத்த அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். The act is a Social Welfare Legislation. இந்தச் சட்டம் என்பது சமூக ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிற ஒரு சட்டமாகும். It is a Comprehensive Bill. ஏற்கனவே 1982ஆம் ஆண்டு போற்றுதலுக்குரிய புரட்சித்தலைவர் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அது முழுமையான சட்டமல்ல. அதிலே 'இன்-அடிகுவசி', பலகீனம் இருந்தது. பிறகு டெல்லியில் 1984ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தை பொது சொத்துக்கு சேதாரம் உண்டாக்கக் கூடாது என்பதற்காக அவர்கள் கொண்டு வந்தார்கள். காரணம், இந்த பொருள்—சப்ஜெக்ட்— கன்கரன்ட் லிஸ்டில் வருகிறது. மாநில அரசும் சட்டத்தை உருவாக்கலாம். அதைப்போல மைய அரசாங்கமும் உருவாக்கலாம்—கன்கரன்ட் லிஸ்ட். எனவே, 1984-ல் அந்தச் [சட்டம்

அவர்களும் வந்தார்கள். பாலதண்டாயுதம் அவர்களும் வந்தார்கள். சகோதரர் மாண்புமிகு எஸ்.டி.எஸ். போன்றவர்கள் நாங்கள் 3 மணி நேரம் செல்லுகின்றபோது ஒரு சிறு அசம்பாவிதம் 20 ஆண்டுகளுக்கு முன்பு நடக்கவில்லையே? அது அல்லவா தலைமை? அது அல்லவா கட்டுப்பாடு? நடக்காதா? தலைமை விரும்பினால் நடக்கும். அண்மையிலே கருணாநிதி அவர்கள் ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள். எங்கேயிருந்து? அவருடைய அலுவலகம் தேனாம்பேட்டையில் இருக்கிறது அல்லவா? அதிலிருந்து ராஜ்பவன். 20 நிமிடத்திற்குள் செல்கின்ற அந்த கூற்று. அதில் ஊர்வலம் செல்கின்றது. உங்களுக்குத் தெரியும். ராஜ் பவனுக்குப் பக்கத்திலே சைதாப்பேட்டையிலே ஊர்வலத்தை நிறுத்திவிடுவார்கள். தலைவரை அழைத்துச் சென்று கவர்னரிடத்திலே பேச வைப்பார் கள். இது மரபு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பல நேரத்தில் எங்களை அந்தப் போராட்டத்திற்கு அனுப்பி—எதிர்க்கட்சியாக இருக்கின்ற போது — அதுவரையில் ஊர்வலம் சென்று நாங்கள் எல்லாம் கவர்னரிடத்திலே மனு கொடுத்து வந்த காட்சிகள் எல்லாம் நிழலாடுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு 3-2-1992, பிப்ரவரி மாதம் 3-ந் தேதி கருணாநிதி தலைமையில் ஒரு ஊர்வலம் நடத்தினார்கள். எதற்காக? தடாவை எதிர்த்து. எங்கேயிருந்து? அவருடைய அலுவலகத்திலிருந்து ஒரு 20 நிமிடம். சைதாப்பேட்டை தாலுக்கா ஆபீசிலே போலீஸ் பாதுகாப்பிற்கு எல்லா கட்சிகளையும் நிறுத்துவதைப் போல நிறுத்திவிடுகிறார்கள். இவர்கள் எல்லாம் உள்ளே சென்று பிறகு அந்த தி.மு.க. அணி அன்றைக்கு குழப்பத்தை உருவாக்குகிறது. அதன் காரணமாக அங்கே தீ வைக்கப்படுகிறது. பி.டி.சி. பஸ் ஒன்று எரிக்கப்படுகிறது. மோட்டார் சைக்கிள் ஒன்று எரிக்கப்படுகிறது. பங்க் ஷாப் ஒன்று எரிக்கப்படுகிறது. அதே போல் பி.டி.சி. பஸ் 16 டேமேஜ் செய்யப்படுகிறது. சைக்கிள் 3 டேமேஜ் செய்யப்படுகிறது. கடந்த 3-ந் தேதி பிப்ரவரி மாதம் இதே கிண்டிக்குப் பக்கத்திலே நடந்தது. 20 ஆண்டுகளுக்கு முன்பே புரட்சித் தலைவர் அவர்கள் இலட்சம் மக்களைக் கூட்டிக்கொண்டு கட்டுப்பாடாக இருந்தார். நான் மற்ற அரசியல் கட்சித் தலைவர்களை எல்லாம் கேட்டுக்கொள்வது தலைமை விரும்பினால் கட்டுப்பாட்டை உருவாக்க முடியும் அல்லது அந்தத் தொண்டர்களுக்கு தலைமையிலே நம்பிக்கை இருந்தால் நிச்சயமாக அந்த சீரமைப்பு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நம்முடைய பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் இங்கே பெயிலைப் பற்றிச் சொன்னார்கள். இது தடா சட்டத்தைவிட கடுமையாக இருக்கிறது என்று. சொன்னார்கள் நான் அவருக்குச் சொல்லிக் கொள்வேன். அவருடைய மேலான கவனத்திற்குச் சொல்வேன்.



தடா சட்டம் ஒன்றிலே செய்கின்ற குற்றவாளி எவ்வளவு சமுதாயத்திற்கு கொடியவனோ அப்படித்தான் பொதுச் சொத்துக்கு தீ வைப்பவன், பஸ்ஸுக்கு தீ வைப்பவன் (மேசையைத் தட்டும் ஒலி). ஒரு தேசத்திற்கு துரோகம் செய்தவன், தேசத்தினுடைய சொத்தை அழிப்பவன், அதே அளவுக்கு கடுமையான குற்றவாளி தான். அவனுக்கு ஸ்ட்ரின்ஜன்ட் லா, It is not a bad law இது கெட்ட சட்டம் அல்ல. It is not an oppressive law. இது கடுமையான சட்டம். கடுமைதான். இன்றைக்குப் போட்டிருக்கிறோம். செஷன்ஸ் கோர்ட்டிலே வரவேண்டும் அல்லது சீஃப் மெட்ரோபாலிடன் கோர்ட்லேதான் வரவேண்டும் என்றெல்லாம். எதற்காக? தவறு செய்கின்றவனுக்கு அச்சம் வரவேண்டும். அதனை கடுமையாக்கினால்தான் பயம் வரும் என்ற காரணத்தினாலேதான் அந்த புரோவிஷனிலே போடப்பட்டிருக்கிறதே தவிர, ஏதோ ஆசை காரணமாக அல்ல. இன்றைக்கு தடா சட்டத்திலே அது கடுமையாக்கப்பட்ட காரணத்தினாலேதான் இன்றைக்கு டெரரிசம் அகற்றப்பெற்றிருக்கிறது. அதுபோலத்தான் இன்றைக்குப் பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு செய்பவர்களை கடுமையாக நடத்தினால் தான் அந்த அச்சம் காரணமாகத்தான் ஒரு மாறுதல் ஏற்படும், ஒரு திருப்பம் ஏற்படும் என்று இன்றையதினம் போற்றுதற்குரிய புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கடுமையான— இது கெட்ட சட்டம் அல்ல. கடுமையான அந்த ஷரத்தை இங்கே புகுத்தியிருக்கிறார்கள். அதுபோல நம்முடைய போற்றுதற்குரிய அமரர் இராஜீவ் காந்தி அவர்களை எதிர்த்து பதவி விலகக் கோரி தி.மு.க. ஒரு போராட்டம் நடத்தினார்கள். 1989-வது ஆண்டு. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. 1989— தி.மு.க. கருணாநிதி முதலமைச்சர். பிரதமர் இராஜீவ் காந்தியை எதிர்த்து தர்ணா செய்தார்கள். இரயில் தர்ணா செய்தார்கள். அன்றைய தினம் ஏற்பட்டுள்ள பொதுச் சொத்து சேதாரத்தைப்பற்றியெல்லாம் விவரம் என்னிடத்திலே இருக்கிறது. ஆட்சிக் கட்சி. ஆட்சிக் கட்சியாக இருந்த நேரத்திலேயே அன்றையதினம் தி.மு.க. அந்த அராஜகத்தைச் செய்தது. ஆக இவைகளை எல்லாம் அடக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன்தான் போற்றுதற்குரிய புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களே சொன்னது போல இது ஒரு காம்ப்ரெஹென்சிவ் ஆக்ட்டாக கொண்டு வந்திருக்கிறார்கள். இனி தண்டனையும் உண்டு. இழப்பையும் பெறக்கூடிய வகையிலே இந்தச் சட்டத்தில் எல்லா அம்சங்களையும் புகுத்தி ஒரு காம்ப்ரெஹென்சிவ் ஒரு ஒருங்கிணைந்த— ஒரு முழுமையான சட்டமுன்வடிவாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன் மூலமாக எப்படி அவர் நாட்டின் பாதுகாப்பை தடா சட்டத்தின் மூலம் உருவாக்கினார்களோ, அதேபோல் இந்த சட்டத்தின்மூலம் பொது சொத்துக்கு சேதாரம் விளைவிப்பவர்களை தண்டிக்க, தடுக்க, களை எடுக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. இதனை இந்த மாமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 6-00.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதாவது கேட்க இருக்கிறீர்களா என்று நான் உங்களைப் பார்த்தேன். பேசாமல் உட்கார்ந்து இருந்தீர்கள். நான் வோட்டெடுப்பிற்கு விட்ட பின் 4 பேரும் எழுந்து நிற்கிறீர்கள். நீங்கள் ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா என்று நான் உங்களைப் பார்த்தேன். ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை, வோட்டெடுப்பிற்கு விட இருக்கிறேன். நான்கு பேரும் நிற்கவேண்டாம். யாராவது ஒருவர் பேசுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 பேர் நல்லது தான் சொல்வார்கள். அதை தயவுசெய்து அரசாங்கம் கேட்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்கு பேர் நல்லதுக்குச் சொல்லவேண்டும்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்ட அமைச்சருடைய பதில் உரையில் இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்ச் வேண்டும் என்றே வலியுறுத்துகிறார். எங்களைப் பொறுத்த வரையில், ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதுகூட இந்தற சட்டத்தின்மூலம் பிரச்சினையாகிவிடும். இதனால் பல குழப்பங்கள் ஏற்படும் என்ற காரணத்தால் இந்த சட்டமுன்வடிவை எதிர்த்து வெளிநடப்புச் செய்கின்றோம்.

(உறுப்பினர்கள் திரு. ச. இராமச்சந்திரன், திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் வெளிநடப்புச் செய்தார்கள்). (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி.)



சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளக்க உரையின் ஊடே ஒரு கட்சிக்கு சிறந்த தலைமை கிடைத்து விட்டால் அந்தக் கட்சி டிசிப்ளினாக இருக்கும், பெயித்ஃபுல்லாக இருக்கும், டிவோஷனாக இருக்க வேண்டும் என்பதற்கு இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில் (மேசையைத் தட்டும் ஒலி) முன் மாதிரியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. தொண்டர்களுடைய கட்டுப்பாடு என்பது தலைமையினுடைய அசைவைப் பொறுத்து இருக்கிறது. ஆக இந்த 1988, 1989, 1990 இந்த மூன்று ஆண்டு காலத்தில் 'ஆல்டர்நெட்டீவ்' எதிர்க்கட்சி என்று சொல்ல மாட்டேன், சீப் மினிஸ்டர் ஆவதற்கு வெயிட்டிங் ஆக இருந்த போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல மாபெரும் அணிவகுப்புகளை இடேய அண்ணாசாலையில் நடத்தி இருக்கிறார்கள்.

பிற்பகல் 6–05

உங்களுக்குத் தெரியும். நம்மை எல்லாம் ஆளாக்கிய போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர் அவர்களுடைய திருவுருவச் சிலைத் திறப்பு விழாவை அமரர் ராஜீவ் காந்தி அவர்களை அழைத்து வந்து நடத்தினார், ஒரு லட்சம் பேர் அல்ல, 1 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் அணிவகுப்பை (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சிறு அசம்பாவிதம் கூட இல்லாமல் நடத்திய பெருமை போற்றுதலுக்குரிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு. (குறுக்கீடு) I am sory அதுவும் தி.மு.க. போலீஸ் அப்போது அளித்த விளக்கமே 20 லட்சம் பேர் என்று. 20 லட்சம் பேர் என்றால் அது 50 லட்சமாக இருக்கும், தி.மு.க. போலீஸ் அளித்தது அதுவும் டி.ஜி.பி. துரை அளித்த அந்த தகவலின்படி 20 லட்சம் பேர். அது போலீஸ் ரிப்போர்ட். ஆனால் உண்மையில் அது 50 லட்சத்திற்கு மேலாக சீரணியில் இருப்பார்களே, அதுபோல் அன்றைக்கு நம்முடைய அமரர் ராஜீவ் காந்தி அவர்களும், போற்றுதலுக்குரிய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் அந்த மேடையில் வீற்றிருக்கிறபோது அந்த குணக்கடல் பெரிதா அல்லது மக்கள் கூட்டம் பெரிதா; (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடல் பெரிதா ? அண்ணா தி.மு.க. வினுடைய, இந்திரா காங்கிரசினுடைய அணிவகுப்பு பெரிதா என்று அன்றைக்கு அற்புதமான காட்சியை உருவாக்கித் தரவில்லையா ? (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்று, 1980–இல், அப்போது ஜனாதிபதி ஆட்சி. திருச்சியிலே நடைபெற்ற போலீஸ் வன்முறையைக் கண்டித்து, அண்ணா தி.மு.க. கூட்டம். நடைபெற்ற போலீஸ் வன்முறையைக் கண்டித்து, கழகப் பொதுச் செயலாளர் என்ற முறையில் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர் தலைமையேற்று, ராஜ்பவனுக்கு, எப்படி புரட்சித் தலைவர் ஒரு கட்டுக்கோப்பாக, ராணுவமாக நடத்திச் சென்றாரோ அதுபோல மிகக் கட்டுக்கோப்பாக அன்றைக்கு நடத்தினார்கள்.

There was no violent incident, It was totally peaceful சிறிது அசம்பாவிதம்கூட அன்றைக்கு நடக்கவில்லை. இது எப்படி முடிந்தது ? வன்முறையாளர்கள் வந்துவிடுவார்கள்: கலகக்காரன் வந்துவிடுவான்: சமூகவிரோதி வந்துவிடுவான் என்றெல்லாம் இன்றைக்கு அவர்கள் கற்பனையாகச் சொல்கிறார்களே, இது புரட்சித் தலைவியினாலே எப்படி முடிந்தது? (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியினாலே முடிகிறபொழுது மற்றவர்களுக்கு முடியாது என்றால், முடியாது. காரணம் அவர்தான் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு இருக்கின்ற வித்தியாசம், ஒரு ஆங்கில ஏட்டிலே மிசஸ் தாட்சரைப்பற்றி நான் படித்தேன். இன்றைக்கு கன்



சர்வேடிவ் கட்சி, ஜான் மேஜர் தலைமையிலே நான்காவது முறையாக வந்திருக்கிறது. மூன்று முறை மிசஸ் தாட்சர். அந்த அம்மையார் பொறுப்பேற்கிறபோது, அந்த ஆங்கிலப் பத்திரிகைகளெல்லாம் ''வராது'' என்றார்கள். பிறகு வென்றார்கள். அப்படி அழகாக ஒரு ஆங்கில எழுத்தாளன் எழுதினான்.

Mrs. Thatcher has changed the course of history. அதைப்போல, தமிழகத்தினுடைய அரசியலிலேயே, Puratchithalavi has changed the course of history (மேசையைத் தட்டும் ஒலி) She has changed the course of history (thumping of desk). இன்றைக்குப் பலருக்கு ஆத்திரம், ஆவேசம் இருப்பதற்குக் காரணம், சரித்திரத்தைத் திருப்பி விட்டார்களே, She has changed the course of history (thumping of desk) புரட்சித் தலைவரோடு அண்ணா தி.மு.க போய்விடும் என்று கருதினார்கள். இல்லை. அதைவிட ஆயிரம் மடங்கு வளர்ப்பேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று She has changed the course of history 1989 ஆவது ஆண்டு ஜனவரி அண்ணா தி.மு.க.-விற்கு Set back பின்னடைவு. நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ராஜதந்திரம் வேலை செய்தது. இரட்டை இலை சின்னத்தைபெற்றார் பிரிந்தவர்களையெல்லாம் இணைத்தார். யூனிட்டியைக் கொண்டு வந்தார். She has changed the history. மீண்டும்புரட்சிதலைவருடைய ஆட்சியை, புரட்சித் தலைவர் எங்கே அமர்ந்தாரோ, அதே இடத்தில் அமர்ந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் ஒரு தலைமைக்கு அந்த குவாலிட்டி இருந்தால், வர்ச்சு இருந்தால், டைனமிஸம் இருந்தால் அந்தக் கட்சி கட்டுப்பாடாக இருக்கும். பாட்டாளி மக்கள் கட்சியை உங்களுக்குத் தெரியும். அந்தத் தலைவர் செய்த அந்த அற்புதமான சாதனையையும் சொன்னேன். 5 கோடி இழப்பு என்று. அவர், 1989—ஆம் ஆண்டு தேர்தலின்போது சொன்னார், நாங்கள் தேர்தலிலே கலந்து கொள்ள மாட்டோம் என்று. ஒரு அரசியல் கட்சியினுடைய இலக்கணம் என்ன ? தேர்தலில் கலந்து, மக்களுடைய வாக்குகளைப் பெற வேண்டும். வெற்றியா, தோல்வியா, அது அல்ல பிரச்சினை. மறைந்த பிரதமர் இந்திராகாந்தி தேர்தலிலே வாய்ப்பு இழக்கவில்லையா? பேரறிஞர் வாய்ப்பு இழக்கவில்லையா ? பெருந்தலைவர் காமராஜா வாய்ப்பு இழக்கவில்லையா ? அவர்களெல்லாம் அரசியலை விட்டு ஓடிவிட்டார்களா ? இல்லை. மக்களை மீண்டும் சந்தித்து, அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்று, மீண்டும் பொறுப்புக்கு வந்தார்கள். பாட்டாளி கட்சி என்ன செய்தது ? தேர்தலுக்கு நிற்க மாட்டோம்; புறக்கணிப்போம் என்று [illegible] வார்கள். பிறகு நின்று பார்ப்போமே என்று [illegible] நின்று பார்த்தால் ஒன்றே ஒன்று, தப்பித் த[illegible] வந்திருக்கிறது அப்படி

D
V21 31 M52
M52 · 2 · 6 · 2
164943
... 600 008.

யென்றால், இவர்களினாலே மக்களுடைய செல்வாக்கை பெற முடியவில்லை. குழப்பத்தை உண்டாக்குகிறார்கள். சீர்குலைவை உண்டாக்குகிறார்கள், அராஜகத்தை உண்டாக்குகிறார்கள். பஸ்களை, பொதுச் சொத்துக்களை சேதம் ஆக்குகிறார்கள். இப்படிப்பட்ட தீய சக்தியை அடக்க வேண்டுமென்பதற்காகத் தான் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். ஒரு மனதாக நீங்கள் ஆதரவு நல்கி, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மிக்க டணிவன்போடு போற்றுதலுக்குரிய நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரக் கோருகிறேன் என்று கோருங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

' 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1992) நிறைவேற்ற பெற வேண்டும்.''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் 1992-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1992) மாண்புமிகு நிதி அமைச்சர்.



பிற்பகல் 6-10

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் '' எனக் கோருகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவுகள் முன்மொழியப்படுகிறபோது உறுப்பினர்கள் அனைவரும் அமர வேண்டும். திரு. சத்தியமூர்த்தி அமர வேண்டும்.

மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, இணைப்புப் பட்டியல் முடிய திருத்தங் கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, இணைப்புப் பட்டியல் சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1992) நிறைவேற்றப் பெற வேண்டும் ''

எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

<u>(உ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1992.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1992). மாண்புமிகு நிதி அமைச்சர்.

*<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

'' 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.





<u>மாண்புமிகு பேரவைக் தலைவர் :</u> மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

[1992 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1992). மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12—2—1992)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் இந்த பில்லுக்குள்ளேயே இருக்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன் வடிவை நான் இந்த இடத்திலே காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சார்பாக வரவேற்கிறேன். காரணம், இன்று மொலாசஸ்—க்கு ஒரு வரிச் சலுகை அளித்து இதுவரை தமிழக அரசு இருந்த காரணத்தினாலே, இந்தத் தமிழக அரசு பல இலட்சக்கணக்கான ரூபாய் வருவாயை இழந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே மது விலக்குக் கொள்கையின் காரணமாக இன்று பல கோடி ரூபாயை இழந்து இன்று நிதி நெருக்கடியோடு போராடிக் கொண்

@31—3—1992-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1992 ஏப்ரல் 27] (திரு. சி. ஞானசேகரன்)

டிருக்கிற இந்தத் தமிழக அரசுக்கு இந்த மொலாசஸின் மீது இருக்கக்கூடிய வரிச் சலுகையை நீக்கி இன்று அதற்கும் வரி விதிக்கும் முகத்தான் நிச்சயமாகத் தமிழக அரசுக்குப் பல கோடி ரூபாய்க்கு வருமானம் நிச்சயமாக வரும் என்ற ஒரேயொரு காரணத்தினால் நிச்சயமாக இந்தச் சட்ட முன்வடிவை நாம் வரவேற்றாக வேண்டும். வரவேற்கிறோம் என்று சொல்லி, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே ஆதரவை நல்கி அமர்கிறேன். நன்றி ; வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இல்லை.

பிற்பகல் 6-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1992) ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1992) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் :

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதான மூமென்டைப் பொறுத்தவரையில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். ஆச்சாரிய வினோபாபாவேயினுடைய நாமினியே தேவையில்லாமல் நாமே நடத்தப் போவதாக 'ஆப்ஜெக்ட் ரிஜிஸ்ட'ரிலே சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையினால், இதை ஒரு செலக்ட் கமிட்டியை விட்டு, பழங்காலத்திலே இருந்து இருக்கிற ஒரு சட்டம்; இதை மாற்ற வேண்டுமென்று சொல்லும் போது, செலக்ட் கமிட்டியைப் போட்டு, கேட்பது நல்லது என்று நினைக்கிறேன். மேலும், செலக்ட் கமிட்டியைப் போடவில்லை என்றாலுங்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நல்ல முறையிலே, அதற்குப் பதிலாக நல்ல அதிகாரிகளை விட்டு, இந்த மூவ்மென்டினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும்; எந்த ஒரு கெடுதலும் அதற்கு வரக்கூடாது என்ற வகையிலே இந்த சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். நன்றி; வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துக்களைச் சொல்கிறபோது, இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று சொன்னார்கள். பொறுக்குக் கமிட்டிக்கு விடுகிறபோது, ஏதாவது சட்டமுன் வடிவு வருகிறபோது, அதிலே மாறுபட்ட கருத்து வருகிறபோது, அது சமுதாயத்திற்கு நலம் பயக்கும் என்று ஆளுங் கட்சி கொண்டு வருகிற நேரத்திலே, இதிலே சில சந்தேகங்கள்

---

@24–9–1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

வரலாம். அந்த நேரத்தில், அதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடுவது நியாயம்தான். இது அப்படிப்பட்ட ஒன்று அல்ல. இதிலே என்னவென்றால், ஒரு வாரியம் அமைக்க வேண்டுமென்றால், ஆச்சாரிய விேனாபாபாவே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இங்கே தமிழ்நாட்டிற்கு வந்தபோது, நிலங்கள் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூமிதான இயக்கத்திற்காக 24 ஆயிரம் ஏக்கரா கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராம தானத்திற்கு 2049 கிராமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த கிராம தானத்தில் 1,50,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதைப் பராமரிப்பு செய்வதற்கு அரசுக்கு ரூ. 60 ஆயிரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது, முன்பெல்லாம் அவர் உயிரோடு இருந்தபோது, அந்த வாரியம் அமைத்து, அந்த வாரியத்தை அமைக்கிற பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இன்றைக்கு அவர் இல்லை. ஆனால், இன்றைக்கு அவருடைய பிரதிநிதிகள் மகாராஷ்டிரா மாநிலத்தில் சர்வ சேவா சங்கம் இருக்கிறது; அந்த சர்வ சேவா சங்கத்திலே யாரோ இருப்பார்கள். ஆனால், அவர்களுடைய அனுமதியைப் பெற்று வாரியத்தை அமைத்து, அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதில் காலதாமதம் ஆகிவிடும். விேனாபாபாவே எந்த நோக்கத்திற்காக எந்த எண்ணத்திற்காக நிலத்தை வாங்கினார்களோ, அதைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக வாரியம் அமைக்கப்பட போகிறது. அந்த வாரியம் அமைக்கிற பொறுப்பை, அதிகாரத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறதே தவிர, வேறு எந்த மாற்றமும் இல்லை.

அதிலே அவர் எந்தச் சட்டத்திற்குட்பட்டு, எந்த நியாயத்திற்கு உட்பட்டு அந்த நிலத்தை எடுத்தார்களோ, எப்படிக் கொடுக்க வேண்டுமென்று எழுதி வைத்திருக்கிறார்களோ அது எதையும் மாற்றவும் இல்லை. மாற்றவும் முடியாது. மாற்றுவதற்கு இந்த அரசு விரும்பவும் இல்லை. ஆனால் இந்த வாரியத்தை அமைக்கிறபோது விேனாபாபாவேவோ அல்லது அவரால் நியமிக்கப்படுகிற ஒருவருடைய அனுமதி பெற்று என்பதை மாற்றி இந்த அரசு எடுத்துக் கொள்கிறது என்று சொல்லி, வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லி, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-20

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

<u>மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.</u>

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்'. என்க (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1992).

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/1992) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது எம். ஜி. ஆர். மெடிக்கல் யூனிவர்சிடி அட்மிஷனைப் பற்றி உள்ள விவரங்களைத்தான் இந்த மசோதாவில் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனுடைய 'எர்லியர் ஆக்ட்' முன்னாலே என்ன நடந்திருக்கிறது என்ற விவரங்கள் இதிலே





கொடுக்கப்படவில்லை. ஆகையினால், உடனடியாக எங்களுக்கு இதைப்பற்றி டீடெயிலாக எதுவும் சொல்லமுடியாத நிலையில் இருக்கிறது. ஏன் என்று சொன்னால் அதனுடைய 'எர்லியர் ஆக்ட்' இல் என்ன இருந்தது என்று சொல்லப்படவில்லை. மேலும் என்னைப் பொறுத்தவரையில் நம்முடைய மருத்துவ கல்லூரிகளில் நேர்மையாக, நல்ல முறையிலே தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது எந்த 'ரிட்டும்' வருவதாக நாம் பார்ப்பதில்லை. தெளிவாக நம்முடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. மேலும் எந்த அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் மருத்துவக் கல்லூரிகளிலே ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தவர். அதற்குப் பின்னாலே தான் 'செல்ப் பைனான்சிங் காலேஜில்' பணம் கொடுக்கின்றவர்களை சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் அரசாங்கக் கல்லூரிகளில் எல்லாம் நல்லமுறையிலே 'மார்க் பேசிஸ்' முறையில் ஆட்களை எடுக்கின்ற அடிப்படையில் கொண்டு வந்தார். அதுபோன்று திட்டம் வருகின்ற சில டிபார்ட்மெண்டுகளுக்குச் சொல்லப்படுகின்ற அதையும் பழையபடி நல்லமுறையிலே நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இந்தச் சட்டத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏன் வந்தது என்று சொன்னால் ஒரு சின்ன பிரச்சினை ஏற்பட்டது. அதாவது பொதுவாக எல்லோரும் பரிட்சை எழுதி வெற்றி பெற்று வருகிறார்கள். அதற்குப் பின்னாலே 'பர்ஸ்ட் இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறார்கள். அதற்குப் பின்னாலே இரண்டாவது 'இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறார்கள். 'பர்ஸ்ட் இம்ப்ரூவ்மெண்ட்' எழுதக் கூடியவர்களுக்கு இடம் கொடுக்கலாம் என்று ஒரு முறை ஏற்கனவே நடைமுறையில் இருந்தது. ஆனால் 'செகண்ட் இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறவர்கள் தங்களுக்கு இடம் வேண்டும் என்று அரசாங்கத்திடம் மனுக் கொடுத்தார்கள். அப்போது அரசாங்கம் என்ன கருதியது என்று சொன்னால், எல்லாப் பாடங்களையும் ஒரே நேரத்திலே எழுதி, முதலில் ரெகுலர் ஸ்டூடன்ட்ஸ் பாஸ் செய்து வருவதற்கும், அதற்குப் பின்னாலே 'இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறவர்களுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. ரெகுலர் ஸ்டூடன்ட்ஸ் 'இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறபோது எல்லாவற்றையும் ஒன்றாக எழுதுகிறார்கள். எனவே, அங்கேதான் முழுமையான திறமையும் வெளிப்படுகிறது. அதற்குப் பின்னாலே 'இம்ப்ரூவ்மெண்ட்' என்று வருகின்ற போது, தனித்தனியாக ஒவ்வொரு பாடமாக எழுதுகிறார்கள். பர்ஸ்ட்

@22—4—92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இக்ப்ரூவ்மெண்ட்டிலே இருக்கிற பாடம், செகண்ட் இம்ப்ரூவ்மெண்டிலே இருக்கிற பாடம் என்று எழுதுகிற போது, அவர்கள் ரெகுலராக எழுகிற மாணவர்களைவிட சிறப்பாக வந்துவிட முடியும். ஏன் என்றால், தனித்தனியாக எழுதுகிற காரணத்தால். ஆனால் அதை நியாயம் என்று ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லி, பர்ஸ்ட் இம்ப்ரூவ்மெண்டை மட்டும் நாங்கள் அனுமதிப்போம் என்று சொல்லி, இரண்டாவது இம்ப்ரூவ்மெண்டை அனுமதிக்க முடியாது என்று வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். வழக்கு மன்றத்திலே ஒரேயடியாக என்ன தீர்ப்பு வந்தது என்றால், உங்களுக்கு இதிலே ஜுரிஸ்டிக்ஷன் கிடையாது. அரசாங்கம் இதில் எதுவுமே தலையிட முடியாது. காரணம், இதற்கு யூனிவர்சிடிக்குத்தான் அந்தப் பவர் இருக்கிறது உங்களுக்கு, இப்படித்தான் எக்ஸாமினேஷன் வைக்க வேண்டும், இப்படித்தான் மாணவர்களை எடுக்க வேண்டுமென்று சொல்வதற்கு எந்தவிதமான சட்ட பூர்வமான உரிமையும் கிடையாது என்று சொல்லிவிட்ட காரணத்தால்தான் இப்போது நாம்இதைக் கொண்டு வருகிறோம். இதைக் கொண்டு வருகிற காரணத்தால் ஏற்கனவே இருக்கின்ற அட்மிஷன் முறையில் எந்தவிதமான மாற்றமும் வராது. இருக்கின்றவற்றில் சில குறைபாடுகள் ஏதாவது இருந்தால் கூட அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு நிச்சயமாக இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து, நீங்களே ஆதரித்து இருக்கிறீர்கள், எனவே இதனை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

பிற்பகல் 6-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் பெற்றீர்கள் அல்லவா? விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்ட முடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 17,1992, நிறைவேற்றப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்)வரிவிதிப்பு(திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1992), மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1992) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அடுத்த சட்டமுன்வடிவின் மீதும் தங்கள் கருத்துக்களைச் சேர்த்துச் சொல்லலாம். இரண்டுமே சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. பேசும்போது இரண்டையுமே சேர்த்துப் பேசிவிடலாம். திரு. எச். எம். ராஜு.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு மற்றும் தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த,சட்ட முன்வடிவு ஆகியவற்றில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து என்னுடைய ஒரிரு கருத்து க்களைக் கூற விரும்புகிறேன்.

வாகனஙகளுக்கு எஃப்.சி. வாங்கும்போது வரிகட்டினால்தான் எஃப்.சி. கொடுக்கப்படும் என்றிருக்கும் நிபந்தனையை இன்னும் தளர்த்தி 60 நாட்களுக்குள் கொடுக்கலாம் என்று கொடுத்தால் நலமாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாகனங்களுக்கு வரி கட்டும்போது மாத கடைசியில் ஒட்டு மொத்தமாக ஊர்தியின் சொந்தக்காரர்கள் கட்டுகிறார்கள். அதனால் காலதாமதம் மற்றும் வேலைப்பளுவும் அதிகமாக ஆகிறது. இதைத் தவிர்க்க வழிவகை செய்யவேண்டுமென்றுதான் கோருகிறேன்.

அடுத்து வங்கிகள் மூலமாக வாகன வரிகள் வாங்கும்போது சில வங்கிகள் மூலமாகத்தான் இந்த வரிகள் வாங்கப்படுகின்றன. அதனால் எல்லா தேசிய வங்கிகள் மூலமாகவும் இந்த வரிகளை வாங்கலாம் என்ற கருத்தைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

@ 24-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



ஆர். சி. புத்தகங்கள் உடனுக்குடன் மக்களுக்குக் கிடைக்க வழிவகை செய்தால் மிகவும் நல்லது என்ற கருத்தையும் நான் கூற விரும்புகிறேன்.

வாகன வரிகளுடன் இன்சூரன்ஸ் பணத்தையும் மேற்படி வங்கிகள் வாங்கினால் மக்களுக்கு நலமாக இருக்கும், சுலபமாகவும் இருக்கும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மோட்டார் சைக்கிள், மொப்பட் போன்றவற்றிற்கு லைசன்ஸ் வழங்குவதில் ஸ்ட்ரிக்ட்-ஆக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால் சில 15, 16 வயதுடைய மாணவர்கள்கூட இதை வாங்கி அவர்கள் ஓட்டுகிறார்கள். இதன்மூலமாக விபத்துக்கள் நேரிடுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கிறது. ஆக அவைகளை எல்லாம் தவிர்க்க வேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டமுன்வடிவுகளில் பேச வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய் ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரி விதிப்பு திருத்தச் சட்டமுன்வடிவு மீது சில கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள். இந்தச் சட்ட முன் வடிவைப் பொறுத்தவரையில் அண்மையில் மத்திய அரசு இரண்டு சக்கர வாகனங்களுக்கு அதாவது மோட்டார் சைக்கிள்களைப் பொறுத்த வரையில் அவற்றின் திறன் என்று சொல்லப்படும் அந்த கெப்பாசிட்டி அடிப்படையில் சீரமைத்துள்ளது. அதன் காரணமாக மோட்டார் சைக்கிள்களின்மீது விதிக்கப்படும் எக்ஸைஸ் தீர்வை, ஆயத்தீர்வை மாற்றியமைக்கப்பட்டு உள்ளது. அந்த அடிப்படையில்தான் தமிழ்நாட்டிலும் நாம் வரி விதிப்பைத் திருத்தியமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நிதிநிலை அறிக்கையில் மோட்டார் வாகனங்களுக்கான வரி விதிப்பில் சில மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன.

பிற்பகல் 6–30.

அந்த அறிவிப்பின்படி 50 சிசி.இருக்கின்ற வாகனங்களுக்கு,நம் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு ஏறத்தாழ அதற்கு மட்டும் 4,68,801 பேர்களுக்கு வரிவிதிப்பே இல்லை என்ற நிலையை உருவாக்கி, அதனாலே அரசுக்கு ரூபாய் 7 கோடியே 45 ஆயிரம்

இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல, 50 சி.சி.யிலிருந்து 170 சி.சி. வரையிலும் ரூ. 105 வரிவிதிப்பு வாகனங்களுக்கு இருந்திருக்கிறது. அதேபோல 170 சி.சி. யிலிருந்து 300 சி.சி. வரைக்கும் 200 ரூபாய், 300 சி.சி.க்கு மேலே 300 ரூபாய் என்று இருந்தது தற்போது மாற்றி 50 சி.சி. வரையிலும் வரிவிதிப்பு ஏதும் இல்லை, 50 சி.சி.க்கு மேலே 75 சி.சி. வரையிலும் வாகனங்களுக்கு இனி 125 ரூபாய் வரி, 75 சி.சி. யில்ருந்து 170 சி.சி. வரையிலும் வாகனங்களுக்கு 180 ரூபாய் வரி, 170 சி.சி.க்கு மேலே உள்ள மற்ற அனைத்து வாகனங்களுக்கு இனிமேல் 210 ரூபாய் வரி என்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து சுமை ஏற்றப்படாத நிலையில் உள்ள 700 கிலோ கிராம் எடையுள்ள குறைந்த எடை மோட்டார் வாகனங்களுக்கு பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள நிலை, ஆண்டுக்கு வரிவிதிப்பு 900 என்று இருந்தது, திருத்தப்பட்ட பின்பு 1,200 ரூபாய் ஆக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே தயாரிக்கப்பட்டு நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களுக்கு தற்போது 600 ரூபாய் ஆக இருந்தது 800 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு நிறுவனங்களால் பயன்படுத்தப்படாமல் தனியாரால் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களுக்கு 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக திருத்தி அமைக்கப்படுகிறது என்பதை இதன் மூலமாகத் தெரிவித்து, இதனால் அரசுக்கு ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும்கூட இந்த மாற்றத்தை இந்த அரசு செய்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த சட்டமுன்வடிவை ஆதரித்து, திருத்தங்களைத் திரும்பப்பெற்று, நிறைவேற்றித் தரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.



பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[1992 ஏப்ரல் 27

(ஒ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1992). மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1992) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

@24-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.



1992 ஏப்ரல் 27] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 6-35

(ஓ) வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1992), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32 1992) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டத்தை மேலும் திருத்துவதற்காக கொண்டு வந்திருக்கிற சட்டமுன் வடிவினை வரவேற்று இந்த சட்டமுன்வடிவின் 49ஏ, 49பி, 49சி, 49டி, 49இ, 49எப் மற்றும் 49ஜி ஆகிய புதிய புதிய பிரிவுகளைப் புகுத்தலுக்காக இச்சட்டமுன்வடிவை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

வன இலாகாவுக்குச் சொந்தமான பகுதிகளில் எந்த வழியானாலும் அந்த வழிகள் செல்லும் பகுதிகளிலுள்ள சோதனைச் சாவடிகளில் உள்ள அதிகாரிகளைத் தான் தவறு நடந்தால் பொறுப் பேற்க வைக்க வேண்டும். இந்த சோதனைச் சாவடிகளைக் கடந்துதான் கடத்தல்காரர்கள் கடத்தல் பகுதிகளுக்குச் செல்கிறார்கள். அரசு இதற்காக சட்டத்தில் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல கடத்தல் மரங்களைக் கைப்பற்றுவது, அந்தக் கடத்தல் நடக்கும் இடத்திற்கு கடத்தல்காரர்கள் எப்படிச் சென்றார்கள் என்பதை எல்லாம் அறிய முழு முயற்சி எடுக்க வேண்டுகிறேன்.

வனத் துறையில் மரம் வெட்டி கடத்துகிறபோது அதை கடத்த பயன்படுத்தும் வாகனங்கள், பொருள்கள் அனைத்தையும் பறிமுதல் செய்வதோடு, அப்படி மரம் வெட்ட காட்டுப் பகுதிக்கு வாகனங்களில் கடத்தல்காரர்கள் செல்லும்போதோ அல்லது அவர்கள் வெட்டும்போதோ தடுக்காமல், பிடிக்காமல் விட்டுவிட்ட காவல்காக்கும் வனத்துறை அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதைப் பற்றி இந்தச் சட்டத்தில் தெரிவிக்கவில்லை என்பதையும் நான் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

---

@24-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



கடத்தல் மரம் வெட்டும்போது அவர்கள் அரசிடமிருந்து 100 ஆண்டுக் காலம் மரம் வெட்டும் அனுமதியை வாங்கிக் கொண்டு அருகிலுள்ள அரசு உயர் ஜாதி மரங்களை வெட்டி விடுகிறார்கள். அதற்கு ஒரு சில அதிகாரிகள் அவர்களுக்கு உடந்தையாக இருப்பதைத் தடுக்க வேண்டும். அப்படி வெட்டுவதை அனுமதிக்கக்கூடாது. எனவே, அரசு மரத்திற்கு நம்பர் போட்டுவிட்டு, அனுமதி பெற்ற மரங்களை வெட்டிய பிறகு அருகிலே நம்பர் போட்ட அரசு மரம் உள்ளதா இல்லையா என்பதைத் தெரிந்து, அப்படி அரசு மரம் இல்லாவிட்டால் அந்த அனுமதி பெற்று மரம் வெட்டியவர்களே அதற்கு பொறுப் பேற்க வேண்டுமென சட்டத்தில் மாற்றம் கொண்டு வந்திருக்கலாம் என என் கருத்தைக் கூறி, இச்சட்ட முன்வடிவை வரவேற்கிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு வன(திருத்த) சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர் சில கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டினார். தமிழகத்தினுடைய வரலாற்றில் நம்முடைய மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால் இந்தத் திருத்தச் சட்டத்தை தமிழகத்திலே கொண்டு வந்திருக்கின்ற பாங்கினை கண்கூடாக மக்கள் கண்டு கொண்டிருக்கிறார்கள். தமிழக வரலாற்றில் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் முத்தமிழ் வளர்க்கும் தாயாகவும், தலை காய்ந்த ஏழையெளிய மக்களின் தேன் அருவியாகவும், விழாக் காலத்தில் உற்சவ மூர்த்தியாகவும், கம்பீரமாக பீடுநடையுடன் பேராட்சியை இந்த ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற பாங்கினை இன்றைக்கு மக்கள் கண்கூடாக பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தின் வன வளம் பெருகவும், கடத்தலைத் தடுத்து நிறுத்தவும் நமது இதய தெய்வம், 20ஆம் நூற்றாண்டில் இணையற்ற முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்பொறுத்த வரை, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்னாலே காட்டுப்புறாக்களைப்போல எங்கெங்கோ பறந்து போன சந்தனக் கட்டைகளை கைப்புறாவாக கூண்டிலே வைத்து சந்தனக் கட்டைகளை இன்றைக்கு எங்கும் எடுத்துச்செல்ல முடியாத அளவுக்கு பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிற பாங்கினை இன்றைக்கு கண்கூடாக மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். காட்டு வளம் குறைந்தால் கார்கால மழை பொய்த்துவிடும், கண்ணீர்மழை தான் பெருகும்

என்று பழமொழி இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு திட்டங்களை மக்களுக்காக நிறைவேற்றுகின்ற வகையில் இந்தச் சட்டத்தை இப்போது கொண்டுவந்திருக்கிறார்கள்.

1991–92ஆம் ஆண்டு 52 இலட்சம் ரூபாய் செலவில் 45 தொலைத் தொடர்பு சாதனங்களை வாங்கிக் கொடுத்த பெருமை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைச்சாரும். (மேசையைத் தட்டும் ஒலி). அதுபோல 1992ஆம் ஆண்டு 50 சதவீதத்திற்கு மேல் ஏறத்தாழ இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு 178 புதிய வாகனங்களை வாங்கி, வனத்துறைக்காக தரப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 6–40

ரூ. 16 இலட்சம் மதிப்பில் 141 நவீன துப்பாக்கிகளை வாங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். அதைப்போல மாவட்ட ஆட்சியாளர்களால் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிற ஷாட்கள் என்று சொல்லப்படுகிற அந்தத் துப்பாக்கிகளையும் அவர்களுக்கு வாங்கித் தருவதற்கு இந்த அரசு உத்தரவை வழங்கி இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இதற்கு முன்னாலே இருந்த ஆட்சிக் காலங்களில் உள்ளதை மாற்றி, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு பல்வேறு சாதனைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற பாங்கினை இன்றைக்கு நீங்கள் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

1990–91இல் சந்தனக் கட்டைகளை கடத்தியவர்களிடமிருந்து திரும்பப் பெறப்பட்டது 11 கோடி ரூபாய் மதிப்பு, 734 டன் எடை. சந்தனக் கட்டைகளை கடத்திய வழக்குகளில் ஈடுபட்டவர்கள் 2,919 குற்றவாளிகள். இன்றைக்கு தொடரப்பட்டுள்ள வழக்குகள் 385. அதிலே வாகனங்களை நாம் இன்றைக்கு சீஸ் செய்துள்ளது 367வாகனங்கள்.

1991–92ஆம் ஆண்டு இந்தக் குற்றங்களிலே பிடிபட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்பு 13 கோடி ரூபாய். அந்த சந்தனக் கட்டைகளின் எடை 768 டன். குற்றவாளிகள் எண்ணிக்கை 4,677. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு வாகனங்கள் பிடிபட்டது 712 என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி வரையிலான 3 வார காலத்தில் பிடிபட்ட சந்தனக் கட்டைகள் மதிப்பு 59 இலட்சம் ரூபாய். பிடிபட்ட சந்தனக் கட்டைகள் எடை 39 டன். இதிலே ஈடுபட்ட குற்றவாளிகள் 249 பேர். பிடிபட்ட வாகனங்கள் 26. (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுபோன்ற மாற்றங்களை உருவாக்குவதற்குக் காரணம் சந்தனக் கட்டைகளை வனத்திலே இருந்து கடத்தல் செய்யும்போது, வாகனங்களைக் கைப்பற்றி, அதை காவல் துறைக்கு எடுத்துச் சென்று, காவல் துறையிலே இருந்து வழக்கு மன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத்திலே வாகனங்களை சீஸ் செய்யும் நிலைமையை இதுவரையில் சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருந்ததுதான். அந்த நிலைமையை மாற்றி கடத்தல் வாகனங்களைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தை வனத் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பது ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வரான மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், வாகனங்களை நாம் சீஸ் செய்யும்போது, அந்த வாகனங்களையே திரும்பப் பெற்று, இதேகடத்தல்தொழில் செய்வதை மாற்றிட சட்டத்தின் வாயிலாக அதைத் தடுகின்ற அளவுக்கு நாம் புதிய சட்டத்தை உருவாக்கி கடத்தல் வாகனங்களை சீஸ் செய்வதற்கு அங்கே இருக்கிற வனத் துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் தண்டனை, அபராதம் உயர்த்தப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். முதலிலே இருந்தது, முதல் குற்றமாயின் ஓராண்டு தண்டனையும், 3,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது. தற்போது அதை மாற்றி, தண்டனை இரண்டு ஆண்டுக்காலமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அபராதம் 7,500ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இரண்டாவது குற்றமாயின் அபராதம் முதலிலே 5,000 ரூபாய் என்று இருந்ததை இப்போது 15,000 ரூபாயாக விதிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல தற்போது உயர்ந்த பட்ச தண்டனை 3 ஆண்டுகள் என்று இருந்ததை 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 10 ஆயிரம் ரூபாய் அபராதம் என்று இருந்தது 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைக்கு ஒருவர் 5 கிலோ சந்தனக் கட்டை வைத்துக்கொள்ளலாம் என்று சட்டத்திலே விதி இருக்கிறது. அதற்கு மேலும் யார் வைத்திருந்தாலும் கடுமையான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்வதற்கு சட்டம் வழிவகை செய்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுகிறபோது கடத்தல் வாகனங்களைப் பிடிப்பதில் செக் போஸ்டுகளில் சரியான நிலை

மைகள் இல்லை என்று சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு வனத்திலே நுழையும் எந்த வாகனமாக இருந்தாலும், வனத் துறையிலே உள்ள அதிகாரிகள் பரிசோதனை செய்து அனுப்புவதற்குத் துரித நடவடிக்கை மேற்கொண்டு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்தக் கடத்தல் தடுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரத்தைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

பிற்பகல் 6—45

ஆகவே,இதை நிறைவேற்றித் தருகிற வகையில்,மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, நமது ஒப்பற்ற தலைவியாக இருக்கிற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த வனத்துறையில் புதிய சட்டத்தை உருவாக்கி, வனத்தைப் பாதுகாக்கிற அளவுக்கு உருவாக்கித் தந்திருக்கிற நமது அரசைப் பொறுத்த வரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, காட்டுக்கு அழகு தருவது கவரி மான், வீட்டுக்கு அழகு தருவது குத்துவிளக்கு,என்பதைப்போல நாட்டுக்கு அழகு தருவது புரட்சித் தலைவி என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்டி, இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 3 ஆண்டு, 2 ஆண்டு என்று தண்டனைகள் இருப்பதை 5 ஆண்டுகளாக மாற்றியமைக்கப்பட இருக்கிறது என்று கூறினார்கள். இப்போது ஏற்கெனவே சந்தனக் கட்டைகள் வழக்குகள் முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டில்தான் கொண்டு வரப்படுகிறது. அந்த மாஜிஸ்ட்டிரேட்டுக்கு 3 ஆண்டு வரைதான் தண்டனை கொடுக்க முடியுமே தவிர, 5 ஆண்டு தண்டனை கொடுக்க இயலாது. சி.ஆர்.பி.சி. 29ஆவது செக்ஷனில் இது சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல், 49ஏ, பி, சி, டி, என்ற ஒன்றைக் கொடுத்து, அசிஸ்டன்ட் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் அவர்கள் இத்தகைய கடத்தல் வாகனங்களையெல்லாம் பறிமுதல் செய்துவிடலாம் என்ற ஒரு நியதியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே சாராய சட்டத்தில் இதே மாமன்றம் தண்டனை கொடுக்கக்கூடாது என்ற ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தபோது, அது சுப்ரீம் கோர்ட்டுக்கு சென்று அடிபட்டுப் போய்விட்டது. ஆகவே, இதையெல்லாம் வரைமுறைப் படுத்தி, அதாவது இப்போது செஷன்ஸ் ஜட்ஜுக்கு மட்டுமே இப்போது 5 ஆண்டு தண்டனை கொடுக்கலாம் என்று சொன்னால் அவர்தான் கைது செய்ய



முடியும். அதுபோன்ற காலங்களில் திருப்பத்தூரில் இருக்கிற ஸ்பெஷல் கோர்ட்டில் சந்தனக் கட்டை வழக்குகளை நடத்த முடியாது. ஆகவே, இந்தச் சூழ்நிலையை கருத்தில்கொண்டு இன்னும் சில சட்டத் திருத்தங்களை இந்த அரசு கொண்டுவந்தால்தான் கூடிய விரைவில் சந்தனக் கட்டை வழக்குகளை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, இதை முறைப் படுத்தி அரசு ஆணை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அரசு பரிசீலித்து அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்குஎடுத்துக் கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 14 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

டி 2 53—119—33

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 27

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம், என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஔ) நுண்ணறிவுத்திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத்திறன் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1992), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1992 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறன் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரிச் சட்டமுன் வடிவு(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1992), @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுண்ணறிவுத்திறன் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீது வரியை விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் வகை செய்வதற்காகவும் மற்றும் அதன் தொடர்பான சட்ட முன்வடிவை நான் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்கிறேன். இருந்தபோதிலும், இன்று தமிழகத்தினுடைய எல்லா நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் நிதி நெருக்கடி இருக்கின்ற காரணத்தால் இந்த வரியையும் வசூல் செய்ய முடியாமல் இதுபோன்ற நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் இந்த நகராட்சிகள் தெரு விளக்குகளைக் கூட சரியான முறையில் எரியவிட முடியவில்லை. தண்ணீர் சப்ளையும் சரியாக செய்ய முடியவில்லை. இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இன்று இந்த பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான ஒரு உபாயத்தை இன்று அமைச்சர் அவர்கள் கண்டுபிடித்து, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

பிற்பகல் 6—50

இருந்தபோதிலும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, பொதுவாக வழக்கறிஞர்களை எடுத்துக் கொள்வீர்களேயானால், ஐந்தாண்டுகள் வழக்கறிஞர் தொழிலில் சர்வீஸ் உள்ளவர்களுக்கு வருடத்திற்கு ரூ. 2,500 என்று தொழில் வரியை போட்டிருக்கிறீர்கள். பொதுவாக வழக்கறிஞர்களில் சில பேர் பெயருக்குத்தான் வழக்கறிஞர்களாக இருப்பார்கள். சில பேர் நீதிமன்றத்திற்கே கூட போகாதவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் ரூ. 2,500 ரூபாயை வரியாக விதிப்பீர்களேயானால் அதை அவர்களால் கட்ட முடியாது.

---

@2—4—1992ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அதே போல மருத்துவர்கள். சில பேர் நல்ல பேஷண்டுகளை வைத்திருப்பவர்கள் இதையெல்லாம் கட்ட முடியும். சிலபேர் டாக்டர்களாக இருப்பார்கள். பெயருக்குத்தான் டாக்டர்கள் என்று அழைப்பார்கள். அவர்கள் விவசாயத்தைக்கூட செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களும் என்ரோல் செய்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்களை நீங்கள் கண்டறிந்து, அவர்கள் ஏதாவது மனுச் செய்வார்களேயானால் அப்படிப்பட்ட வழக்கறிஞர்களுக்கும், அது போன்று மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் நீங்கள் ஒரு விதிவிலக்கை அளித்து குறைந்த வரியை வசூலிக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசு ஊழியர்கள் எல்லாம் தொழில் வரி விதிப்பதற்கு இன்று கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்து பல போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல மனுக்களை, அனுப்பியவண்ணம் இருக்கிறார்கள். இன்று அரசு ஊழியர்கள், நீங்கள் போட்டிருக்கக் கூடிய தொழில் வரி சற்று கூடுதலான வரி என்கின்ற வகையில் அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மனுவையும் அனுப்பியிருக்கிறார்கள். அதையும் அரசு சற்று கருணையோடு பரிசீலித்து அந்த தொழில் வரியை ஓரளவிற்காவது, பாதியாகக் குறைக்க வேண்டும். காரணம் நீங்கள் விதித்துள்ள இந்தத் தொழில் வரியை வசூலிப்பீர்களேயானால் எல்லா பேரூராட்சிகளும், மாநகராட்சிகளும் பெரிய நிதியாதாரத்தைப் பெற்றுவிடும். ஆனால் அதை வசூலிப்பதற்கு பல தடங்கல்கள் இருக்கும். அந்த வரியை நீங்கள் குறைத்தால் அவர்களாகவே முன் வந்து இந்த வரியை செலுத்தி விடுவார்கள். வரியைக் குறைக்கவில்லை என்றால் ,பில் கலெக்டர்கள் இந்த புத்தகங்களை ஏந்திக் கொண்டு அன்றாடம் அலைந்து ஒன்றையும் வசூல் செய்ய முடியாமல் அவல நிலைக்கு ஆளாக்கத்படுவார்கள் என்ற நிலையை மாற்றுவதற்காவது எதிர் காலத்தில் அரசு சற்று கருணையோடு பரிசீலித்து இந்த தொழில் வரியை பாதியாகக் குறைக்க வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை வைத்து இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்று அமைகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில், இந்த சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.



அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய விளக்கங்களைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் உள்ள வருமான ஆதாரங்களில், தொழில் வரி முக்கியமான வருவாயாக உள்ளது. தற்போதுள்ள சட்ட விதிகளின்படி தொழில் வரி, ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனத்தின் ஆறு மாதங்களின் வருமானத்தின் அடிப்படையில் அதிகபட்சமாக ஆறு மாதங்களுக்கு 125 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. சமீபத்தில், தொழில் வரிக்கான உச்சவரம்பு வருடம் ஒன்றுக்கு 250 ரூபாய் என்பது 2,500 ரூபாயாக வசூலிப்பதற்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

கர்நாடகம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் மாத வருமானம் பெறுபவர்களுக்கு மாத வருமானத்தைப் பொறுத்தும், சொந்தமாக தொழில் செய்யும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொறியாளர்கள் போன்றவர்களுக்கு, அவர்களது தொழிலின் அடிப்படையிலும் தொழில் வரி வசூலிக்கப்படுகிறது. இதே அடிப்படையில் நமது மாநிலத்திலும், தொழில் வரி விதிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டு, இச்சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளது.

அரசு அலுவலர்களைப் பொறுத்தவரையில், தற்போதுள்ள உள்ளாட்சிச் சட்டத்தில், அவர்களிடமிருந்து தொழில் வரி வசூலிக்க வழி வகை உள்ளது. இதன் அடிப்படையிலேயே 1-4-1988 வரை தொழில் வரி வசூலிக்கப்பட்டு வந்தது. பின்னர் அரசு அலுவலர்களில் 'பி', 'சி' மற்றும் 'டி' பிரிவினர்களுக்குரிய தொழில் வரியை, அரசே செலுத்தும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டு, அரசு சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு செலுத்தி வருகிறது.

தற்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்ட முன்வடிவில், அரசு அலுவலர்களும் தொழில் வரி செலுத்த வேண்டும் என்று கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் மாத வருமானம் 300 ரூபாய்க்கு மேல் பெறக் கூடியவர்கள் தொழில் வரி செலுத்த வேண்டும் என்பதை, மாத வருமானம் 1,500 ரூபாய்க்கு மேல் பெறக் கூடியவர்கள் தொழில் வரி செலுத்த வேண்டும் என்று மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம், மாத வருமானம் 1,500 ரூபாய்க்கு குறைவாக உள்ளவர்கள் தொழில் வரி செலுத்த வேண்டியதில்லை.

1-4-1988-க்கு முன்பு நடுத்தர மாத வருமானம் பெறக் கூடியவர்கள் செலுத்தி வந்த தொழில் வரியைக் கருத்தில்கொண்டு புதிய முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாத வருமானம்

2,500 ரூபாய் வரை உள்ளவர்களுக்கு அவர்கள் முன்பு செலுத்தி வந்த தொழில் வரியை விடக் குறைவான அளவே நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மாத வருமானம் பெறக்கூடியவர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படாத வகையில் வரி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள நடைமுறையில் சுயமாகத் தொழில் செய்பவர் களுடைய வருமானம் குறித்துத் தருந்த தகவல்கள் கிடைப்ப தில்லை.

பிற்பகல் 6-55

மருத்துவர்கள், மற்றும் வழக்கறிஞர்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய அனுபவத்திற்கேற்ப அவர்களுக்கு அதிக வருமானம் வருகின்ற வாய்ப்பு உள்ளது. எனவே, ''தொழில் அனுபவம்'', இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு ஒரு விகிதமும், இரண்டிலிருந்து 5 ஆண்டுகள் வரை உள்ளவர்களுக்கு ஒரு விகிதமும், 5 ஆண்டுகளுக்கு மேல் தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு ஒரு விகிதமுமாக தொழில் வரி விதிக்கத் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

இச்சட்டத்தின்படி, மாத வருமானம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் வேலை பார்க்கும் அலுவலகம் அல்லது நிறுவனத்தின் சம்பளம் வழங்குபவர்கள், சம்பந்தப் பட்ட உள்ளாட்சி அலுவலகத்தின் நிர்வாக அலுவலரிடம் பதிவு செய்து ஒரு சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும். அதே போன்று, சுயமாகத் தொழில் செய்பவர்களும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அலுவலகத்தில் நிர்வாக அலுவலரிடம் பதிவு செய்து கொண்டு சான்றிதழ் பெற வேண்டும். அச்சான்றிதழ்களில், அவர்கள் செலுத்த வண்டிய தொழில் வரி குறிப்பிடப்பட்டிருக் கும்.

மேலும் அலுவலகம் அல்லது நிறுவனத்தில் சம்பளம் வழங்கு பவர்கள் அல்லது மேலாளர்கள் தங்களிடம் பணிபுரியும் அலு வலர்களுக்கான தொழில் வரிைய அலுவலர்களது சம்பளத்தில் பிடித்தம் செய்து உள்ளாட்சி அலுவலகங்களில் செலுத்த வேண் டும்.

சுயமாகத் தொழில் செய்பவர்கள் அவர்களே நேரிடையாக உள்ளாட்சி அலுவலகத்தில் வரியைச் செலுத்த வேண்டும்.

ஒருவர் உள்ளாட்சி அலுவலக நிர்வாக அலுவலரிடம் பதிவு செய்து கொள்ளாமல் இருந்தாலோ, அவருக்கு அபராதம் விதிக்க சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அலுவலக நிர்வாக அலுவலருக்கு [illegible]





அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, குறைந்த வரி விதிக்கப்பட்டிருந்தால், அதனை 5 ஆண்டு காலத்திற்குள் திருத்தம் செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தொழில் வரி குறித்து, ஏதேனும் மேல் முறையீடு செய்ய விரும்பினால், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பில் உள்ள வரி மேல் முறையீட்டு அமைப்பிற்கு மனு செய்து கொள்ளலாம்.

தொழில் வரி விதிப்பின் மீது சிவில் கோர்ட்டுகளில் வழக்கு தொடர்ந்து தடை உத்தரவு வாங்கி வரி கட்டாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவு களை எதிர்த்து, சிவில் கோர்ட்டுகளில் வழக்கு போடுவதற்கும், வரி கட்டுவதற்குத் தடை உத்தரவு வாங்குவதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது.

தரைப்படை, விமானப்படை மற்றும் கப்பல் படையில் பணி புரிகிற வீரர்களுக்கு இந்தத் தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது.

கை, கால்களில் ஏதேனும் ஒன்றோ அல்லது இரண்டுமோ முழுவதுமாக ஊனமுடையவர்களுக்கும், இசிப்பு நோயாளி களுக்கும், ஊமையர், செவிடர் மற்றும் அறவே பார்வையற்ற நபர்களுக்கும் தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள் ளது. இத்தகைய உடல் ஊனமுற்றவர்கள் மாநில அரசில் சிவில் சர்ஜன் பதவியில் இருக்கும் டாக்டர்களிடம் சான்றிதழ் பெற வேண்டும்.

தற்போதுள்ள உள்ளாட்சி சட்டங்களில் உள்ள தொழில் வரி விதிப்பிற்கான அதிகாரங்கள் நீக்கப்படுகிறது.

இச்சட்டம் 1-4-1992 முதல் அமுலுக்கு வருகிறது.

கர்நாடகா மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களில் தொழில் வரியை அரசே வசூலித்து, ஒரு பகுதியை மட்டும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியமாக வழங்குகிறது. ஆனால், நமது மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புக்களின் நலிந்த நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, தொழில் வரியை உள்ளாட்சி நிறுவனங் களே வசூலித்து, வளர்ச்சிப் பணிகளைச் செய்து கொள்வதற் காக, அவைகளே வைத்துக் கொள்வதற்கு இச்சட்ட முன்வடிவில் வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது.

மேலும் ஒவ்வொரு வகை தொழிலுக்கும் குறைந்த அளவு மற்றும் அதிக அளவு வரி விகிதத்தினை சட்டத்திலே குறிப்பிட்டு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளே இந்த குறிப்பிட்ட அளவிற்குள் தொழில் வரியை விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது நமது மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புக்களின் நிதி நிலை, இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகவே தெரியும்.

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உள்ளாட்சி அமைப்புக்களின் வளர்ச்சிப் பணிகளுக்காக சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் போன்றவற்றின் மூலமாகவும், தனியாகவும் நிதி வழங்கி பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்வதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

இந்நிலையில், உள்ளாட்சி அமைப்புக்களின் நிதி ஆதாரத்தை பெருக்குகின்ற இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு, இன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே இந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 முதல் 32 முடிய மற்றும் இணைப்புப் பட்டியல்,—திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 முதல் 32 முடிய மற்றும் இணைப்புப் பட்டியல் சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை '' (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'' 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத்திறன் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1992) நிறைவேற்றப்பெற வேண்டும் ''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி) சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள் சட்டமுன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 15/1992). மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம் மறறும் தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 15/1992) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

எனக் கோருகிறேன்.

---

@ 8-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மா. சுந்தர் தாஸ். அடுத்த சட்டமுன்வடிவைவும் சேர்த்து நீங்கள் பேசி விடுங்கள் நிறைவேற்றும்போது தனித்தனியாக நிறைவேற்றிக் கொள்ளலாம்,

பிற்பகல் 7—00

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூட்டுறவுத் துறையில் இன்று விவாதத்திற்கு எடுக்கப்பட்டிருக்கிற இரண்டு மசோதாக்கள் பற்றி என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒன்று தனி அதிகாரிகளுடைய பதவி காலத்தை ஆறுமாத காலம் நீட்டிப்பது, மற்றொன்று கூட்டுறவு சொசைட்டிகளில் பெண்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் இடம் ஒதுக்குவது ஆகிய இரண்டு மசோதாக்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இரண்டு மசோதாக்களையும் நான் மனப்பூர்வமாக காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

ஆனால் கோவாப்பரேட்டிவ் செக்டாரைப் பொறுத்த வரையில் அது தனித்தன்மையை வர வர இழந்து கொண்டிருக்கிறது. ஏனென்று சொன்னால் எலெக்ஷன்—தேர்தல் இல்லையென்ற நிலையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்கள் அதிகாரிகளும் கலந்து செய்கிற பணிகள் இன்று வெறும் அதிகாரிகள் கையிலே இருக்கிறது. அது பாராட்டுக்குரியதல்ல. ஆகவே, இந்த ஆறு மாத காலத்திற்குள் நாம் தேர்தலை நடத்த சுப்ரீம்கோர்ட் டைரக்ஷன் இருக்கிறது. அதற்கான ஆயத்தங்கள்

நடந்து கொண்டிருக்கின்றன. எனக்கு தெரியும். ஆகவே, தேர்தலை நடத்த வேண்டும். இனி மேலும் அந்த தனி அதிகாரிகள் பதவி காலத்தை நீட்டிக்கக் கூடாது. பல ஆண்டுக்காலமாக பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடம் கொடுக்க வேண்டுமென்று, ரிசர்வேஷன் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை இருந்து வருகிறது. அதை இன்று நிறைவேற்றும் வகையில் இந்த மசோதா வந்திருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். குறிப்பாகச் சொன்னால் மக்களுக்கு தேவையான பொருள்களை வழங்குவது, கடனுதவி செய்வது கோவாப்பரேட்டிவ் சொசைட்டி மூலம் தான் செய்யப்படுகிறது. அதிலே தனி அதிகாரிகளை வைத்து நடத்துவது சரியாக இருக்காது. மக்களிடம் குறை இருந்தால் அதைப் போக்க எங்களைப் போன்றவர்களுக்கு வசதியாக இருக்கும். அந்த சொசைட்டி பிரசிடெண்டை அணுகுங்கள் என்று சொல்லலாம். இன்றையதினம் எதை எடுத்தாலும் மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களைத் தான் நாடி வருகிற சூழ்நிலை இருக்கிறது. மேலும்



நம்முடைய கூட்டுறவுத் துறையில் அரிசி வழங்குவதைப் பொறுத்த வரையில் எங்கள் பகுதியில் 12 கிலோ அரிசி தான் கொடுக்கப்படுகிறது. அதை 20 கிலோவாக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் நேரில் சொல்லி இருக்கிறேன். எங்கள் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் 3, 4 தடவைகள் வந்திருக்கிறார்கள். ஏனென்று சொன்னால் அது கேரளாவினுடைய எல்லைப் பகுதி அரிசி கடத்துகிற ஒரு பகுதியாக இருக்கிற காரணத்தால் தன்னுடைய நேரடியான கவனத்தில் அதனை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட அமைச்சர் அவர்கள் வருகிறபோது சரியாக இருக்கிறது. அதிகாரிகள் ஒரு சிலர் சரியாக இயங்காத காரணத்தால் இப்போதும் அரிசி கேரளாவுக்கு —பழைய மாதிரி இல்லை—இருந்தாலும் போகவில்லையென்று சொல்ல முடியாது. 50 லாரிகள் போன இடத்தில் 10 லாரிகள் சென்றுகொண்டுதான் இருக்கின்றன. அதிகாரிகள், நம்முடைய அமைச்சர் அவர்கள் அதைக் கட்டுப்படுத்தியும் நிற்காத அளவுக்கு நடந்து கொண்டிருப்பதை கவனித்து நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதி கேரளா எல்லைப் பகுதி. அங்கேயிருக்கிற மக்கள் 12 கிலோ அரிசியை நம்பித்தான் வாழ வேண்டியிருக்கிறது. ஆகவே, எங்கள் பகுதிக்காவது 20 கிலோ அரிசி கொடுக்க வேண்டும். மீதி இருப்பவர்களுக்குகூட 25 கிலோ அரிசி குறைந்த விலைக்கு, நாகர்கோவிலில் இருக்கிற விலைக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதை நம்முடைய அமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஏனென்று சொன்னால் நாகர்கோவிலில் இருக்கிற விலை ஒன்று. எங்கள் பகுதியில் கிலோவுக்கு 2 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது அரசினுடைய குறையல்ல. நாங்கள் கேரள எல்லையில் இருக்கிற ஒரே குறை தான் காரணமாக இருக்கிறது. எங்களுக்கென்று, எல்லைப் பகுதியில் இருக்கிற, பார்டரில் இருக்கிற எங்களுக்கு தனிச் சலுகை மூலமாவது, அரசு நிதியிலிருந்து செலவாகாமல், நாகர்கோவிலில் இருக்கிற விலைக்காவது அரிசி தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளில் அதிகாரிகள் தான் பணி நடத்துகிறார்கள். ஆகவே, எடைக்குறைவு இருக்கிற பிரச்சினைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் ரேஷன் கார்டுகள் 1,500 கார்டுகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நடக்கும் நிலைமை அந்த சொசைட்டிகளில் அந்த கார்டுகளை வாங்கி வைத்து விடுகிறார்கள். ஏழை மக்களுக்கு அது சென்று சேர்வதில்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் வந்ததற்கு

பின்னால் தான் வேகமாக கார்டுகள் கொடுக்கப்படுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எனக்கு கிடைத்த தகவல் என்னவென்றால் நேரடியாக கார்டுகள் மக்களுக்கு செல்கிற அளவுக்கு இருக்க வேண்டுமே தவிர, இவர்கள் கார்டுகளை கொண்டு போய் ரேஷன் கடைகளில் கொடுக்கிறார்கள். அவர்களும் அதை வாங்கி வைத்துக்கொண்டு, அவர்களே கேரளாவுக்கு கடத்துகிற நிலைமை இருக்கிறதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நாகர்கோவிலில் கொண்டு வந்தேன் மேலும் சொல்கிறேன். எனக்கு கிடைத்த தகவல்படி திருப்பி கார்டு கொடுக்க தேவையில்லை. அங்கேயிருக்கிற, சொசைட்டியிலே இருக்கிற கார்டுகளை எடுத்தாலே, பதுக்கி வைத்திருக்கிற கார்டுகளை எடுத்தாலே கூட, எங்கள் பகுதியில் இருக்கிற மக்கள் எல்லோருக்கும் கார்டு கொடுக்க முடியும் என்று நினைக்கிறேன். அதற்கு நிச்சயமாக நல்ல ஆய்வு நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இரண்டு மசோதாக்களை—தேர்தலை தள்ளிப்போடக் கூடாது, உடனடியாக தேர்தலை வைக்க வேண்டும் என்று சொல்லி, அவற்றை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாக்களில் முக்கியமாக இரண்டு அல்லது மூன்று திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். முக்கியமான திருத்தம், ஏற்கெனவே கூட்டுறவு சட்டத்தில் நியமனத்திற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நாமினேஷன் இருக்கிறது. பெண்களுக்கு 30 சதவீதமும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதமும் இருக்கிறது. அதை இப்போது மாற்றி, நாமினேஷன் என்று இல்லாமல், ' கோ-ஆப்ஷன் ' என்று இணைந்து சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு வழிவகை செய்திருக்கிறோம்.

பிற்பகல் 7—05

அதற்கு அடுத்தாற்போல, அப்படிச் சேர்ப்பவர்கள் மொத்த நிர்வாகக் குழு உறுப்பினர்களில் 50 சதவீதத்திற்கு மேலே போகக்கூடாது என்பதற்காக இப்போது இருக்கிற நிர்வாகக் குழுவினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது என்றும் இதிலே வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது.

அதற்கு அடுத்து ஒரு முக்கியமான திருத்தம். இப்போது சென்ற முறை நடைபெற்ற 90-லே நடைபெற்ற தேர்தலிலே பல்வேறு சங்கங்களில், சங்கங்களின் நோக்கத்திற்கே சம்பந்தம்





இல்லாதவர்கள் அந்தத் தகுதியே பெற்றிராதவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட போலி உறுப்பினர்களை நீக்குவதற்கு அதிகாரத்தைக் கொடுக்கின்ற இந்தத் திருத்தத்தை இதிலே கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி.)

இன்னும் ஒரு திருத்தம். 1990—க்குப் பிறகு, 1991-ஆம் ஆண்டில், சில சங்கங்கள் குறிப்பிட்ட ஒரு 10 சங்கங்களுக்கு தேர்தல் நடைபெற்றவைகள் கூட லக்சப்படாமல் இருக்கின்றன. அவைகளையும் சேர்த்துக் கலைத்து, இப்போது தேர்தல் நடத்துவதற்கு இங்கே வழிவகை செய்திருக்கிறோம்.

இன்னொன்று, அடுத்த மசோதாவைப் பற்றியும் சேர்த்தே பதில் சொல்லிவிடுகிறேன். இங்கே தனி அதிகாரிகளுடைய காலம் இப்போது இருக்கிற அவர்களுடைய பதவிக்காலம் மே 9-ஆம் தேதியோடு முடிவு அடைந்துவிடுகிறது. எனவே அதை நீட்டிப்பதற்கு வழிவகை செய்வதற்காக அடுத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலே மொத்த கூட்டுறவுச் சங்கங்கள் 27,816 இருக்கின்றன. இந்தச் சங்கங்களை, கூட்டுறவுத் துறை போக, இன்னும் 13 துறைகள் இப்போது நிர்வகித்து வருகின்றன. மொத்த உறுப்பினர்கள் 1½ கோடி பேர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். இதிலே இந்த மார்ச் முடிய இருக்கிற கணக்குப்படி, பெண்கள் 22 சதவீதமும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 15 சதவீதமும் இருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, பெண்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிற அந்த இலக்கை, சதவீதத்தை நாம் எட்டியாக வேண்டும். 30 சதவீதம் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதேபோன்று ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் இப்போது 15 சதவீதம் இருக்கிறார்கள். அதையும் 18 சதவீதமாக குறைந்தபட்சம் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு அனைத்து கட்சிகளும், உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தி. மு. க. ஆட்சியிலே தேர்தல் என்ற பெயரால் ஒரு நாடகம் நடத்தப்பட்டது. அப்போது நடந்த அந்தத் தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 2,08,528. அதே நேரத்தில் நியமன உறுப்பினர்கள் என்ற பெயரால், எங்கெங்கே மைனாரிட்டியாக இருக்கிறார்களோ, அதை மெஜாரிட்டியாக மாற்றுகின்ற அளவிற்கு 46,100 பேர்களை நியமனம் செய்தார்கள். அது 23 சதவீதம். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் 23 சதவீதத்தை நியமனம் செய்து, ஜனநாயக முறையையே மாற்றியமைக்கின்ற அளவிற்கு

ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கின்ற அளவிற்கு தேர்தல் என்ற பெயரால் நடத்தப்பட்டது. அந்தத் தேர்தலிலே என்னென்ன தவறுகள் நடந்தன என்பது நம் அனைவருக்கும் தெரியும்.

இப்போது தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட உடனே, அன்றைக்கு தேர்தலை நடத்திய முன்னாள் முதலமைச்சர் அவர்கள், நாள்தோறும் நடக்க இருக்கிற தேர்தலைப் பற்றி பேசிக் கொண்டு இருக்கிறார்கள். எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதுகூட பரவாயில்லை. ஒரு நாள் ஒரு போராட்டமே நடத்தினார்கள். மாவட்டத் தலை நகரங்களிலும், மற்ற இடங்களிலும் ஆர்பாட்டம் நடத்தப்பட்டது. தி. மு. க. வும் அதனுடைய தோழமைக் கட்சிகளும் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அதிலே ஒரு முக்கியமான அவர்களுடைய கோரிக்கை, இங்கே அவர்களுடைய பத்திரிகையைப் நான் படிக்க விரும்புகிறேன்· I quote from Murasoli dated 16-4-92.

'' தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1992 மே 31-க்குள் தேர்தல் நடத்துவோமென தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. சட்ட அமைச்சர் பகிரங்கமாக அ. தி. மு. க. வினர் இச்சங்கங்களில் மிகப் பெருமளவு உறுப்பினர் சேர்த்து, இச்சங்கப் பதவிகளைக் கைப்பற்றக் கோரியுள்ளதும், எல்லாவித மோசடிகளுக்கும் அதிகாரிகள் உதவிகரமாக இருப்பார்கள் என்று அபயம் அளித்து ஜனநாயக வீரோதமான செயலைத் தூண்டி விட்டிருப்பதும் அதிர்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும். உண்மையான தகுதியுடைய உறுப்பினர்களைச் சேர்க்க மறுத்தும் நீக்கியும் போலி உறுப்பினர்களை ஏராளமாக சேர்த்தும் அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டுமென அமைச்சர்கள் ஆணையிட்டிருப்பதோடு கூட்டுறவுத் தேர்தலில் தங்களுக்கு உடன்படாத அதிகாரிகளை இடம் மாற்றிவிடுவோமெனச் கூறியுள்ளது அதிகார துஷ்பிரயோகமாகும். இச்சூழலில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் முறையாக நடைபெற்று ஜனநாயகம் நிலை நாட்டப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் விதி முறைகளுக்கு எதிரான செயல்பாடுகளைத் தடுத்து நிறுத்தவும், முறையான தேர்தலை நடத்தக் கோரியும் இக் கூட்டம் வற்புறுத்துகிறது. ஜனநாயக நெறி முறைகளைக் காக்க, கூட்டுறவு அமைப்புகளைப் பாதுகாக்க சகல பகுதி மக்களும் விழிப்புணர்வுடன் முன்வர இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது '' என்ற திராவிட முன்னேற்றக் கழகமும், அதனுடைய தோழமைக் கட்சிகளும் சேர்ந்து நடத்திய கூட்டத்தில் இப்படி ஒரு தீர்மானத்தை இயற்றி, அதற்குப் பிறகு, ஒரு ஆர்ப்பாட்டத்தைக் கூட நடத்தினார்கள்.



பிற்பகல் 7–10

அதுமட்டுமல்ல, அவர்களுடைய பத்திரிகைகளில் நாள் தோறும் அதைப்பற்றி எழுதிக் கொண்டிருக்கிறார்கள். முரசொலி 24-4-1992-ல் எழுதும்போது இருந்த கூட்டுறவுச் சங்கங்களை கலைத்துவிட்டு, ஆளும் கட்சியினர் மட்டுமே இடம் பெறுவதற்காக ஒரு மோசடி தேர்தல் நடத்த வெளிப்படையாகவே அதிகார துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள் எங்கோ பேசியதை வைத்துக் கொண்டு, அவர் பேசியிருக்கிறார். கூட்டுறவு தேர்தலிலே ஒரு இடம் கூட தி. மு. க-விற்குக் கிடைக்காது என்று பேசி இருக்கிறார்கள். அதை வைத்து அவர்களுடைய பத்திரிகைகளில் ஏற்கெனவே முன்னோடியே திட்டம் போட்டு அதிகாரிகளுக்கு ஆணை இட்டிருக்கிறார்கள். தி. மு. க. காரர்கள் வேட்பு மனு சரியாக இருந்தாலும் அதை வாங்கக் கூடாது. அவர்கள் ஜெயித்தாலும் அதை அறிவிக்கக் கூடாது என்று அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் இங்கே அவர்கள் எழுதியும் பேசியும் இருக்கிறார்கள். போதாததற்கு ஒரு ஆர்பாட்டமே கூட நடத்தி முடித்து விட்டார்கள். எனக்கு ஆச்சரியம். தேர்தலே இன்னும் நடக்கவில்லை. இன்றைக்குத்தான் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். இதற்குப் பிறகு விதிகள் திருத்தப்பட்டு, அதற்குப் பிறகு பிரைமரி சொசைட்டீயில் இருக்கிற '' பைலாஸ் '' திருத்தப்பட்டு அதற்குப் பிறகு தேர்தல் தேதியை அறிவித்து, தேர்தலை நடத்த இருக்கிறோம். ஆனால் அதற்கு முன்பாகவே இவ்வளவு அதிலே ஊழல் நடைபெறும். அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படும் என்று சொல்வதற்கு என்ன காரணம் என்று சொன்னால், 1990-லே அவர்கள் தேர்தல் நடத்தினார்களே, அது மாதிரியே திரும்ப தேர்தல் நடந்துவிடுமோ என்று தி. மு. க-வினர் அச்சப்படுகிறார்கள், பயப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

கிராமத்துப் பக்கத்திலே ஒரு பழமொழி உண்டு ' தான் திருடி, அயல்வீட்டுக்காரியை நம்ப மாட்டாள் ' என்று சொல்வார்கள் இன்றைக்கு முன்னாள் முதல்வர், ' மு ' னா, ' க ' னா, அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார் போன தேர்தலிலே என்ன நடைபெற்றது? உறுப்பினர்கள் திடீரென்று தேர்ந்தெடுக்க சேர்க்கப்பட்டார்கள் நான் இங்கே அதை கொண்டு வந்திருக்கிறேன். வேலூரில் ரொட்டி, பிஸ்கட் தயாரிக்கின்ற ஒரு கூட்டுறவ தொழிற் சங்கம் இருக்கிறது. அந்த கூட்டுறவுச் சங்கம் தோன்றிய காலத்திலேயிருந்தது, அதிலே உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 40, 43 என்றுதான் இருக்கும். தொழில் செய்பவர்கள் அதிலே உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால் 1990-ல் தேர்தல் நடைபெறுகின்ற நாள் அன்று

எங்களுக்குக் கொடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் 180 ஆக அது உயர்த்தப்பட்டது. 43-லேயிருந்து 180 என்று உயர்த்தியிருந்தார்கள். அந்தப் பட்டியலைப் பார்த்தால் அங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகரமன்ற உறுப்பினர்கள், நகரச் செயலாளர்கள் என்று இப்படி முக்கியமான பிரமுகர்கள் எல்லாம் அவ்வளவு பேரும் அதிலே உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு அந்தத் தேர்தலே ஒரு வேடிக்கையாக இருந்தது. நானே முன் நின்று நடத்தினேன் அந்தத் தேர்தலை. நாங்கள் போட்ட நாமினேஷன்கள் எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன. தேர்தல் என்று ஏதோ ஒரு பேருக்கு அறிவித்துவிட்டு, அந்த தனிஅலுவலர் காணாமலே போய்விட்டார். அதெல்லாம் அப்போது நடந்தது. திருவலம் என்ற ஊரில் ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு நாமினேஷன் போடுவதற்கு நான் ஒரு ஆளை தயார் செய்து வைத்தேன். அன்றைக்குக் காலையிலே 5 பேரை கொண்டுபோய் போலீஸ் ஸ்டேஷனில் உட்கார வைத்து, மாலை 5 மணிக்கு அவர்களை விடுதலை செய்தார்கள். நாமினேஷனே போடமுடியாமல் போய் விட்டது. இது அவ்வளவும் அப்போது நடந்தது. இன்றைக்கு அதைப் பார்த்து அவர் பயந்து கொண்டு, நாம் நடத்திய மாதிரியே அண்ணா தி.மு.க. வினரின் ஆட்சியிலே நடந்துவிடுமோ என்ற பயத்திலே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகின்றேன்.

அது மட்டுமல்ல, அந்தத் தேர்தலை அன்றைக்கு இந்தத் தேர்தல் மூலம் அதிகார துஷ்பிரயோகம், தில்லுமுல்லுகள், ஊழல் நடந்து அதனுடைய விளைவுகளை நாம் அனுபவித்தோம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும். காங்கிரசும் மற்ற தோழமைக் கட்சிகளும் அன்றைக்கு அந்த விளைவுகளினால் பாதிக்கப்பட்டோம். இந்தத் தேர்தலை இன்றைக்கு இன்னொரு முறையிலே நடத்தியிருக்கிறார். இன்றைக்கு நான் பார்க்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித் தேர்தல் நடக்கின்றது. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், வெளிப்படையாகவே நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். கட்சித் தலைமையை எதிர்த்து, என்ன காரணம் என்று சொன்னால், அந்தக் கூட்டுறவுத் தேர்தலில் என்ன நடந்ததோ, எப்படி நம்மை வஞ்சித்தார்களோ, அதை இன்றைக்கு கட்சிக்குள்ளேயே செய்து கொண்டிருக்கிறார்கள். நான் 2, 3 உதாரணங்களைக் கூறி சுருக்கமாக முடிக்க விரும்புகிறேன்.

வாலாஜாவில் ஒரு தேர்தல் நடைபெற்றது. நகரத் தேர்தல் ஒருவர் 24 ஓட்டுகள் வாங்கி செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்னொருவர் 18 ஓட்டுகள் வாங்கித் தோற்றுப்



போனார். ஆனால் முரசொலி பத்திரிகையில் அதிகாரப் பூர்வமாக, யார் 18 ஓட்டுகள் வாங்கித் தோற்றுப் போனாரோ, தேர்தல் அதிகாரியாலே தோற்றுப் போனார் என்று அறிவிக்கப்பட்டாரோ, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இன்றைக்கு வந்து, அவர் கோர்ட்டிற்குக் போய் தடையாணை பெற்றிருக்கிறார்.

வேலூரில் தேர்தல் நடைபெறுவதிலே தகராறு ஏற்பட்டு, மாவட்ட செயலாளருக்கும், மற்றவர்களுக்கும் அடிதடி நடந்தது. தேர்தலே நடைபெறவில்லை. ஆனால் தேர்தல் நடைபெற்று, ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

பிற்பகல் 7-15

அம்மூர் என்ற பேரூராட்சியில் ஏகமனதாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது அதிகார பூர்வமாக அவருடைய பத்திரிகையிலே அறிவிக்கப்பட்டது. ஆனால் மூன்று நாள் கழித்து அவர் தங்களுக்குச் சாதகமாக இல்லை என்று தெரிய வந்த காரணத்தால், அங்கே நடந்த தேர்தலை தவறாக வெளியிட்டு விட்டோம், எனவே மறு தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஒரு காலத்திலே கூட்டுறவு தேர்தலிலே செய்த அத்தனை துரோகங்களையும் இன்றைக்கு கட்சிக்குள்ளேயே செய்துக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி). அரசியல் கட்சியை எப்படி நடத்த வேண்டும், அரசியல் கட்சித்தேர்தலை எப்படி நடத்த வேண்டும் என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு சொல்லி கொடுத்து விட்டு போயிருக்கிறார்கள். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. 1968-ல் தேர்தல் நடைபெறுகிற நேரம். நான் பேரறிஞர் அண்ணா அவர்களை அவர்களுடைய அவென்யூ ரோடு வீட்டிற்குச் சென்று சந்தித்து எங்களுடைய மாவட்டத்திலே ஒருவரை தேர்ந்தெடுத்திருக்கிறோம், அவரை மாவட்ட செயலாளராக நிறுத்தப் போகிறோம் என்று நான் அண்ணாவிடம் சொன்னேன். ஏன் அதை எனக்கு சொல்லுகிறாய் என்று கேட்டார்கள். உங்களுடைய தகவலுக்காகச் சொல்லுகிறேன் என்று சொன்னேன். அண்ணா அவர்கள் அன்றைக்கு பதில் சொன்னது என்னுடைய காதிலே ஒலித்துக் கொண்டே இருக்கிறது. ஆங்கிலத்திலே சொன்னார்கள். "you go and do whatever you want don't tell me all these things" என்று சொன்னார்கள். அந்த விஷயம் கூட தன்னுடைய காதிலே பட்டால் நடுநிலை தவறி விடுமோ என்று பயந்து அச்சப்பட்டு எதையும் என் காதிலே போடாதே என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு தன்னை ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது தன்னுடைய பிள்ளையை வாரிசாக ஏற்றுக்கொள்பவர்கள் மட்டும் தான் அந்த தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) கட்சித் தேர்தலிலேயே தில்லு முல்லு செய்து கொண்டிருப்பவர்கள் நம்மை பார்த்து மோசடி செய்கிறார்கள் என்று சொல்லுகிறார், நான்

[திரு. ஜி. விசுவநாதன்] [1992 ஏப்ரல் 27

அன்று சட்ட அமைச்சர் அவர்கள் பேசியதைக் கேட்டேன். அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள். 1990-லே நடந்த தேர்தலிலே தவறு செய்திருக்கிறார்கள். அவர்களை நாங்கள் கவனித்துக் கொண்டு இருக்கிறோம் என்று தான் சட்ட அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார். அதைத் தவறாக திரித்துச் சொல்லி தான்கெட்டால் மட்டும் போதாது என்று தோழமை கட்சிகளையும் சேர்த்து, அவைகளையும் அழித்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒரு போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

அதேபோல நம்முடைய மாண்புமிகு அமைச்சர் செங்கோட்டையன் அவர்கள் எங்கள் கட்சி நன்றாக வேலை செய்கிறது, மக்களிடத்திலே செல்வாக்கு இருக்கிறது, தி.மு.க.விற்கு ஒரு இடம் கூட கிடைக்காது, நாங்கள் வெற்றி பெறுவோம் என்று பேசியிருக்கிறார்கள். அதைத் தவறாக திரித்து வேண்டும் என்றே அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள், அதிகாரிகளை தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்று இன்றைக்கு அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவருக்கு நான் சொல்ல விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வும் அதனுடைய தோழமை கட்சிகளான காங்கிரஸ் கட்சியும் மற்ற கட்சிகளும், இன்றைக்கு இருக்கிற செல்வாக்கில் யாரையும் சென்று நாங்கள் கேட்க வேண்டியது இல்லை. பொது மக்கள் தயாராக இருக்கிறார்கள், நம்முடைய வேட்பாளர்களை நிறுத்தினாலேயே போதும், அவ்வளவு பேரும் வெற்றி பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய கட்சி எந்த அளவுக்கு பலமாக இருக்கிறது என்று நான் சொல்ல வேண்டியது இல்லை. அவர்களுக்கே தெரிந்திருக்கிறது. அண்ணா அவர்கள் காட்டி விட்டுப் போன அந்த நடுநிலைமையை

''சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி''

என்று சொன்னார்களே அப்படிப்பட்ட ஒரு நடுநிலைமையை இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பொதுச் செயலாளராக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) கட்சியை நடத்துகிற காரணத்தினாலே தான் இந்தியாவிலே பலம் பொருந்திய கட்சியாக பலம் பொருந்திய' அரசியல் கட்சியாக உள் குழப்பம் எதுவும் இல்லாத ஒரே கட்சியாக (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகம் இருக்கிறது. A solid party without any dissidence வேறு எந்த கட்சியும்' சொல்ல முடியாத அளவுக்கு இன்றைக்கு இருப்பதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய அந்த நடுநிலைமையை புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு கடை பிடிப்பதுதான். அப்படிப்பட்ட கட்சிக்கு பாரையும் ஏமாற்றி,' அதிகாரிகளை வைத்து துஷ்பிரயோகம்



1992 ஏப்ரல் 27] [திரு. ஜி. விசுவநாதன்]

செய்து தில்லுமுல்லு செய்து வெற்றி பெற வேண்டும் என்ற அவசியம் இல்லை. அப்படிப்பட்ட ஊழலிலே வருகிற வெற்றியை எங்கள் புரட்சித்தலைவி ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் ஒன்றை நிச்சயமாக எதிர்க்கட்சிகளுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் 1990 ஆம் ஆண்டிலே எப்படி நடத்தினார்களோ அப்படிப்பட்ட ஊழல் தேர்தல் தமிழகத்திலே நடக்காது. எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே சட்டப்படி தேர்தல் நடக்கும். ஊழல் இருக்காது தில்லுமுல்லுகள் இருக்காது. இவை எதுவும் இல்லாது ஒழுங்காக நியாயமாக சட்ட ரீதியாக நடக்கும். அவர்கள் தைரியமாக போட்டி போடலாம். வெற்றி தோல்வியைப்பற்றி கவலைப் படாமல் போட்டி போடுவதுதான் ஜனநாயகம். இப்போதே அலிபியை ஏற்படுத்தி விட்டு போட்டியிலேயிருந்து ஓடி விடுவார்களோ என்ற அச்சம் கூட எனக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட அச்சம் அவர்களுக்கு இருக்கக்கூடாது. நாங்கள் நிச்சயமாக போட்டியை வரவேற்கிறோம். அது தி. மு. கழகமாக இருந்தாலும் சரி, அவர்கள் தோழமைக் கட்சிகளாக இருந்தாலும் சரி—அவர்கள் வெளியே போனவர்கள் திரும்ப உள்ளே வரக்காணோம். அவர்களும் வந்து தேர்தலிலே கலந்துக் கொள்ள வேண்டும். அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகமும், காங்கிரஸ் கட்சியும் மற்ற தோழமை கட்சிகளும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இன்றைக்கு கூட்டுறவு இலாகா பலமுள்ளதாக இருக்கிறது.

பிற்பகல் 7-20

The co-operative Department is very strong, but not the co-operative movement. இன்றைக்கு அது தமிழ்நாட்டிலே பலம் வாய்ந்த ஒரு இயக்கமாக புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே மாற வேண்டும் என்ற விருப்பத்தோடு ஆசையோடு டணியாற்றிக் கொண்டிருக்கிறோம். ன்றைக்கு இருக்கின்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் தவறுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலே மிக அக்கறையாக இருந்து மிக கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். உங்களுக்குத் தெரியும். இந்த 5, 6 மாத காலமாக எவ்வளவு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு சுந்தரதாஸ் அவர்களுக்கே தெரியும். அந்த மாவட்டத்திலே இன்றைக்கு 2,3 பேரை கூட்டுறவுத் துறையிலே சிறு தவறுகள் செய்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வேலையை விட்டு நீக்கி வைத்து இன்றைக்கு ஒரு பயத்தை உருவாக்கியிருக்கிறோம். அதற்கு காரணம் கூட்டுறவு

இயக்கம் நல்ல இயக்கமாக இந்தியாவிலே வளர வேண்டும். இன்றைக்கு 3வது இடத்திலே நாம் இருக்கிறோம். மஹாராஷ்டிராவும், குஜராத்தும் இருக்கிறது. அதற்கு அடுத்து தமிழ்நாடு இருக்கிறது. இந்தியாவினுடைய முதல் மாநிலமாக கூட்டுறவுத் துறையில் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இது வரும். அதற்கு வேண்டிய அனைத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) செய்வோம். அதற்கு நம்முடைய உறுப்பினர்கள் ஆதரவு தந்து இந்தக் கூட்டுறவுத் தேர்தலை வெற்றிகரமாக நடத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தனி அலுவலர்கள் 6 மாத காலம் நீட்டிப்பதிலே தேர்தல் தள்ளிப்போகுமோ என்று பல பேருக்கு இருக்கிறது. அப்படிப் பட்ட அச்சம் தேவையில்லை. அவர்கள் பதவிக் காலம் மே மாதம் 9-ந்தேதி முடிவடைந்து விடுகிறது. நம்முடைய சட்டமன்றம் இருக்கிறது. இதற்குப் பிறகு உறுப்பினர்கள் சேர்ப்பது, சட்ட திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். இவை இருக்கின்ற காரணத்தினால் விரைவிலே தேதிகளை அறிவிப்போம். அந்த 6 மாத காலம் காத்திருக்கப் போவதில்லை என்பதையும் தெரிவித்துக் கொண்டு இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உணவுமற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 15/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி) சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 19/1992), மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவுஎண் 19/1992) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.**

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

@ 23—4—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 19/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது.

## (இஇ) கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 14/1992), மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 14/1992) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் ''
எனக் கோருகிறேன்.

பிற்பகல் 7–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்துவதற்கென சட்டமுன் வடிவு கொண்டு வந்ததை வரவேற்று இந்தக் கால்நடை மருத்துவ அறிவியல் துறையின் மூலம் அனைத்து கால்நடைகளுக்கு வரும் நோய்களை உடனுக்குடன் போக்க அறிவியல் மருத்துவ துறையை மேலும் வலுப்படுத்த வேண்டுகிறேன். சில கால்நடை மருத்துவர்கள் நோயின் தன்மை அறியாது நோயைத் தடுக்க முறையாக மருந்துகள் இல்லாமல் நோயைக் குணப்படுத்தத் தவறிய சில கிராமங்களில் கால்நடைகள் இறந்து விடுகின்றன. இந்த நிலையைப் போக்க நல்ல மருந்துகளை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க இந்தக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை திறம்பட நடத்த நியமிக்க உள்ள குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களை நியமிக்கவும் வழிவகை செய்யும் இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன் வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம், 1989 ஆம் ஆண்டு 42 ஆவது சட்டப் படி நிறுவப்பட்டது. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு

@ 2-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



கள் பல்கலைக்கழக சட்டம் 17 ஆவது பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. மேற்படி பிரிவின்படி மேலாண்மைக்குழு பல்கலைக்கழகத்தில் ஒரு அதிகார அமைப்பாகும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் மேலாண்மைக் குழுமத்தில் (வகை. 2) பிற உறுப்பினர் ஆவார். தற்போதுள்ள பிரிவு 18எச் பல்கலைக் கழகச் சட்டத்தின்படி மேற்படி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் சட்டமன்றப் பதவியை இழந்த பின்பும் மேலாண்மைக் குழும உறுப்பினராக இருக்க வகை உள்ளது. இவ்வகை நியதி மற்ற பல்கலைக்கழகச் சட்டங்களிலும் இருந்தன. சட்டப்பேரவை உறுப்பினராக இல்லாமல் பல்கலைக்கழகத்தின் மேலாண்மைக் குழுமத்தில் பதவி வகிப்பது உண்மையான சட்டபேரவை பிரதிநிதித்துவம் ஆகாது. இதனால் அரசு மற்ற பல்கலைக்கழகச் சட்டங்களை ஏற்கெனவே திருத்தம் செய்து உள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழக சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரும் திருத்தச் சட்டமுன்வடிவினை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளபடுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்.)
மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 14/1992) நிறை வேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**(மேசையைத் தட்டும் ஒலி)**
**சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது.**

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28—4—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பேரவை பின்னர் 7-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 9. பேரவை முன வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

74. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

179. தமிழ்நாட்டில் மாநில பொதுத்துறை நிறுவனங்களின் 1990-91-ஆம் ஆண்டிற்கான ஆய்வுரை. (ஆங்கிலம்).

180. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை-ஆண்டுக் கணக்குகள். (தமிழ், ஆங்கிலம்).

181. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை).

182. மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது அறிக்கை. 1991-92.

183. மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கை. 1991-92.

184. மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. 1991-92.

சென்னை-600 009.
164943
V 2.11, 31/7/92
N92.26.2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
25 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

---

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.